# சாந்தியின் சிகரம்



# சாந்தியின்
# சிகரம்

அன்பளிப்பு
6.4.53.

*

**வை. மு. கோதைநாயகி அம்மாள்**

எழுதிய 103-வது நாவல்

601 — A/363

*

துப்பறியும் நவீனம்.

ரூ. நான்கு.

ஜகன்மோகினி காரியாலயம்,

26, தோடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

1952

சகல உரிமைகளும் ஆசிரியையைச் சேர்ந்தவை.

# SANTHIYIN SIKARAM

V. M. Kothainayaki Ammal's

*103rd Novel*

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண் 501
501



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

**ALL RIGHTS BELONG TO THE AUTHORESS**

ஸ்ரீ:

# சாந்தியின் சிகரம்

## 1

"உலகத்தில் மக்கள் எப்போதும் இன்பத்தையே கோருவார்கள். இம்மைக்கும் மறுமைக்கும் சேர்ந்த இனிய வாழ்க்கையைத்தானே மக்கள் பகவானிடம் பக்திசெய்து சதாவேண்டுவார்கள். அதேபோலத்தானே நானும் விரும்புகிறேன். ஸ்ரீதரா! என் வார்த்தையைக் கேள். இனியும் தட்டாதே. பெற்ற தாயின் உள்ளத்தை மகிழ்விப்பதே மக்களின் கடமையாகும். அதை நீங்கள் செய்துமுடித்த பிறகுதான் என் மனம் சாந்தியடையும். ஏதோ உளறுகிறாள் என்று நீ நினைக்கிறாயேயன்றி பெற்ற மனத்தின் பதைபதைப்பை நீ உணரவில்லையே ஸ்ரீதர்! இதோ இந்தப் புகைப்படத்தைப் பார்!" என்று கமலவேணியம்மாள் தன் மகனிடம் மிக்க அன்புடன் கேட்டாள்.

இதைக் கேட்ட ஸ்ரீதரன் "அம்மா! உன் விருப்பத்திற்குமாறாக நான் எப்போதாவது நடக்கிறேனா? நீ விரும்பியபடியே சகலவிதத்திலும் நடந்துகொண்டு டாக்டராகவும் ஆகி உன் மனத்தைக் களிப்பிக்கவில்லையா! இந்த ஒரு விஷயத்திற்குமட்டும் நீ என் விருப்பப்படி விட்டுத் தான் கொடுக்கவேண்டும். இப்போது விவாகத்திற்குச் சம்மதிக்கவே மாட்டேன் நான். என்னுடைய இதயக் கடலில் கொந்தளிக்கும் லக்ஷ்ய அலைகளும் எண்ணற்ற ஆவலும் நீ அறியமாட்டாயம்மா! என்னுடைய லக்ஷ்யம் ஈடேறுவதற்கு நீ விரும்புகிற கல்யாணம் தடைசெய்து என்னை ஏமாற்றிவிடுமேயன்றி வெற்றியளிக்காது. இது தான் எனது நம்பிக்கை...

தாயார் (இடைமறித்து)...என்... என்ன! கல்யாணம் செய்துகொண்டால் உன் லக்ஷ்யம் தடைபடுமா? ஸ்ரீதர்! நான் இம்மாதிரியான ஒரு வார்த்தையை உலகத்தில் கண்டதே இல்லையே! கேட்டதுமில்லையே! அப்பா, குழந்தாய்! கல்யாணமில்லாத ஒண்டிக்கட்டை வாழ்வு

ஒரு வாழ்வா? உப்புச்சப்பற்ற வெறும் வரட்டு வாழ்க்கை யல்லவா! மகா தபஸ்விகளை எல்லாம் ஆட்டிவைக்கும் கல்யாண ஆசை உன்னைமட்டும் விலக்கிவிட்டதா?...என்று பேசும்போது அவள் குரலில் துக்கத்தின் கரகரப்பும் கம்மலும் காணப்பட்டன.

ஸ்ரீதர:—அம்மா! இந்த அல்ப விஷயத்திற்காக வாம்மா கண்ணீர் விடுகிறாய். உன்னைப் பாட்டியாக்கவும் குடும்பத்தைக் கிளைகிளையாகப் பெருக்கவும் தம்பி தாமோதரன் இருக்கையில் ஏனம்மா கவலைப்படுகிறாய்?, பெற்றதாயின் மனத்தை மக்கள் மகிழ்விப்பதுபோல் பெற்றமக்களின் உள்ளத்தையும் தாயார் களிக்கச் செய்யவேண்டாமா?...அம்மா!...இந்த அல்பமான மண வாழ்க்கையில் நான் விரும்பும் லக்ஷ்யத்தை அடைந்து சாந்தியின் சிகரத்தை எட்டமுடியாது என்பதுதான் என் துணிபு. என்னுடைய லக்ஷ்யம் சேவை, த்யாகம், தயை, பரோபகாரம் முதலியபடிகளில் ஏறி சாந்தியின் சிகரத்தை அடைந்து பேராநந்தத்தை அனுபவிப்பதேயாகும்— என்று வீராவேசத்துடன் சொல்லும்போது, டெலிபோன் மணி கணகணவென்று அடித்தது. ஸ்ரீதரன் ஒரே தாவாகத் தாவிச் சென்றான். பெற்ற மனம் பித்தல்லவா! அந்தஇதயத்தின் தாங்கமுடியாத தாகத்தையும் போரா வலையும் பிறந்தமனம் அப்படியே அறியமுடியுமா! தவிக்கும் உள்ளத்துடன் பின்னாலேயே ஓடினாள். ஆனால் இடை மறித்துப் பேச தைரியமின்றி மவுனமாக நின்றாள்.

ஸ்ரீதர:—ஹல்லோ...யாரு!...தீனதயாளு வீட்டிலா... சரிதான்; இதோ வருகிறேன்...என்ன! 105 டிகிரியா... பரவாயில்லை பயப்படவேண்டாம். இன்று மாலைக்குள் இறங்கிவிடும். சரிதான்—என்று கூறி ரிஸீவரை வைத்த போது...தம்பீ! இதோ பாரு! நான் யாரைப்பற்றிப் பேச வந்தேனோ அவர்கள் வீட்டினரே இப்போது உன்னிடம் பேசியதைக் கேட்டு சந்தோஷப்படுகிறேன். தீனதயாளு வின் வீட்டிலிருந்து அவருடைய சகோதரி நேற்றுதான்

இங்கு வந்திருந்தாள். தீனதயாளுவின் மூன்றுவது மகளை உனக்குக் கொடுக்க மிகவும் விரும்புவதாயும் அதை உடனே முடிக்கவேண்டும் என்றும் சொன்ஞர்கள். அதைத் தெரிவிப்பதற்காகத்தான் வந்தேன்...

என்று அந்தம்மாள் பேசிக்கொண்டிருக்கையில் ஸ்ரீதரன், "அம்மா நமஸ்காரம்!...எனக்கு அபாரமானவேலை இருக்கிறது. நான் போய்வருகிறேன்" என்று வரட்டுச் சிரிப்புடன் கூறியவாறு ஓடி மறைந்தான். பெற்ற தாயாரின் அன்பு உள்ளத்தில் ஏமாற்றமென்கிற அம்பு பாய்ந்து வதைத்ததால் அவள் தம்பித்து நின்றுவிட்டாள்.

அதே சமயம் இந்தம்மாளின் சிறியமகன் தாமோதரன் வெகுஆத்திரத்துடன் அங்குவந்து "என்னம்மா சாதித்து விட்டாய்? நான் அப்போதே சொன்னேனே! அது சரியாகத்தானே போய்விட்டது! அண்ணுவாவது நீ சொல்கிறபடி கேட்பதாவது? அவனுடைய ப்ரவர்த்தகமும் அவனுடைய நடத்தையும் உனக்கென்னம்மா தெரியும்?... "ஏதோ, மகன் மகா புத்திசாலி, அதிசீக்கிரத்திலேயே படித்து டாக்டராகிவிட்டான்; புகழ் தேவதையும் வெகு விரைவில் அவனைக் கருணையுடன் கடாட்சித்துவிட்டாள். இனி எத்தகைய குறைவுமில்லை. நிறைய பணம் சம்பாதிக்கிருன். எங்கு பார்த்தாலும் டாக்டர் ஸ்ரீதரன் நல்ல கைராசிக்காரர், அபாரமான சாமர்த்தியசாலி என்று பொதுமக்கள் கொண்டாடுகிருர்கள். இதைவிட வேறு என்னவேண்டும்" என்று நீ எண்ணிப் பூரித்து அதோடு நின்றுவிட்டாய்! என்னைப்பற்றி உனக்கு நினைப்பு ஏது? நான் உன் கண்ணிலேயே படவில்லை! அந்தத் தடியனுக்காக நான் விவாகமில்லாமல் எத்தனை நாளைக்கு தடிக் கட்டையாய் நிற்கவேண்டும் என்கிருய்? அண்ணனுக்குக் கல்யாணமாகாமல் தம்பிக்கு ஆகக்கூடாதென்று எந்த மடையன் சொல்லிவைத்தானே தெரியவில்லையே! அம்மா! நான் பலதரம்சொல்லியாகிவிட்டது; என் வார்த்தையை இனி நீ லக்ஷ்யம் செய்யவில்லை என்ருல் கட்டாயம் என்

இஷ்டப்படிக்கு நான் விவாகம் செய்துகொண்டு தனியாய் சுகமாய் வாழ்க்கை நடத்துவேனேயன்றி உன்னை எதிர் பார்க்கமாட்டேன். பிறகுஎன்மீது குறைகூறிப்பயனில்லை" என்று வெடுக்கென்று மிகவும் பதட்டத்துடன் கூறினான்.

இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவிக்கும் கமல வேணியம்மாளின் இதயதாபம் ஆத்திரமும் துடிதுடிப்பும் கொண்டுள்ள மகனுக்கு என்னதெரியும்? இரண்டு கண் ணும் எத்தனை முக்யமோ அத்தனை முக்யமான உணர்ச்சி யுடன் இரண்டு மகனுடைய க்ஷேமத்தையும் கோரித் தவம் கிடக்கும் கமலவேணியின்கண்களில் நீர்நிறம்பி வழிந்தது. அதைத் துடைத்துக்கொண்டு, "தம்பீ! தாமோதரா!பதறி விடாதேப்பா! பதட்டத்தினால் நன்மை ஒன்றும் உண்டா காது. உங்களிருவருக்கும் கல்யாணத்தைச் செய்து கண்ணாரக் கண்டு களிக்க என் தாயுள்ளம் எத்தனை ஆவ லுடன் துடிதுடிக்கின்றது தெரியுமா? ஏற்கெனவே உன் பிதாவின் கரும்புள்ளிச் செயல் ஒன்று நம் குடும்பத்தின் கண்ணியத்தைச் சிதைத்து அழியா வடுவை உண்டாக்கி விட்டதை நாம் எத்தனைஜென்மமெடுத்தாலும் மாற்றவோ மறைக்கவோ முடியாது!...அந்த ஒரு அதிர்ச்சியினால் அளிந்த புண்ணாகிவிட்ட என் உள்ளம் சாந்தி... சாந்தி...என்று தேடியலைந்து திரிகிறது. அந்தத் துடிப் பான மனத்திற்கு உங்களிருவராலாவது ஒரு கடுகளவு சாந்தியும் அமைதியும் உண்டாகுமா? என்று இராப்பகல் நான் துள்ளித் துடித்துத்தான் வருகிறேன். ஏற்கெனவே உள்ள களங்கத்தை மறைத்து மறந்து நாம் தலைநிமிரும் சமயம் இந்தச்சிறிய விஷயங்களில்அண்ணனுக்கு விரோ தமாய் நடப்பது தர்மமா! நமக்கு ஏராளமான பணமிருப் பதனால் ஏதோ ஒரு வகையாய் இருக்கிறோம். அப்படிப் பணமிருந்தும் உன் சகோதரிகள் மூலம் படும் இம்சை சொல்லிமுடியாது. இதெல்லாம் தெரிந்தும் நீ அவசரப் படலாமா? என்வார்த்தையைக் கேள்!...பெற்ற தாயாகிய நான் என்றும் உனக்கு ஹிதமே செய்வேனேயன்றி வேறு விதம் செய்யமாட்டேன்...

என்று மிகவும் பரிதாபமாய்க் கண்ணீர் பெருகக் கூறும் தாயின் வார்த்தைகள் அந்த முரடன் காதில் கேட்கவே இல்லை. சிள்ளென்று சீறி விழுந்தவாறு ஒரு முறைப்பு முறைத்துவிட்டுச் சென்றுன். பெற்றதாயின் வயிற்றில் அந்தப் பார்வையின் பயங்கரம் சுருக்கென்று அம்புபோல் தைத்து வருத்தியது.

———○———

## 2

அந்தப் பார்வையின்பயங்கரம் பெற்றதாயின் வயிற்றில் சுருக்கென்று அம்புபோல்தைத்து வருத்தியது. சூழும் உள்ளத்துடன்...இதென்ன இப்படிப் பார்க்கிருளே! ஐயோ! இந்தப் பார்வை மிகவும் விபரீதமான பயங்கர நிலையைக் காட்டுகிறது. உடனே டாக்டரையாவது கூப்பிடுங்களேன்; ஐயோ! டெலிபோன் செய்யுங்கள்...அம்மா ஸரஸா!...ஸரஸா!...ஏன் இப்படிப் பார்க்கிருய்?...இதோ பார்...என்னைப் பாரம்மா! கண்ணு!...என்று அடக்க முடியாது துக்கம் பொங்கி வழியக் கதறுகிருள். அதே சமயம் டெலிபோன்மேல் டெலிபோன் பறந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் டாக்டர் ஸ்ரீதரன் வெகு பரபரப்புடன் வந்தான்...

டாக்டரின் வருகை பெண்ணின் தாயாருக்கு சாக்ஷாத் கடவுளே வருவதாகத் தோன்றியதேயன்றி வெறும் மனித வைத்தியர்வருவதாகத் தோன்ருது நம்பிக்கையின் துடிப்புடன்......டாக்டர்! டாக்டர்! இதோ பாருங்கள்! ஸரஸா ஏதோ மாதிரி பார்க்கிருளே!......அவளுக்கு எத்தகைய பயமும் இல்லையே? டாக்டர்! அவளுக்கு உயிர்ப் பிச்சை தந்து என் வயிற்றில் பாலை வார்க்க வேண்டும் டாக்டர்...என்று கத்துகிருள்.

டாக்டர் ஸ்ரீதரன் வெகு நிதானமாய் நோயாளியைக் கூர்ந்து கவனித்துப் பின், "தாயே பயப்படாதீர்கள்! அதிக ஜ்ஈரத்தின் வேகத்தினுல் இப்படி இருக்கிறது.

உயிருக்கு பயமே இல்லை. இப்போதே சரியாகிவிடும். அதைரியப்படாதீர்கள். நோயாளியின் எதிரிலா இம்மாதிரி பேசுவது. தைரியலக்ஷ்மியின் துணையுடன் சாந்தமாயிருங்கள்'' என்றுகூறிவிட்டுத் தகுந்த சிகிச்சைசெய்தான்.

கடவுளின் கருணையும் பெரியார்களின் ஆசீர்வாதமும் நிறைந்திருக்கும் நல்ல சமயம் வாய்த்துவிட்டால் அரைக்ஷணத்தில் சகலமான நன்மைகளும் உண்டாகிவிடுமல்லவா? அம்முறையில் டாக்டர் ஸ்ரீதரனை அதிர்ஷ்டதேவதை பரிபூர்ணமாய் ஸ்வீகரித்திருப்பதால் உயர்ந்த மருந்தை ஊசிகுத்திய அடுத்த நிமிஷமே படுத்திருக்கும் பெண் நன்ருகக் கண்களை சுயமான அழகுடன் திறந்து நாற்புறமும் நினைவுடன்பார்த்தாள். இதைக் கண்ட பெற்ற தாயின் வயிற்றில் அமுதத்தை அள்ளி வார்த்தது போன்ற ஒரு தனித்த சந்தோஷமும் வாத்ஸல்யமும் ஊற்றுபோல் சுரந்தது.

டாக்டரை அவள் உள்ளம் நேருக்குநேராக வந்துள்ள தெய்வம் என்று மதித்துப் போற்றியதேயன்றி மனிதனுக நினைக்கவில்லை. "டாக்டர்! நீங்கள்தான் தெய்வம்!...நீங்கள் கலியுக தெய்வம் என்ருல் மிகையாகாது! என் வயிற்றில்பாலைக்கறந்த பரமதயாளன் நீங்கள்தான்...

என்று அந்தம்மாள் தோத்திர மலர்களை உதிர்க்கும் போது டாக்டருக்கு இரண்டு விதமான உணர்ச்சிகள் உண்டாயின. பெற்ற தாயாரின் அன்புத் துடிப்பின் உணர்ச்சி எத்தனை தூரம் எழும்பி உச்சத்தை எட்டியிருக்கிறது?...தாய் உள்ளத்தின் சக்தியே தனித்ததொன்றல்லவா? அதனுல்தான் தான்முற்றுந்துறந்தமுனிவராயினும் பட்டினத்து அடிகள் தாயாரின்பால் மீளாத அன்புகொண்டு அவளுடைய அந்திம க்ரியைகளைத் தாமே செய்ய முன்வந்தார். மகான்களறியாததா! மற்ருென்று: பெற்ற தாயை முதலில் அலக்ஷியம் செய்த ஹரிதாஸர் அந்த விலையிலா மதிப்பை உணர்ந்து அன்னையும் பிதாவும்

முன்னறி தெய்வம் என்ற தத்துவத்தை நிலைநாட்டி ஞர். இதுபோல் இன்னும் எத்தனையோ உபமானங்கள் நம் நாட்டில் புதையல்போல் கிடக்கின்றன. அவைகளைப் படிப்பவர்கள் ஆயிரக் கணக்கான மக்களாக இருக்கலாம். ஆனால் அந்த நுட்பமான ஸாரத்தை அறிந்து க்ஷணநேர மாவது அனுபவித்துச் செய்கிறவர்கள் உண்டா? அல்லது சிந்தித்துப் பார்ப்பவர்களாவது உண்டா!

மருத்துவத் தொழில் மூலம் எத்தனை விதமான உள்ளத்துடிப்புகளை...மகிழ்ச்சிகளை ஆனந்தச்சிறகடித்துப் பறக்கும் புதியபுதிய உத்ஸாகங்களைக் காண சந்தர்ப்பம் கிடைக்கின்றன. இத்தகைய அனுபவங்களை நேராகக் காட்டிப் பயிற்சியளிக்கும் ஒரு அனுபவப் பள்ளிக்கூட மென்றோ! இத்தகைய உணர்ச்சிக் கலையை போதிக்கும் உயர்ந்த கலாமன்றமென்றோ! இதைச்சொல்லலாம். இதே நிமிஷத்தில் அந்தப் பெற்றதாயின் துடிப்பையும் கண் டேன். அதேதாயின் நிகரிலாத ஆனந்தத்தையும் காண் கிறேன்....என்ன உருக்கமான காட்சி!...என்று ஸ்ரீதரன் தனக்குள் எண்ணியபடியே நோயாளியைக் கவனிப்பது போல் சிந்தனைச் சுழலில் சிக்கிச் சுழல்கிருன்.

அதேசமயம்...அடாடா! இத்தகைய அநித்யமான பாசபந்தத்தில் உழன்று மாறிமாறி சுகமும் துக்கமும் அனுபவிப்பதையே மக்கள் சாச்வதமாய் எண்ணுகிருர் களே! இந்த அல்ப விஷயங்களில் உண்மையான மனச் சாந்தியை அடையமுடியுமா! இவைகள் காலை வழுக்கும் பாசியல்லவா! மக்கள் பிறந்ததன் லக்ஷ்யத்தை அறியும் மார்க்கத்தைக்கூடச் சிந்திக்கத் தோன்ருமல் உண்டியே உடையே! என்றும், ஊனே உடலே! என்றும் சுயநலத் திற்குப் பாடுபட்டுக் காலத்தைக் கழிப்பதா சகலமான பிறவிகளைக் காட்டிலும் உயர்தரமான ஆறறிவுபடைத்த மக்களின் லக்ஷ்யம்? என்ன விசித்திரமான உலகம்! துன்பத் தையே இன்பமாக நினைப்பதும், இன்பத்தை யளிக்கும் சகலமான சிறந்த விஷயங்களையும் கடுமையான துன்பத்

திற்குச் சமமாக நினைப்பதுமே ஆனந்த வாழ்க்கையாக எண்ணும் உணர்ச்சியைக் காண வியப்புக்குமேல் வியப்பாகவன்றோ இருக்கின்றது! உலகம் போகிற வழியை விட்டு என் தாயார்மட்டும் வேறு வழியில் போகமுடியுமா? என்னையும் இந்த ஆழங்கால் சேற்றில் பந்தப்படுத்தி அதையே பேரானந்தமாகக் கண்டுகளிக்க ஆசைப்பட்டுத் தான் என்னைத் தொந்தரவு செய்கிருள் பாவம்!...என்று இந்தச் சிந்தனையின் சுழலில் தாயாரின் நினைவும் ஒரு அலைபோல் மோதி கண்முன்பு காட்சியளிக்கச் செய்தது.

எத்தகைய பதிலுமே சொல்லாமல் டாக்டர் ஏதோ பலமான யோசனையில் அப்படியே அசைவற்று ஆழ்ந்து உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் பெண்ணின் தாயாருக்கு மிகவும் திகிலும் பலவிதமான எண்ணங்களும் தோன்றி வருத்துகிறது. சற்று முன்பு பயப்படாதீர்கள் என்று சொல்லிய அதே டாக்டர் எதனுல் இத்தனை மவுனமாய் சமாதி நிலையில் உட்கார்ந்திருக்கிறுர் என்ற பயம் தோன்றியதால் ஆவலே வடிவாய் டாக்டரை நோக்கி, "டாக்டர்! நீங்களிருக்கும் நிலைமையைப் பார்த்தால் என் வயிற்றில் சங்கடம் செய்து அபாரமான பயத்தை உண்டாக்குகிறதே! என் கண்மணிக்கு எத்தகைய பயமும் இல்லையே? என் செல்வக் கனிக்கு எத்தகைய அபாயமும் இல்லையே?"...என்றுமறுபடியும் துடிக்கும் உள்ளத்துடன் கேட்டாள்.

அதன் பிறகே சுயநினைவுபெற்று விழித்துக்கொண்ட டாக்டர், சிரித்தபடியே, 'தாயே! உயிருக்குப் பயமேயில்லை. நான் ஏதோ வேறு சிந்தனையிலாழ்ந்திருந்தேன். பகவான் உங்களுக்கு எத்தகைய குறையும் வைக்கமாட்டார். நான் சாயங்காலம் வரும்போது ஜுரமே குறைந்துவிடும்; பயப்படாமல் கடவுளை நம்பி இருங்கள். அவன் சாந்தியைக் கொடுப்பான்" என்று தத்வோபதேசமும் கூடச் செய்து விட்டுக் கிளம்பும் சமயம்..."டாக்டர்! கொஞ்சம் காப்பி

சாப்பிட்டுவிட்டுப் போகவேண்டும்''...என்று மிகவும் அன்புடன் கூறினாள்.

டாக்டர்:—தாயே! மன்னிக்கவேண்டும். நான் ஆங்கில முறையில் பயின்று தொழில் செய்யும் டாக்டராயினும் நம் நாட்டு இயற்கையான பண்டைய பெருமையை, பழக்கவழக்க மகிமையைப் புறக்கணித்து நாகரீகத்தில் மூழ்கும் மோகத்திற்கு அடிமையானவனல்ல. நான் வைத்யம் செய்யும் இடங்களில் எல்லாம் காப்பிக் குடியைவிட்டு ஒழியுங்கள்; பதிலுக்குக் கேழ்வரகு கஞ்சியோ வெறும் பாலோ அல்லது மோரோ சாப்பிட்டால் உடம்புக்குத் தானே வலிவு கொடுக்கும், வ்யாதியும் சிலவற்றை அண்டவிடாமல் தடுக்கும் சக்தி உண்டாகும் என்றுதான் நான் சொல்வது வழக்கம்.

பெண்மணி:—டாக்டர்! காப்பி குடித்தால் உண்டாகும் சுறுசுறுப்பு மோரினாலும் பாலினாலும் வருமா? காலையில் இவைகளை எப்படிக் குடிப்பது?

டாக்டர்:—(பெரிதாகச் சிரித்துக்கொண்டே) தாயே! உங்களுக்கு ப்ரமாண ப்ரத்யக்ஷம் ஸோடா வாட்டர் ஒன்றைப் பாருங்கள். அதன் காஸ் பவர் ஆறும் வரையில் அது ப்ரமாதமாய்ச் சீறுகிறது. ஆறிவிட்டால் அந்தத் தண்ணீரை யாராவது சீந்துகிறார்களா! ஸோடாவிற்கு எத்தனை சக்தியிருக்கிறதோ அதைவிட அதிகமான சக்தி நம்முடைய பழய பாட்டிமார்கள் செய்யும் பெருங்காய கஷாயத்தில் இருக்கிறது! அது உடம்புக்குள் ஊற ஊற வாயுவினாலும் உஷ்ணத்தினாலும் உண்டாகும் ரோகத்தை நன்றாகக் கண்டித்து, பூர்ண குணத்தை நிரந்தரமாக உண்டாக்கும் அதுபோல் காப்பி குடித்ததும் ஏதோ தேவலோகத்தில் உங்களை உயர்த்துவதுபோல் தோன்றுகிறதேயன்றி இயற்கையாய் உள்ள சுய ஆரோக்யத்தை, சக்தியை அது கெடுத்துக் குட்டிச் சுவராக்குகிறது! மோரிலோ பாலிலோ உள்ள சத்து பதார்த்தம் காப்பியில்

கிடையாது. தற்போது மேல்நாட்டினர்கள் கண்டுபிடித்துள்ள பேன்ஸிலின் என்கிற மருந்தில் என்ன ஸத்துக்கள் இருக்கிறதோ அத்தனை சத்தும்...அதைவிட உயர்ந்த ஸத்தும்...நாம் தினப்படி உபயோகப்படுத்தும் மோரில் இருக்கிறது! இவைகளை எல்லாம் நன்ருகத் தெரிந்து தான் நம் பெரியவர்கள் அந்தச் சிறந்த பதார்த்தத்தை நமது ஆகாரத்திற்கே ப்ரதானமாய் வைத்திருக்கிருர்கள். இவைகளை நாம் கவனித்தால்தானேம்மா!...கேழ்வரகுக் களியும் கூழும் குடித்துவிட்டு வேலை செய்யும் உழவனுக்குள்ள பலம் நமக்கிருக்கிறதா பாருங்கள் !

பேண்மணி:—டாக்டர்! காலையில் நாங்கள் எங்கள் வீட்டுக் குழந்தைகளுக்குத் தயிரைவிட்டுப் பழயதுதான் போடுகிறோம்.அதைக் கண்டு பிறர் பரிகஸிக்கிருர்களே!...

டாக்டர்:—தாயே! ஊராருக்காக நாம் வாழ்க்கையைச் செப்பனிட முடியுமா? நமக்காகவே நாம் வாழவேண்டும். நமக்காகவே நாம் ஒருகொள்கையைத் தீர்மானமாய் வகுத்துக்கொள்ளவேண்டும். கடவுளுக்கு முகோல்லாஸமாய் அவனுடைய தினக்குறிப்புப் புத்தகத்தில் சிறந்த முன்றயில் பதிவாகும்படியாக நடந்துகொள்ளவேண்டுமே யன்றி ஒருவருக்குப் பயந்து வேஷம் போடுவது முட்டாள்தனமல்லவா? அம்மாதிரி பிறரை த்ருப்தி செய்யும் முறையில் நாம் இறங்கிவிட்டால் வாழ்க்கையில் சாந்தியை அடைய முடியாது. பழய சாதத்தை சிலர் பரிகஸிக்கலாம், இலை போட்டு கையால் எடுத்துச் சாப்பிடுவதைச் சிலர் பரிகஸிக்கலாம். தலையை லட்சுமீகரமாக வாரிப் பின்னலிடுவதைச் சிலர் பரிகஸிக்கலாம். ஜாதிமதவழக்கப்படி உடையணிவதையும் நெற்றியில் அலங்காரமாய்ப் பொட்டிடுவதையும் சிலர் பரிகசிக்கலாம். இவைகளுக்காகத் தம்தம் கொள்கைகளை விட்டுவிட்டு டேபிலில் கரண்டியினுல் சாப்பிடவும் தலையை பாழ் செய்யவும் முகத்தைஅவலக்ஷணமாய் பாழும் முகமாய் வைக்கவும் துணிந்தால் வாழ்க்கை

வெகுவிரைவில் வேம்பாகிவிடுமே யன்றிக் கரும்பாக இருக்கமுடியாது.

பதார்த்தங்களுடன் வாயில் சுரக்கும் உமிழ்நீருடன் கலந்து சுவைத்துச் சாப்பிடும் சாப்பாட்டில் ஆகாரத்தின் ஸத்துக்களைவிட உமிழ்நீரின் ஸத்து அமுதம்போன்ற தாகும். அதுவும் கலந்தால் வெகு நன்ருக இருக்கும். காக்காய் கொத்துவதுபோல் கரண்டியினுல்...ஊசியினுல் குத்தித் தின்பது ஒரு பெருமையும் அல்ல! ஆரோக்ய மும் அல்ல!...அடடா!...நான் ஏதேதோ விஷயங்களைப் பேசிக்கொண்டு காலத்தை வீணுக்கிவிட்டேனே...நான் வருகிறேன்; பயப்படாதீர்கள்'' என்று கூறிக்கொண்டு கிளம்பினுன்.

இதற்குள் வீட்டு எஜமானர் ஓட்டமாக ஓடிவந்து, "குழந்தை எப்படி இருக்கிருள்...டாக்டர்! நன்ருக பார்த் தீர்களா?'' என்ருர், "நன்ருகப் பார்த்தேன்; பயமில்லை'' என்று பொதுவாகக் கூறினுர், டாக்டர்."இங்குவந்ததற்கு ...என்று முடிப்பதற்குள், ஸ்ரீதரன் சற்று கம்பீரமான தொனியில், "விஸிட்டிங் பீஸ் 25 ரூபாய்; இந்த ஊசி குத்திய மருந்தின் விலை 15 ரூபாய்; இந்த மாத்திரை 10 ரூபாய்; ஆக 50 ரூபாய் கொடுக்கவேண்டும்''...என்றதைக் கேட்டதும் இத்தனை நேரம் தடபுடலாகப் பேசி பல விஷயங்களையும் அறிந்துகொண்ட அந்த அம்மாளின் முகம் சுருங்கியது.

தன் கணவன் முகத்தைப் பார்க்கிருள். அவர் மனை வியைப் பார்க்கிருர். இருவரையும் கடைக்கண்ணுல் டாக்டர் பார்த்து உள்ளுக்குள் நகைத்துக்கொண்டான். தம்பதிகள் உள்ளே சென்று...நான் வருவதற்குள் டெலி போன் செய்து இந்த டாக்டரை ஏன் அழைத்தாய்? நான் தான் ஓடிஓடிவருகிறேனே...இவன் பெரியமெரடா முழுங்கி யல்லவா! பணக்காரர்களிடம் அட்டைபோல் உறிஞ்சும்

பிசாசல்லவா! ஒரு நிமிஷம் வருவதற்கு 50 ரூபாயா?... என்றார்.

மனை:—சரிதான்! குழந்தை இருந்த இருப்பைப் பார்த்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்களோ! உயிரே நின்று விட்டமாதிரி யல்லவா ஆய்விட்டது. எலக்ஷன் செலவில் இதுவும் ஒன்று என்று வைத்துக்கொண்டு பணத்தைக் கொடுத்தனுப்புங்கள்—என்று கூறியபடி 50 ரூபாயை எடுத்துக் கொடுக்கும்போது கையில் தேள்கொட்டுவது போலவே தோன்றியது!

“குழந்தைக்கு உயிர்கொடுத்துக் காப்பாற்றினீர்கள். மாலையில் எப்படி இருக்கிறது என்பதை போனில் சொல்லுகிறேன்......என்று இழுப்பதற்குள் டாக்டர் சிரித்துக் கொண்டே, “சரிதான் ஸார்! தாங்கள் தெரிவித்தபிறகே வருகிறேன்” என்று கூறிவிட்டு பணத்தை ஜேபியில் போட்டுக்கொண்டு கம்பீரமாய்ச் சென்றான். “ஏண்டீ! ஸமயாஸமயம் அறியாமல் டாக்டர்களைக் கூப்பிடலாமா? இந்த டாக்டர்தான் கொள்ளையடிக்கும் வள்ளலாயிற்றே! இவனையா கூப்பிடுவது? இந்த 50 ரூபாயிருந்தால் ஆளுக்கு 5 ரூபாய் வீதம் பத்து ஓட்டுக்கள் எனக்கு வந்திருக்குமா? அனுவச்யமான செலவை இப்போதா வைப்பது?” என்று மனைவியைக் கடிந்துகொண்டார்.

மனைவி:—நான்மட்டும் சும்மாக் கூப்பிடவில்லை. உங்கள் சகோதரியார் இந்த டாக்டருக்கு நமது மகளைக் கொடுக்கலாம் என்றும் அவர்களைப்பற்றி வானளாவிப் புகழ்ந்தும் பேசினார்கள். அதோடு அவர்களுடைய வீட்டிற்கும் சென்று விசாரித்துக்கொண்டு வந்தார்களாம். அந்த நன்மையை உத்தேசித்து இந்த ஆபத்தான சமயத்தில் அவரைக் கூப்பிட்டேன்....அடேயப்பா! டாக்டராக வந்திருக்கையிலேயே கொள்ளையடிக்கும் பேர்வழி, மருமகப்பிள்ளையாய் வந்துவிட்டால் நம்மைக் கசக்கிச் சாறுதான் பிழிந்து விடுவான்போலிருக்கிறது! போதும்!...இந்த சம்மந்தம்

நமக்கு வேண்டாம். வேண்டுமாயின் அக்கா மகளையே கொடுக்கட்டும் —என்று முற்றுப்புள்ளி வைத்துக் கூறினாள். தம்பதிகளின் இதயங்களில் தம் மகளுக்கு ஆபத்து நீங்கி குணமுண்டாகியதே என்கிற சந்தோஷம் பொங்குவதைவிட்டு 50 ரூபாய் போய்விட்டதே என்ற துக்கந்தான் அதிகமாய் பாதித்தது!

## 3

டாக்டர் சந்தோஷத்துடன் வெளியே வந்தவர் நேராக தர்மவைத்யசாலைக்கு வழக்கம்போல் சென்றார். இவர் வரவுக்காக ஏராளமான நோயாளிகள் காத்திருப்பவர்களை எல்லாம் ஒருமுறை பார்த்துத் தனது ஆதரவைக் காட்டி மருந்துகளை எழுதிக் கொடுத்துவிட்டு அந்த ஸ்தாபனத்தின் மானேஜராகிய ராமனைக் கூப்பிட்டு, "ஸார்! எந்தெந்த மருந்துகள் ஆய்விட்டதோ அதன் ஜாபிதாவைக் கொண்டுவாரும், எழுதிக் கொடுக்கிறேன். இதோ 500 ரூபாய்! இதைக் கொண்டுபோய் மருந்துகளை வாங்கிக் கொண்டுவந்து வையும்; இவ்வாரத்தில் பெரிய மனிதர்களின் வீட்டில் கிடைத்த துகை இது; இந்தாரும்" என்று கூறி 500 ரூபாயைக் கொடுத்து மருந்துகளின் ஜாபிதாவின்படி எழுதிக்கொடுத்துவிட்டு வழக்கப்படி சில நோயாளிகள் வீடுகளுக்குச் சென்றுபார்த்துப் பின்பு வீட்டிற்குத் திரும்பிவந்தான்.

தன் தாயாருடன் யாரோ பேசிக்கொண்டிருப்பது கண்டு தான் வந்தது தெரியாமல் தன் விடுதிக்குச் செல்லப் போகும் வழியில் தன் தாயார் விசும்பிவிசும்பி அழும் குரலும் அதற்கு மிகமெல்லிய குரலில் சமாதானம் கூறும் வார்த்தையும் காதில் பட்டதும் தன்னை யறியாதவிதம் அவ்வறையின் ஜன்னலுக்கருகில் சென்று நின்று கவனிக்க வாரம்பித்தான்.

கமலவேணி:—நிஜமாகவா நீங்கள் சொல்கிறீர்கள்? என்னால் நம்பவே முடியவில்லையே! என் செல்வ மகனா இப்படிப்பட்டவன்?

கிருஷ்ணவேணி:—கமலம்! நானும் நீயும் இன்றைய சினேகிதிகளா? ஆதிமுதல் பழக்கப்பட்டவர்களல்லவா? தன் கண்ணாலேயே பார்த்தபிறகுதான் என் கணவர் என்னிடம் சொன்னார்...ஐயோ பாவம்! உன் சினேகிதி, கமலவேணி, தன் மகனைப்பற்றி ப்ரமாதமாய் எண்ணி ஏமாறுகிறாளே! அவன் கல்யாணம் வேண்டாம் என்றதற்குச் சரியான காரணமும் கூறாமல் ஏதோ சாந்தியாம், சிகரமாம் எதையோ கூறி அந்தம்மாளை அவன் ஏமாற்றிவிடுகிறான். அவன் ப்ரதிதினமும் இரவு 8 மணிக்கு, செங்குன்றத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு பெரிய பங்களாவுக்குச் செல்கிறான். இரவு 10, 12 மணிக்குமேல் வெளியில் வருகிறான். இந்த அதிகப்ரஸங்கித்தனமும் ஊழலும் இருப்பதனால்தான் அவன் வெளியில் சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு கல்யாணம் வேண்டாம் என்றுதான் மகா உத்தமன்போல் ஸாதிக்கிறான். எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது; இதை உடனே உன் சினேகிதை இடம் சொல்லு...என்று என் கணவர் வற்புறுத்திச் சொல்லியதால் நான் வந்தேன். நீ என்னமோ அவன் சொல்வதை நம்பித்தானிருக்கிறாய்...விஷயமோ விபரீதமாயிருக்கிறது!

கமல:—எனக்கு உண்மையில் நம்பிக்கையே கொள்ளவில்லையே...என் ஸ்ரீதரனா இப்படி துன்மார்க்க விஷயத்தில் இறங்குவான்?...அந்த இடத்தில் யாரிருக்கிறார்கள்? நல்ல குல ஸ்த்ரீயாக இருந்தால் நாமே பார்த்து அவன் இஷ்டப்படியே விவாகத்தை முடித்துவிடலாமே. அவன் மனதும் சந்தோஷமாகும், என் குறையும் தீரும்...

கிருஷ்:—ஐயோ பைத்தியக்காரீ! அந்தவீட்டில் யாரோ தேவதாசி புதிதாகக் குடிவந்திருக்கிறாளாம்; அவளுக்கு நான்கு பெண்கள் இருக்கிறார்களாம். அந்த தாசி மிகவும் படித்தவளாம்: கச்சேரிகாரியாம். ஒரு பெண்ணை பரத நாட்டியக்கலையிலும் ஒரு பெண்ணை ஹரிகதா காலக்ஷேபக் கலையிலும் ஒரு பெண்ணை உயர்தர உபாத்தியாயினியாக

வும் ஒரு பெண்ணை டாக்டராகவும் படிக்கவைத்திருக்கிருளாம்...

கமல:—என்ன! என்ன! தேவதாசிப் பெண்களையா இப்படிப் பழக்கி இருக்கிருள்? டாக்டராக வேலை செய்கிருளா? அல்லது இப்போது தான் படிக்கிருளா?...


கிருஷ்:—வேலை பார்க்கிருளாம்; ப்ரஸவ ஆஸ்பத்ரியில் அவள் டாக்டராம்; அவளுக்கு அபாரமான புகழாம்; கை ராசிக்காரியாம்; நல்ல அழகியாம்; தொழில் முறையில் தான் அவளிடம் பழகுகிருனே? அல்லது...

கமலவேணியினல் இதைச் சற்றும் தாங்கமுடியாது விம்மிவிம்மி அழத்தொடங்கினள். ஆதியில் தன் கணவன் இத்தகைய துர்ச்செய்கையின் விளைவினலேயே சகல விதத்திலும் கெட்டுப் பாழாகிக் கடைசியில் தாய் நாட்டையும்விட்டு ஓடிமறைந்த பயங்கர சம்பவம் அவள் கண் முன்பு படம்போல் சுழன்று இதயத்தைத் தாக்கியதால் அப்படியே கண்களை மூடியவாறு சாய்ந்துவிட்டாள்.

அதே சமயம் கமலவேணியின் சிறிய குமாரன் அங்கு வெகு படபடப்புடன் வந்து, "அம்மா சற்று முன் நான் சொல்லியதை நீ நம்பாது என்னையே எதிர்த்தடித்துப் பேசினயே! இதோ உன் ஆப்த சிநேகிதையே சொல்வதைக் கேட்டாயா? நானும் வெளியில் நின்று கவனித்துத்தான் வந்தேன். அண்ணு வரவர வெகு மோசமான நிலைமையில் இறங்கிவிட்டதைக் கண்டித்துத் திருத்த வழி தெரியாமல் அவனுக்காக என் வாழ்நாளையும் பாழ் நாளாக்குகிருயே! இது எந்த வீட்டில் நடக்கும் அம்மா! முதலில் நான் விரும்பும் பெண்ணை எனக்கு மணம்செய்து வைத்து எனக்குள்ள சொத்துக்களை உடனே பாகம் செய்து கொடுத்துவிடவேண்டும். தெரிந்ததா? இவனுடைய வீண் அட்டகாஸ ஆடம்பரச் செலவிற்கும் ஊதாரித்தனத்திற்கும் நான் இடங்கொடுக்கமுடியாது. இக்

காரியத்தை நீ முதலில் கவனித்துச் செய்யாவிட்டால் எது எப்படி நடக்கும் என்று சொல்லமுடியாது. நீ சொல்லும் நொண்டிச்சாக்கு இனி எனக்கு வேண்டாம். அண்ணன் ஒரு தேவதாசியை ரிஜிஸ்தர் மணம் செய்யப்போகிறான்; தம்பி எந்த ஜாதிக்காரியை இழுத்துக்கொண்டு ஓடப்போகிறானோ? என்று இப்போதே சுற்றுவட்டாரங்களில் பெரிதாக கலாட்டா செய்து என்னிடம் நேரிலேயே பேசுகிறார்கள். இந்த அவமானத்தைவிடப் பெரியதா அண்ணனுக்கு முன்பு எனக்கு மணம் செய்வது?''...

என்று வெகு ஆத்திரத்துடன் கூறியதைக் கேட்ட கிருஷ்ணவேணியம்மாள் அதை ஆமோதிக்கும் முறையில், "இதோ பாரு கமலம்! இவன் சொல்வது மிகவும் சரியான பேச்சு. உன் மூத்த மகன் என்னவோ சீர்திருத்தவாதி என்றும் சமூகத் தொண்டு செய்து புரட்டிவிடப்போகிறேன் என்றும் ஏதேதோ பறைசாற்றி மக்களை ஏமாற்றுகிறான். தகாத முறையில் ரிஜிஸ்தர் மணம் செய்த பிறகு ஏற்கெனவே உள்ள கரும்புள்ளியுடன் இதுவும் சேர்ந்தால் யார் பெண்ணைக் கொடுப்பார்கள்? என் தம்பியின் மகள் தாராபாய் வெகு அழகாயும் புத்திசாலியாயும் இருக்கிறாள்! அவளை மணம் முடித்துவிடு. நான் இன்றே அதற்கான ஏற்பாடுகளும் செய்துவிடுகிறேன். நீ இனிமேலும் மூத்த மகனின் பொய் பித்தலாட்டங்களை நம்பி ஏமாறாதே, இவனுக்கு நீ சரியான சமயத்தில் விவாகம் செய்யாவிட்டால் இவனும் தகாத வழியில் போய்விட்டால் உன் குடும்பம் உருப்படுவது எப்படி? உன் மருமகப்பிள்ளைகளும் சம்மந்திகளும் உன்னை ஏசிப் பேசிக் கேலி செய்யமாட்டார்களா? இதனால் உன் பெண்களுக்குச் சிறுமையல்லவா விளையும்! உன்னிடம் அனுப்புவார்களா? பிறந்தகத்தின் சீரும்சிறப்பும் அறவே மறைந்துவிடுமானால், அந்தப் பெண்களின் உள்ளம் உடைந்து வ்யாதியில் வீழ்ந்துவிட்டால் உன் கதி என்னவாகும்'' என்று வெகு கனிகரத்துடன் காரஸாரமாய்க் கூறி மனத்தைக் கலைத்து சரியானபடி தூபதீபம் போட்டு உடுக்கையடித்தாள்.



பக்கம் 2



பக்கம் 16

இத்தனை நேரமும் ஜன்னலுக்கு வெளிப்புறம் நின்று சகல விஷயங்களையும் கேட்டுக்கொண்டு நின்ற ஸ்ரீதரனுடைய மனத்தில் சற்றும் ஆத்திரமோ கலக்கமோ உண்டாகவில்லை. உலகம் போகிற போக்கைப் பார்த்துத் தனக்கு இதுவும் ஒரு பாடமாகவே எண்ணித் தனக்குள் சிரித்துக்கொண்டான். தான் வந்துநிற்கும் ஜாடையைக் கூடக் காட்டிக்கொள்ளாமல் மேலும் என்ன நடக்கிறது பார்ப்போம் என்று மவுனமாக நின்றான்.

கமலவேணியின் கலக்கத்தில் பதில் பேசவே முடியாது தவித்தவாறு, "ஏற்கெனவே குழம்பித்தத்தளிக்கும் என் மனத்தை நீயும் கூடச்சேர்ந்து வாட்டாதேம்மா! எப்படித்தான் நீங்கள் சொன்னாலும் என் கண்மணி ஸ்ரீதரன் மீது என் மனம் சந்தேகமே கொள்ளமாட்டேனென்கிறது. என்னவிருந்தாலும் இத்தகைய விஷயங்களைச் சட்டுபுட்டென்று நம்பி மேல்கொண்டு ஏதாவது செய்துவிட்டால் பிறகு எத்தனையோ துன்பமாக முடியும்.

மூத்தமகன் ராஜாவைப்போல் அழகாயும் செல்வாக்குடனும் உலகோரால் போற்றப்படும் முறையிலும் இருக்கையில் அவனை விட்டுவிட்டு இளையவனுக்கு மணம் செய்துவிட்டால் உலகம் என்ன நினைக்கும் தெரியுமா? மூத்தவனுக்கு ஏதோ கொடிய வ்யாதியோ, அன்றி யோக்யதை யற்றுவிட்டதோ, அன்றி வீரம் நிறைந்த ஆண்பிள்ளையில்லையோ என்கிற பலவிதமான கேள்விகளுக்கு இடம் உண்டாகும்; எப்படியாவது அவனைக் கெஞ்சிக் கூத்தாடி மன்றாடிக்கேட்டுக்கொண்டு தகுந்த பெண்ணைப் பார்த்து மணம்செய்வித்து அவனுடைய நன்மையைக் கோருவேனே யன்றி ஆத்திரப்பட்டு எதையும் செய்யமாட்டேன்... தம்பீ !...நீயும் சற்று பொறுமையாயிரப்பா! உன் அண்ணா ஸாமான்யப் பட்டவனல்ல. அவனே உனக்குச் சரியான இடத்தில் பெண்ணைத் தேடி மணம்

செய்துவைப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பதருதே தம்பீ!" என்று மிகவும் சாந்தமாய்க் கூறினாள்.

முன்னிலும் அதிகமான ஆத்திரத்தை யடைந்த தம்பி பதிலே பேசாமல் தடதடவென்று விறைப்புடன் சென்றான். கிருஷ்ணவேணியும் சென்றுவிட்டாள். தன் தாயின் உள்ளத் துடிப்பின் உச்சத்தை யறிந்த ஸ்ரீதரனுக்கு என்னவிதமாய் நாம் இந்த மகத்தான சோதனையிலிருந்து தப்பமுடியும்? எவ்வாறு என்னருமைத் தாயாருக்குப் பதில் சொல்லமுடியும்? என்ற மகத்தான கலக்கம் உண்டாகிவிட்டது. தன்மீது அளப்பரிய அன்பை ஆழமாய்வைத்து உருகும் தாயை இந்நிலைமையில் தனியாக விட்டுச் செல்லவும் மனமின்றித் தத்தளித்தான்.

சற்று முன்புதான் தாயின் தவிப்பை அறிந்து மனத்தில் நன்றாகத் தோய்ந்திருக்கும் உணர்ச்சிக்கனல்மீண்டும் தலைதூக்கி நின்றது. தன்னுடைய அடிப்படையான லட்சியத்தின் —தீவிரமான தீர்மானத்தின் —முடிவைச் சிதைத்துக் கொலைசெய்து ஊழல் குப்பையில் ஊடாடுவது முக்யமா? பெற்ற தாயாரின் ஆழமான அன்பிற்குக் கட்டுப்பட்டு முன்னறி தெய்வமான அன்னையின் இதயத்தைக் குளிரச்செய்வது முக்யமா? இத்தகைய மகா சோதனையான தர்மசங்கடத்தில் அவன்உள்ளம் குழம்பித் தவிக்கிறது. உலகிற்கெல்லாம் சகல வ்யாதிகளுக்கும் மருந்து கொடுத்து குணப்படுத்தும் சக்திவாய்ந்த நான் என் தாயின் மனோவ்யாதியைக் குணப்படுத்தாவிட்டால் நான் சண்டாளனிலும் கேடுகெட்ட சண்டாளனாகவன்றோ ஆய்விடுவேன். அந்தப் பாபத்தைச் செய்துவிட்டு நான் எனது லட்சிய ஸித்திபெற்றால்மட்டும் மனச்சாந்தியை —சாந்தியின் சிகரத்தை— அடையமுடியுமா? அப்படி என்னுடைய லக்ஷ்யப்படிக்கு நான் செய்து முடித்தாலும் அதைக் கடவுள் ஏற்றுமகிழ்ந்து என்னை வாழ்த்தி என்னுடைய சகல மனோபீஷ்டத்தையும் நிறைவேற்றுவாரா? இதென்ன சோதனையின் கொடுமை?... ஐயோ! அம்மா,

ஏன் இப்படி விம்மிவிம்மி அழவேண்டும்? தம்பியின் முறைப்பால் நாசம் விளைந்து அம்மாவின் இதயமே உடைந்துவிடுமே யன்றி ஏற்கெனவே நொந்து அளிந்த புண்ணு யுள்ள அவளது இதயத்திற்கு ஆறுதலும் சந்தோஷமும் எப்படி உண்டாகும்? அக்கினி சாட்சியாகக் கட்டிய கணவனுல் ஒரு சுகமும் —மகிழ்ச்சியும் —அடையாது பெருத்த ஏமாற்றத்தை யடைந்துநொந்து போன என் அன்னையின் உள்ளத்தைப் பின்னும் அளிந்த புண்ணுகச் செய்வது கொடுமையிலும் கொடுமையல்லவா? ...நான் என்ன செய்வேன்?'' என்று தத்தளித்தவாறு நின்ருன். சில விஞடிகள் ஏதோ யோசனை செய்து கொண்டு சடக்கென்று தன் தாயாரின் முன்பு ஓடி அவள் முன் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துஎழுந்து பின், "அம்மா! நீ கண் கலங்காதே! என்னுள்ளம் வெடித்துவிடும்போல் இருக்கிறது, இங்கு நடந்த சகல விஷயங்களையும் நான் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். இதோ பார்? அம்மா!'' என்று கூறியவாறு ஒரு கடிதத்தில் பரபரப்புடன் சில வரிகளை எழுதினுன். அதாவது:—

"என்னுருயிர்த் தம்பீ! தாமோதரா! நம்முடைய சொத்துக்கள்...வீடு வாசல், நகை நட்டு, நிலம் தோப்பு, ரொக்கம் முதலிய சகலத்தையும் நீயே அடைந்து உன்னிஷ்டப்படியே செலவுசெய்து கொள்ளும் உரிமையை சத்யமாய் நான் த்ரிகரணசுத்தியாய் உனக்குக்கொடுத்துவிட்டேன்; நீ வீணுகமனக் கலக்கமடையாதே. நம் முன்னறிதெய்வமாகிய தாயார் மனத்தை நோகவைக்காதே. நீ விரும்பும் பெண்ணை நானே முன்னின்று விவாகத்தை சம்ப்ரமமாகச் செய்துவைக்கிறேன். என்னுல் உன் விவாகம் தடைபடுவதை நான் சற்றும் சம்மதிக்கமாட்டேன்... என்னைப் பற்றி நீ என்னென்ன விதமாய்க் கேள்விப் பட்டாலும் அதுபற்றி நான் கவலைகொள்ளவில்லை. அதனுல் எனக்கு எத்தகைய தீங்குமில்லை. பகவானின் பதிவுப் புத்தகத்தில் என்னுடைய பெயர் சரி

யான முறைப்படி பதிவானுல் போதும். தம்பீ! இக் கடிதத்தை என் பூர்ண எண்ணத்துடன் எழுதுவதால் இதையே நீ உயிலாக எண்ணிக்கொள்; எந்தக் காலத்திலும் எந்தச்சமயத்திலும் இதைப்பற்றி நான் எவ்வித கேள்வியும் கேட்கமாட்டேன். இது சத்யம். என் மனேபீஷ்டம் நிறைவேறி நான் எதிர்பார்க்கும் சாந்தியின் சிகரத்தில் என்னைச் சேர்ப்பதற்கு இனி எந்தவிதமான தடையும் இல்லை என்று எண்ணுகிறேன். நீ சகலவித ஸௌபாக்யங்களுடனும் சந்தான சம்பத்துக்களுடனும் க்ஷேமமாயிருக்க பகவானை வேண்டுகிறேன். மறுமுறையும் சொல்கிறேன்: ஒரு செல்லாத காசுகூட எனக்கு வேண்டாம். நான் விரோத பாவத்துடன் இதைச் சொல்லவில்லை. இதய பூர்வமாய்ச் சொல்கிறேன். இதற்குச் சாட்சி ஆண்டவனே!

இங்ஙனம்,
உன் க்ஷேமத்தைக் கோரும் அண்ணு,
டாக்டர் ஸ்ரீதரன்''

என்பதை வெகு விரைவில் எழுதி ஒருமுறை படித்துப் பார்த்துப் பின் தன் தாயாரிடம் கொடுத்து, "அம்மா! இதைப் படித்துப் பாரம்மா!''...என்று வினயமாய்க் கூறினுன். கமலவேணியம்மாளும் பரபரப்புடன் படிக்கத் தொடங்கினுள்.

தன் காலில் முதலில் டாக்டர் விழுந்து நமஸ்கரித்த போது அவன் மனம் மாறிவிட்டதாயும் தான் விவாகம் செய்துகொள்வதாய்ச் சொல்லப்போகிருன் என்னும் எண்ணம் மின்வெட்டுப்போல் பளிச்சென்று தோன்றி ஒரு க்ஷணத்திற்குள் ஏதேதோ எண்ணங்களாகிய அலைகள் இதயக் கடலில் கொந்தளிக்க வாரம்பித்தன. எந்தப் பெண்ணைத் தேடி விவாகத்தைச் செய்துவைக்கலாம்? என்று கூட யோசனை உண்டாகிப் புதிய உணர்ச்சி வயப்பட்டுள்ள அடுத்த க்ஷணமே இந்தக் கடிதத்தைப் படித்த

தும் ஒவ்வொரு அக்ஷரமும் ஒவ்வொரு ஈட்டியால் குத்து வது போன்ற அதிர்ச்சி உண்டாகித் துள்ளச்செய்தது. பெருமாள் பெரியபெருமாளாகிய கதைபோல் கல்யாணம் மட்டும் வேண்டாமென்று சொல்லியதுமட்டுமின்றி சகல சொத்துக்களையும் பரித்யாகம்செய்து எழுதியிருப்பதைக் கண்டு குடல் குமுறுகிறது. கடிதத்தைப் பிடித்துள்ள கைகள் கிடுகிடு என்று நடுங்குகிறது. கண்ணீர் ஆருய்ப் பெருகுகிறது. வெயர்வை வெள்ளம் கால்முதல் தலை வரையில் பொங்கி ஓடுகிறது. இருவரும் வாய் திறவாத மவுன நிலையில் கல்லாய்ச் சமைந்து சிலவினாடிகள் பதுமை போலானார்கள்! "அம்மா!"...என்று குரல் தடுமாறக் கூப்பிட்டான்..."ஸ்ரீதரா!...இதுதான் நான் செய்த பாக் யத்தின் சாயலா?...உன்னைக் குளுதளுப்பான அழகிய அடர்ந்த தோப்புப்போல் பார்க்க எண்ணிய என் கண் களுக்குப் பாலைவனம்போன்ற பயங்கரக் காட்சியையா காணச் செய்யப்போகிருய்? இதென்ன கடிதம்? இது என்ன செய்கை?...அப்பா! இது கடிதமா? காலன்விடும் ஓலையா? பெற்ற வயிற்றின் துடிப்பை அறியும் சக்தி உனக்குக் கடுகளவும் இல்லையா? உன்னிதயத்தை நான் பூஞ்சோலை என்று எண்ணி இருந்தேனே. அது வெறும் வரண்ட காடாகவன்ருே இருக்கிறது! இக்கடிதத்தை நான் ஒருபோதும் உன் தம்பியிடம் கொடுக்கமாட்டேன்.

இரட்டைமாடுகளைப் பூட்டிய வண்டியிலிருந்து ஒரு மாட்டைப்பிரித்து வண்டியையும் வண்டியிலுள்ள சாமான் களையும் சின்னபின்னமாய்ச் சிதறவடிப்பதுபோல் நம் குடும்பத்தின் கட்டுக்கோப்பான நிலைமையை அழித்துச் சிதறிப்போகச் செய்வது ஒரு பெற்ற தாயின் கடமை யல்ல. நீ எத்தனை உயர்தரப் படிப்பு படித்திருந்தாலும் சாதாரண இச் சிறிய விஷயத்தில் உன்னிதயம் துளாவிப் பார்க்கவில்லை. ஒரு நாட்டின் கண்ணியம் அழிவது ப்ரஜைகளின் அக்ரமத்தினுல்; அதுபோல் ஒரு வீட்டின் கண்ணியம் குலைவது மக்களின் மதிகெட்டதனத்தினுல் என்பதை நீ உணரவில்லையா?...ஸ்ரீதர்!...ஏன் இந்த மவு

னம்?...உன்னைப் பத்து மாதம் சுமந்துபெற்ற தாயின் வயிறு குளிரச் செய்ய உனக்கு மனமில்லையா? பாலூட்டி வளர்த்த தாயின் வயிற்றில் பாலை வார்க்க நீ ப்ரியப்பட வில்லையா? எத்தனை வேதாந்தம் பேசினாலும் அதுவும் வாழ்க்கைக்கு ஒரு சிறிது வேண்டியதுதான். எனினும் அதற்காக உன் குடும்பம் கிளைத்துச் செழித்து இம்மைக் கும் மறுமைக்கும் ஸார்த்தகத்தைத் தேடிக்கொள்ள வேண்டாமா?......

என்று தனது உணர்ச்சிக்கனலை அள்ளிவீசி மெஷின் போல் சொல்லும் வார்த்தைகள் எதற்கும் டாக்டர் பதிலே பேசாமல் சிலைபோல் கைகளைக் கட்டி நிற்கிறான். அந்த ஹாலில் மாட்டப்பட்டுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், மகாத்மா காந்தி அடிகள், ஸ்ரீராமாநுஜர், சங்கரர், பட்டினத்தார் முதலிய மகான்களின் படங்கள் மீதே அவன் கண்கள் சென்றுலயித்திருப்பதைக் கண்ட கமலவேணிஉள்ளம் கதிகலங்கியது!...ஸ்ரீதர்!என்ன பார்க் கிறாய்?...என்று வருத்தம் தேங்கியகுரலில் கேட்டாள்.

ஸ்ரீதர:—தாயே! அந்த மகான்களைப்போல் த்யாகத் தீயில் குளித்துப் புனிதமான தொண்டாற்றி அப்பழுக் கற்ற பேரின்பநிலையை அடைந்து உள்ளம் பூரித்துச் சாந்தி யின் சிகரத்தில் ஆனந்த வாழ்க்கையை நடத்தவே பார்க்கிறேன்...

"என்ன என்ன!...சன்யாசியாகவா? துறவியாகவா? ...ஸ்ரீதர்! உன் பெற்ற தாயின்......

"அம்மா! உன்னை அரைக்ஷணமும் விட்டுப் பிரியவே மாட்டேன். மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கையை வளர்க்கப் பெரும் உதவிபுரிந்த ச்ரவணன் கதையைப் போல் உன்னை நான் என் சிரசில் சதா தூக்கித் தாங்கிக் காப்பாற்றுவேன். அநித்யமான உலக பாசபந்தங்களில் உழன்று ஆத்மஹத்தி செய்துகொள்வதற்கொப்பான

பாபக் குட்டையில் உழலவேண்டாம். தாயே!...நித்யமான வஸ்துவின் பாதங்களில் சேருவதற்கு வழியைத் தேடிக் கொள்வோம்...இந்த சொத்து சுதந்திரம் சகல பந்தங்களையும் விட்டுவிடு...என்னோடு நீ வந்துவிடு...

"ஐயோ!......போதும்...போதும்...நிறுத்து! தம்பீ! நிறுத்து!...என் வாழ்நாளில் நான் கண்ட பயங்கர சோதனைகள் போதாமல் நீ வேறு என்னைச் சோதிக்கப் போகிறாயா? உன் தந்தை சென்ற இடம் தெரியாது மறைந்த அதிர்ச்சியும் அவமானமும் இன்னும் என்னிதயத்தில் மறையாத புண்ணாயிருக்கிறதை நீ உணராமல் அவிந்த புண்ணில் அம்பை எய்து வேடிக்கை பார்க்கிறாயா? ஐயோ என்னுயிர்நீங்கி விடக்கூடாதா?.....கடவுளே!...ரக்ஷகா!" உனக்கு இத்தகைய விளையாட்டுக்களைச் செய்து வேடிக்கை பார்ப்பதா அழகு?...என்று படபடத்துக் கூறிய வேகத்தில் தடாரென்று உணர்ச்சி மிஞ்சி ரத்தக் கொதிப்பும் அதிகவேகமும் உண்டாகி விழுந்துவிட்டாள்.

மகா மேதாவியான டாக்டர் தான் பட்டங்கள் பெற்றுப் புகழடைந்ததைவிட அனுபவம், அன்பு, பணிவு நோயின் நுட்பமறிந்து வைத்தியம் செய்யும் திறமை, கைராசி, தயாள குணம் முதலிய சகல அம்சங்களும் நிறைந்திருப்பினும்...நாட்டிற்கு அரசனாயினும் வீட்டிற்குக் குழந்தைதான்...என்பது பழமொழி; அதுபோல் பெற்ற தாயாருடைய தவிப்பையும் உணர்ச்சியின் உச்சஸ்வரத்தையும் அன்பின் ஆழத்தையுங் கண்டு கதிகலங்கி நின்ற சமயம் அவள் விழுந்துவிட்டதைக் கண்டதும் ஒன்றுமே தோன்றாமல் அலறிப்போய் "அம்மா!" என்று ஒரேபாய்ச்சலாய்ப் பாய்ந்து தாங்கிக்கொண்டான். அவனுடைய உள்ளத்தில் விவரிக்க இயலாத சங்கடம் உண்டாகி வதைக்கின்றது.

சிறு குழந்தையை வாரி எடுப்பதுபோல் அவளைத் தூக்கிப் படுக்கையில் கிடத்தினான். தான் எழுதிய

கடிதத்தை அடியோடு மறந்தான். கமலவேணியின் கையிலிருந்து கடிதம் நழுவி ஒரு பக்கம் விழுந்துவிட்டது. தாயாரின் நிலைமையை டாக்டர் என்ற முறையில் சோதித்துப்பார்த்த ஸ்ரீதரனுக்கு தன் தலையில் வானமே இடிந்து விழுந்துவிட்டதுபோல் தோன்றியது!...“ஐயோ! அம்மாவின் நிலைமை திடீரென்றுபடுமோசமாகிவிட்டதே!...பாவி என்னாலல்லவா இத்தகைய விபரீதமான அபாய நிலைமை வந்தது?......தம்பீ! தாமோதரா!......இங்கு வாயேன்!... என்று தன்னை மீறிய அன்புடன் கத்தினான்.

தன்னறையிலிருந்த தாமோதரனுக்கு இச்செய்தி எட்டியதும் ஓட்டமாக ஓடிவந்தான். “தம்பீ! அம்மாவைப் பார்த்துக்கொள்; இதோ ஒரு க்ஷணத்தில் போன்செய்து பெரிய டாக்டரை வரவழைக்கிறேன்'' என்று கூறி ஓடினான்...தாமோதரனின் கோபம் நிறைந்த உள்ளத்திலும் தாயின் பரிதாபகரமான நிலைமையின் காட்சி அன்பையும் துக்கத்தையும் உண்டாக்கியது...“அம்மா!'' என்று கத்தி அழைத்தான்...திடீரென்று எக்காரணத்தினால் இப்படி நேர்ந்துவிட்டது?...அண்ணா ஏதாவதுசெய்துவிட்டானோ? ...என்று கொடுமையான எண்ணமே முதலில் தோன்றிய அதேசமயம் கமலவேணியின் கையிலிருந்து விழுந்திருந்த கடிதம் பளிச்சென்று காட்சியளித்ததும் அதை எடுத்து ஒரு க்ஷணத்தில் படித்துப் பார்த்தான். இன்னதென்று விவரிக்க இயலாத உணர்ச்சியுடன் அக் கடிதத்தை அப்படியே ஜேபிக்குள் பதுக்கிக்கொண்டான். அவனது கண்முன் கிடக்கும் தாயின் பாசத்தையும் பீறிக்கொண்டு ஏதேதோ உணர்ச்சிகளும் எண்ணங்களும் அலைமோதித் திக்குமுக்காடச் செய்தன.

# 4

"ஹலோ!... ஹலோ!... ஆம்! நான்தான்! என்ன? ...உங்கள் தாயாருக்கா பேராபத்தான நிலைமை?... இதோ, இப்போதே புறப்பட்டுவிட்டேன்; பயப்படாதீர்கள்!...நீங்களே பயப்படலாமா? உங்கள் மார்பு அடித்துக்கொள்ளும் வேகம் உங்கள் குரலிலேயே காட்டுகிறதே!...என்ன?... அன்னையின் பாசமா?...உண்மை! முக்காலும் உண்மை! பெற்ற தாயின் அன்பு இவ்வுலகில் வேறு யாருக்கு ஸார் உண்டு? இதோ வந்துவிட்டேன்..." என்று டெலிபோனில் பெரிய டாக்டர் சொல்லிய உடனே ஸ்ரீதரன் ஓடிவந்தான்.

அப்போதும் கமலவேணியின் நிலைமை அப்படியே இருப்பதைக் கண்ட ஸ்ரீதரன் ஏதோ சிகிச்சை செய்யத் தொடங்கிய சமயம்..."அண்ணா! சற்றுமுன் என்னோடு நன்றாகப் பேசிக்கொண்டிருந்த அம்மாவுக்குத் திடீரென்று இப்படிப்பட்ட அபாயகரமான நிலைமை எதனால் உண்டாகியது? நீ என்ன செய்தாய்?...என்று கரகரத்த குரலில் கேட்டான், தம்பி தாமோதரன்.

இக்கேள்வியால் திடுக்கிட்ட ஸ்ரீதரன்; "தம்பீ! என்ன கேள்விகேட்கிறாய்? நான் என்ன செய்தேனா?...என் தாயாரையா நான் என்ன செய்தேன் என்று மனந்துணிந்து கேட்கிறாய்?"......என்று கூறித் தம்பித்துத் தடுமாறி நின்றுவிட்டான்.

தாமோதரன்:—ஆமாம்; மனந்துணிந்துதான் கேட்கிறேன். மூன்று டாக்டர்கள் சேர்ந்து ஒரு திடமான மனிதனைக் கொன்றுவிட்டதாக ஒரு கதை சொல்வார்கள். அதுபோல் வைத்தியர்கள் தங்கள் தொழிலின் மேன்மையால் உயிர்கொடுப்பதுபோல் வேண்டாதவர்களின் உயிரை எடுக்கவும் சாகஸம் கற்றவர்கள்தான்...

"தம்பீ! வாயை மூடு! அதிகப்ரஸங்கித்தனமாய்த் துடுக்காகப் பேசாதே! உயிருக்கு மன்றாடிக்கொண்டுள்ள

அருமை அன்னையின் பக்கத்திலமர்ந்தா இம்மாதிரி பேசுகிருய்?...அறிவிலி நீ என்பதை நான் அறிந்து வாளாவிருக்கிறேன்...என்று முடிப்பதற்குள், "ஆம் நான் அறிவிலிதான். நீ மகா மேதாவியாயும் அபாரசக்தி வாய்ந்த சூரனுயும் இருப்பதனுல்தான் பெற்றதாயின் மனத்தை நோகச்செய்து குடும்பத்தையும் பாழடித்து தேவடியாள் வீட்டில் தாஸனுய்க் கிடக்கிருய். அந்த வயிற்றெரிச்சலின் காரணமாய் உன்னை ஏதாவது சொல்லி இருக்கக்கூடும். அந்த ஆத்திரத்தில் நீ ஏதோ......என்று வெகு கடுமையாகச் சொல்லும்போது,பெரிய டாக்டர் மிக்க அவசரமாய் வந்தார். அவருடன் கூடவே வரும் நர்ஸ் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தாள்.

"நமஸ்காரம், டாக்டர்!" என்று வணக்கமாயும் பதறியவாறும் வரவேற்றுத் தன் தாயாரிடம் அழைத்துச் சென்று காட்டினுன். டாக்டர் முற்றிலும் பரிசோதித்துப் பார்த்தபின், "இதயமும் நாடியும் இத்தனை பலஹீனமாகிவிட்டதே! என்ன காரணமாக இருக்கும்? ரத்த ஓட்டம் மிகவும் அதிகமாயிருக்கிறது. ஏதாவது பயங்கரமான—அதிர்ச்சியான—சம்பவம் நடந்ததா?...உங்களுக்குத் தெரியுமா?...என்று கேட்டபடி தக்கமருந்தை ஊசி குத்தினுர்.

ஸ்ரீதர:—நீங்கள் கேட்கிறபடி எத்தகைய பயங்கரமும் அதிர்ச்சியும் நடக்கவில்லை, டாக்டர்! வழக்கப்படி என் விவாகத்தைப்பற்றித்தான் கேட்டாள். நானும் வழக்கப்படித்தான் வேண்டாம் என்றேன். இதோ......இப்படங்களைக் காட்டி...இம்மாதிரி நான் வாழ விரும்புவதாகச் சொன்னேன்; அவ்வளவுதான் காரணம் —இம்மாதிரி விழுந்துவிட்டார்கள்...எனக்கும் ஒன்றுமே புரியவில்லை...

பெரிய டாக்டரின் முகம்மாறிச் சுருங்கியது! ஸார்! நீங்கள் மகா மேதாவி என்பதில் ஆக்ஷேபணையே இல்லை. உம்மைவிட வயதிலும் அனுபவத்திலும் நான் பெரியவனுக இருப்பினும் உங்களுடைய அதிசாமர்த்தியத்தை

நான் வியந்து ஒப்புக்கொள்கிறேன். இருப்பினும் மகத்தான புத்திசாலிகளுக்கும் ஒரு சிறு மதியீனம் இல்லாமலில்லை. மகா பெரிய ஆனைக்குக் கண்கள் மிகச் சிறியதாக வைத்திருப்பதையும் ஒரு உதாரணம் கூறலாம். அது போல் வெகு திறமைவாய்ந்த உமக்குப் பெற்றதாயின் உணர்ச்சியை அறிந்து பதில் சொல்லத் திறமை போதவில்லை. உங்கள் மூலம் அந்தம்மாள் எதிர்பார்க்கும் உன்னத வாழ்வின் ஸார மறியாது அரைவினாடியில் அதைத் தகர்த்தெறிந்து விடுவதுபோல் பேசியதைப் பெற்ற உள்ளம் தாங்குமா?...எந்தத் தாயார்தான் தன் மகனை மனந் துணிந்து சன்யாசியாக வாழ விடுவாள்? சங்கராசாரியர்ஸ்வாமிகளின் வாழ்க்கைச் சரிதையை நீர் படிக்கவில்லையா? க்ரகஸ்தாச்ரம வாழ்க்கை நடத்தாததால் சாக்ஷாத் ப்ரம்மாவும் ஸரஸ்வதியும் வேறு வேஷத்தில் வந்து தர்க்க வாதத்தில்சங்கராசார்யரைத் தோற்கடித்து க்ரகஸ்தாச்ரம சாஸ்திரம் கற்றுவரும்படி உபதேசித்ததும் அவர் கூடு விட்டுக் கூடுபாய்ந்து காமசாஸ்திரம் படித்துப் பின் வந்ததாயும் உள்ள சரித்திரத்தை மறந்தீரா? சன்யாசி வாழ்வு மட்டும் உயர்ந்தது என்று நினைப்பதை விரும்பமாட்டேன்; வள்ளுவர் மனைவியுடன் க்ரகஸ்தாச்ரம வாழ்க்கையிலிருந்தபடியே ஒப்புயர்வற்ற திருக்குறளைச் செய்து உலகிற்கு உதவவில்லையா? நீர் சொல்கிற ராமகிருஷ்ணர், மகாத்மா காந்தி, ராமாநுஜர் முதலியோரும் தர்ம பத்னியுடன் வாழ்ந்தபடி அபாரமான ஸேவை செய்து உலகிற்கு உதவவில்லையா? இதை எல்லாம் மறந்து பெற்றதாயைச் சோதிக்கலாமா?'' என்று உபதேசம் செய்தபடியே சிகிச்சை செய்கிறார்.

தாமோதரனும் இச்சந்தர்ப்பத்தில் ஆத்திரமாகப் பேசி அண்ணனைத் தாக்கவேண்டும் என்று நினைத்தான். அதற்குள் பெரியடாக்டரே சரியானபடி கண்டித்துப் பேசுவதைக் கண்டு சற்று பொறுமையுடன் இருந்தான்.

ஸ்ரீதரனுக்கு ஒன்றுமே பதில் சொல்லத் தெரியவில்லை. ஒரே குழப்பமாகிவிட்டது. "என் தாயாருடைய

உயிர் வருமா? போய்விடுமா? இத்தகைய சோதனை வரும் என்று நினைக்கவே இல்லையே! உயிர் போய்விடுமாயின் நான் பெரிய கொலைகாரனாகவன்றோ ஆய்விடுவேன்! பெரிய டாக்டர் சொல்கிறபடி இந்த விஷயத்தில் அறிவு குன்றி அவசரப்பட்டுப் பேசிவிட்டேனே! ஆண்டவனே! முதலில் என் அன்னையை இந்தக் கண்டத்திலிருந்து காப்பாற்று. எனக்கு ஒரேகுழப்பமாயிருக்கிறது. தாயைக் கொன்றுவிட்டான் என்கிற வசைச் சொல்லுக்கு என்னை ஆளாக்காதே...என்னைக் காப்பாற்று'' என்று மனதிற்குள் வேண்டிக்கொண்டு தவிக்கிறான்.

இதற்குள் சுமார் அரைமணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. கமலவேணியம்மாளுக்கு நன்றாக ப்ரக்ஞை வரவில்லை என்றாலும் நாடி சற்று நல்ல குறியைக் காட்டியது கண்ட பெரிய டாக்டர் முகத்தில் சற்று தெம்பு உண்டாகியதும், "ஸ்ரீதர்! இதோ நாடியைப் பாருங்கள்!...இதயத்தையும் பாருங்கள்!...என்று கூப்பிட்டார்.

தன்னை மறந்து ஒரே பித்துப் பிடித்தமாதிரி நின்றிருந்த ஸ்ரீதரன் இதைக் கவனிக்கவே இல்லை. அவனை உற்றுக் கவனித்த பெரிய டாக்டர், "ஸ்ரீதர்! இதென்ன ப்ரமைபிடித்த நிலைமை! தாயாருக்குக் குணமாகுமா என்று கவலைப்படுகிறீர்களா? இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் உயிருக்கு அபாயம் இல்லை என்றுதான் தோன்றுகிறது. வந்துபாருங்கள்''...என்று கையைப் பிடித்திழுத்து நாடியைப் பார்க்கச்செய்தார்.

ஸ்ரீதரன் நாடியைப் பரிசோதித்துப் பார்த்ததும் குணமான சூசிகை தெரிவதைக் கண்டதும் சந்தோஷத்தினால்முகம்மலர்ந்தது;"டாக்டர்! இனி பயமில்லையல்லவா? என் தாயின் இந்த கண்டம் தீர்ந்துவிட்டதல்லவா?'' என்று ஆனந்தத்துடன் கூறியவாறு தாயாரின் முகத்தோடு முகம் பதித்தவாறு, "அம்மா! அம்மா!...கண் திறந்து பாரம்மா!''...என்று அன்புகனியக் கூப்பிட்டான்.

மேலும் சில நிமிஷங்கள் சென்றன. கமலவேணியம்மாள் மெல்ல அசைந்து கொடுத்துப் பின் கண்ணைத் திறந்தாள். "ஸ்ரீதர்! ஸ்ரீதர்! என்னுயிர் இப்படியே போய் விடவேண்டுமென்று ப்ரார்த்தனை செய்யப்பா! என் பாவிப் பிறப்பின் தொல்லை நீங்கி இத்துடன் முடிவு பெற்றால் போதும்"...என்று பேசமுடியாது திக்கித் திக்கி ஒவ்வொரு வார்த்தையாய் அக்ஷர அக்ஷரமாய்ச் சொன்னாள். கண்கள் சரியானபடி விரிந்து திறக்கவில்லை எனினும் நீர் கொட்டுவதில் பின்னடையவில்லை. மறுபடியும் சில நிமிஷம் மயக்கமாய்க் கிடந்தாள்.

சில நிமிஷங்கள் கழித்து மறுபடியும் கண்ணைத் திறந்தபோதுதான் ஸ்ரீதரன் தன்னிடம் கொடுத்த கடிதத்தின் நினைவு வந்தது: உடனே தன் கைகளைப் பார்க்கிறாள். சுற்றுமுற்றும் பார்க்கிறாள். அப்போதுதான் பெரிய டாக்டரும் தன் சிறிய மகனும் அங்கிருப்பதை அறிந்தாள்...ஸ்ரீதர்! இதென்ன பெரிய டாக்டரை ஏன் அழைத்தாய்? எனக்கென்ன வந்துவிட்டது கேடு?... ஒன்றுமில்லையே..."என்று கூறியபடி எழுந்து மெல்ல உட்காரப்போனாள்.

ஸ்ரீதரன் அப்படியே தடுத்துப் படுக்கவைத்துப் பின், "அம்மா! நான் டாக்டர், நீ என்னுடைய பேஷண்ட்; இனி நான் சொல்கிறபடிதான் கேட்கவேண்டும்; நீ எழுந்திருக்கக் கூடாது. உன்னுடைய நிலைமை சற்று நேரத்திற்கு முன்பு எப்படி இருந்தது தெரியுமா? நாங்கள் தாயற்றபிள்ளைகளாகிவிடுவோமோ என்று பயப்படும்படி இருந்தது.... என்று சொல்லி முடிப்பதற்குள்..."உம்!...தாய் இருந்தும் பெற்றதாயின் மனத்தை மகிழ்விக்காமல் வயிற்றைக்குளிர வைக்காமல் இருப்பதைவிட தாயற்ற மக்கள் உலகத்தில் கோடிக் கணக்கிலிருப்பவர்களுடன் நீங்களும் இருந்தால் நல்லதாயிற்றே! பெற்றதாயின் இதயத்துடிப்பை...பேராவலை... அறியாமல் நடக்கும் உங்களுக்கு தாய் எதற்கப்பா?

...டாக்டர்! நீங்களாவது சற்று புத்தி சொல்லக்கூடாதா? இம்மாதிரி இவன் இருப்பதைப் பார்க்கும்போது என் உள்ளம் துடிக்கிறதே!...அதே கவலையில்தான் எனக்கு அடிக்கடி மயக்கம் வருகிறது. அதைக்கூட நான் இவனிடம் சொல்லவில்லை....ஊருக்கெல்லாம் டாக்டரே யன்றி உற்றாருக்கும் பெற்றதாயாருக்கும் மருத்துவனல்ல! மறுத்துப்பேசும்...மறத்து வரட்டுப் பேச்சுப்பேசும்...மேதாவியாகத்தானிருக்கிறான்! இவைகளை எல்லாம் பார்த்து நன்றாக அனுபவித்துக் குட்டுப்பட்டவர்கள் புழுக்கடைப் பச்சிலை வீரியத்தீந்து உதவாது...என்றும் "வீட்டுச்சாக்கு வாட்டப்படாது" என்றும் பழமொழிகளைச் செய்தார்கள் போலும்!...டாக்டர்! வேதாந்த ஞானமும் வைராக்ய உள்ளமும் வேண்டியதுதான். அதற்கு நமது குடும்பத்தின் வாழ்வு அடியோடு சூன்யமாகி வம்சமே நாசமாகிவிடும்படி நடப்பது விரும்பத்தக்கதா? சாக்ஷாத் நாராயணனே ராமனாகப் பிறந்தார், கிருஷ்ணனாகப் பிறந்தார்; ஸீதையையும் ருக்மிணியையும் முறையே மணக்கவில்லையா?

லோக ரக்ஷணார்த்தம் அவதாரம் செய்த பகவானே மனைவியுடன் சேர்ந்துதான் சகல ஜெயத்தையும் அடைந்தார். அந்த வழியைப் பின்பற்றி நீயும் மணந்துகொண்டு உத்தம மனைவியுடன் வாழ்க்கையை நடத்தியவாறு எத்தனையோ ஸேவைகளைச் செய்யலாமே! ஒண்டிக்கட்டை வாழ்வு ஒரு வாழ்வா?...என்று ஆயாஸத்துடன் கூறியபடியே மறுபடியும் கடிதத்தைத் தேடவாரம்பித்தாள்.

"ஸ்ரீதர்! என்னதான் உம்முடைய நோக்கங்களும் லட்சியங்களும் வேறாயிருப்பினும் பெற்ற தாயை மகிழ்விக்காது என்ன வேலை செய்தாலும் உபயோகமே இல்லை. ஆகையால் உலகத்தோடொத்து வாழ்...என்றபடி செய்வதுதான் உசிதம். இதென்ன வீண்பிடிவாதம்? சரி, நான் வருகிறேன். உயிருக்குப் பயமில்லை. மறுபடியும் இம்மாதிரி இதயக்கோளாறு உண்டாகுமானால்......சொல்ல முடியாது; உமக்குத் தெரிந்த விஷயந்தான். ஜாக்ரதை

யாய்ப் பார்த்துக்கொள்வதோடு மணம் செய்துகொள்வதாக வாக்குக்கொடுத்துக் காப்பாற்றும். எனக்குக்கூடத் தான் விவாக விஷயத்தில் சிறிது மாறுதல் எற்பட்டிருந்தது. உம்மைப்போல் நான் பீஷ்மாசாரி வ்ரதம் அனுஷ்டிக்கவில்லை. என்னிஷ்டப்படி படித்த பெண்ணை மணக்க நான் நினைத்தேன். ஆனால் என் தாயார் தன்னிஷ்டப்படி தன் நாத்தனாரின் மகளைத்தான் முறைப்படிக்குக் கல்யாணம் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டாள். அப்படியே செய்து என் அன்னையை மகிழ்வித்தேன்.

என் தாயின் ஆழமான கரையிலாத அன்பின் ஆசியினால் என்மனைவியும் நானும் தேனும்பாலும்போலத்தான் வாழ்க்கை நடத்துகிறோம். வெகு சந்தோஷமாக எங்கள் குடும்பம் நடக்கிறது. பகவானின் க்ருபையால் குழந்தைகளும் நல்ல வருவாயும் கிடைக்க, ஏதோ பகவானின் நாமத்தை பஜித்தவாறு காலம் நடந்துவருகிறது. நானும் ஏதோ வைத்யமுறையில் கூடியவரையில் தருமமும் செய்துதான் வருகிறேன்... அடாடா! நான் வந்து ஏகப்பட்டநேரமாகிவிட்டது, நான் வருகிறேன்; என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

டாக்டர் சென்றபிறகு கமலவேணியம்மாள் "ஸ்ரீதர், என் கையிலிருந்த அக்கடிதமெங்கே?" என்றாள். இதற்குள் சிறிய மகன் ஏதோ காரியமாய்ச் செல்வதுபோல் போய்விட்டான். "தாயார் கேட்டபிறகே இவனுக்கு அந்த நினைப்பு உண்டாகியது. "கடிதமா? நான் அதைப் பற்றி மறந்தேபோய்விட்டேனே...நீதானேம்மா கையில் வைத்திருந்தாய்...சரியாகப் பார்க்கிறேன். நீ படுத்திரம்மா" என்று கூறிவிட்டு, பின் அவ்வறை பூராவும் தேடினான்; எங்கும் காணவில்லை.

கமல:—அகப்பட்டதா தம்பீ!


ஸ்ரீதர:—காணவில்லை யம்மா, இங்குதானே இருக்க வேண்டும், இதற்குள் எப்படி மாயமாய் மறைந்திருக்கும்?


வேலைக்காரிகூட பெருக்க வரவில்லையே! ஒருவேளை தம்பியின் கையில் கிடைத்திருக்குமா?

கமல:—ஐயையோ! நான் இவ்விஷயமே அவனுக்குத் தெரியக்கூடாது....கடிதத்தை உடனே கிழித்துவிட வேண்டும் என்று எண்ணினேனே! நான் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாக ஆய்விட்டதே. இப்போது என்ன செய்வேன்?...அவனுடைய கையில் கடிதம் அகப் பட்டிருக்குமானால்...?

ஸ்ரீதர:—அம்மா! இதற்கு நீ கவலையே படாதேம்மா! கடிதம் அவனுக்கே நேராகக் கொடுப்பதற்காகத்தானே அம்மா நான் இதய பூர்வமாய் எழுதினேன். அவனிடம் அகப்பட்டதனால் ஒருவித தீங்கும் வராது. எனக்கதைப் பற்றிக் கவலையே இல்லை. இந்த சொத்தை நான் த்ருண மாக எண்ணுகிறேன். எனக்குக் கடவுள் கருணையுடன் உவந்து கொடுத்துள்ள தொழிலில் என்றைக்கும் வயிறு வளர்க்கப் பஞ்சமில்லை; நீ இன்னிலைமையில் இதைப் பற்றிக் கவலைப்படாதேம்மா. முதலில் நீ பரிபூர்ண ஓய்வு எடுத்துக்கொள்—என்று தேறுதல் கூறும்போது டெலி போன் மணியடித்தது கேட்டு ஸ்ரீதரன் சென்று பேசத் தொடங்கினான்.

"ஹலோ...ஓ! லேடி டாக்டர் துளஸீபாய் அவர்களா? குட்மார்ணிங் டாக்டர்! என்ன சமாச்சாரம்?...என்ன டேஞ்சர் கேஸா? ஆண் குழந்தையா பிறந்தது?...குழந் தைக்கு ஒன்றுமில்லை, திடீரென்று ப்ரஜையை அற்றுவிட் டதா...ஜுரம் இருக்கிறதா பார்த்தீர்களா?...என்ன! 95 டிகிரியா?... அடாடா சீதளமல்லவா வந்துவிட்டது?...நான் வரவேண்டும்என்று அந்தவீட்டினர் விரும்புகிறார்களா?... சரி...என் தாயாருக்கும் உடம்பு சரியில்லை. இப்போது தான் பெரிய டாக்டர் நாராயணன் வந்து பார்த்துச் சென்றார். இப்போது தேவலை...இதோ உடனே வரு கிறேன்...என்று கூறும்போது தட்டித் தடுமாறியபடி





பக்கம் 62

தன் தாயார் எப்படியோ எழுந்துவந்து இவனுக்குத் தெரியாமல் நிற்பதை யறிந்து திடுக்கிட்டு,"இதென்ன செய்கையம்மா! நீ ஏன் எழுந்துவந்தாய். மறுபடியும உடம்பு அதிர்ச்சியடைந்துவிட்டால் என்ன செய்வது?" என்று அவளைக் கையைப் பிடித்து மெல்ல நடத்தி அழைத்து வந்தான். பெற்ற தாயாரின் பாசம் எத்தனை வேகமானது? எத்தகைய ஆழமானது? எத்தனை கூர்மையானது?... என்ற உண்மை பளிச்சென்று ஸ்ரீதரனுக்குத் தெரிந்தது!

கமல:—ஸ்ரீதர்! என்னைக் கோபிக்காதே...இப்போது பேசிய லேடி டாக்டரா தேவதாஸி குலத்தவள்?...அவள் பெயரா துளஸிபாய்? அவளிடமா உனக்கு ஸினேகம்? தேவடியாள் பெயரா பவித்திரமான துளஸிபாய்என்பது?

ஸ்ரீதரன் கடகடவென்று சிரித்தான். சற்று முன்பு தான் கிருஷ்ணவேணி என்பவள் இது விஷயங்களைக் கலகம் செய்திருப்பது இவனுக்கு நினைவிற்கு வந்ததால் இக்கேள்வியால் இவனுக்கு எத்தகைய அதிர்ச்சியோ ஆச்சரியமோ உண்டாகவில்லை. மிகவும் சாவதானமான குரலில், "அம்மா! வீணான விஷயத்தில் மனத்தை அலட்டிக்கொள்ளாதே. நான் உன் கேள்விக்குப் பிறகு பதில் சொல்கிறேன். அங்கொரு நோயாளி மிகவும் ஆபத்தான நிலைமையிலிருக்கிறாளாம். உடனே போய்ப் பார்க்கவேண்டும். நான் வருகிறேன்; படுத்துக்கொள்ளம்மா!" என்று கூறி, அவளைப் படுக்கையில் தானே படுக்கவைத்துப் பின் வேலைக்காரியைப் பார்த்துக்கொள்ளச் செய்துவிட்டுச் சென்றான். கமலவேணியின் சந்தேகம் சற்றும் குறையாமல் மேலும் வலுத்தது.

கடிதத்துடன் சென்ற தாமோதரனுக்கு இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு தனி உணர்ச்சியும் வேகமும் ஒன்றுகூடிக் கொந்தளிக்கின்றதால் அவன் திரும்பத் திரும்பக் கடிதத்தைப் படிக்கிருன். ரகஸியமாய்ப் பதுக்கி வைத்துக்கொள்கிருன். இக்கடிதத்தில் கண்டபடி அண்ணு சகலத்தையும் எனக்குக் கொடுத்துவிட்டதால் நான் சாமான்யப் பேர்வழியல்ல! பல லக்ஷங்களுக்கு நானே அதிகாரி! இனி என்னைப்பற்றிய புகழ்கள் உச்சத்தை யளாவி ப்ரகாசிக்கும்! அதற்கான வழியில் முதலில் சில காரியங்களை மட்டும் செய்துவிடவேண்டும். அதாவது, எனது முக்யமான சினேகிதர்களைக் கொண்டு சில பத்திரிகைக்காரர்களையும் பார்க்கச் செய்து ஒரு பெரிய தேனீர் விருந்தளித்து சடக்கென்று சில ஸ்தாபனங்களுக்கு சில ஆயிரம் ரூபாயைக் கொடுத்து உதவிவிட்டால் பிறகு என் புகைப்படங்களுடன் விஷயம் ப்ரமாதமாய் ஆகாயத்தை அளாவிப் பறக்கும்! அதன் பிறகு விடிந்தால், அஸ்தமித்தால் என்னைக் காணவரும் ப்ரபுக்களும் சீமாட்டிகளும் கணக்கிடமுடியாது. பெண் கொடுப்பதற்கும் கோடிஐச்வர்யர்கள் போட்டியிடுவார்கள். இன்று தொழிலின் மேன்மையினல் அண்ணுவைப் புகழும் ஜனங்கள் என்னைக் கொடைவள்ளல், கலைவள்ளல், தர்மதாதா என்று வானளாவக் கொண்டாடுவர். உடனே வரப்போகும் தேர்தலில் எதிர்ப்பு இல்லாமலேயே நான் பெரிய சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்படுவேன்! அதன் பிறகு கேட்கவேண்டுமா? அண்ணு பல ஸ்தாபனங்களில் அங்கத்தினராயிருப்பதுபோல் நானும் அனேக ஸ்தாபனங்களில் அங்கம் வகிக்கலாம். நிர்வாகஸ்தன், ஆலோசனையாளன், பார்வையாளன், பொறுப்பாளி, தர்மகர்த்தா முதலிய பலபல பதவிகளை வகிக்கலாம். என் புகழை எண்ணிப் பார்க்கும்போதே என்னுள்ளம் தேன்குடித்ததுபோல் தித்திக்கின்றது'' என்று தனக்குள் பலவித

மான எண்ணங்களில் மூழ்கிக் கற்பனை உலகில் சஞ்சரித்துத் தன்னையே மறந்திருந்தான்!

அச்சமயம் மெல்லத் தட்டித்தடுமாறிக்கொண்டு கமலவேணி அங்குவந்து பின்புறத்து ஜன்னலருகில் மறைந்து நின்று மகனைக் கவனித்தாள். அவனுடைய கற்பனையுலக சஞ்சாரத்தின் மகிமையில் இவளைக் கவனிக்கவே இல்லை. அவனுடைய செய்கையிலிருந்து இவளால் எதையுமே கண்டுகொள்ளவும் முடியவில்லை. தான் திடீரென்று படுத்துவிட்டதனுல் அதைப்பற்றி யோசிக்கிருனே? என்றுதான் தோன்றியது. உடனே மெல்ல அவனிடம் சென்று, "தாமோதரா!...என்னப்பா ப்ரமாத மான யோசனையிலாழ்ந்திருக்கிருய்? நான் எங்கே செத்து விடுவேனே என்கிற பயத்திஞல் கலங்கியோசிக்கிருயா? உம்!...அந்த பயம் இனி எதற்கு? கல்லுப்போல் பிழைத்துக்கொண்டேன், கவலைப்படாதே!" என்ருள்.

முகத்தில் அசடு வழிய ஏதோ கள்ளனைப்போல் திக்குமுக்காடிக்கொண்டே,"ஆமாம்மா! அப்போதிலிருந்து என்னுள்ளம் படும்வேதனையைக் கடவுள்தானறியவேண்டும்! சற்றுமுன்பு நன்ருகப் பேசிக்கொண்டு திடமாயிருந்த உனக்கு திடீரென்று இத்தகைய போராபத்தான நிலைமை எவ்விதம் வந்துவிட்டது? என்று எனக்குத் தெரியவே இல்லை...உம்! தெரிவதென்ன இருக்கிறது? அதிகப்ரஸங்கித்தனமாய் அண்ணுதான் ஏதோ செய்திருக்கவேண்டும்! இதில் சந்தேகமே இல்லை...

என்று முடிப்பதற்குள், "என்ன! என்ன! அண்ணன் ஏதோ செய்திருக்கவேண்டுமா? ஐயோ! அநியாயமாய்ப் பேசாதே தம்பி! உங்களிருவரையும் சமமாக என்னுயிர் போல் பாவிக்கும் அன்பின் ஆழம் தெரியாமல் பேசாதே. அவனுடைய உத்தமகுணத்தைப்பற்றி நீ அநியாயமாய்க் குறை கூறுவதை நான் சகிக்கவேமாட்டேன்." என்ருள்.

"ஆமாம்! நீ எப்படி சகிக்கமுடியும் அம்மா? என்னைப் பற்றி கவலை இருப்பதாக வாயளவில் சொல்கிருயேயன்றி..

"தம்பீ! நிறுத்து! என்னதானிருப்பினும் ஒரு குடும்பத்தின் கண்ணியத்தைச் சிதைக்காமல் பாடுபட்டுக் காக்கும்பொறுப்பு குடும்பத் தலைவிக்குத்தான் பெரும்பாகமும் என்று ஆடவர்கள் எண்ணித் தாம் விலகிஇருப்பது அழகல்ல. அண்ணனின் புகழ் நாளுக்குநாள் வளர்பிறைச் சந்திரன்போல் வளரும் சமயம் அதை நீ சிதைப்பதுபோல் ஆத்திரப்பட்டுப் பேசிவிடுவது மிகவும் வெட்கக்கேடான விஷயமாகும். சற்று பொறுமையாயிரப்பா! தம்பீ! நான் இந்த நிலைமையில் இங்கு எதற்கு வந்தேன் தெரியுமா? பொய் சொல்லாமல் ஒளிக்காமல் சொல்லு. என் கையில் ஒரு கடிதம் வைத்திருந்தேன். அது என்னையறியாமல் நழுவி விழுந்துவிட்டது. அதை நீ எடுத்திருந்தால் தயவு செய்து என்னிடம் கொடுத்துவிடு. அக்கடிதம் என் உயிரினும் பெரியது...என்று முடிப்பதற்குள், "என்ன! என்ன! கடிதமா? உன் கையிலிருந்ததா? இதென்ன குண்டு வீசுவதுபோல் கேட்கிருய்? எனக்கு ஒன்றுமே தெரியாதே....யார் எழுதிய கடிதம்?...அப்பா எங்கிருந்தாவது எழுதினரா? அல்லது...அண்ணனுக்கு யாராவது பெண் கொடுப்பதாக எழுதியிருக்கிருர்களா?" என்று முற்றிலும் ஒன்றுமே தெரியாதவன்போல் நாடகம் நடிப்பதைக்கண்ட கமலவேணியம்மாளுக்கு, "உண்மையில் கடிதம் யார் கையில் கிடைத்திருக்கும்?...ஒருகால் அந்த பெரிய டாக்டரிடமே கிடைத்திருக்குமா? அன்றி நர்ஸிடம் கிடைத்திருக்குமா? ஒன்றும் விளங்கவில்லையே; வேலைக்காரர்களிடம் கிடைத்திருக்குமா? ஐயோ! இந்தப் பாழும் மயக்கம் எனக்கேன் வந்தது? இந்தக் குடும்பத்தின் மானம் ஏன் கெட்டுக் குட்டிச்சுவராகவேண்டும்?" என்று எண்ணியபடியே சில விநாடிகள் தம்பித்து நின்ருள்.

பிறகு மறுபடியும் மகனை நோக்கிச் சற்று கடுமையான கரகரத்த குரலில், "தாமூ! கத்தவித்தையை பெத்த தாயிடம்

காட்டாதே! நான் விளையாட இப்போது வரவில்லை. மிகவும் தீவிரமாய்க் கேட்கிறேன். கடிதத்தை இப்படிக்கொடுத்து விடு. நீ உன் தாயாரைச் சத்தியமாய் மதிக்கிருய் என்ருல் அந்த மதிப்பை இப்போது காட்டிவிடு;கடிதத்தை உடனே கொடு; வீணுன ஆட்டம் ஆடாதே...அங்கு உன்னைத் தவிர வேறுயாரும் வரவில்லை...என்று முடிப்பதற்குள்... "அம்மா! அனுவசியமாய்ப்பேசி என் கோபத்தைக் கிள ருதே; என்ன? எனக்கு எந்தக் கடிதமும் தெரியாது" என்று கண்டிப்பாய்ச் சொல்லும்போது, கமலவேணியின் சொந்தக்காரர்கள் அவளுக்கு திடீரென்று நேர்ந்த உடம் பின் விவரத்தை எப்படியோ அறிந்து பார்க்கவந்து விட்டனர்.

அந்தத் தகவலை அறிந்த கமலவேணி வேறு வழியின் றித் தன் படுக்கையில் போய் படுக்கவும் வந்தவர்களை வர வேற்றுப் பேசவும் கட்டாயம் உண்டாகிவிட்டதால் மனக் குறையுடன் சென்ருள். அவள் எண்ணம் பூராவும் கடி தத்தின் மீதே சென்று போராடுகிறது. வந்தவர்களோ! சடுதியில் எழுந்துபோகும் வழிமைக் காணவில்லை. அவர் களுடன் பேசவும் பிடிக்கவில்லை."பாவம்! பெண்கள் சகாய மில்லாத நிலைமையில் இந்தச் சமயம் உங்களைத் தனிமை யில் விட்டுச்செல்ல மனமில்லை. நான் இரண்டு நாட்கள் இருந்து உதவிசெய்துவிட்டுப்போகிறேன்" என்று சொல் லிக்கொண்டே ஒரு அம்மாள் அங்கேயே தங்கிவிட்டாள். மற்றவர்கள் சென்ருர்கள். உதவி செய்வதாய் வலிய வந்து ஒரு மாது நின்றது தற்போது கமலவேணிக்கு மிகவும் வெறுப்பாயும் துன்பமாயுங்கூடத் தோன்றியது என்ருலும் எப்படி மறுத்துக் கூறமுடியும்? உள்ளே ஒரு உணர்ச்சி வெளியே ஒரு பேச்சாக நடித்தாளேயன்றி உண்மையன்பு மறைந்தேபோய்க் கசப்புத் தன்மையே தலைதூக்கி நின்றது.

## 6

ஒரே சந்தர்ப்பத்தில் ஒரே இடத்தில் பலவிதமான உண்மை உணர்ச்சிகளை......உலகானுபவங்களை... அறியும் சமயத்தில்தான் அதன் உண்மை ஸ்ரூபவம் நன்ருகத் தெரிவதோடு தம்மையறியாத உணர்ச்சியை இவர்களும் அடைகிருர்கள். அதேபோல் டாக்டர் ஸ்ரீதரன் துளஸிபாய் கூப்பிட்ட இடத்திற்குச் சென்று வைத்தியம் செய்யும் இடத்தில் கணவன் மனைவிபால்கொண்டுள்ள கரை காணுத அன்பையும் மாமியார் மாமனருடைய வாத்ஸல்யத்தையும் அப்போது பிறந்துள்ள சிசுவின்மீது மரணுவஸ்தையிலுள்ள தாயாருக்கும் எத்தனை ஆழமான அன்பு புதைந்துகிடக்கிறது என்பதையும் கண்டுஉணர்ந்ததனுல் தன்னையே மறந்து கண்ணீரைக்கூட உதிர்த்துவிட்டான். தன்னுயிருக்கும் மேலாகத் தன் மனைவியை நேசிக்கும் கணவனின் அன்பு ஸ்ரீதரனை ப்ரமிக்கச் செய்தது.

படுத்துள்ள நோயாளியோ சற்று ப்ரக்ஞை வந்த சமயத்தில் முதல்முதல் தன் கணவனின் இரு கரங்களையும் சேர்த்துப் பிடித்து முகத்திலும் இதயத்திலும் தலையிலும் பதித்துக்கொண்டு கண்ணீர் பெருக, "ஸ்வாமீ! நான் கொடுத்துவைத்தது இவ்வளவுதான். வருத்தப் படாதீர்கள்... துரத்ருஷ்டப் பிண்டம்! பிறக்கும் போதே மூதேவிபோல் வந்து தாயை உருட்டிவிட்டது சனியன்!... என்று உலகத்தில் சொல்வதுபோல் நம் கண்மணியைச் சொல்லாதீர்கள். அவளை அறிவுச் சுடராய் அன்புப் பதுமையாய் வளர்த்து வ்ருத்திக்குக் கொண்டுவாருங்கள். இவளுக்காக நீங்கள் உங்கள் வாழ்நாளை சன்யாசியாய்க் கழிக்கவேண்டாம். உங்கள் மனத்திற் கிசைந்த மங்கையை மணந்துகொண்டு இருவரும் இந்த அனதை உருவத்தைக் காப்பாற்றுங்கள். "நீ சந்தோஷமாக வாழவேண்டும்; அதுதான் என் ப்ரார்த்தனை''...என்று நிமிடத்திற்கு நிமிடம் சொல்வீர்களே! அத்தகைய சந்தோஷம் எனக்கு... என் ஆத்மாவுக்கு...நிரந்தரமாய் அளிப்பதாயின் இந்த

சிசுவை நிராகரிக்காமல் வளர்த்து உலகம் போற்றும் முறையில் ப்ரகாசிக்கச் செய்யுங்கள்!...என்று சொல்வதற்குள் மறுபடியும் மயக்கம் மூடிவிட்டது.

இந்தக் கண்ணராவிக் காட்சியினுல் ஸ்ரீதரனின் உள்ளம் உருகியது எனினும், "உம்!...இத்தகைய ஆழமான அன்பை என்னப்பன் கீதாசாரியன்மீது வைத்தால் எத்தனை சிறப்பாக இருக்கலாம்! அளப்பரிய ஆனந்தத்துடன் வாழலாமே! கவலையே நிறைந்த கடல்போல் கொந்தளிக்கும் இதயம் சாந்தியின் சிகரத்தில் உல்லாஸமாய்ப் பறக்கலாமே! என்னப்பன்மீது இதயத்தை வைத்துவிட்டால் அதுசாமான்ய செய்கையையாசெய்யும்?

"குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டுகொண்டேன்
நாராயணுவென்னும் நாமம்"

இத்தனையும் கொடுத்துரட்சிக்கும் நாமமகிமையை உலகம் எப்போதுதான் உணர்ந்து நல்வழிப்படும்?" என்று தன்னைமறந்த நிலையில் இவன் நினைக்கையில் இந்த நினைப்பைக் கிழித்துச் சிதறவடிக்கும் பீரங்கித்வனியில் நோயாளியின் தாயார், "பாழுங் கடவுளுக்குக் கண்ணில்லையா? நாசமாய்ப்போன தெய்வம் எங்கே ஒழிந்துபோய்விட்டது? தெய்வமும் இல்லை....தேவாதியும் இல்லை....எல்லாம் வெறும் புரட்டல்! சாமியாவது பூதமாவது? சாமி இருப்பது உண்மையாயின் என் கண்மணியைத்தான் கொள்ளை கொண்டு போகத் துணிவானு?...அவன் கோவிலிடிய! அவன் தலையில்இடி விழ!,'...என்று, அப்பப்ப!...கர்ண

கடூரமான வார்த்தைகளால் தன்னுடைய உள்ளத் துடிப்பை, எல்லையற்ற துக்கத்தின் பரிபவத்தை, தாங் காது கத்தியவாறு சொல்வதைக் கேட்டு ஸ்ரீதரனின் இத யத்தில் செம்மட்டியாலடிப்பதுபோல் வேதனை உண்டாகி யது..."ஐயோ! அறியாமையே! இதுதான் ப்ரபஞ்சலீலை யின் காட்சிபோலும்!" என்று மனத்தில் வெறுப்புடன் மறுபடியும் நோயாளிக்குத் தன் சாமர்த்யம் பூராவும் காட்டிச் சிகிச்சை செய்ய வாரம்பித்தான்.

அதேசமயம் உலகமே அறியாத பச்சைக்குழந்தை பரிதாபகரமாய் ஒரு மூலையில் சீந்துவாரற்றுக் கிடக்கும் கோரக்காட்சியைக் காண, அது ஒருபுறம் பச்சாத்தா பத்தை உண்டாக்கியது. டாக்டர் துளஸியைப் பார்த்து, "டாக்டர்! இந்தக்குழந்தையைக் கவனித்துப் படுக்கையில் போடுங்கள். இப்படிக் கிடந்தால் சீதளம் மூடிவிடுமே" என்றான்.

அங்குள்ள சில பெண்கள் "ஆமாம்! சீதளம் மூடித் தான் போகட்டுமே! பிறக்கும்போதே தாயை உருட்டி விழுங்கிவிட்டு இப்பீடை எதற்கு வாழவேண்டும்! தொலையட்டுமே!"...என்றார்கள். துளஸிபாய் குழந்தைக் குச் செய்யவேண்டுவதைச் செய்து தனிப் படுக்கையில் படுக்கவைத்துத் தேனை வாயில் தடவினாள்.

என்ன ஆச்சரியம்! தேனை நொட்டைகொட்டி அந்தப் பச்சைக்குழந்தை சுவைத்துச் சாப்பிடும் அழகைக் கண்டு உள்ளத்தில் எங்குமில்லாத ஒரு நூதன இன்பம் ஸ்ரீதர னுக்கும் துளஸிக்கும் உண்டாகியது...அன்று தன் வேலை சகலத்தையும் நிறுத்திவிட்டு இங்கேயே இரவுவரையில் ஸ்ரீதரன் தங்கியிருந்து செய்த சிகிச்சையின் பயனாலும் கடவுளின் கருணையினாலும் நோயாளிக்குச் சிறுகச்சிறுக குணம் ஏற்பட்டு நல்ல குறிகள் காண்பதையறிந்த டாக்டர் களின் இதயங்கள் பூரித்தன!

இரவு வெகுநேரம்வரையில் ஸ்ரீதரன் வீட்டுக்கு வரவில்லை. இங்கேயே இருந்து நிமிடத்திற்கு நிமிடம் கவனித்துப்பின் இனி உயிருக்கு பயமில்லை என்று தோன்றிய பிறகே ஸ்ரீதரன் வீட்டிற்குக்கிளம்பினுள். துளஸிபாயும் நல்ல தேர்ந்த நர்ஸைப் பக்கத்தில் இருந்து கவனிக்கும் படிச் சொல்லிவிட்டுக் கிளம்பினுள்.

அந்தம்மாளுக்குக் கார் கிடையாது. ஆகையாலும் காலம் அகாலமாகிவிட்டதாலும் ஸ்ரீதரன் தானே அவளைக்கொண்டு வீட்டில் விட்டுவிடுவதாயும் கூட வரும்படியாயும் கூப்பிட்டான்.

என்ன உலக விசித்திரம்! சற்று நேரத்திற்கு முன்பு உலகமே இருண்டுபோய்த் துக்கக்கடலில் மிதந்து தவிப்பதுபோல் துள்ளிக்கொண்டிருந்தவர்களான நோயாளியின் தாயார் அத்தை முதலிய பெண்கள் தங்கள் மகளுக்குச் சற்று குணமாகிவருவதைக் கண்டு எத்தனை பொங்கிப் பூரிக்கலாமோ அத்தனையும் பூரித்தார்கள்! முதலில் கரைகாணுத துக்கம்!...பிறகு நிகரிலாத சந்தோஷம்! ...அதேசமயம் இந்த இரு டாக்டர்களும் சேர்ந்து போவதாகப் பேசிக்கொள்வதைக் கண்டதும் குபீரென்று கள்ளப்பார்வையும் வம்புப்பேச்சும் அநியாய எண்ணத்துடன் கூடிய வித்யாஸ நினைப்பும் உண்டாகி குசமசவென்று பேசிக்கொள்வதையும் கூர்மையாக ஸ்ரீதரன் கவனித்துத் தனக்குள் வியப்புற்றுன்.

"மக்களின் உணர்ச்சி இத்தகைய பச்சோந்தியைப் போன்றதா? துக்கத்தில் துடித்துச் சந்தோஷத்தில் திளைக்கும்போது வம்புக்கும் கள்ளப் பேச்சுக்கும்கூட அதே மனத்தில் எப்படித்தான் இடம் கிடைக்கின்றதோ? ஆகா! ஆச்சரியத்திலும் ஆச்சரியமல்லவா? உலகமே! நீ எத்தனைவிதமான விசித்திரங்களைத்தான் கண்டு வியக்கிருய்! உனக்கு சலிப்போ வெறுப்போ ஒரு உணர்ச்சியும் இல்லையா?...பச்சைக்குழந்தையைப்போல் நீயும் இருக்கிரு

யல்லவா? உன்னைப் பார்த்துக் கற்றுக்கொள்ளவேண்டியது எத்தனை உயர்ந்த லட்சியங்கள் இருக்கின்றன?"... என்று தனக்குள் எண்ணியபடி காரில் ஏறினன். பின் ஸீட்டில் துளஸிபாயும் வெகு வணக்கமாய் மரியாதையாய் உட்கார்ந்தாள்..."டாக்டர்! இந்தபேஷண்டிடம் நான் வெகு வாய்ப் பயந்துவிட்டேன். நம்பிக்கை இழந்துபோய் நடுங்கும் சமயம் பகவான் உங்களைக் காட்டி என் கவலையைத் தீர்த்துவைத்தார்; உங்களுக்கு எப்படி நான் வந்தனம் செய்வது என்றே தெரியவில்லை...கடவுள் உங்களுக்குச் சகல மங்களங்களையும்கொடுத்து ரக்ஷிக்கவேண்டுகிறேன்" என்ருள்.

இதைக்கேட்ட ஸ்ரீதரன் சிரித்துக்கொண்டே, "அம்மணீ! இதெல்லாம் என்ன வழக்கம்? எனக்கு இந்த முகஸ்துதியோ வீண் ஜம்பமோ பிடிக்கிறதே இல்லை. மனிதர்களுக்கு மனிதர் உதவி செய்வது ஒரு கடமையில் சேர்ந்திருக்கையில் இதற்குத் தோத்திரம் எதற்கு?...

துளஸி:—டாக்டர்! இம்மாதிரி சொல்கிறவர்கள் நூற்றுக்கு ஒருவர்கூட கிடைப்பதில்லை! முற்றுந்துறந்த முனிவராக இருந்தால்கூட வெளிஜம்பத்தில் நாட்டமும் முகஸ்துதியில் அடங்காத ஆசையும் தங்கள் புகைப்படங்களைப் பல பத்ரிகைகளிலும் புத்தகங்களிலும் துண்டு விளம்பரங்களிலும் ப்ரசுரிக்கும் மகத்தான விருப்பமும் விடாமல் இருந்து வருவதை நாம் ப்ரத்யட்சமாய்ப் பார்க்கவில்லையா? பாரபட்சமாய்ச் சிலரைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதும் சிலரைப்பற்றிப் புகழ்ந்துபேசவேண்டிய சந்தர்ப்பமும் கடமையும் இருப்பினும் அதைவேண்டுமென்று விட்டுவிடுவதும் பெருமையாகக் கொள்கிருர்கள்! இவைகளைப்போல் உலகத்தில் பதினயிரக் கணக்கில் நாம் பார்க்கிறோம்...

ஸ்ரீதர:—அம்மணீ! உலகம் ஒரு பெரிய போதனை சாலையல்லவா? அதனிடம் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் அனந்தம் இருக்கின்றன. அவைகளைப்

பொறுக்கிஎடுத்து நாம் கற்றுக்கொண்டால் எத்தனையோ உபயோகமாயிருக்கும். பெரியோர் இவைகளை அறியாமலா,

> போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடில்
> தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களை
> மாற்றினும் மாற்றுவர் வன்கணாளர்கள்
> கூற்றினும் கொடியவர் புலவ ராவரே''

என்று பாடியிருக்கிறார்கள்? பொருள் கொடுப்பதாயின் புகழ்ந்து போற்றுவார்கள். இல்லையேல் சகலமும் இல்லையாகிவிடுகிறது! அதும்மட்டுமல்ல; மண்ணாசை, பொன்னாசை; பெண்ணாசை இம்மூன்று ஆசைகளையும் விட்டதாக மேல் பூச்சு பூசிவிட்டுப் பெண்ணாசையை வேண்டுமாயின் ஒரளவுமறந்து மற்ற இரண்டு ஆசைக்கும் அடிமையர்கும் குணமுடைய சாமியார்கள் நீங்கள் சொல்வது போல் விளம்பரத்திற்குதானே ஆசைப்படுவார்கள்! உண்மையில்சொல்கிறேன். சாமியார்களைக் கண்டாலே எனக்கு அவ்வளவு பிடிப்பதில்லை. நூற்றுக்கு 99 பேர்கள் போலிச் சாமியார்கள் தான். வெளிவேஷத்தைக் கண்டு உலகம் மயங்குகிறது.

துளஸி:—டாக்டர்! சாமியார்கள் விஷயத்தில் என் அபிப்ராயமும் உங்கள் அபிப்ராயமும் அப்படியே இருக்கிறதே! என் தாயாருக்குச் சாமியார்கள் என்றால் சற்று பக்தி உண்டு. ஆனால் எனக்கு பக்தியும் இல்லை. அவர்களிடம் நம்பிக்கையுமில்லை. இதென்ன காரணமோ எனக்கே புரியவில்லை.

ஸ்ரீதர்:—தாயே! புரியாத மர்மங்கள் சிலவற்றை அறிந்து உலகமும் உலக மக்களும் பாவனமடைகிறார்கள். பின்னும், சிலவற்றால் நாசமடைகின்றார்கள். இதைப் பற்றி விளக்கிப் பேசினால் பயித்தியக்காரன் என்றும் ஏதோ உளறுகின்றான் என்றும் ஜனங்கள் பரிகஸிக்கிறார்கள். ஏன்? என்னையே பலர் பரிகஸித்துப் பேசுவதை

நான் அறியாமலில்லை. வீண்வம்புக்கும் விதண்டாவாதத்திற்கும் உலகத்தை நாசமாக்கும் ஆசாபாசங்களுக்கும் மக்கள் தயங்குவதில்லை! அத்தனை தூரம் போவானேன்.? இப்போது நாம் பார்த்த இடத்தில் எத்தனைவித உணர்ச்சிகளை ஒரு க்ஷணத்தில் ஒரே மனிதரிடம் பார்த்தோம். உங்களை நான் காரில்வரும்படி அழைத்ததும் நீங்கள்வந்து ஏறினதும் கண்ட அதே இடத்தில் அதே மனிதர்கள் பேசியதையும் உணர்ச்சி மாறியதையும் நீங்கள் கவனிக்கவில்லையா?... இதுதான் உலகானுபவத்தைப் போதிக்கும் பாடசாலை என்று சொன்னேன்—என்றபோது துளஸிபாயின் வீடுவந்துவிட்டது.

துளஸிபாய் மரியாதையாய் இறங்கித் தனது வந்தனத்தை மறுபடியும்கூறிப் பின், "டாக்டர்! தயவுசெய்து நாளைக்கும் வந்துபார்க்கவேண்டும்" என்றாள். "நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அந்தப் பேஷண்டைப் பார்க்காமலிருக்கமாட்டேன். அவள் தன் குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சவும் அதை அவள் கணவன் கண்டு பூரிக்கவும் அவைகளைக்கண்டு பகவான் சந்தோஷப் படும்வரையில் அங்கு வருவேன்...குட் நைட்!"...என்று கூறிவிட்டுக் காரைத் திருப்பினான். காற்றுப்போல் காரும் பறந்தது!

---

## 7

முதலில் கடிதத்தை எப்படியாவது சின்ன மகனிடமிருந்து வாங்கிக் கிழித்துப்போட்டாலன்றி கமலவேணிக்கு நித்திரையே கொள்ளாது போய்த் தவிக்கிறாள். "யாரோ தாம்பூலம் வைத்து அழைத்ததுபோல் இந்த விருந்தாளியை யார் வரச்சொல்லியது? எனக்கு தர்மசங்கடமாகிவிட்டதே?" என்று கவலையுடன் படுத்துப் புரளுகிறாள். வந்த மனுஷியோ இந்தம்மாளுக்கு ஏதோ உடம்பின் பாதைதான் தாங்காமல் தவிக்கிறாளோ என்று எண்ணி, "கமலம்! ஏம்மா இப்படி புரளுகிறாய்? உடம்புக்கு

என்ன செய்கிறது? ஸ்ரீதரனும் இன்னும் வரக்காண வில்லையே! வேறு எந்த டாக்டரையாவது கூப்பிடச் சொல்லட்டுமா?'' என்று அந்தம்மாள் கேட்டபோது கமலவேணியம்மாளுக்குத் தாங்கமாட்டாத எரிச்சலே வந்தது....இனித்தான் கைகால்களைக்கூட அசைக்காமல் அப்படியே படுத்திருந்து தூங்கிவிட்டதுபோல் நடித்தால் தான் இந்தம்மாளும் நம்மைச் சும்மாவிடுவாள் போலிருக்கிறது...என்று எண்ணியபடியே, "அம்மணீ! எனக்குத் தூக்கம் அஸாத்யமாய் வருகிறது. என்னைத் தொந்தரை செய்யாதீர்கள். ஸ்ரீதரன் எப்போதுமே நேரங்கழித்துத் தான் வருவான். நீங்கள் ஹாலிலுள்ள மற்றொரு விடுதியில் படுத்துக்கொள்ளுங்கள். எனக்குக் கூட யாராவது இருந்தாலே தூக்கம் வராது. நீங்கள் பயப்படவேண்டாம். எனக்கு எத்தகைய உடம்பும் இல்லை.'' என்று அழுத்தமாய்க் கூறிவிட்டுப் போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்தாள்.

மேல்கொண்டு ஏதும் பதில் சொல்லமுடியாமல் அந்தம்மாள் வேறு அறைக்குச் சென்று படுத்துக்கொண்டாள். ஆனால் தூக்கம் என்னவோ பிடிக்கவில்லை. அரை மணிக்கொருதரம் எழுந்துவந்து கமலவேணியைப் பார்த்துக்கொள்வதில் நாட்டமாயிருந்தாள்.

மணி 11 அடித்தது: ஸ்ரீதரன் லேடீடாக்டரை இறக்கிவிட்டு நேரே வீட்டிற்கு வந்ததும் தாயாரின் விடுதிக்கு ஆவலே வடிவாய் ஓடிவந்தான். கமலவேணி தூங்குவது போல் படுத்திருந்ததால் சற்று தூர நின்று பார்த்துவிட்டு "சரி!...நல்ல தூக்கமே சிறந்த அவுஷதமாகும். பூர்ண ஓய்வும் மிகவும் நல்லதுதான்'' என்று எண்ணியபடியே சென்றான்.

தன் மகன் வந்துவிட்டான் என்பதையறிந்த கமலவேணியும் பேசாமல் மவுனமே ஸாதித்தாள். அவளுடைய எண்ணம் பூராவும் அக்கடிதத்தின்மீது இருந்ததேயன்றி

தூக்கமும் பிடிக்கவில்லை. எப்படியும் கடிதம் சின்ன மகனிடந்தான் இருக்கவேண்டுமன்றி எங்கும் போயிருக்க முடியாது. இக்கடிதத்தை அவன் அசட்டுத்தனமாய்ப் பிறருக்குக் காட்டி நம் குடும்பத்தின் தூட்டை வெளியிடுவதற்குமுன்பு இதை எப்படியாவது நாம் கொண்டுவந்துவிடவேண்டும் என்ற அதிதீவிரமான எண்ணம் இதயத்தில் புயலடிப்பதால் அந்த வேதனையும் நினைவும் ஒன்றுகூடி எப்படியோ ஒரு அசுர தைரியத்தைக் கொடுத்தது.

கடவுளை எல்லாம் வேண்டிக்கொண்டாள். மெல்ல எழுந்து ஒருகறுப்புப் போர்வையை எடுத்துத் தான் கால் முதல் தலைவரையில் மூடி முக்காடிட்டுக்கொண்டு அவ்வல் பயங்கரக்கள்ளனோ? அன்றி பேயோ! பிசாசோ! என்று நடுங்கும்படியான விதம் மூடிக்கொண்டு அவ்விடத்தை விட்டு சின்ன மகன் படுத்துள்ள விடுதிக்குச் சென்றாள். மணி சரியாக 12 அடிக்கும் சமயமாயிருந்தது. தாமோதரன் அயர்ந்து தூங்குவதைக் கவனித்தாள். ஓசைசெய்யாமல் அவனுடைய ஜேபியிலிருந்து பெட்டி சாவியை எடுத்துக் கொண்டாள். தன் வாழ்நாளில் என்றுமே இத்தகைய செய்கையைச் செய்தறியாதவளாதலால் சரீரம் கிடுகிடு என்று நடுங்குகிறது...எப்படியாவது கடிதத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டால்போதும்...என்கிற எண்ணத்துடன் பெட்டியை ஓசை செய்யாமல் திறந்து சத்தம் செய்யாமல் கடிதங்களைப் புரட்டிப் பார்த்தாள்.

முதல்முதல் பார்க்கும்போதே இவள் நாடிவந்த கடிதம் கிடைத்துவிட்டதோடு இன்னும் இரண்டு மூன்று கடிதங்களும் அதில் பத்திரப்படுத்தி இருந்ததையும் எடுத்துக் கொண்டு பெட்டியை ஓசை செய்யாமல் பூட்டிவிட்டுச் சாவியைத் தலையணையின் மீது வைக்கும்போது தாமோதரன் சற்றுப் புரண்டு படுத்தவன் தற்செயலாகக் கண்ணை விழித்துப்பார்த்தான்.

கறுப்பு முகமூடி போன்று கால்முதல் தலைவரையில் போர்த்தியபடி உருவம் நிற்பதைக் கண்டதும் குடல் நடுங்கிப்போய் தாங்கமுடியாத பயத்துடன் "கூ...கூ" வென்று வாய் குழறி அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தான்.

தான் அகப்பட்டுக்கொள்ளாமல் எப்படியாவது ஓடி விடவேண்டுமே என்ற பயத்துடன் கடுமையான பயங்கரம் நிறைந்த த்வனியில் சத்தம் செய்து டுர்ர்ர்...கர்ர்ர்... என்று கூவிக்கொண்டே கம்பிகள் இல்லாத ஜன்னலால் ஏறிக் குதித்து அரைநிமிஷத்தில் தன்னறைக்கு ஓடிவந்து கறுப்புப் போர்வையைத் தன் படுக்கைக்குள் மறைத்து விட்டுச் சடக்கென்று படுத்துவிட்டாள்!

ஒவ்வொருவருடைய தனி விடுதிக்கும் இடையில் வெகுதூரம் இருப்பதால் இவன் கூக்குரலையும் குளறலை யும் கேட்டு வேலைக்காரன்தான் முதலில் வந்து "என்ன! என்ன!" என்று கேட்டுப்பதறினான். அதே சமயம் கறுப்புப் போர்வையில் மூடப்பட்ட உருவம் கர்ஜித்தபடியே ஜன்ன லால் குதிப்பதைப் பார்த்த இவனும் சேர்ந்து "திருடன்! திருடன்! பேயோ! பிசாசோ!"...என்று ப்ரமாதமாய்க் கத் தினான். எல்லோரும் விழித்துக்கொண்டு ஒரே ஓட்டமாய், "என்ன! என்ன விஷயம்? ஒன்றும் புரியவில்லையே?".. என்று கூட்டமாக ஓடி வந்தார்கள். கமலவேணியம்மாளும் வியர்க்க விறுவிறுக்க "என்னடா தாமோதரா?...என் னடா! என்ன நடந்தது?"...என்று மகனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு கேட்டாள்.

இதற்குள் வேலைக்காரர்கள் பங்களா முற்றும் சுற்றிப் பார்த்தனர். எங்கும் போட்டகதவு போட்டபடியே இருக்கிறது. திருடனுயிருந்தால் எப்படியாவது கதவைத் திறந்துகொண்டோ கன்னம்வைத்தோ வந்திருக்கவேண் டும். ஏதாவது பொருள் களவு போயிருக்கவேண்டும். சகல சாமான்களும் அப்படியே இருப்பதால் இது நிச்சய

மாய் ஏதோ பேயோ, பிசாசோ, முனீச்வரனோ, காட்டேரியோ ஏதோ ஒரு துர்த்தேவதைதான் வந்திருக்கவேண்டும்—என்று வேலைக்காரர்கள் தீர்மானமாய் முற்றுப் புள்ளிவைத்துச் சொல்லி ஊர்ஜிதப்படுத்தியதோடு,... "அம்மா! புழக்கடை சாமிக்குப் பொங்கலிட்டு பூசை போட்றேன்னு வேண்டிக்கங்க!"...சின்னையாவுக்கு மந்திரக்காரனைக் கூப்பிட்டு மந்திரிச்சுடுங்க!"...என்று அபிப்பிராயம் வேறு சொல்லத் தொடங்கினார்கள்.

ஸ்ரீதரனும் வீடுபூராவும் ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டு நிச்சமாய்க் கள்ளனில்லை என்று தெரிந்ததால் தம்பியிடம் வந்து அவனைச் சமாதானப்படுத்தினான். "டேய்! பேயாவது, பிசாசாவது?...இதெல்லாம் சுத்தப் பொய்ப் புரட்டு. மனிதனைப் பார்த்து பிசாசு பயப்பட்டு நடுங்கும் என்பது ப்ரத்யட்சம். பகவானையே சதா நம்பியுள்ள எந்த மனிதனையும் பிசாசுமட்டுமல்ல எமன்கூட கிட்டே அணுகமாட்டான். பக்தி என்ற பெரிய ரட்சை ஒவ்வொரு மனிதனையும் கட்டிக் காக்கும் தம்பீ! காறித் துப்பிவிட்டு முகத்தை நன்ருகக் கழுவிக்கொண்டு வந்து பகவானை ஸேவித்து ப்ரார்த்தனை செய்துவிட்டுப் படுத்துக்கொள்; பயப்படாதே. பகவன்னாமத்தை விட சிறந்த துணை வேறெதுவுமே இல்லை" என்று தைரியங்கூறித் தானே அழைத்துச்சென்று முகத்தில் ஜில்லென்று குளிர்ந்த ஜலத்தைவிட்டுக் கழுவச்செய்து அழைத்து வந்து பூஜாக்ரகத்தருகில் சென்று அவனை வணங்கும்படியாகச் செய்து, "தம்பீ! பயப்படாதே! பயத்தை எல்லாம் போக்கக்கூடிய சர்வசக்தனை மனதாரத் துதித்துவணங்கு. ப்ரார்த்தனை செய்துகொள்!...வா!...உடல் நடுங்கவேண்டாம்!—என்று தானே சகலத்தையும் செய்து தம்பியை அழைத்துவந்து படுக்கவைத்தான்.

பாவம்! ஆடு திருடிய கள்ளன் போன்றும், திருடனுக்குத் தேள் கொட்டியது போலவும் கமலவேணியம்மாள் தான் செய்துவிட்ட காரியத்தின் விளைவால் நேர்ந்துள்ள நிலை

மையைக் கண்டு தவிக்கிருள். சொல்லவும் முடியாது சமாளிக்கவும் முடியாது தத்தளிக்கிருள். "குடும்பத்தின் கண்ணியம் குலேயாதிருப்பதற்காகச் செய்யப்புகுந்த செய்கை இப்படியாகிவிட்டதே, இதனுல் மகனுக்கு ஒன்றுமில்லாதிருக்கவேண்டுமே!" என்று உள்ளுக்குள் நடுங்குகிறது.

தாமோதரனுக்கு உண்மையில் இதயத்தில் ஒரு பயங்கரமும் நடுக்கலும் உண்டாகி மவுனத்திலேயே ஆழ்த்திவிட்டது. யாருடனும் பேசவில்லே. ப்ரமை பிடித்தவன் போலவே படுக்கையில் படுத்தான். அண்ணன் சொல்லும் வார்த்தைகளிலும் நம்பிக்கைகொள்ளவில்லே, ஆனுல் எதிர்த்துப் புறக்கணித்துப் பேசவும் தோன்றவில்லே. சகலமான கதவுகளும் சாத்திப் பூட்டியபடி இருக்கையில் என் படுக்கையருகில் மட்டும் அந்தப் பயங்கரக் கருப்புக் கவசம் போன்ற போர்வையைப் போர்த்த பிசாசு எப்படி வரும்? எதற்காக வரும்? இதுவரையில் இந்தப் பக்கத்தில் பிசாசு என்கிற பெயரைக்கூடக் கேட்டதில்லேயே, இன்று இதென்ன வேடிக்கையாக இருக்கும்?—என்கிற எண்ணமும் கருப்பு உருவமுமே அவன் மனக் கண்ணில் தோன்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

கமலவேணியம்மாளின் உடல் நிலேயின் பயங்கரம் மறந்தேபோய் அவள் சாதாரண மனுஷியாகி தாமோதரனின் பக்கலில் வெகுநேரம் உட்கார்ந்திருந்து ஏதேதோ தேறுதல்கள் சொல்கிருளேயன்றி மனத்திற்குள் சங்கடம் செய்கிறது. தன் செய்கையே அவளேக் குத்திக்காட்டி ஏதோ வருத்துகிறது. "நான்தான் அப்படிச் செய்தேன் என்றுசொல்லி அவன் பயத்தைத் தீர்த்துவிடலாமா?... இந்த பயத்தின் ப்ராந்தியால் ஏதாவது ஆபத்தாக முடிந்துவிடுமோ" என்றும் தோன்றுகிறது. அம்மா திரி சொல்லிவிட்டால் தன்மீது அளவற்ற ஆத்திரமும் த்வேஷமும் உண்டாகிவிட்டால் என்ன செய்வது? இதையிப்

படியே அடக்கிவிடுவதுதான் சரியான காரியம்...என்று இவள் தனக்குள் எண்ணமிட்டவாறு உட்கார்ந்திருக்கிருள். மகன் நிம்மதியாய்த் தூங்கிய பிறகே தான் போகவேண்டும் என்று முடிவுசெய்துகொண்டாள்; ஸ்ரீதரன் எத்தனே சொல்லியும் அவள்போக மறுத்துவிட்டதால் அவன் தன் விடுதிக்குச் சென்ருன். கடிகாரமும் தன் கடமையில் கண்ணுய் ஓடிக்கொண்டு மணி மூன்றடித்தது!

---O---

## 8

ஸ்ரீதரனுக்குமட்டும் தூக்கமேபிடிக்கவில்லே. அன்று பூராவும் அதிக அலேச்சல்இருந்தும் அப்போது நடந்த சம்பவத்தைப் பற்றியே அவனுடைய மனத்தில் பெரும் போர் நடக்கத்தொடங்கியது. “பேயாவது? பிசாசாவது? தம்பி மட்டும் பார்த்ததாகச் சொல்லி இருந்தால் அதை நான் நம்பமாட்டேன்; வேலேக்காரன் வேம்புவும் பார்த்ததாகச் சொல்கிருனே! கருப்புப் போர்வை போர்த்த கள்ளன் யாராக இருக்கமுடியும்? ஒரு பொருளும் களவு போகவில்லே. ஆதலால் உளவறிந்த எந்தக் கள்ளனுவது வந்திருக்கவேண்டுமே யன்றி இது திடீரென்று தோன்றிய கள்ளனுக இருக்கமுடியாது. இதுவரையில் இத்தகைய அஸம்பாவிதங்கள் எதுவுமே நடக்கவில்லேயே! இப்போது மட்டும் இதென்ன விசித்திரம்?...இதை இப்படியே வெறுமைவிடக்கூடாது. நம்பிக்கையாய் வீட்டோடு வெகு பழக்கமாயிருப்பதாக நினேக்கும் வேலேக்காரர்களிலேயே யாருக்காவது அல்ப ஆசைஉண்டாகி, இம்மாதிரி செய்து, கிடைத்ததைச் சுருட்டிக்கொள்ள நினேத்திருக்கலாமோ? அதற்குள் தப்பி விழித்துக்கொண்டு விட்டதால் குதித்தோடி மறைந்திருக்கலாமோ? என்று எதேதோ எண்ணங்கள் தோன்றுகிறதே யன்றி பிசாசு பேய் என்ற நம்பிக்கை உண்டாகவில்லே.

தம்பி தூங்கினுனு? தாயார் படுத்தாளா? என்று பார்க்க மறுபடியும் எழுந்து வந்தான். தம்பி சற்று

அயர்ந்து தூங்குவதாகத் தெரிந்ததும் சந்தோஷத்துடன் தாயாரின் விடுதிக்கு வந்தான். கமலவேணி தூங்காமல் ஏதோ படித்துக்கொண்டிருப்பதைக் கண்டு சற்று கவனித்துக் கூர்ந்து பார்த்தான். கட்டிலின் சமீபத்திலுள்ள ஜன்னலாகையால் கடிதத்தின் விவரம் புரியவில்லை என்ருலும் தான் அன்று தன் தம்பிக்கு எழுதித் தாயாரிடம் கொடுத்த அதே கடிதந்தான் இது என்பதுமட்டும் சடக்கென்று விளங்கிவிட்டது.

அவ்வளவுதான்; அவன் கண்முன் சகல விஷயங்களும் படம்போல் சுற்றி நினைப்பூட்டின. அக்கடிதத்தைக் காணுமல் தன் தாயார் தேடியதும் அதே நினைவாகக் கவலைப்பட்டதும் பளிச்சென்று நினைவுக்கு வந்ததும் அக்கடிதத்தைத் திரும்பிப் பெறுவதற்காகத் தன் தாயார்தான் ஒருவேளை இப்படி ஏதாவது அசட்டுத்தனமாகச் செய்திருப்பாளா?...அடாடா இப்படிச் செய்திருப்பாளாஞல் என்ன பயித்தியக்காரத்தனமும் அறிவிலிச் செய்கையுமாகும்? இதையும் உடனே விசாரித்துவிடவேண்டும் என்று தீர்மானித்தபடி "அம்மா! உடனே கதவைத்திற! அவசரம்! அவசரம்!" என்று மெல்ல அழைத்தான்.

இக்குரலைக்கேட்டுத் திடுக்கிட்டலறியவாறு எழுந்த கமலவேணிக்கு தன்னுடைய இளையகுமாரனுக்குத்தான் ஏதோ வந்துவிட்டது என்று சொல்ல வந்திருப்பதாக ஒரு பயங்கரமான எண்ணம் தோன்றியதால் கதிகலங்கிப் போய்க் கடிதத்தை எப்படி மறைப்பது என்னசெய்வது என்பதுகூட மறந்துபோய்த் தவித்தவாறு..."ஸ்ரீதரா! என்னப்பா விஷயம்? தம்பிக்கு ஏதாவது?...என்று இழுத்தவாறு சடக்கென்று கதவைத் திறந்துவிட்டாள்.

ஸ்ரீதரன் ஒரே பாய்ச்சலாக உள்ளேபாய்ந்து "அம்மா! தம்பிக்கு ஒன்றுமில்லை...என்று கூறியபடியே தாயாரின் கையிலிருந்த கடிதத்தைப் பிடுங்கிக்கொண்டு, "அம்மா! இதுதான் விஷயம். வேறு ஒன்றுமில்லை. இக்கடிதத்

தைத் தானே காணவில்லை என்று நீ தேடிக் கவலைப் பட்டாய்!...என்று முடிப்பதற்குள் கமலவேணியின் முகமே சுண்டி பயத்தினால் வெளிறிப்போய்...ஐயோ! ஏமாந்து விட்டோமே...என்ற திகில் இதயத்தைத் தாக்கியது; அந்த வேதனையுடன் தத்தளிக்கையில், ஸ்ரீதரன் அவளைப் பிடித்து அமர்த்தி உட்காரவைத்துப் பின், "அம்மா! பயப்படாதேம்மா! பதறாதே! விஷயத்தைநான் ஒருவாறு யூகித்து உணர்கிறேன். அது சரிதானேம்மா? இக்கடிதத்திற்காக நீ ஏதோ தவறான வழியில் செய்துவிட்டதாக எண்ணுகிறேன்... இதோ இந்தக் கருப்புப் போர்வையின் மறைவில் சென்றது நீயா? அன்றி உன் கையாளாம்மா!...

இம்மாதிரி ஒரு கேள்வியை இவன் கேட்பான் என்று அவள் கனவுகூடக் காணவில்லை. அவள் அப்படியே அசைவற்று நின்றுவிட்டாள்..."ஐயோ! ஸ்ரீதர்...

ஸ்ரீதர:—அம்மா! நடுங்காதே! நான் யூகித்தது உண்மை தானே!...

கமல:—ஐயோ தம்பீ!...ஸ்ரீதர்!...

ஸ்ரீதர:—அம்மா! மறுபடியும் அதிர்ச்சியினால் காலையில் வந்ததுபோல் வந்துவிடப் போகிறது. இப்படி உட்காரு...அம்மா! இம்மாதிரி ஒரு மூளைகெட்டகாரியம் செய்யலாமா? இந்தக் கடிதத்தை நீ என்னவென்று நினைத்து விட்டாய்! இதைக் கொண்டு அவன் என்ன செய்து விட முடியும் என்று நீ எண்ணி அவனுடைய உயிருக்கே ஆபத்தான காரியம் செய்தாயம்மா? பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்தாலன்றி இதை வைத்துக் கொண்டு அவன் என்ன பண்ணுவான்?

கமல:—ஐயோ! ஸ்ரீதர்! குடும்பத்தின் மான அவமானமும் கட்டுக் கோப்பையும் பாதுகாப்பது என் கடமையல்லவா? அவனிடம் இக்கடிதம் இருந்தால் அது உனக்கும் நம் குடும்பத்திற்கும் பேராபத்தாக முடியுமல்

லவா? அவனுக்கு ஆழ்ந்தயோசனையுமில்லை. குடும்பத்தின் கண்ணியத்தில் அக்கரையுமில்லை. இதைக்கொண்டு அவன் சினேகிதர்களுக்குக் காட்டினல் அதனல் எத்தனை தூரம் பாதகமுண்டாகும்? இதைப்பற்றி நன்ருக யோசித்துத்தான் அவனிடம் கெஞ்சி மன்ருடிக் கேட்டுப் பார்த்தேன். தன்னிடம் இல்லை, இதுவிவரமே தனக்குத் தெரியாது என்று ஒரே சாதனையாக ஸாதித்துவிட்டான். உங்களுக்குள் இந்த பிரிவினை இருப்பதை உன் சகோதரிகளறிந்தால் "எங்களுக்கு ஒன்றும்கொடுக்கவில்லையா?" என்று உன்மீது மனஸ்தாபப்படுவதோடு சகல சொத்திற்கும் அவனே அதிகாரியாகிவிட்டதால் வீணை மனஸ்தாபம் உண்டாகும். உன் தம்பி ஸ்திர புத்தியில்லாதவன்; அவனை ஏமாற்றி அவனுடைய சகாக்கள் பணத்தின் மீதுள்ள மோகத்தால் உயிருக்கே உலைவைத்து விடுவார்கள். குடும்பம் ஆடிக் கலகலத்து விடுவதால் பிறர்கண்டு சிரிப்பதற்கல்லவா இடம் உண்டாகிவிடும். ஏற்கெனவே உன் பிதாவின் செய்கை தலை குனியச் செய்தது இன்னும் தீரவில்லை......

**ஸ்ரீதர்:**—அம்மா! நீ ஏதேதோ கற்பனைகளால் இந்த விஷயத்தை மகா விபரீதமாய் எண்ணிச் செய்துவிட்டாய். திடீரென்று ஏற்படும் அதிர்ச்சியினல் இதயமே சிலருக்கு நின்று விடுமே. நீ இக்காரியத்தை அவன் இல்லாத சமயத்தில் செய்திருக்கக் கூடாதா?...அப்படிச் செய்வதற்குச் சாவி இல்லை...பிறர் பார்த்துவிடுவார்கள்...என்று சொல்வாய்! நான் இக்கடிதத்தைப் பற்றி கவலையே படவில்லை. அவசரமான கேஸ் வந்துவிட்டதால் நான் போய்விட்டேன். இதற்குள் எத்தனை தடபுடல்கள் உண்டாகிவிட்டன...அம்மா! போனது போகட்டும்; நடந்தது நடந்து விட்டது. இதைப் பற்றிப் பேசி ப்ரயோஜனமில்லை. பேயோ! பிசாசோ என்ற பயத்தின் அதிர்ச்சி தம்பியின் இதயத்தை மிகவும் ஆட்டிபாதித்திருக்கிறது. நாம் இதை அப்படியே விட்டால் அவனுக்கு இதய பலவீனம் உண்

டாகி ஏதாவது ஆபத்தில் முடிந்தாலும் முடியும். ஆகை யால் நான் அவனிடம் விஷயத்தைக் கூறி பயத்தை வேரறுக்கிறேன்.

ஐயையோ! தம்பீ! இதென்னயோசனே. பெத்ததாயார் மீது ஏற்கெனவே அவனுக்குச் சரியான மதிப்பு கிடை யாது. வீணை த்வேஷமும் உன்மீது கோபமும் இருக் கையில் இந்த விஷயத்தை நீ சொன்னுல் அது இன்னும் இதைவிட கேவலமாகி விடுமப்பா...என்னிலேமையில் ஒன்றுமே தோன்றவில்லேயே...என்று கண்கலங்கினுள்.

ஸ்ரீதர:—அம்மா! பெண்புத்தி பின் புத்தி என்று சொல்லும் பழமொழியை ஸ்திரப்படுத்திவிட்டாயே! இப் பொழுது வருந்தி என்ன உபயோகம். அவனே! பாரபுத்தி யற்ற மூர்க்கன். இந்த பிசாசின் விஷயமான ப்ரசாரத்தை ஊர் பூராவும் செய்துவிட்டால் அதுமட்டும் நம் குடும்பத்து கண்ணியத்தை, நம் வீட்டின் பெருமையை, குலேத்து விடாதா! இந்த வீட்டில் பிசாசு உலாவுகிறது என்ருல் வேலேக்காரர்கூட நிலேக்கமாட்டார்களே! வீட்டுக்கே களங்கமல்லவா வந்துவிடும். அதோடு தம்பி இனி இவ் வீட்டிலிருக்கமாட்டேன் என்று வெளிக் கிளம்பிவிட்டால் அப்போது என்ன செய்வது...அம்மா! இதோ பாரு. இந்த விஷயத்தை எப்படியாவது ஒழுங்குபடுத்தித் தம்பிக்கும் தெரிவித்து முதலில் அவனுடைய இதயத்தி லுள்ள பயத்தைப் போக்கி இதயத்தைக் கெட்டியாக்க வேண்டும், அதை நீ தடுத்தால்...

கமல:—ஸ்ரீதர்! என்னுடைய பொறுமையற்றத் தனத் திஞல் நேர்ந்த விபரீதத்திற்கு எப்படித்தான் மாற்று தேடுவதோ தெரியவில்லேயே! இந்தவிஷயத்தை நீ எப் படி மாற்றி மறைத்துக் கூறமுடியும்?

ஸ்ரீதர:—அம்மா! உன்னேக் காட்டிக் கொடுக்காமல் நான் எப்படியாவது இதைச் சமாளிக்கிறேன்; ஆனல்

இதற்கோர் ப்ரதி உதவியை நீ கட்டாயம் செய்தே தீர வேண்டும். அதற்கான வாக்குறுதியைக் கொடுத்தாக வேண்டும்.

கமல:—ப்ரதி உதவியையா! உனக்குக்கூட உதவியைச் செய்யாமல் யாருக்கப்பா செய்யப்போகிறேன். உன் நன்மையை உத்தேசித்தல்லாவா நான் இத்தகைய அசட்டுக் காரியத்தைச் செய்துவிட்டேன்!...கட்டாயம் உனக்கு வேண்டியதைச் செய்கிறேன்...

ஸ்ரீதர:—அம்மா! கடவுள்மீது ஆணையாகச் சொல்கிறேன். வாக்குக் கொடுத்ததை மாற்றக்கூடாது. தெரிந்ததா! அம்மா! நீ இதுகாறும் செய்துவரும் பிடிவாதத்தை விட்டு முதலில் தம்பிக்கு அவன் இஷ்டப்படியே கல்யாணத்தை நானே நின்று நடத்திவைக்க அனுமதிக்க வேண்டும். அவனுடைய இன்றைய அதிர்ச்சியைத்தீர்க்க இதொரு சரியான மருந்தாகும்.

கமல:—ஐயையோ! அப்படி இப்படிப் பேசி என்னை மடக்கி இந்த விஷயத்திற்குக் கொண்டு வந்துவிட்டாயே தம்பீ!...

ஸ்ரீத:—அம்மா! வீணுக்கப்பேசி காபுரா அடையாதே! காலம்போகிறபோக்கை நீ மறந்துவிடுகிறுய்! எத்தனையோ முக்யமான காரியங்களை எல்லாம், கடமையை எல்லாம், மனிதர்கள் கைவிட்டு விடுகிருர்கள். நீ என்னமோ! இந்த கல்யாணத்தைப்பற்றி ப்ரமாதப்படுத்துகிருய். கடவுளறிய என்மனத்தில் இந்த நிமிடம் வரையில் இந்தக் கல்யாண இச்சையே உதயமாகவில்லை. என்னைப்பற்றி அவதூராக உன்னிடம் யார் யாரோ பொய்ப் புராணங்களைக் கொட்டியளப்பதை நான் அறியாமலில்லை. அதைப்பற்றி நீ சற்றும் நம்பாதே! கடவுள் சித்தப்படி எனக்கு எப்போது கல்யாணத்தில் மனது செல்கிறதோ அன்றே நான் உன்னிஷ்டப்படிச் செய்துகொண்டு உன்னை மகிழ்விக்கிறேன்

முதலில் தம்பியின் பிசாசு பயத்தையொழித்து உடனே கல்யாண உத்ஸாகத்தை மூட்டி அவனைச் சமாதானம் செய்து வாழ்க்கையில் இனிப்பை உண்டாக்குவது என் கடமை... அம்மா... என்ன ஏதோ பலமான யோசனை செய்கிருய்? என் வார்த்தையை நம்பு; இனி அனுவச்யமாய் தம்பியின் விஷயத்தில் தலையிடாதே; எல்லாவற்றையும் கடவுள் நன்ருக த்ருப்தியாகநடத்துவான்; அவன் திருவடியில் பாரத்தைப் போட்டுவிடம்மா! சுமக்கிறவன் அவனிருக்கையில் நாமேன் கவலைப்படவேணும்.

கமல:—தம்பீ! உன்னைச் சன்யாசியாகக் காண்பதா என் பெருமை?

ஸ்ரீத:—அம்மா! திரும்பத்திரும்ப இதையே சொல்லாதேம்மா!...சன்யாசியானல் என்ன கெட்டுவிடுகிறது. நான் இப்படியிருப்பதால்தான் உனக்கும் தெரியாமல் நம்முடைய இன்னொரு குடும்பத்தை நான் காப்பாற்றுகிறேன். தெரியுமா...

கம:—(திடுக்கிட்டு)...என்ன! இன்னொரு குடும்பமா! அதென்ன தம்பீ?

ஸ்ரீத:—அதுவா! அதுதான் முதல் சாபக்கேட்டின் அலங்கோலம்; நம்ம அப்பாவின் லீலையின் விளைவால் பாவம், ஒரு பாலிய விதவை...,உலகமறியாத பச்சைப்பயிர் போன்ற பெண், பலியாகித் தெருவிலும் நிற்கச்செய்துவிட்டாராம். அந்தப் பெண்ணை ஏமாற்றிப் பசப்பிய வார்த்தைகளின் பயனுய் தன்னிலையழிந்து வீட்டையும் விட்டு வெளியேறி தன் சுற்றத்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெரும் விரோதியாகி ஜாதி ப்ரஷ்டமே ஆய்விட்டாளாம். அப்பாவையே நம்பி வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டபாவிப் பெண்ணுக்கு ஒரு பெண்ணும் பிறந்ததாம். அதற்கு நாலைந்து வயதாவதற்குள்ளேயே அப்பாவின் அத்யாயந்தான் கொலைக்குற்றத்தின் மரணதண்டனையில் பாய்ந்து ஆயுள் தண்டனையில் முடிந்துவிட்டது...

கமலவேணிக்கு இதைக்கேட்கும்போது பழைய நினைவுகள் வந்து கண்ணீரை ஆராய் உதிர்த்து கதிகலங்கச் செய்து விட்டதால் தடுமாற்றத்துடன் தவித்தவாறு, தம்பீ! என்று மகனைப் பிடித்துக்கொண்டாள்.

ஸ்ரீதர்:—அம்மா! சாந்தியை அடை: மனத்தைத் தளர விடாதே...எனக்குமட்டும் கவலை இல்லையா...அந்த நிர்பாக்யப் பிண்டத்துடன் அந்த விதவைப் பெண் தெருவில் நின்று திண்டாடி படாத பாடுபட்டுப் பிச்சை எடுத்தும் கூலிவேலை செய்தும் வருந்தி பெண் குழந்தையை எப்படியோ காப்பாற்றிப் படிக்கவைத்து நர்ஸ்தொழிலில் பழக ஆஸ்பத்ரியில் கொண்டு சேர்த்தாளாம். நான் ஆஸ்பத்ரியில் பல சந்தர்ப்பங்களில் அந்தப் பெண்ணைப்பார்க்க நேர்ந்தது. பிறகு சகல விஷயங்களையும் விசாரித்தறிந்து அந்தப்பெண்ணை இன்னும் உயர்தரப்படிப்புகளை படிக்கச் செய்து லேடி டாக்டருக்கே படிக்கவைத்து வருகிறேன். நான் இன்னாரென்று அவளுக்குத் தெரியாது. அந்தப் பெண்ணின் தாயாரும் சமீபத்தில்தான் இறந்துவிட்டாளாம். நான் ஏதோ தயாளத்தினால் உதவி செய்வதாக எண்ணி அந்தப் பெண்ணின் தாயார் பாராட்டிக்கொண்டிருந்தாள். என் பிதாவின் தூர்த்த நடத்தையாகிய தீயினால் உண்டாகிய ரணத்தை ஆற்றுவதற்காக நானே உதவிவருகிறேன். இதை எல்லாம் பார்த்த பிறகு அப்பாவின் பாபச் செயலுக்கு இன்னும் யார் யார் இலக்காகி இருக்கிறார்களோ! என்று ஆராய்ந்து அவர்களுக்கெல்லாம் பணஉதவியாவது செய்து ஆதரிக்கவே நான் விரும்புகிறேன். இத்தகைய உயர்ந்த லக்ஷ்யத்திற்கெல்லாம் கல்யாணம் பெருத்த வேலிபோட்டதுபோலும் விலங்குபோட்டதுபோலுமல்லவா முடியும்! இதனால் தான் நான் இப்படி இருக்கிறேன், அப்பா கெட்டலைந்து கொலைபாதகனாக ஆகியதை நினைக்கும்போதே எனக்கு உத்தமமான க்ரகஸ்தாச்ரமமே வெறுப்பாகத் தோன்றுகிறது.

கமலவேணி இடைமறித்து, தம்பி!...ஸ்ரீதர்! நம்வம்ச பரம்பரையின் கண்ணியத்லைதக்குலேத்த உன்பிதாவின் செய்கையில் இப்படி ஒரு பூண்டு வளருகிறதா...இதை எல்லாம் நீ கிளறிக்கொண்டிருந்தால் இதற்கு முடிவு உண்டாகுமா! இதற்காக நீ உன் வாழ் நாளை ஸாரமற்று கழிக்க நான் பார்த்துச் சகிப்பேனு! தம்பீ! நீ யாரையோ ஒரு அழகிய பெண்ணை அன்புடன் நேசிப்பதாயும் அவளை ஆஸ்பத்ரியிலேயே வைத்து போஷிப்பதாயும் வேறு நான் கேள்விப்படுகிறேன். இது உண்மையாயிருந்தால் அந்தப் பெண்ணையே உனக்கு மனப்பூர்வமாய் மணம் முடித்துவிடலாம் என்று நான் மனக் கோட்டைக் கட்டிக்கொண்டிருக்கையில் மறுபடியும் என்னை மடக்கி என் வாயை அடைத்து உன் சன்யாசி ப்ரபாவத்தையே சொல்கிருயே! பெத்த தாயின் துடிப்பை நீ பார்க்கவேண்டாமா! ஒருவேளை அவள் எந்த ஜாதிபெண்ணே, அம்மா அதற்கு ஒப்புவாளோ! என்று நீ சந்தேகிக்கிருயா! தம்பீ! இதோ பாரு, சத்யமாய் சொல்கிறேன். அந்தப் பெண் யாராயிருக்கட்டும்...

இதற்குமேல் அவனுல் பொறுக்கமுடியாமல் கடகட வென்று சிரிப்பு வந்துவிட்டது. "அம்மா! நிறுத்தம்மா! கதைபோல் ஸ்வாரஸ்யமான விஷயத்தை உன்னிடம் யாரம்மா ஜோடனையாய் அழகாய் சொல்லிஇருக்கிருர்கள்! இதோ பாரம்மா! அந்த அல்ப விஷயத்தையும் சொல்லி விடுகிறேன் கேளு.

ஆஸ்பத்திரியில் உள்ள ஆயிரக்கணக்கான நோயாளிகளில் ஏழைகளும் அனுதைகளும் எத்தனையோ பேர்கள் இருக்கிருர்கள். அதில் ஒருபெண் திக்கற்றவள்; ஒருபாட்டி கிழம் இருந்தாளாம், அவளும் இறந்துவிட்ட அதிர்ச்சியில் அந்தப்பெண் கடுமையான நோயினுல் பீடிக்கப்பட்டதைச் சகியாது யாரோ ஐயோ பாவமென்று ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்டார்கள், ஏன் என்று கேட்பாரற்றுக் கிடந்த அந்த அனுதைக்கு விசித்திரமான வ்யாதி வந்

திருந்தது கண்டு அந்த வ்யாதியின் கூறை அறியவும் எப்படி எப்படி எல்லாம் வைத்யம் செய்யலாம் என்றும் நான் அந்த அனுதையை ஒரு பரீக்ஷார்த்தமாக வெகு அக்கரையுடன்தான் கவனித்துவருகிறேன், அந்த விஷ யத்தில் நான் தேர்ச்சியும் பெற்றுவருகிறேன். நான் கையாளும் புதிய முறைகளேயும் தைரியமான வேலேகளே யும் கண்டு மற்ற டாக்டர்கள் ப்ரமித்து என்னைப் பாராட்டு கிருர்கள்.

கமல:—அப்படிப்பட்ட விசித்ரமான வ்யாதி என்ன தப்பா!

ஸ்ரீதர:—மூளேயிலேயேகோளாறு உண்டாகியிருந்தது. இந்த அனுதை இருந்தாலும் கேட்பாரில்லே. போனுலும் கேட்பாரில்லே, ஆகையால்மூளேயையேஎடுத்துச் சரிப்படுத் தும் மேல்நாட்டு முறைப்படி அனுட்டிக்கலாம் என்று ஒரு தைரியம் பிறந்து, செய்து, வெற்றியும் பெற்றுவருகிறேன். பிழைக்கமாட்டாள் என்றிருந்த பெண்பிழைத்துவிட்டாள். மூளேயும் சரியாகிவிட்டது. அவளேக்கொண்டு நான் ஒரு பரீக்ஷை பாஸ் செய்ததால் அவளுக்கு என்னுடைய சொந்தசெலவில் சகல சவுகரியமும் ஆஸ்பத்ரியில் செய்து வருகிறேன். நன்ருகத் தேர்ச்சிபெறுவதற்கு இன்னும் சிலமாதங்களாகும், அதன் பிறகு அவளிஷ்டம். இந்த உள் விவரமறியாத எந்த ப்ரகஸ்பதிகள் உன்னிடம் கலகம் செய்தார்களோ! எதுவேண்டுமாயினும் செய்யட்டுமே, எனக்கதைப்பற்றிக் கவலே இல்லே. நீயும் வீணுன புரளி களே நம்பாதே.

கமல:—என்ன விசித்திரமானவிஷயமப்பா! நான்மனக் கோட்டை கட்டியது வீணுனதா!...அப்படியானுல்...அந்த பெண்ணே நான் உன்னேடுவந்து பார்க்கட்டுமா...

ஸ்ரீதர:—அம்மா! இதென்ன அசட்டுத்தனம்! தற் சமயம் நம் தலேமீது பாரமாயிருக்கும் தம்பியின் விஷ

யத்தை கவனியாமல் தானகக் கனியாத பழத்தைத் தடி கொண்டடித்துக் கனியச் செய்வதுபோல் அனுவசியமாய் என் விஷயத்தில் குழம்பாதேம்மா! தம்பியை முதலில் கவனிப்பதுதான் இப்போது கடமை. என்னிதயத்தில் சிற்றின்பத்தின் திவலைகூட படியவில்லை. மாசுமருவற்று அப்பழுக்கற்ற தூய பரிசுத்த நிலையில் த்யாகப் பிழம்பாயிருக்கிறதை ஒருபோதும் குட்டிச்சுவரடிக்கவிடமாட்டேன். இந்த வீண் ப்ரமை எதற்கு......அம்மா! நீ கொடுத்த வாக்குதத்தத்தை மறந்துவிட்டாயா!...

சரி! சரி! மணி 4 அடிக்கப் போகிறது. தம்பியைச் சரிப்படுத்தும் பொறுப்பு இனி என்னைச் சேர்ந்தது. நீ வீணுகக் கவலைப்படாதே. படுத்துக் கொள்ளு. இக் கடிதத்தை இப்படிக்கொடு...

என்பதற்குள் கமலவேணி ஆத்திரத்துடன் அதைச் சுக்கலாகக் கிழித்தெரிந்து விட்டு, இக்கடிதத்தினலல்லவா இத்தனை கலவரங்கள் வந்தது! என்று விம்மினுள். அதோடு தாமோதரன் பெட்டியிலிருந்து கொண்டுவந்த மற்ற கடிதங்களையும் ஸ்ரீதரனுக்குக் காட்டி...தம்பீ! இதைப் பாரு...என்ருள்.

ஸ்ரீதர:—அம்மா! நீ செய்யும் அசட்டுத் தனத்தினல்தான் அவன் வழி இல்லா வழியில் ப்ரவேசிக்கிருன். அதோடு பெத்த பிதாவின் இழிவான குணத்தின் களங்கம் இவனுடைய ரத்தத்திலும் இருப்பதால் ஆசாபாசத்திற்கு அடிமையாகிருன். இதை யறிந்தும் நீ இம்மாதிரி இருப்பது சற்றும் பொருந்தாது. நீ நினைக்கிறபடி ஒற்றுமையும் குடும்பத்து கண்யமும் ஒருபோதும் நிலைத்து நிற்காது. இனி வீண்வார்த்தைகளுக்கு இடங்கொடுக்காதே. இந்த காதல் கடிதங்களை அவனிடமிருந்து நீ எடுத்ததே தப்பிதம். இந்தப் பெண் யார், என்ன, என்பதை விசாரித்து நான் இதையே முடித்து விடுகிறேன். பயப்படாதே என்று வெகு சட்ட திட்டமாகப் பேசித் தாயாரைச் சமா

தானப்படுத்திப் பின் கடிதங்களைத் தான் பெற்றுக் கொண்டு சென்றான். கமலவேணியம்மாளுக்கு என்ன செய்வது என்பதே தோன்றாமல் இடிந்துப்போய் கல்லாய்ச் சமைந்துவிட்டாள். அவளுடைய வருத்தம் கரை கடந்துசென்றது. நாம் ஒன்று நினைத்துச் செய்தது கடவுள் ஒன்றாக நினைத்துவிட்டாரே! என்ற வியப்பும் கலக்கமுமே குடிகொண்டு வாட்டியது.

---

## 9

தன் விடுதிக்குச் சென்ற ஸ்ரீதரனுக்கு மனம் நிம்மதியே அடையவில்லை; ஏற்கெனவே தன் தொழிலின்மூலம் உண்டாகிய அலுப்புடன் இந்த தொந்தரவுகளும் சேர்ந்து தலையில் பெரிய பாரமாகத் தோன்றியதால் இருக்கை கொள்ளாமல் தவித்தான். உயிருக்கே மன்றாடிக்கொண்டுள்ள சில பேஷண்டுகளை நினைக்க பயம்வேறு நடுங்கியது.

நேரே சென்று குளிர்ந்த ஜலத்தில் நன்றாக ஸ்நானம் செய்தான். காலைநேரத்தில் செய்யவேண்டிய பூஜையைச் செய்யாமல் அவன் தொழிலுக்குப் புறப்படுவதே இல்லை. அதையொரு வ்ருதமாகக்கொண்டிருப்பவனாதலால் தவறாது நடத்தி வருவதுபோல் அன்றும் பூஜையை முடித்துக்கொண்டு நேரே தன் தம்பியின் விடுதிக்குச் சென்றான்.

அப்போதுதான் கண்விழித்தவாறு இரவு நடந்த விஷயத்தை எண்ணி எண்ணி ஒன்றும் விளங்காத குழப்பத்துடன் படுத்திருந்தான். அதோடு இரவு உண்டாகிய அதிர்ச்சியினால் சிறிது ஜுரமும் தலைவலியும் உண்டாகியிருந்ததால் சோர்ந்து காணப்பட்டான். ஸ்ரீதரன் சிரித்தபடியே உள்ளே சென்று, தம்பீ! சிறிதுநேரமாவது நன்றாகத் தூங்கினாய் என்று தெரிந்தது. ஏனெனில் நான் இரண்டு மூன்றுதரம் வந்து பார்த்தேன். அயர்ந்து

தூங்குவதைக் கண்டு சந்தோஷத்துடன் சென்றேன். (அன்புடன் தம்பியைத் தடவிப்பார்க்கும்போது சிறிது ஜுரமிருப்பதையறிந்து)... அடஅசடே! இந்த அல்பவிஷயத்திற்கா உனக்கு ஜுரம் வந்துவிட்டது... நான் அப்போதே சந்தேகித்தேன்; அதேமாதிரிதான் ஆய்விட்டது. இதோபார் தம்பீ! முக்யமான விஷயத்தைச் சொல்லி உன் பயத்தை வேரறுத்து உன்னை மகிழ்விக்கவே வந்தேன். எழுந்து உட்காரு தம்பீ! நேற்றிரவு வந்தது பேயுமல்ல பிசாசுமல்ல; நம்மைப்போன்ற இரண்டுகால் மனிதன்தான் என்பதை நான் நேற்றிரவு இந்த சம்பவம் நிகழ்ந்த நிசிக்குப் பிறகு தூங்காமல் கண்டு பிடித்துவிட்டுத்தான் மறுகாரியம் செய்தேன்.

தம்பி அலறியவாறு, ஆ...கண்டுபிடித்துவிட்டாயா! பேய் பிசாசு முனீச்வரன் இல்லையா!... திருடன்தானு! என்று வெகு ஆத்திரத்துடன் கேட்டான்.

ஸ்ரீதர்:—ஆமாம் தம்பீ! ஆமாம் திருடன் என்றுல் வெறும் கொள்ளையடிக்கும் சோதாத் திருடனல்ல. ஐயோ பாவம் என்று நாம் பரிதாபப் படக்கூடியவிதம் அனுதையான துரதிர்ஷ்டப்பிண்டமான உருவம். பகிரங்கமாய் வருவதற்குப் பயந்து...

தம்பி:—என்ன! என்ன! நீ சொல்வதே எனக்குப் புரியவில்லையே அண்ணு... துரதிருஷ்டப் பிண்டமாவது. அனுதையாவது...

ஸ்ரீத:—சொல்லிமுடிப்பதற்குள் அவசரப்படுகிருயே! அனுதையாயும் நிர்க்கதியாயும் தெருவில் நின்று தவிக்கச் செய்த மகத்தான பாதகம் நம்மையே சார்ந்தது தம்பீ! நம் பிதாவைப்பற்றி உனக்கு விவரம் எதுவும் அதிகம் தெரியாது. அந்த பாபாத்மாவின் அடாத செய்கைக்குப் பலியாகிப் பாழாகிய ஆத்மாக்கள் எத்தனையோ இருக்கின்றன. அதில் ஒருத்தி நியாயத்திற்கு பயந்து,

தானே மதிஇழந்துகெட்டுவிட்ட மகா குற்றத்தை உணர்ந்து வருந்தி, பிழைக்க வழியின்றி, பிச்சைக் காரியாகிவிட்டாள் பாவம்! அந்தக் கொடுமையில் வ்யாதிக் காரியாயும் ஆகிவிட்டதால் தனக்கு வயிறு வளர்க்க மார்க்கமே இல்லாது போய்விட்டதாம்.


என்னிடம் வந்து ஏதாவது உதவிகோரித் தன்ஒரே பிள்ளையை வாழவைக்கலாம் என்ற உணர்ச்சியுடன் வந்தாளாம். உன் விடுதி என்று தெரியாமல் உன்னிடம் வந்துவிட்டாளாம். நீ போட்டக் கூச்சலில் பயந்துபோய் நமது மோட்டார் லாயத்தில் பதுங்கிக்கொண்டிருந்தாள். அவளை நான் கண்டுபிடித்துக் கள்ளனென்று எண்ணி போலீஸில் வைக்கத் தீர்மானித்தேன். அந்தம்மாள் அழுதுகொண்டே இந்த விஷயங்களைச் சொல்லி அப்பா வின் கடிதங்கள் சிலவற்றைக் காட்டிக் கண்ணீர் வடித்தாள்.

அதைக் கண்டதும் என் மனம் இளகிவிட்டது. இனி இம்மாதிரி அடிக்கடிவந்து தொந்தரவு கொடுத்தால் போலீஸில் வைத்துவிடுவேன், ஜாக்ரதை! என்று உஷார் படுத்திவிட்டு 100 ரூபாயைக் கொடுத்துத் துரத்திவிட்டு வந்தேன். உடனே உன்னையும் அழைத்துக் காட்டும் பொருட்டு இங்கு அப்போதே ஓடிவந்தேன். நீ நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்ததால் எழுப்பக்கூடாதென்று போய் விட்டேன் இச்செய்தி நம் அம்மாவுக்குக்கூட தெரியாது. இதை அம்மாவிடம் நான் சொல்வதற்கு ப்ரியப்படவில்லை. என்ன விருப்பினும் அம்மா மிகவும் நொந்துபோய் வாழ்க் கையில் கசப்பையே அனுபவித்தவள் பாவம்! இந்த விஷயத்தையறிந்தால் அப்பாவின் பழைய நினைவுகளால் பாதிக்கப் படுவதோடு அவருடைய அக்ரமத்தினுல் இப்படி அனுதைகள் எத்தனைபேர்கள் இருக்கிருர்களோ! என்று இன்னும் இடிந்துப்போய்விடுவாள். ஆகையினுல் நீயும் சொல்லாதே...

ஒரே வியப்புடன், என்னது...அப்பாவின் சந்ததிகள் இப்படி வேறு இருக்கிறார்களா! இதை நான் இதுவரையில் கேள்விப்பட்டதே இல்லையே...அவர்களா இப்படி கொள்ளைக்காரர்கள் போலும் பேய் பிசாசு போலும் வந்தது அண்ணா! நீ இம்மாதிரி கழுதைகளுக்கு உதவி செய்வதென்று ஆரம்பித்தால் திவாலாக வேண்டியதுதான்...

என்று ஆத்திரத்துடன் கூறுவதைத் தடுத்துச் சமாதானம் செய்து...தம்பீ! நமது தகப்பனாரின் அட்டூழியச் செய்கையின் பலனால் பாபப்பிண்டங்களாகி நாம் பரிதவிப்பதைவிட ஏதோ கஷ்டப்பட்டு அலையும் ஆத்மாக்களைக் காப்பாற்றினால் புண்ணியமாவது உண்டாகும் என்பதனால்தான் கொடுத்தனுப்பினேன்...அது கிடக்கட்டும் தம்பீ! நீ இனி இந்த பிசாசு பயத்தை அடியோடு விட்டுவிடு. நான் என் தொழில் நிமித்தமாய் மேல் நாடுகளுக்குச் சென்று வரலாம் என்று உத்தேசம்; அது எப்போது நேரிடுமோ, இன்னும் நாள் குறிக்கவில்லை. இதைப்பற்றி அம்மாவிடமும் சொல்லவில்லை. சொன்னால் என்னைப் பிரிவதற்கு வருந்தி உத்திரவு கொடுக்க மறுப்பாள்; அதனால்தான் சொல்லவில்லை. இந்த அபிப்ராயத்தினால்தான் நான் விவாகம் செய்துக் கொள்ளவில்லை. இந்த காரணங்களையும் நான் அம்மாவிடம் சொல்ல விரும்பவில்லை. நான் முதலில் உனக்கு விவாகத்தைச் செய்துவிட்டு பொறுப்பு பூராவும் உன்னிடம் ஒப்பித்துவிட்டு நான் போகப்போகிறேன். இப்போ இவைகளை எல்லாம் தீர்மானமாய்ப் பேசி முடிவு கட்டுவதற்குத்தான் வந்தேன். தெரியுமா! உன் விவாக விஷயத்தில் நான் தடையாய் குறுக்கே நிற்பதாயும் அல்லது கவனிப்பதே இல்லை என்றும் நீ எண்ணி இருக்கிறாய்! எனக்கத்தகைய எண்ணம் கனவிலும் இல்லை. உனக்கு விவாகத்தைச் செய்து அதன்மூலம் நம் தாயாரின மனம் மகிழ்ந்து அவளுடைய துக்கத்தை மறந்து இன்புற்றிருக்கச் செய்யவேண்டும்.

தம்பீ! நான் பகிரங்கமாய்க் கேட்கிறேன். உனக்காக அம்மாவைப் பெண்பார்க்கச் சொல்வதா! அன்றி நீயே



பக்கம் 67



பக்கம் 100

தற்காலத்து நாகரீகப்படிக்கு யாரையாவது குறிவைத்திருக்கிருயா! அதையும் அம்மாவிடம் சொல்லிவிடு. உடனே நான் அதை முடித்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்...எனக்கு நேரமாகிறது. ஆஸ்பத்ரிக்குப்போக வேணும்...சாயங்காலம் நான் வந்து மறுபடி உன்னைப் பார்க்கிறேன். இன்று நீ அதிகம் அலையாது பூர்ண ஓய்வு எடுத்துக்கொண்டு நன்ருக யோசனைசெய்து முடிவு கூறு. இந்த பிசாசு விஷயம் பிசாசாகவே இருக்கட்டும். இந்த வெட்கக்கேடான விஷயத்தை வெளியில் சொல்லாதே என்று மடமடவென்று கூறிவிட்டு நேரே தன் தொழிலை நோக்கிச் சென்ருன்.

எங்கெங்கேத விஷயம் எப்படி எப்படி எல்லாம் மாறி எப்படி முடிந்தது! என்கிற வியப்பொருபுறம்; தன் பிதாவின் ஆதி லீலைகளால் இத்தகைய குடும்பம் வ்ருத்தியாகியிருப்பது உண்மையாயிருக்குமா! என்கிற ஆச்சரியம் ஒருபுறம். பலவிதமான குழப்பத்துடன் படுத்திருக்கும் தாமோதரனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தன் அண்ணன் சொல்லியதெல்லாம் உண்மையாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி; என் விவாகத்தை முதலில் செய்வதற்கான வழி பிறந்ததே போதும் என்கிறஎண்ணமும் ஆவலும் தலைதூக்கிநின்று புதிய உணர்ச்சியைக் கொடுத்தது.

அதே நிலையில் ஏதேதோ எண்ணி கற்பனை உலகில் சஞ்சரிக்கும்போது முதல்நாள் கண்டெடுத்தக் கடிதத்தின் நினைவு பளிச்சென்று வந்ததும் முதலில் பெட்டியைத் திறந்துபார்த்தான். அதேசமயம் இவனுக்கு ஒரே ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய உஷாவிடமிருந்து கடிதத்தை ஒரு பையன் கொண்டுவந்து கொடுத்தான். உடனே நினைவு இதில் மாறி தாவிவிட்டதால் பெட்டியை அப்படியே வைத்துவிட்டு இக்கடிதத்தைப் படிக்கவாரம்பித்தான்.

"அன்புள்ள தாமூ! காற்றினும் கடியவேகத்தில் இச் செய்தியை நான் உங்கள் வேலைக்காரர்கள் மூலம் அறிந்து மிகவும் பயந்து நடுங்கிக் கவலைப்படுகிறேன். உங்கள் வீட்டில் நேற்றிரவு பிசாசு வந்து உங்களை மிறட்டியதாம். உங்கள் வீடே அல்லகல்லோலமாகிவிட்டதாம். அந்த பயங்கர அதிர்ச்சியினால் உங்களுக்குக் காய்ச்சல் கண்டிருக்கிறதாம். உங்கள் அண்ணன்கூட வந்து தடபுடல் உபசாரம் செய்தாராம். இப்போது உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது? எனக்கு அங்குவந்து பார்க்கவேண்டுமென்று ஆசைதான்; ஆனால் இத்தனை நாட்கள் உங்கள் தாயார், அண்ணன், முதலியவர்கள் என்ன சொல்வார்களோ என்ற அச்சத்தினால் வராமலிருந்தேன். இப்போதோ பிசாசு என்ற பதத்தைக் கேட்டதுமே உடலே நடுங்குகிறது. ஆகையால் நான் இதை எழுதுகிறேன். நீங்கள் தயவுசெய்து இங்கே வந்துவிடுங்கள். அந்த வீட்டுப்பக்கமே கொஞ்ச நாளைக்குப் போகவேண்டாம். இங்கேயே இருக்கலாம். அல்லது எங்காவது வெளியூர்களுக்குப் போய் சுற்றிவிட்டு வரலாம். ஆகையால் உடனே வரவும். உங்கள் ப்ரிய உஷாதேவி"

இதைப் படித்ததும் ஒருமுறை சிரித்துக்கொண்டான். என்ன அன்பு. எத்தனை உருக்கமாய் எழுதி நம்மை அழைத்திருக்கிருள்! உடனே நாம் நேரில் சென்று இந்த ரகஸியத்தைச் சொல்லிவிட்டு வரவேண்டும். எப்படி மறைக்கப் பார்த்தாலும் நமக்குமுன் வேலைக்காரர்கள் மூலம் புசல்போல் பரவி விட்டதே...என்று தனக்குள் எண்ணியபடி சடக்கென்று வெளியேசென்று விட்டான். இப் புதிய உத்ஸாகத்தின் வேகத்தில் சகலத்தையும் மறந்துவிட்டான் என்ருல் மிகையாகாது.

## 10

வெளியே சென்ற ஸ்ரீதரன் ஆஸ்பத்ரி வேலைகளை முடித்துக்கொண்டு தனிப்பட்ட நோயாளிகளை வீடுகள்

தோறும் சென்றுபார்க்கும் வழக்கப்படி பார்க்கச் சென்றான். துரைக்கண்ணன் என்பவர் வெகு செல்வவந்தர். மிகவும் உத்தமமானவர். அவர் இரண்டுமாத காலமாய் வெகு கடுமையானநோயுடன் படுத்திருந்ததால் அவருக்கு ஸ்ரீதரனே பூர்ண குணத்தை உண்டாக்கினான். டாக்டரை தெய்வமாகவே மதித்து அவனிடம் அஸாத்யமான ப்ரேமையைச் செலுத்தும் துரைக்கண்ணனுக்கு சில தினங்களாய் எப்படியாவது தன் மகள் பாமாவை ஸ்ரீதரனுக்கு விவாகம் செய்துவைத்துக் களிக்கவேண்டும் என்பது அவருடைய பேராவல்; அதை ஜாடைமாடையாக ஸ்ரீதரனிடம் தெரிவித்தும் அவனுடைய அனுகூலமான பதில் கிடைக்கவே இல்லை.

இனி நேரிடையாய் விஷயத்தை உடைத்தேசொல்லி விடவேண்டும் என்ற எண்ணத்தினால் இன்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ஸ்ரீதரனைப் பார்த்ததும் வெகு உத்ஸாகத்துடன் வரவேற்று, ஸார்! இன்று மிகவும் சுறுசுறுப்பாயும் புதிய உத்ஸாகத்துடனும் ஆரோக்யமாயிருக்கிறது. இன்று முக்யமாய் உங்களிடம் எனது வேண்டுகோளைத் தெரிவித்துக் காணிக்கையைச் சமர்ப்பிக்கப் போகிறேன்...என்று முடிப்பதற்குள், ஸ்ரீதரன் மகத்தான ஸந்தோஷத்துடன்...பேஷ்! பேஷ்! சபாஷ்! எப்படியும் நான் பேராசை டாக்டர். பணக்காரர்களிடம் அதிகமான பணம் பறிப்பவன் என்று ஒரு சிலர் சொல்கிறார்களாம். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அந்த பணத்தை நான் எனக்காக உபயோகப்படுத்தி வாழ்வதில்லை. என்னால் முடிந்தமட்டும் ஏழைகளுக்கு தர்ம வைத்தியசாலை வைத்து நடத்துகிறேன். அது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். உங்கள் மனமகிழ எத்தனை ஆயிரம் கொடுத்தாலும் கை நீட்டி சந்தோஷமாய் வாங்கிக்கொள்ளக் காத்திருக்கிறேன். கொண்டுவாருங்கள் ...என்று கையை நீட்டினான்.

இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒரு செக்கு எழுதியதை ஸ்ரீதரனிடம் கொடுத்து ஸ்ரீதரனின் இரண்டு கைகளையும்

பிடித்துக்கொண்டு டாக்டர்! உங்களிடம் நான் வைத்துள்ள கரைகாணுத அன்பிற்கு இந்த அல்பதுகையொரு மதிப்பே யல்ல. என்னிதய பூர்வமாய் என்னுடைய செல்வியானபாமாவை உங்கள் வாழ்க்கைத்துணைவியாகக் கொடுத்து அவளுடன் குறைந்தது 50 ஆயிரம் ரூபாயாவது ஸ்ரீதனமாகக்கொடுக்க என்னுள்ளம் ஆவல்கொண்டு தவிக்கிறது. சீமைக்குச் சென்றுள்ள என் மகள் அடுத்த வாரத்தில் வருவதாகக் கடிதம் வந்துவிட்டது. அவளுடைய குணத்தழகையும்சரி; ரூபலாவண்யத்தின் விசேஷத்தையும் சரி! ஒருவிதத்திலும் குறை சொல்லவே முடியாது. ஏதோ! என் பெண் என்று நான் பெருமை படுவதாக நினைக்கக்கூடாது. அவளுடைய படிப்பைப் பற்றியும் நான் மிகமிகப் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம். இந்த ஜில்லாவுக்கே முதல் தரமாக M. A. பாஸ் செய்திருக்கிருள். மேல்நாடு சுற்றிப்பார்க்கும் ஆசையினுலும் சில விஷயங்கள் ஆராய்ச்சிப் படிப்பிற்காகவும் போயிருக்கிருள். அடுத்த வாரம் வருவதற்குள் இந்த ஏற்பாட்டை நாம் தீர்மானித்து வைத்துவிட்டால் அவள் வந்ததும் காரியத்தை முடித்துவிடலாம். என் வார்த்தைக்கு மறுபேச்சே பேசமாட்டாள். இக்காலத்திய சில பெண்களைப்போல் தத்தாரியாய் தான்தோனியாய்த் திரிய மாட்டாள். அடக்கமும் மதிப்பும் பக்தியும் கொண்டவள்; ஆகையால் இதைப் பூர்த்தி செய்யவேணும், டாக்டர்! என்று தன்னுள் கொந்தளிக்கும் ஆர்வம் பூராவும் காட்டி வேண்டிக் கொண்டார்.

இம்மாதிரி விஷயம் ஒன்றை இவர் கேட்கப்போகிருர் என்று ஸ்ரீதரன் சொப்பனங்கூட காணவில்லை. இந்த கேள்வி இவனுக்கு ப்ரமாதமான வியப்பைக் கொடுத்தது. இதுபோல் இன்னும் பலபேர்கள் இவனைக் கேட்டிருக்கிருர்கள்; ஏன்! சில இடங்களில் இவனுல் வைத்யம் செய்துக்கொள்ளப்பட்ட பெண்களே இவனை மணக்க ஆசை கொண்டு வலுவில் கேட்டிருப்பதையும் இவன் கண்டு வெறுத்தும் இருக்கிருன். இத்தகைய செய்கைகளினுல்

உலகானுபவம் அதிகமாகப்பெற்றுள்ள இவனுக்கு இந்த இடத்தில் இவர் கேட்டது வியப்பாக இருந்தது. என்ன பதில் சொல்வதென்றே தோன்ருமல் சற்றுநேரம் திகைத்தான்.

பிறகு சமாளித்துக்கொண்டு, "ஸார்! மிகவும் சந்தோஷத்துடன் வந்தனம் செய்கிறேன். உங்களுக்கு உடம்பு பூர்ணமாய் குணமாகி பழைய ஸ்திதி உண்டாகட்டும். பிறகு கல்யாணப் பேச்சைப்பற்றி எடுக்கலாம். அதோடு என்னைப்பற்றி நீங்கள் சற்றும் எதிர்பார்க்கவேண்டாம். நான் விவாகத்தைப்பற்றி சிந்திப்பதுகூட கிடையாது. ப்ரம்மசரியத்தை தைரியமாய் திறமையுடன் அனுஷ்டித்து ஜெயித்து இன்புறுவதற்கு நான் மிகவும் ஆசைப்படுகிறேன். அதற்கான முறையிலேயே என்னுடைய வாழ்க்கைப் பாதையை அனுஷ்டித்து செப்பனிட்டு வருகிறேன்...

துரைக்கண்:—என்ன! என்ன! ப்ரம்மசரிய வாழ்க்கையா?...இதென்ன விஷப்பரிக்ஷை ஸார்! இம்மாதிரி பேசிய வீரர்களை நான் எத்தனையோ பேர்களைப் பார்த்திருக்கிறேன். ஏன் அத்தனை தூரம் போவானேன். நான்கூட காலேஜில் படிக்கும்போது எனக்கு சில வேதாந்த உபாத்யாயர்களும் சில மாணவர்களும் அபார சினேகிதர்களானர்கள். நாங்கள் ப்ரதி தினம் இரவு சமுத்திரக் கரைக்குச்சென்று இந்த விஷயமாகவே வெகுநேரம் ஆராய்ச்சிசெய்து பேசுவோம். ப்ரம்மசரியம் அனுஷ்டிப்பது கஷ்டமே இல்லை. மனத்தைப் பரிபக்குவம் செய்துவிட்டால் எதையும் சமாளிக்கலாம்; மனிதனல் ஆகாத காரியம் உண்டா! என்றெல்லாம் வீராப்பு நானேபேசி மார்தட்டினேன். அதோடு நில்லாமல் என் சினேகிதர்களையும் கிளறிவிட்டு, "நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ப்ரம்மசரியவ்ருதம் அனுஷ்டிக்கும் முறையை தீவிரமாகப் பழகவேண்டும். அதோடு ஒரு கழகம்வைத்து நடத்த வேண்டும்" என்று பெரிய முஸ்தீப்புகள் போட்டேன்.

கடைசியில் என்னவாயிற்று தெரியுமா! கழகமும் ஆரம்பித்தோம். மூன்று வருஷகாலம் ஒருமாதிரியாய் நடந்தது. முதலில் வெகு வீராப்புடன் வந்துசேர்ந்த வாலிப வீரர்கள் ஒவ்வொருவராக மணவாழ்க்கையில் ஈடு பட்டு கழகத்தைவிட்டு வெளி ஏறினர்கள். ஏதோ சில பேர்கள்தான் ஊசலாடிக்கொண்டிருந்தோம். கழகத்தின் வருஷாந்திர விழாவுக்குத் தலைமைவகிக்க ஒரு சிறந்த அறிவாளியை அழைத்திருந்தோம். தலைமை வகிக்க வரும் போது என் மன உறுதியைக்குலைத்து என் கொள்கையில் நான் படுதோல்வி யடையும்படியான ஒரு பெரிய சோதனை சக்தியாகிய அவருடைய பெண்ணைக்கூட அழைத்து வந்து என்னைக் கலக்கிப் பாழாக்கி விட்டார்.

இனி இதற்குமேல் வார்த்தை எதற்கு டாக்டர்? நான் படுதோல்வி யடைந்தேன். அந்த மாதரசியை மணம் செய்துகொண்டு பலருடைய நகைப்புக்குப் பாத்திரமாகி விட்டேன். ஏதோ சந்தோஷமாக வாழ்க்கை நடந்தது. ஒரே ஒரு பெண் பிறந்தாள்; அதி செல்வமாய் நாகரீகமாய் புத்திசாலியாய் வளர்கிருள். அவளுக்குத் தகுந்த மணாளனை நான் சிலவருஷங்களாகவே தேடிவருகிறேன். அவளுக்குத் தக்க கணவராகவே பகவான் உங்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கிருர்என்றே நான் தீர்மானித்து விட்டேன்...

ஆம்...முக்யமானதைச் சொல்ல மறந்துவிட்டேனே; நான் முதலில் அனுஷ்டிக்க ஆரம்பித்த வ்ருதம் என் மனைவி மறைந்த பிறகு செவ்வனே நடந்துவருகிறது. தாயற்ற பெண்ணுடன் நான் சந்தோஷமாக இருக்கிறேன். அத்தகைய தாயற்ற பெண்ணுக்கு நீங்கள் அன்புடன் ஆதரவளித்துக் காக்கவேண்டும். நான் வெகு வெகு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்...

என்று அவர் சொல்வதை எல்லாம் கேட்கக்கேட்க ஸ்ரீதரனின் உள்ளத்திலும் சிறிது பயமும் அதிர்ச்சியும்

உண்டாகியது. இதென்ன அதிர்ச்சியான விஷயம். அசைக்கமுடியாத சித்த உறுதியுடன் இருந்தவரையா அசைத்துவிட்டது. இது உண்மையாக இருக்கமுடியுமா! என்னுடைய இரும்பு உள்ளத்தையுமா இந்த அற்ப தூசிக்குச் சமமான சிற்றின்பப் பேய் அசைத்துவிடும்... என்றுநினைத்தபடி ப்ரமைபிடித்துநிற்கையில் டெலிபோன் மணியடித்தது.

உடனே துரைக்கண்ணன் டெலிபோனில் பேசச் சென்றார். பூண்டிபேட்டையிலுள்ள ஒரு ப்ரபலஸ்தர் வீட்டில் காய்ச்சலால் ஒருவர் மகத்தான கஷ்டப்படுவதால் உடனே ஸ்ரீதரனை அனுப்பும்படி சொல்லியதைக் கேட்டதும் இவரே ஸ்ரீதரனை அனுப்பும்படியான அவசரம் உண்டாகிவிட்டதால் அரைமனத்துடன் விஷயத்தைக் கூறி அனுப்பினார்.

நானே வருவதாகக்கூறி ஸ்ரீதரன் சென்றான். இங்கு கேட்ட விஷயமே இவன் மனத்தில் ஆழமாகப் பதிந்து வேலை செய்யத் துடங்கியது. தன்னுடைய ஆழமான உறுதிக்குக் கூட பங்கம் வந்துவிடுமோ! என்கிற பயம் அவனை அறியாமல் ஒருபெரிய பீதி வந்து மனத்தில் புகுந்துகொண்டுக் கிளற வாரம்பித்தது.

---

## 11

தாமோதரன் வரவை அதிக ஆவலுடன் எதிர்பார்க்கும் உஷாதேவி தோட்டத்திலேயே நின்றிருந்தாள். தாமோதரன் வரும் கார் ஓசையைக் கேட்டு அபாரசந்தோஷத்துடன் தாவிவந்து, "ஹல்லோ! மிஸ்டர் தாமோதரம்! வாருங்கள்! வாருங்கள்...என்ன கலாட்டா நடந்து விட்டதாமே! பிசாசுஎன்றாலே எனக்கு அஸாத்யபயம். அதைக் கேள்விப்பட்டதும் எனக்கு எப்படித்தான் நடுங்கிவிட்டது தெரியுமா! உங்களுக்கு அதனால் ஒன்றும் ஆகிவிடவில்லையே? இரவு நிம்மதியாகத் தூங்கினீர்களா! என்றுகேட்ட

படியே தோட்டத்திற்குள் அவனையும் அழைத்துக் கொண்டு சென்றாள்.

லதாக்ரகத்தில் உல்லாஸமாய் அமர்ந்து பின் சிற்றுண்டிகளை வரவழைத்து இருவருமாய்ச் சாப்பிடத் துடங்கினார்கள். மிஸ்டர் தாமோதரன்! நீங்கள் இரவுகூட சாப்பிடவே இல்லையாமே; அதனால் இரட்டைப் பங்காய் சாப்பிடவேணும் தெரியுமா! அதோடு நீங்கள் இன்னும் சிலகாலம் உங்கள் வீட்டிற்கே போகவேண்டாம். நாம் எங்களுடைய க்ராமத்திற்குப்போய் 10 தினங்களாவது தங்கிவிட்டு வரலாம். இன்றே புறப்படுவோம். என்ன சொல்கிறீர்கள். உங்கள் முத்தண்ணாவைக் கேட்க வேண்டுமோ!

தாமு:—சேச்சே! என்னுடைய சொந்த சவுகர்யத்திற்காக நான் செய்யும் காரியத்திற்கெல்லாம் என் அண்ணன் குறுக்கிடவே மாட்டான்...

உஷா:—ஆமாம்! உங்களுடைய மனச்சந்தோஷத்திற்காக நீங்கள் கல்யாணம் செய்துகொண்டு இன்பமாக வாழ்க்கை நடத்துவதற்குப் பெருந்தடை செய்யும் பெரிய மனிதன் இதற்குமட்டும் குறுக்கே வரமாட்டாரா! இப்படி நம்பி நம்பிதான் காலங்கடந்துகொண்டே போகிறது; இப்படியே என்றைக்கும் இருந்தால் என் தாயார் இதைப் பற்றி மிகவும் கவலைப்படுகிறாள்.

தாமோ:—இனிமேல் அதைப்பற்றி கவலையே படாதே உஷா! நான் வீணாக அண்ணன்மீதும் அம்மாமீதும் கோபித்துக்கொண்டிருந்தேன். நீ இஷ்டப்பட்ட பெண்ணை நீ மணக்க எத்தகைய ஆக்ஷேபனையும் இல்லை' என்று அண்ணா இன்று காலையில்கூட கூறிவிட்டார்; இனி கவலையேவேண்டாம். வெகு விரைவில் இதைப்பற்றி முடித்துவிடலாம். ஆனால் ஒன்று நீங்கள் இந்த ஊருக்கே புதிதானவர்களாதலால் எங்கள்சகோதரிகள், என்தாயார்

முதலியவர்கள் உன் தாயாருடன் கலந்துபேசி பொது ஜனங்களுக்கு சமாதானமாய் வழக்கப்படி பார்ப்பது, பேசுவது, என்கிற நாடகம் நடத்தாமல் என் தாயார் இசையமாட்டார்கள். தாயாரை மீறி அண்ணுவும் செய்யமாட்டார். நான் இன்றே என் சகோதரிகளுக்குக் கடிதம் எழுதிவிடுகிறேன்; அடுத்த வாரத்திற்குள் இந்த காரியத்தை முடித்துக்கொண்டே நாம் ஹனிமூனுக்காகமேல் நாடெல்லாம் ப்ளேனிலேயே சுற்றி வரலாம் என்று நான் நினைக்கிறேன். எனக்கு இந்த பேய் பிசாசுக்கு பயமே இல்லை. திருடனே என்றுதான் நான் பயந்தேனே யன்றி மற்றப்படி ஒன்றுமில்லை. நீ சற்றும் கவலைப்படாதே. வெகு சீக்கிறத்தில் காரியம் நடக்க நான் ஏற்பாடு செய்கிறேன்....என்று கூறுவதைக் கேட்ட உஷா ப்ரமாத பூரிப்பை யடைந்து குதிக்க வாரம்பித்தாள். பின்னும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்த பின்னர் தாமோதரன் வீட்டிற்கு வந்தான்.

தான் போகும் அவசரத்தில் பெட்டியைத்திறந்தே போட்டுவிட்டுச் சென்றது பின்னர் வந்து பார்த்தபோது தான் நினைவுக்கு வந்தது. அண்ணன் எழுதிய கடிதமும் தனது ப்ரத்யேகமான ப்ரேமைக் கடிதங்களும் காணுததால் முதலில் திடுக்கிட்டு முற்றிலும் தேடிப்பார்த்தான்; தன் பெட்டியில் மற்றவைகள் அப்படியே இருப்பதுகண்டு இதை வேண்டுமென்று அண்ணனே வந்து எடுத்துக்கொண்டு போய்விட்டதாக மறுபடியும் அண்ணன் மீதே அடங்காத கோபம் உண்டாகியது. எனினும் இதே கடிதத்தைத் தான் திருட்டுத்தனமாய் அபகரித்ததால் இதை எப்படி பகிரங்கமாய் அண்ணனிடம் கேட்பது. என்கிற யோசனையும் உண்டாகியது. தன் தாயாரிடம் கேட்கலாமென்றால் அவளுக்கும் இதுவிஷயத்தில் எப்படி இக்கடிதம் தன் கையில் கிடைத்ததாகச் சொல்வது என்ற குழப்பம் வந்துவிட்டது. அதோடு முதல் நாள் நடந்த சம்பவத்தின் செய்தியை அறிந்த இவனுடைய சிநேகிதர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் விசாரிப்பதற்காக வந்துகொண்டிருந்ததால் இவனுக்கு எதுவும் செய்யமுடியாது

போய்விட்டது. சிநேகிதர்களுடன் வெளியிலேயேபோய் விட்டான்.

கமலவேணியின் நிலைமைதான் திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் ஆகிவிட்டது. ரிஜிஸ்தர் ஆகாத கடிதத்தை வைத்துக்கொண்டு அவன் என்ன செய்யமுடியும் என்கிற ஞானம் இல்லாமல் ஏதேதோ அசட்டு யோசனையில் விபரீதமான காரியத்தைச் செய்து நானே பெருத்த குழப்பத்தைத் தேடிக்கொண்டேனே! வெளியில் சென்ற ஸ்ரீதரன் இன்னும் வரவில்லை. தாமோதரனும் என்ன செய்கிறானோ! எங்கு சென்றானோ தெரியவில்லையே! என்று கவலையே வடிவாய் ஆகாரமும் பிடிக்காமல் அயர்ந்துபோய் படுத்திருந்தாள்.

அச்சமயம் தாமோதரன் மெல்ல தன் தாயாரிடம் வந்தான்; பெத்த தாயின் பாசம் உச்சத்தை எட்டஎழுந்து உட்கார்ந்து தம்பீ! சாப்பிட்டாயா! இன்னும் உன் பயம் தெளியவில்லையா! முகம் ஏதோமாதிரி இருக்கிறது! என்று பரிவுடன் கேட்டாள்.

தாமோ:—அம்மா! நான் தனிமையில் உன்னிடம் பேசுவதற்காக வந்தேன்.—என்று சொல்லும்போது கமலவேணியம்மாள் கிழித்துப்போட்டிருந்தகாகிதத்துண்டுகள் அவன் கண்களில் சடக்கென்று பட்டுவிட்டதுதான் தாமதம். உடனே பாய்ந்தெழுந்து சென்று காகிதத்துண்டங்களைச் சேர்த்துக்கொண்டுவந்து தாயாரின்முன் காட்டி வெறிக்க வெறிக்க பார்த்துக் கோபக்கனல் ஜ்வலிக்க, 'அம்மா! இது நீ செய்த காரியந்தானே?' என்று பெருத்த ஆத்திரத்துடன் கேட்டான்.

முதலில் சில விநாடிகள் கமலவேணி ப்ரமித்துவிட்டாள். பிறகு சமாளித்துக்கொண்டு, தம்பீ!பெத்த தாயின் கடமைக்குள்பட்ட சகல காரியத்தையும் செய்ய எனக்கு அதிகாரமுண்டு என்கிற முறையில் இக்கடிதத்தை நானே உன்பெட்டியிலிருந்து எடுத்துக் கிழித்தெறிந்தேன்;

குடும்பம் கட்டுகோப்பாய் சீரும் சிறப்புமாய் ஒன்றுபட்டு இன்பமாக வாழவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் செய்தேன்—என்று அவளை அறியாத தைரியத்துடன் எப்படித்தான் சொன்னளோ அதுவே தெரியாமல் சொல்லிவிட்டாள்.

"அம்மா! நீ உன் கடமையையா செய்தாய்? இல்லை: ...மடமையினுல் பக்ஷபாதமே காட்டிவிட்டாய். அண்ணு எனக்குச் சகலசொத்துக்களையும் எழுதிக்கொடுத்துவிட்ட தானது உனக்கு வயிற்றெரிச்சலாகிவிட்டது. உன் பெண் களுக்குக் கொடுக்கவில்லையே என்கிற பொருமையினுலும் நான் சந்தோஷமாய் வாழ்வது உனக்குப் பொறுக்காமை யினுலும் இவ்வாறு செய்திருக்கிருய் என்பது நன்ருக விளங்கிவிட்டது. பெற்ற தாயாருக்கு ஒரு கண் வெண் ணையும் ஒரு கண் சுண்ணும்புமாக இருப்பதை உலகத்தில் பார்க்கவே முடியாது...

என்று ஆத்திரத்துடன் அதிர்ந்துவிழுந்து இறையும் போது கமலவேணியம்மாள் மெல்லச் சமாளித்துக் கொண்டு, தம்பீ! பதருதே ஆத்திரத்திற்கு இடங் கொடுத்துவிட்டால் அனைத்தும் சிதறிவிடும். உன்னுடன் கூடபிறந்த அண்ணன் சாந்தியின் சிகரத்தை எட்டப்பாடு படுகிருன். நீயோ சாந்தியைக் குலைத்துக் குடும்பத்தைக் குட்டிச் சுவரடித்துக் குழப்பத்தை உண்டாக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிருய். என்ன விருப்பினும் நீ இம்மா திரி தரிதலைத்தாண்டவம் செய்யக்கூடாது; உன் அண்ண ணைப் போன்ற உத்தமன் உனக்கு ஒருபோதும் கிடைக் கவேமாட்டான். அழ அழச் சொல்லுவார் தன் மனுஷ் யாள், சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் பிறமனுஷ்யாள் என் பது பழமொழி; இதன் தத்துவம் நீ அறியாமல் உன்னிடம் உயிரையே வைத்து உன்னுடைய நலத்திற்கே பாடு படும் உத்தமனை நீ நன்கறியாமல் கலகக்காரர்களின் வார்த்தையைக் கேட்டு நீயும் கெட்டுப்போகிருய்; குடும்பத் தையும் குலைத்துப் பிறர் சிறிக்கச் செய்கிருய். உனக்கு

முதலில் கல்யாணத்தைச் செய்துவிட்டுத்தான் மறு காரியம் அவன் பார்ப்பதாக நேற்று இரவு என்னோடு சண்டை செய்து என்னிடம் வாக்கும் வாங்கிக்கொண்டான். நம் ஜாதி வழக்கத்தின் படியும் குடும்ப கண்ணியத்தின் படியும் மூத்தவனுக்கு முதலில் விவாகத்தைச் செய்யவேண்டிய முறையைக்கூட விட்டுவிட்டு உனக்குச் செய்ய சகல ஏற்பாடுகளும் செய்துவிட்டான்...

என்று சொல்லிக்கொண்டிருக்கையில் வெளியில் சுற்றி அலுத்துப்போய் மனத்தில் புதிய குழப்பத்துடன் தன்னறைக்கு வந்துசேர்ந்த ஸ்ரீதரன் தாயாரின் விடுதிக்குத் தற்செயலாய் வரும்போது தம்பியும் தாயாரும் கடும் சினத்துடன் பேசுவதைக் கேட்டு வெகு சாந்தத்துடன் உள்ளே வந்து தம்பியின் தோள்களைப் பிடித்து அன்புடன் ஆட்டி அவனை உட்காரச்செய்து, பின், அம்மா! நீயும் ஏன் ஆத்திரத்துடன் பேசி அவன் மனத்தைக் கலக்குகிருய்! இந்தக் கடிதத்தினுல் தானே இத்தனை விபரீதங்களும் உண்டாகிவிட்டன. இதோ! ஆண்டவன் க்ருபையில் நாம் இருவரும் க்ஷேமமாய் அன்பாய் இருந்து நம் தாயாரின் இதயம் பூரிக்கும்படி நடந்தால்போதும்.

இந்த சொத்துக்களைப்பற்றி நீ கவலையே படாதே; என்னுடைய சகலமான சொத்தும் உனக்கில்லாது வேறுயாருக்குப் போகப்போகிறது? உன்னுடைய துணைவி உனக்கு வந்தபிறகு ஊதாரிச் செலவோ தாந்தோனித்தனமோ ஆடம்பரமோ இல்லாது அமரிக்கையாய் குடும்பம் நடத்தும் விதரணையைப் பார்த்துக்கொண்டு சகல சொத்தையும் உன்னிடமும் அந்த உத்தமியிடமும் ஒப்படைத்துத் தருகிறேன். என்னைப்பற்றிக் கவலையில்லை. என் கைத்தொழில் எனக்குக்கஞ்சிவார்க்கும்; உன்னிடம் இப்போதே சொத்துக்களைக் கொடுத்துவிட்டால் உன் சினேகிதர்களால் அதற்கு ஆபத்தே உண்டாகும். ஆகையால் நீ பயப்படாதே. உன்னை நான் காலையில் கேட்டபடி பதில்சொல்லு. உனக்காக அம்மாவைத்

தகுந்த பெண்பார்க்கச்சொல்லட்டுமா! அன்றி நீயே ஏதாவது பார்த்திருக்கிருயா! முதலில் கல்யாணம்; பிறகு பாக உரிமை, சரிதானு? முதலில் விஷயத்தைச் சொல்லு. நான் அதற்குள் இதை முடித்துவிடுகிறேன்.... அம்மா! வீணுக நீ அவனிடம் அதிகம் மனஸ்தாபப்பட்டுப் பேசாதே. என்று வெகு நிதானமாயும் உரிமையுடனும் கூறினுன்.

இதைக்கேட்ட தாமோதரனுக்கு முதலில் ஒன்றுமே தோன்ருது சற்று அதிர்ச்சியுடன் நின்றுவிட்டான். பிறகு தன்னைத் தானே சமாளித்துக்கொண்டு, "அண்ணு! நீ சொல்கிறபடி எல்லாம் நான் நம்பிக்கையுடன் கேட்கிறேன். ஆனுல் சொன்னதை சொன்னபடி நடத்திக்கொடுக்கத் தவறினுல் எத்தகைய விரோதம் உண்டாகும் என்று சொல்லமுடியாது" என்பதற்குள், "தம்பீ! ஏன் உனக்கித்தனை பயம். நான் கட்டாயம் கொடுத்தவாக்கின்படி செய்து தீருவேன். முதலில் கல்யாண விஷயத்தைப் பற்றிச் சொல்லு. எனக்கு நேரமாகிறது" என்ருன்...

தாமோ:—அண்ணு! நீ அதிகப் படிப்பாளி. உன் படிப்பினுல் உழைப்பினுல் அபாரமான வருவாயைப் பெறக்கூடியவன். நானே அதிகப் படிப்பில்லாதவன். அதனுல் சொல்ப உத்யோகத்தைத்தான் பெறமுடிந்தவன்; ஆகையால் நீ சொல்லியபடி சொத்துக்களின் விஷயத்தில் உறுதியாக நீ நடக்கவேண்டும் என்பதை இப்போதே மறுமுறையும் சொல்லிவிட்டேன். என் கல்யாண விஷயத்தில் நானே என் மனத்திற்கு ஏற்ற பெண்ணைத் தீர்மானித்திருக்கிறேன்; அதையே நீயும் அம்மாவும் பார்த்து முடித்துவிடுங்கள்; திருபுரஸுந்தரிபுரம் பூமா விலாஸ் பங்களாவிலிருக்கிருள்; மிக்க செல்வவந்தர் வீட்டுப்பெண்; நன்ருகப்படித்தவள்; மிகவும் அழகுடையவள்.

ஸ்ரீதர:—தம்பீ! இவ்வளவு போதும். அம்மா! நான் இப்போதே சகோதரிகளுக்கு தந்தியடித்து வரவழைத்துவிடுகிறேன்; உடனே எல்லோருமாக நேரில் சென்று

பார்த்து முடித்துவிடுவோம்; மனப்பொருத்தத்திற்கு மிஞ்சியதுதான் ஜாதகமும் மற்றதும். ஆகையால் ஜாதகத்தைப் பற்றிய பேச்சே எடுக்கவேண்டாம். அவன் இஷ்டப்பட்டதே போதும். குறுக்கே பேசாதேம்மா... தம்பீ இனி நீ கவலையற்று நிம்மதியாக இரு. அம்மாவிடம் நீ மனங்கோணும்படி நடக்காதே—என்று எச்சரித்துவிட்டுத் தனக்கு ஜோலியிருப்பதால் சென்றுவிட்டான்.

இதற்குமேல் தாமோதரனால் எதுவும் பேச இடமில்லாது போய்விட்டதால் தன் விடுதிக்குச் சென்று உடனே இந்த சந்தோஷமான விஷயங்களை டெலிபோனில் உஷா தேவியிடம் சொல்லிப் பூரித்தான். அதுவே அவனுக்குப் பேரானந்தமாயிருந்தது

## 12

உலகத்திலேயே தன்னைவிட அழகும் தன்னைவிட செல்வச் செருக்கும் உடையவர்கள் கிடையாது என்கிற எண்ணம் பரிபூர்ணமாயிருக்கும் ப்ரக்ருதியாகையால் ஸ்ரீமதி உஷா தேவி எந்த அம்சத்திலும் தனித்த முறையிலேயே நடந்து வந்தாள். தன் விவாக விஷயத்திலும் தன்னுடைய சுயம்வரமே பலித்துவிட்ட குதூகலத்தில் மகத்தான சந்தோஷத்துடன் துள்ளுகிறாள். இன்று தன்னைப்பார்க்க தாமோதரன்வீட்டவர்கள் வரப்போகிறார்களென்பதையறிந்து வீட்டை தேவேந்திர பட்டணத்திற்கு ஒப்பாக அலங்காரம் செய்ததோடு வருகிற விருந்தினர்களை உபசரித்துச் செய்யவேண்டிய முறையை வெகு சிறப்பாக நடத்திப் புகழ்பெற எண்ணி ஜவுளிக்கடையை ஒன்று அப்படியே கொண்டு வைத்துவிட்டாள். வருகிறவர்கள் எத்தனை பெயர்களோ அத்தனைபேர்களுக்கும் புடவைகள், ரவிக்கைகள், அங்கவஸ்திரம், ஸூட்டு, முதலிய ரகம் வாரியாகக் கொடுத்துப் பெருமை அடைவதற்காகத் தயார் செய்துவிட்டாள். தன்னுடைய செல்வத்தைப் பிறர் அறியும் நோக்கத்துடனும் இம்மாதிரி

செய்தாள் என்றால் மிகையாகாது தனது சினேகிதைகள் உறவினர்கள் எல்லோருக்கும் அழைப்புகள் அனுப்பி வரவழைத்தாள்.

மாலை 4 மணிக்கு ஸ்ரீதரன் உள்பட பலரும் வருவதாக செய்தி முன்பே தெரிந்திருந்ததால் நான்கு மணியை எதிர் பார்த்திருந்தார்கள். உண்மையில் உஷாதேவியின் அழகை வர்ணிக்கவேமுடியாது. அத்புதமான வசீகரமும் தனித்த ஒரு கவர்ச்சியும் கொண்டு ஜகஜ்ஜோதியாய் ப்ரகாசிப்பதைக் கண்டால் எத்தகைய இளம் வாலிபர்கள் மனமும் சற்று கலங்கத்தான் செய்யும் என்றால் மிகையாகாது. அதிலும் இன்று ப்ரத்யேகமாய் செய்துகொண்டுள்ள செயற்கை யலங்காரத்தின் சிறப்பால் கந்தர்வ கன்னியோ தேவமாதோ, வனமோகினியோ என்ற ப்ரமிப்புடன்தான் காட்சியளித்தாள்.

கெடுவான் கேடு நினைப்பான்...காமாலைக்காரன் கண்ணுக்கு எல்லாம் மஞ்சளாகத்தான் தோன்றும்...குற்ற முள்ள நெஞ்சு குருகுரு என்னும்...சந்தேக நெஞ்சமும் சளிபிடித்த மூக்கும் சும்மா இருக்காது...என்பதுபோன்ற பழமொழிகள் சும்மா பிறக்குமா...கட்டை ப்ரம்மசாரியான தன் அண்ணன் உஷாதேவியைப் பார்த்தால் ஒருவேளை அவன் மனமும் மாறி அவளிடம் ப்ரேமை கொண்டுவிட்டால் என்னசெய்வது என்கிற ஒரு குறும்புத்தனமான எண்ணம்தாமோதரனின் கள்ள மனத்தில்தோன்றியதால் தானும்கூடவே அவர்களுடன் போகவேண்டுமென்று தீர்மானித்துத் தன்னை ப்ரமாதமாய் அலங்கரித்துக்கொண்டு கிளம்பினான்.

முதலில் அவன் வருவதாக எண்ணாததால், மற்றவர்கள் கிளம்பியபோது தானும் வருவதாகக் கூடவே முந்திக்கொண்டதைக் கண்டு அவனுடைய சகோதரிகள் இருவரும் நகைத்தார்கள். மகாவிவேகியான ஸ்ரீதரனுக்கு

இச்செய்கையின் உண்மை பளிச்சென்று மனத்தில் தோன்றி உள்ளுக்குள் சிரித்துக்கொண்டான்.

குறித்த நேரத்திற்கு எல்லோரும் மங்களகரமான தாம்பூல சகிதம் கிளம்பினார்கள். உஷாதேவியின் பங்களாவின் முன்புறத்துத் தோட்டத்தின் அழகையும் அதை அலங்கரித்துள்ள அபூர்வ சிங்காரத்தையுங் கண்டு எல்லோரும் ப்ரமித்தார்கள்.

வண்டிகள் வந்து நின்ற உடனேயே உஷாதேவியே தங்கப் பன்னீர்ச் சொம்பினால் பன்னீரைத் தெளித்துக் கொண்டே, "வரவேணும்! வரவேணும்" என்று தானே வரவேற்புக்கூறினாள். உஷாவின் தாயாரும் வெகு உத்ஸாகத்துடன் தடபுடல் அலங்காரவதியாய் வரவேற்றாள்.

தாமோதரனின் சகோதரிகளாகிய இந்திரா, சந்திரா, இருவருக்கும் உள்ள சந்தோஷமும் வரவேற்பைக் கண்டதும் அபாரமான மதிப்பும் சொல்லத்திறமற்றுவிட்டது. வெகு அடக்கமும் மரியாதையும் உள்ள கமலவேணியம்மாளுக்கு இந்த ப்ரமாத வரவேற்பினால் எத்தகைய அதிசயமோ ப்ரமிப்போ தோன்றவில்லை. டாக்டர் ஸ்ரீதரனுக்கு இந்த தடபுடல் அட்டகாஸங்களும் வரவேற்பும் ட்ராமாவைப்போல் நாட்டியத்தைப்போல் தோன்றியதே யன்றி சாதாரண குடும்பத்திற்குள்ள கண்ணியமும் கம்பீரமும் காண்பதாகத் தோன்றவில்லை. பன்னீர் தெளிக்கும் பெண்தான் கல்யாணப்பெண் என்று ஒருவருக்கும் தெரியாதாகையால் அந்தப் பெண்ணின் செய்கைக்கு கமலவேணியும் ஸ்ரீதரனும் 'சற்றும் அடக்கமற்ற அதீத முறையில் செல்லும் பெண் எவளோ ஒருத்தி' என்று எண்ணினார்கள்.

இதற்குள், "ஹல்லோ தாமோதரன்"...என்று கை குலுக்கி தாமோதரனை வரவேற்றபோது எல்லோருக்கும் சந்தேகம் உண்டாகி விழித்தார்கள். அதேசமயம் தாமோ



பக்கம் 80

பக்கம் 113



தான்; அம்மா... அண்ணு... இவர்கள் தான் ஸ்ரீஉஷாதேவி; நான் தெரிவித்த நாரீமணி; நீங்கள் பார்க்க வந்துள்ள பெண்மணி..என்று அடுக்கும்போது, உஷா, நமஸ்காரம்.. நமஸ்காரம்...என்று எல்லோரையும் தானே வரவேற்று அழைத்துச் சென்ருள்.

கல்யாணப் பெண்ணே முதல்முதல் வரவேற்பது என்கிற அதீத நாகரீகத்தைக் கண்டதும் ஒவ்வொரு வரும் உள்ளுக்குள் வியப்புற்று ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

இதுவரையில் எத்தனையோ படித்த மகாமேதைகள் வீட்டுக் கல்யாணங்களை எல்லாம் பார்த்திருக்கிரோம். அஸல் மேல்நாட்டவர்களைப்போன்ற பழுத்த நாகரீகப் பேர்வழிகளின் வீட்டுக் கல்யாணங்களையும் பார்த்திருக் கிரோம். கல்யாணமாகிய பிறகு வரவேற்பு நடத்துகை யில் தம்பதிகள் வழியிலேயே நின்று கைகுலுக்கிப் பல் லிளித்து கரங்குவித்துப் பலவிதமாகச் செய்வதைப் பார்த்திருக்கிரோமே யன்றி இம்மாதிரி கல்யாணத்திற் காகப் பெண்பார்க்க வரும்போதே கல்யாண பெண்ணே இப்படி வரவேற்புக் கூறுவதும் கைகுலுக்குவதும் அடே யப்பா! விபரீத நாகரீகமாயிருக்கிறதே! கல்யாண வயது வருவதற்கு முன்பே பழயகாலத்தில் விவாகத்தைச் செய்துவிட்டதே சகல அம்சங்களிலும் வெகு மேன்மையா யிருக்கிறது. வயது வந்த பிறகுதான் விவாகம் செய்ய வேண்டும் என்கிற காலதேச வர்த்தமானத்தை யொட்டி சட்டம் வந்துவிட்டது என்ருலும் அந்தந்த வயது திட் டத்தின்படியாவது விவாகத்தைச் செய்தால்தான் பெண் களுக்கு சகல விதத்திலும் நன்மையே யன்றி வீணுக வயதை வளர்த்தி வேடிக்கைப் பார்க்கும் மிகக் கொடுமை யான செய்கையினுல் எத்தனை இடங்களில் எத்தனை பெண்களுடைய வாழ்க்கையே பாழாகிவிடுகிறது. நிரப ராதிகளான பெண்களாயினும் அனுவச்யமான அபவா

தத்திற்குக்கூட ஆளாகி அதனால் வாழ்க்கையில் களங்கம் உண்டாகிவிடுகிறது. இம்மாதிரி பெற்றோர்களே வைத்து வேடிக்கைப்பார்ப்பது தீமையிலும் தீமையாம். கல்யாணம் செய்யாமல் வைத்துள்ள பெண்களை சரியான கட்டு திட்டங்களுடன் பெற்றோர்கள் சில இடங்களில் கண் காணிப்புடன் பார்க்காது விட்டுவிடும் பரிதாபத்தினால் அப்பெண்களின் பெயருக்கு எத்தனை களங்கமும் அவ மானமும் உண்டாகிவிடுகின்றன. இப்படியொரு பெண் களைப் பழக்கிவிட்டால் குடும்பத்தில் கண்ணியம் எப்படி உண்டாகும். பண்டயகாலத்தின் பெண்மணிகளின் புக ழும் ஒழுக்கமும் எப்படி இவர்களிடம் வரும்? இதென்னக் கூத்து!—என்று கமலவேணியம்மாள் தனக்குள் எண்ண மிட்டவாறு தம்பித்துக் கம்பம்போல் நின்றுவிட்டாள்.

பெண்களும் இப்படியே ஆச்சரியத்தில் மூழ்கி நிற் பதை ஸ்ரீதரன் பார்த்தான். இந்த ப்ரக்ருதிகளை அவர்கள் என்ன நினைப்பார்களோ என்று எண்ணி இவர்களையும் அவர்களையும் மாறிமாறி பார்த்து இருதிரத்தினர்களின் தராதரத்தை மனத்திற்குள் எண்ணி வியந்தவாறு உள்ளே அழைத்துச் சென்றான்.

அந்த வீட்டிலுள்ள அலங்காரங்களையும் தடபுடல் களையும் செய்துள்ள நூதன வேலைப்பாடுகளின் விசித் திரங்களையுங்கண்டு மிகமிக ப்ரமிப்படைந்த எல்லோரு டைய மனத்தின் ப்ரமை அடங்குவதற்கே சில நிமிஷங்க ளாகியது. சிட்டுக் குருவிபோல் உஷாதேவி பாய்ந்து பாய்ந்து டிப்பன் காப்பி பழவகைகள் முதலியவைகளைக் கொண்டுவைத்து உபசரிக்கும் அழகைக்கண்டு தாமோ தரன் தன்னை மறந்து பூர்த்து ஆனந்தப்பதுமைபோலாகி விட்டான் என்றால் மிகையாகாது.

உஷாவின் தாயாரும் இதே தடபுடலில் கலந்து கொண்டு உபசரிக்கிறாள். ஆனால் கமலவேணிக்கு ஏதோ கூச்சமும் ஒருவிதமான வெறுப்புந்தான் தோன்றியது.

போயும்போயும் ஒரே ஆடம்பரத்தில் டம்பாச்சாரி அட்டகாஸத்தில் இறங்கிவிட்டானே! இவனுக்கு நன்மை தீமை எப்படித் தெரியும்?—என்ற கவலையே உண்டாகித் தன் மகனையே பார்க்கிருள். அந்தம்மாள் மட்டும் எதுவும் சாப்பிடவில்லை. அவர்களுடைய வாழ்க்கை வேறுவிதமாக மாறிவிட்ட பிறகு அவள் வெளி நாட்டத்தையே அதிகமாய் வெறுத்துவந்தவள். உள் ரகஸியத்தைப் பிறர் அறியமாட்டார்களாகையால் இந்தம்மாள் கலகலப்பற்ற மனுஷி, தனிப்பட்ட ப்ரக்ருதி, உம்முணு மூஞ்சி என்றெல்லாம் சொல்பவர்களும் உண்டு. அதேபோலத்தான் உஷாவின் தாயாரும் உஷாவும் நினைத்து முகத்தைச் சுளித்தார்கள்.

கல்யாணம் ஆகிவிட்ட பிறகு மாமியாரைப் பற்றிக் கவலை ஏது? அவள் கிள்ளுக் கீரைக்குச் சமம்தானே! அதுமட்டுமா! சம்பளம் இல்லாத வேலைக்காரிக்குச் சமமாயிருக்கும்படி நடத்தும் அக்ரமத்தையும் உலகில் பார்க்கவில்லையா! பெத்து வளர்த்து ஆயிரம்பாடும் பட்டு சகல கஷ்டங்களையும் தாண்டிப் பின் மகனுக்கு விவாகத்தைச் செய்துவைத்து நல்ல நிலையில் வாழ்க்கை நடத்துவதற்கு ஆசைகொண்டு சாதக பக்ஷிபோல் பெற்றோர் பார்த்திருக்கும்போது ஒரு பொட்டு தண்ணியில்லாத பாலைவன. வாழ்க்கையை உண்டாக்கப் பல குடும்பங்களில் மருமகளே அதற்கு முக்ய தெய்வமாகி விடுகிருள். இது உலகில் தினம் பல இடங்களிலும் பார்க்கும் அதிசயமாகும்.

கல்யாணமாகிய பிறகு தாமோதரனே இங்கு தங்கிவிடப் போகிருன். அவர்களைப் பற்றிக் கவலை ஏது; என்கிற முடிவு உஷாவின் தாயாரைத் தேற்றி ஆறுதலளித்தது. கமலவேணியம்மாளுக்கு இந்த சம்மந்தத்தைப் பற்றிய எந்த விவரமும் தெரியாதாகையால் தன் மூத்த மகனே பேசட்டும் என்றிருந்தாள்.

ஸ்ரீதர:—உஷாதேவி! உங்களைப்பற்றி என் தம்பிக்குத்தான் ப்ரதான இஷ்டம் உண்டாக வேண்டுமேயன்றி

நாங்கள் சொல்வதற்கு ஒன்றுமில்லை. உங்கள் தகப்பனர் எங்கே...ஊரிலில்லையா...

உஷா:—அதைப்பற்றி மட்டும் கேட்காதிருந்தால் மிகவும் சந்தோஷமாக இருப்பேன். வேண்டுமானல் என் தாயாரிடம் தனித்துப்பேசலாம்...என்று கூறி தாயாரிடம் ஜாடை செய்தாள். ஸ்ரீதரன், கமலவேணி, உஷாவின் தாயார் மூவரும் தனி இடத்திலமர்ந்தார்கள்.

கமல:—உங்கள் கணவருக்கு ஏதாவது உத்யோகம் உண்டா அல்லது மிராசுதாரரோ!

சுந்தராம்பாள்:—அம்மணீ! இக்கேள்விக்கு நான் பதில் சொல்ல மிகவும் வருத்தப்படுகிறேன். என் கணவரை நான் பரிபூர்ணமாக நம்பினேன். அவர் என்னைக் கை விட்டுவிட்டார்...டாக்டர் ஸ்ரீதரன் ஏழைப்பங்காளன், சமூக சீர்திருத்தவாதி என்று மருமகப்பிள்ளை அடிக்கடி சொல்வார்கள். இத்தகைய வீரர்களினுல்தான் புத்தி கெட்ட ஆண்பிள்ளைகளின் துர்ப்புத்தி மாறி நல்லநிலைமை உண்டாக வேண்டும்...ஏதோ போதாக் காலக் கொடுமையினுல் எங்கள் மூதாதைகள் தேவதாசி வகுப்பில் பிறந்துவிட்டார்கள்...

என்றதைக் கேட்டதும் இருவரையும் தூக்கிவாறிப் போட்டது; தங்களைச் சமாளித்துக்கொண்டு வெகு ப்ரயத்தனத்துடன் உட்கார்ந்திருந்தார்கள். சுந்தராம்பாள் மேலும் பேசத் தொடங்கினுள்.

என் கொள்ளுப்பாட்டிமுதல் இந்த வம்சத்தில் பிறந்ததை எண்ணி வெறுத்து குலமகளைப்போல் கல்யாணம் செய்து கொண்டே சந்ததி வ்ருத்தியானவர்கள். என் பாட்டி, என் தாயார், நான், மூவரும் உயர்ந்த குலமகனையே மணந்துகொண்டு ஒழுங்காக இருப்பவர்கள். இதோ! புகைப்படங்கள் பாருங்கள் என்று உள்ளிருந்து

ஒரு புகைப்பட ஆல்பத்தைக்கொண்டுகாட்டினுள். என்ன ஆச்சரியம்! என்ன அதிர்ச்சியான சம்பவம்! இந்தம்மாளை மணந்துள்ள பேர்வழி வேறு யாருமில்லை. தன் பிதாவே சாக்ஷாத்தாக நிற்பதைக்கண்டு ஸ்ரீதரன் மின்ஸாரம் தாக்கியதுபோல் தாக்கி தவிக்கிருன்.

கமலவேணிக்கோ மூச்சே நின்றுவிடும் போலாகிவிட்டது...ஐயோ! இவர் என் கணவராயிற்றே! அவருக்குள்ள பலலீலைகளில் இதுவும் ஒன்று...என்று நினைக்கும் போதே முன்பு வந்ததுபோன்று அதிர்ச்சியினுல் மயக்கமே உண்டாகிவிட்டது. இதைக்கண்ட சுந்தராம்பாளுக்கு ஒன்றும் தெரியாமல் மிறண்டுபோய், என்ன விஷயம்! டாக்டர்! ஏன் அந்தம்மாளுக்கு இப்படியாகிவிட்டது? நான் தேவதாசி என்பதனுலா...என்று பதறியவாறு கேட்டாள்.

**ஸ்ரீதர்:**—தாயே! சற்று நிதானியுங்கள். என் தாய் அளவற்ற கஷ்டங்களை வாழ்க்கையில் அனுபவிப்பதற்கே வரம் வாங்கிக்கொண்டு பிறந்துள்ளவர்கள்; இந்த இடத்தில் இத்தகைய சம்பவம் உண்டாகும் என்று நான் கனவில்கூட கருதவில்லை; அவர்களும் அப்படியே. தாங்கள் தேவதாசி என்பது ஒருபுறம் இருக்கட்டும்; இதோ! இந்த மனிதர் வேறுயாருமில்லை. எங்களுடைய தகப்பனுராகிய கொடிய மனிதனே யாகும்...என்றதைக் கேட்டு தன்னை மீறிய அதிர்ச்சியினுல், என்ன! என்ன! இவர் உங்கள் பிதாவா! உஷா உங்கள் சகோதரியா!... உஷாவின் பிதாவா!...இந்த உத்தமியின் வாழ்க்கைச் சக்கரத்தை முறியடித்த பாவி நானு? டாக்டர்! முதலில் நீங்கள் இந்தம்மாளை வீட்டிற்குக் கொண்டுபோய் சிகிச்சை செய்யுங்கள். எனக்கும் இப்போது மயக்கம் வந்துவிடும் போல் இருக்கிறது. தனக்கு விவாகமே ஆகவில்லை, லக்ஷாதிபதி, பெரிய உத்யோகஸ்தன்...அப்படி இப்படி என்று சொல்லி ப்ரமாணம்செய்து என்னை மணந்து நான்கே வருஷங்கள் என்னுடன் வாழ்க்கை நடத்திய

பிறகு மனிதனே மறைந்துவிட்டார். எத்தனை ப்ரயத்த னப்பட்டும் அம்மனிதன் மறுபடியும் வராததால் என் குழந்தையின் க்ஷேமத்தைக் கோரி நான் பெரிய பாடகி யாகிக் கச்சேரிகள் செய்தும் சினிமாக்களில் நடித்தும் ஏராளமாய்ச் சம்பாதித்துக்கொண்டு பெண்ணை மட்டும் படிக்கவைத்து வ்ருத்திக்குக் கொண்டுவந்தேன். நாங்கள் சமீபகாலத்தில் தான் இந்த ஊருக்கு வந்தோம். இந்தப் பாவியை நான் மணந்தது துருநகர் என்ற ஊரிலாகும். பிறகு சில வருஷத்தில் ஏதோ கொலை கேஸில் அகப்பட்டு தண்டனை யடைந்து விட்டதாகக் கேள்விப்பட்டு அதோடு அம்மனிதனையே மறந்துவிட்டேன். நாளைவரையில் குழந்தை உஷாவுக்கு இந்த விஷயங்கள் தெரியாது. நான் சொல்லவில்லை. அண்ணனை தங்கை மணப்பது என்கிற அக்ரமத்திலும் நாங்கள் சிக்கி உழலவேண்டாம். நீங்கள் குழந்தையிடம் ஒன்றுமே சொல்லவேண்டாம்......

ஸ்ரீதர:—தாயே! இத்தனை அன்பு செலுத்தியுள்ளவர் களின் வாழ்க்கைப் பிணைப்பு அறுபட்டுத் தேறுவதற்கு முக்யமான விஷயங்களைச் சொல்லாவிட்டால் என் தம்பி தேரமாட்டான். உங்கள் மகளும் தேரமாட்டார்கள். ஏதோ! கண்மூடித்தனமாய் விவாகத்தைப் பலரறியச் செய்யும் சமயம் இந்த வெட்கக்கேட்டை பலர்முன்பு வெளி யாக்காமல் பகவான் இப்போது தெரிவித்து நம்மைக் காப் பாற்றினரே! இதுவேபோதும். இத்தகைய நிலையை நமக்கு பகவான் காட்டாதிருந்தால் நம்கதி என்னவாகும்! நீங்கள் பயப்படவேண்டாம்.

என்று டாக்டர் சொல்லும்போது சுந்தராம்பாள் மிகவும் கண்ணீர் பெருக டாக்டரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு அவர்களை முதலில் எழுந்து போய்விடும்படி வேண்டிக்கொண்டாள். கமலவேணியம்மாளின் நிலை மையை உத்தேசித்து டாக்டர் தன் சகோதரிகளுடன் வீட்டிற்குச் சென்று விட்டதைக் கண்ட தாமோதரனுக்கு மகத்தான கோபம் வந்துவிட்டது. தன்னை வேண்டு

மென்று ஏமாற்றிவிட்டுச் சென்றிருப்பதாக ஒரு ஆவேசம் உண்டாகியதால்...உஷா! நீ வருந்தாதே! நான் வீட்டிற்குப் போய் என்ன விஷயம் என்று கண்டுகொண்டு வருகிறேன். இந்த விஷயத்தில் நான் சும்மா இருக்கப் போவதில்லை. என்று கூறிக்கொண்டே மிகவும் ஆத்திரத்துடன் எழுந்து சென்றான். உஷா தேவிக்கு இது காறும் இருந்த சந்தோஷம் திடீரென்று மாறிப்போய் அவளுக்கு ஒன்றுமே புரியாத ரகஸியமாய் பூகம்ப அதிர்ச்சிபோல் தோன்றி வாட்டத் தொடங்கியது.

——○——

## 13

என்ன ஆச்சரியம் அண்ணா! நம் பிதாவின் செய்கை இத்தனை மோசமானதா! எங்களால் நம்பவே முடியவில்லையே...அம்மாவின் நீங்காத வருத்தத்தின் காரணம் இப்போதல்லவா தெரிகிறது....என்று வியப்பே வடிவமாய் இந்திராவும் சந்திராவும் ஸ்ரீதரனிடம் கேட்டார்கள்.

**ஸ்ரீதர்:**—(சிரித்துக்கொண்டே) உம். இந்த விஷயம் உங்களுக்குப் புதிதாக இருப்பதால் ப்ரமாதமான ஆச்சரியப்படுகிறீர்கள். எனக்கு இந்த விஷயம் ஆறிப்புளித்துப் போய் விட்டதேயாகும். சொன்னால் வெட்கக்கேடு: கூடுமான வரையில் நான் அவரால் நிராதரவான நிலையில் உள்ள அனாதைகளுக்கு உதவியும் செய்து வருகிறேன். இந்தம்மாள் தேவதாசி குலத்தவளாகையால் பரம்பரை செல்வம் சிறிதிருந்திருக்கவேண்டும். கச்சேரி செய்தும் சினிமா நடித்தும் செல்வச் சீமாட்டியாயிருக்கிறாள். நான் முதலில் வாசலில் அந்த உஷாவைப் பார்த்தபோதே என்னை அறியாத சந்தேகம் தட்டியது. நம் தாமோதரனின் சாயலே இவளுக்கும் இருக்கிறதே. சந்திராவைப் போலவே இவளும்பேசி குறுகுறுப்பாய்ப் பார்க்கிறாளே... என்றுளண்ணி இமை இசைக்காமல் பார்த்தேன்; அதீதமான நாகரீகத்தையும் நடத்தையையும் நான் வெறுத்தேன். இதை எப்படி தட்டிக்கழிக்கப் பார்க்கலாம்?என்று

யோசித்தேன். கடவுளே என் பங்கிலிருந்து ஒரேயடியாக மாற்றிவிட்டார். அம்மாவுக்கும் அது மிக சந்தோஷமாகி விட்டது. தம்பி வந்த பிறகல்லவா இருக்கிறது விஷயம்.

இந்தி:—என்ன அண்ணு! நம் பிதாவின் நடத்தை அத்தனை மோசமானதாகவா இருந்தது.

சந்தி:—இதென்ன கேள்வி இந்திரா! மோசமானதாக இல்லை என்ருல் இத்தகைய விதி அவருக்குவருமா! ஏதோ நாம் செய்த பாக்யம் நம் மாமியார் வீடுகளில் நாம் கவுரவமாக வாழ்கிருேம். அதற்கும் அண்ணுதான் காரணம்; பெரிய அண்ணுவுக்குள்ள பாரபுத்தியும், கவுரவமும் படிப்பும், சாந்தமும் சின்னவனுக்கு இருக்கிறதா! அதுவும் குடும்பத்து சாபந்தான் என்று சொல்லும்போது, "குடும்பத்து சாபமாம் சாபம்! எந்த அதிசயமான சாபத்தைக் கண்டு இப்படி எல்லோரும் அத்தனை பெரியவர்களின் முகத்திலடித்தது போன்று அவமானப் படுத்திவிட்டு எழுந்துவந்தீர்கள். வேண்டுமென்று என்னை மட்டந்தட்டி ஏளனம் செய்வதற்காகவா நீங்கள் வந்தீர்கள். அவர்களுடைய நாகரீகத்தைக் கண்டு ப்ரமித்தபோதே நான் நினைத்தேன்..."

"தம்பீ! பதராதேப்பா! நாகரீகமோ! படாடோபமோ! எதுவாயினும் சகித்துக்கொண்டு உன்னிஷ்டத்தை நிறைவேற்றவே நினைத்தேன். பிறகு அவர்கள் தேவதாசி குலத்தவர்கள் என்று தெரிந்தது. அதைக் கூட உனக்காகப் பொருத்து உன் சந்தோஷத்தையே நிறைவேற்ற எண்ணினேன். ஆனல் உன்னுடன் பிறந்த சகோதரியையே நீ மணப்பதென்ருல் அது எந்த தெய்வத்திற்கு அடுக்கும் தம்பீ! உஷா இனி உன் சகோதரி, உன் ப்ரேமைவல்லி இல்லை! இதோபார் புகைப்படங்கள்! என்று அழுத்தமாகக் கூறியபடியே ஆல்பத்தைக் காட்டினுன்.

என்ன! உஷா என் சகோதரியா! என்ன அண்ணு உளருகிருய்...என்றபடியே ஆல்பத்தைப் பார்த்தான்.

தன் பிதாவின் பலவிதமான படங்கள் அதில் அலங்கார மாயிருப்பதையும் உஷா சிறு குழந்தையாயிருக்கையில் அதை அவர் கையில் வைத்துக்கொண்டுள்ள புகைப் படத்தடியில் "என் கண்மணி உஷாவின் பிறந்த நாள் இன்று; அவள் சகலமங்களத்துடனும் வாழவேண்டும்... என்று அவர்கைப்பட எழுதியிருக்கும் எழுத்துக்களையும் பார்த்த தாமோதரனுக்குத் தன்மீது இடிஇடித்தது போலாகிவிட்டது.

தன் பிதாவின் புகைப்படங்கள் வீட்டிலுள்ளதை எல்லாம் இதோடு ஒப்பிட்டுப் பார்த்தான். அவருடைய எழுத்துக்களை எல்லாம் சேர்த்துப் பார்த்தான். இன்னது சொல்வது செய்வது என்பதே தெரியாமல் தடை கட்டிய நாகம்போல் தர்பித்து நின்றுவிட்டான். திரும்பத்திரும்ப அவைகளை உற்றுஉற்றுப் பார்த்தான்...உஷா என் சகோ தரியா!...உஷா ஒரு தேவதாசியின் மகளா?...என்கிற வார்த்தைகள் அவன் இதயத்தில் மாறிமாறி ஒலித்து இம்ஸைசெய்து வாட்டுகின்றன...சிலவினாடிகள் ரௌத்ரா காரமான நிலைமையில் மவுனமாக இருந்தவன் திடீரென்று தன் அண்ணனை நோக்கி, அண்ணா! இவைகளெல்லாம் உண்மையான விஷயமா...என்று அசட்டுக் கேள்வியை முறட்டுத்தனமாகக் கேட்டான்.

ஸ்ரீதரன் சிரித்துக்கொண்டே! தம்பீ! இதென்னக் கேள்வியப்பா! நம்மைவிட்டு நம் தந்தைபிரிந்து எத்தனை யோ நாளாகிவிட்டது. அவர் இங்கு இருந்தகாலத்தில் இப்படங்கள்எடுத்திருப்பதைஇதோ ப்ரத்யக்ஷமாக இவை களே காட்டுகின்றன. இதை யாராவது மாற்றவோ சூது வாதுகள் செய்யவோ முடியுமா! யோசித்துப்பாரு தம்பீ! இன்னும் வேணுமானால் அப்பா எழுதிய பழய கடிதங்கள் கிடக்கின்றனவே! அவைகளையும் ஒத்திட்டுப்பாரு...இனி அனாவச்யமாய் இவ்விஷயத்தில்சர்ச்சை செய்வது மிகவும் கேவலமாகிவிடும். எந்த ஒரு கீழ் ஜாதியில் கூட தன் சகோதரியைத்தான் மணப்பது என்ற மிருகத்தன செய்

கையை இதுவரையில் கண்டதில்லை. எல்லாம் நல்லதற்கே என்கிற பழமொழிப்படி சகலத்தையும் நன்மைக்கென்றே நீ நம்பி மனத்தைத்தேற்றிக்கொண்டு சாந்தியை அடை. நம் தாயாரையும் சாந்தியடையச் செய்...கேவலமான மிருக வாழ்க்கை வாழ்ந்து கடைசியிலும் தன்னைத் தானே நாசமாக்கிக்கொண்ட நம் பிதாவின் செய்கையே என் மனத்தைக் கல்லாக்கி வைராக்ய நிலையில் நிறுத்தி விட்டது. அதைப் பின்னும் ஊர்ஜிதப் படுத்துவதற்காகவே இத்தகைய சம்பவங்களை பகவான் எனக்குக் காட்டி என்னை ரக்ஷிக்கின்றார் என்றுதான் நான் சந்தோஷப்படுகிறேன். தம்பீ! நாம் இங்கிருந்து புறப்படும்போது நீ என்னைப் பற்றி என்ன நினைத்தாய் என்பதை நானறியவில்லை என்றுதானே நீ நினைக்கிறாய்...அந்த தேவலோக ரம்பையைக் கண்டு நான் எங்கே மோகித்து சொக்கிப் போய் உனக்குப் பங்காளியாகி விடுவேனோ என்றல்லவா நீ நினைத்தாய்! தம்பீ! இந்த ஜென்மத்தில் எனக்கு பகவான் அத்தகைய புத்தியைக் கொடுக்கமாட்டார் என்று நினைக்கிறேன். அப்படி எனக்கு விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்று தோன்றுமானால் அப்போதும் இம்மாதிரி முறை தவறி நடக்க சத்யமாய் முன் வரமாட்டேன். இதை மட்டும் கடவுள் மீது ஆணையாக நம்பு....என்று உணர்ச்சி ததும்பக் கூறினான்.

ஆனால் தாமோதரன் எத்தகையபதிலும் சொல்லவே இல்லை. முகத்திலுள்ள கோபக்கனலும் ஏமாற்றத்தின் எதிரொலியும் மட்டும் மாறவே இல்லை. மறுபடியும் டாக்டரே பேசத் தொடங்கி, "தம்பீ! வாழ்க்கை என்பது ஒரு கப்பல்; அந்தக் கப்பல் சம்ஸார ஸாகரத்தில்போகும்போது எத்தனையோ அபாயங்கள் தோன்றி, கப்பல் உடையவும், ஆட்டங் கொடுத்துத் தவிக்கவும், கவிழ்ந்து போகவும், மலைகளில் மோதுண்டு தபிக்கவும், நீர்வாழ் துஷ்ட ஜந்துக்களினால் விபத்துக்குளாகியும்,பலபல விதங்களில் சிக்கினாலும் அதை ஜெயித்து நீந்தி யடித்துக்கொண்டு அக்கரை செல்பவனே சரியான மாலுமி; அவனே சாந்தியின் சிக

ரத்தைஎட்டிஆனந்தானுபவம்செய்யமுடியும். அதைவிட்டு சிறிய சிறிய விஷயங்களுக்கெல்லாம் மனத்தை பறிகொடுத்து அலட்டிக்கொண்டால் வாழ்க்கையில்முன்னேறுவது எப்படியப்பா! இந்த சம்பவம் வாழ்க்கைப்பாதையில் ஒரு படிப்பிணையைக் கட்டியதாக எண்ணவேணும். இம்மாதிரி விசித்திரங்கள் உலகத்தில் எல்லோருக்கும் நடக்காது. எங்கோ ஆயிரத்தில் ஒரு இடத்தில்தான் நடக்கும். க்ரகண மூளி எங்கேயோ ஒருவருக்குத்தான் வரும் என்பார்கள் பார், அதுபோல் நம் குடும்பத்தில்தான் இந்த விநோத சம்பவம் நடந்திருக்கிறது. இதை எண்ணியே வீணகக் கவலைப்படாதே.

இந்த காரணத்திற்காக விவாகம் தடைபட்டுவிட்டது என்பது பிறருக்குச் சொல்லவேண்டாம். அவர்கள் தேவ தாசிகள் என்பது உலகப்ப்ஸித்தம். அந்த ரகஸியம் தெரியாமல் முதலில் விசாரித்தோம், இந்த விவரம் தெரிந்ததும் நிறுத்திவிட்டோம் என்று சொன்னல் பொருத்தமாக விருக்கும். இதைப்பற்றிக் கவலைப்படாதே. வேறு உனக்குப் பிடித்தமான பெண்ணைச் சொல்லு; உடனே ஏற்பாடு செய்கிறேன், இந்திராவும் சந்திராவும் ஊருக்குப் போவதற்குள் இதை முடித்துவிட்டுப் போகலாம். இன்று பூராவும் நீ யோசனைசெய்து பதில்சொல்லு...என்றுகூறினன்.

அதேசமயம் டாக்டருக்கு அவசரமான டெலிபோன் அழைப்பு வந்ததால் பரபரப்புடன் எழுந்து சென்றுவிட்டான். அதே சமயம் தாமோதரனுக்கும் டெலிபோன் வந்தது; உடனேசென்றுபேசத்தொடங்கினன்...ஹலோ ...யாரு...உஷாவா......

உஷா:—ஆம் அண்ணு! நமஸ்காரம்...

தாமோ:—இதென்ன உஷா...

உஷா:—என்னவா! இன்னும் புரியவில்லையா! பழய சகாப்தம் முடிவடைந்துவிட்டது...நான் தேவதாசி வகுப்

பில் பிறந்துவிட்டாலும் என் தாயின் சில குணத்திற்கும் மாசுமருவற்ற தூய வாழ்க்கைக்கும் கட்டுப்பட்டவள். என்னுடைய வாழ்க்கை ரகஸியம் நாம் ஒரே பிதாவின் மக்கள் என்ற பரம ரகஸியம் இந்த நிமிஷம் வரையில் எனக்குத் தெரியாதிருந்தது; இப்போதுதான் என் தாயாருக்கும் தெரிந்தது. இனி நம்முடைய வாழ்க்கைச் சகரங்களின் பாதையே வேறு விதமாக மாறிவிட்டது. இனி பழயபடியான நேசத்தில் என்னை நினைக்காமல் உங்களுடைய இரண்டு சகோதரிகளைப்போல் மூன்ருவது சகோதரியாய் என்னையும் எண்ணுங்கள் என்று கேட்பதற்காகவே கூப்பிட்டேன். பெரிய அண்ணுவுக்கு என் நமஸ்காரம் கூறுங்கள்...குட்பை...

**தாமோ:**— ஹல்லோ...ஹல்லோ...உஷா!...உஷாசடக்கென்று வைத்துவிட்டாளே...என்று வருத்தத்துடன் அப்படியே நாற்காலியில் சாய்ந்தான். அவன் இதயத்திலடிக்கும் புசல் காற்றிற்கு எல்லைவைத்துக் கூறமுடியாது போய்விட்டது.

---

## 14

**டா**க்டர் தொழில் செய்பவர்களுக்குள்ள தொல்லை சொல்லிமுடியாது. அதிலும், குடும்பத்திலும் பலபல சோதனைகள் உண்டாகுமானல் அவர்களுடைய மனத்தின் தவிப்புக்கு எதைத்தான் உபமானமாகக்கூறமுடியும்? டாக்டர் ஸ்ரீதரனுக்கு ஏற்கெனவேஉள்ளகுழப்பங்களுடன் இந்தப் புதிய தாக்குதலின் வேகம் உண்மையில் பலமான கவலையையேஉண்டாக்கிவிட்டது. இந்த அல்ப ஆசையை மிக ப்ரமாதமாக எண்ணியுள்ள தம்பியின் நிலைமை இந்த ஏமாற்றத்தினல் என்ன ஆய்விடுமோ! எப்படி எல்லாம் மாறிவிடுமோ! தாயாரின் கதி எந்தவிதம் முடியுமோ என்ற ஏக்கமும் கவலையும் சேர்ந்து பாதிக்கும் குழப்பத்துடன் டெலிபோனில் தெரிவித்த விலாஸத்திற்கு வந்து சேர்ந்தான்.

சுமார் 65 வயதுக்கு மேல்பட்ட வயோதிகர் ப்ரமாத மான ஜுரத்தினால் படுத்திருக்கிறார். வேறு டாக்டர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கிழவரின் கட்டிலுக்குச் சமீபத்தில் 25 வயது கூட நிரம்பாத ஒரு யுவதி கண்ணீர் பெருக நிற்கிறாள். இன்னும் சுற்றத்தார்கள் ஏராளமானவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள்...பெரிய டாக்டர் வந்துவிட்டார்...என்ற பரபரப்பு உண்டாகியதும் சிறிய டாக்டர்கள் இவனை யழைத்து சகலமான விஷயங்களையும் கூறி தாம் உபயோகப்படுத்தியுள்ள மருந்துகளையும் தெரிவித்தார்கள்.

கிழவருக்கோ ஜுரவேகத்தில் நினைவு தப்பி விட்டது. நிலைமை மிகவும் மோசமாகிவிட்டதால் வீடே அமளி குமளி படுகிறது. ஸ்ரீதரன் வெகு அக்கரையுடன் கவனித்து வேறு சில மருந்துகளை ஊசி மூலம் ஏற்றுகிறான். அவனுடைய காது சிலவற்றைக் கவனிக்கின்றது, கண் சிலவற்றை வெகு கூர்மையாகக் காண்கிறது; கருத்து ஒருபுறம் வேலை செய்கிறது.

அதே சமயம் வாசலில் ஒரு பிச்சைக்காரன்,

“காயமே இது பொய்யடா
காற்றடைந்த பையடா”

என்கிற பாட்டைப் பாடி பிச்சை எடுப்பதும் காதில் விழாமலில்லை. வீட்டுக்குள்ளேயே அடுத்த ரூமிலிருந்தும், தாழ்வாரம் கூடத்திலிருந்தும் இன்னார் என்ற விவரம் புரியாத நிலைமையில்...வயதாகிய கிழந்தானே?...ஏதோ மேல் கொண்டு செய்யவேண்டிய காரியத்தைச் செய்யவேண்டாமா...கிழவர் கைப்பெட்டி சாவி யாரிடம் இருக்கிறது... உயில் ஏதாவது எழுதியிருக்கிறாரா...பெண்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக வாயில் சொல்லிக் கொண்டிருந்தார்... அப்பவே எழுதிவைக்கும்படி சொன்னோம். கிழப் பிணம் கேட்கவில்லை. இப்போது வாயைப்

பிளந்துவிட்டால் இனி பணமேது. மண்ணேது...தர்மமாவது, தானமாவது. கர்மி கிழமா செய்யும்...நீங்களும் இப்படி குழம்பினால் எப்படி? பெட்டியை உடைத்துப்பார்த்து ஏதாவது கிடைத்ததை......இனி இந்தவீட்டில் எங்களுக்கென்னவேலை...என்று ஒவ்வொருவர் வாக்கிலும் ஒவ்வொரு விதவார்த்தை உதிருவது காற்றில் மிதந்து வந்து ஸ்ரீதரனின் காதுகளில் விழும்போது வியப்பும் திகைப்பும் கூறமுடியாது பொங்கியது.

இந்த நோயாளியின் முன்பு இத்தனைக் கும்பல் கூடி சத்தமிட்டுப் பேசுவதே கூடாது. தயவுசெய்து எல்லோரும் விலகிச் செல்லுங்கள். பகவானின் கருணை இருந்தால் குணமாவது நிச்சயம், வீணாக கலாட்டா செய்யாதிருப்பது நல்லது, என்று எல்லோரையும் விலகச் செய்துவிட்டு பலமான சிகிச்சைகள் செய்து வந்தான்.

பின்னும் சில நிமிஷங்களாயிற்று. கட்டிலின் பக்கத்திலேயே நின்று கண்ணும் கண்ணீருமாய் உருகும் பெண்மணியின் பிம்பம் ஸ்ரீதரனின் உள்ளத்தை உருக்கியது. அவன் தானாகவே பேசத் தொடங்கி, அம்மணீ! கண்ணீர் விடுவதில் உபயோகமென்ன! அதைவிட்டு பகவானை ப்ரார்த்தனை செய்யுங்கள். இவர் உங்களுடைப் பிதாவா, அல்லது பாட்டனாரா...என்று வினயமாய்க் கேட்டான்.

அந்தப் பெண் இதுவரையில் அடக்கிவைத்திருந்த துக்கத்தைத் தடுக்கமுடியாமல் பீறிக்கொண்டு வந்துவிட்டதால் விம்மி விம்மி அழுதுகொண்டு, "டாக்டர்! நான் பெண்ணாகவும் பேத்தியாகவும் இருந்திருந்தால் அதோ உள்ளிருந்து பலபல குரல்களால் பலபல வார்த்தைகள் வருகிறதே, அதில் என் குரலும் கலந்திருக்கும், உலகம் அவ்வளவுதான். இந்தக் கிழவரின் மனைவியாகிய பாபி நான்தான்...

என்ன! என்ன! மனைவியா! இவருக்கா...என்று அதிர்ச்சியுடன் கேட்டான்...ஆமாம் டாக்டர்! இவர்

ப்ரபல வக்கீல். என் பிதா பல குழந்தைகளையுடைய பெரிய குடும்பி. போதாத காலத்தின் விளைவால் ஒரு மகத்தான கொடிய வழக்கில் என்பிதா அகப்படுக்கொண்டார்! அந்த வழக்கில் இந்த மகான் ப்ரவேசித்து ஜெயத்தை வாங்கிக் கொடுத்து என் பிதாவை மீட்டுவைத்ததற்காகஇவர் என்னையே வக்கீலின்சன்மானமாக அபேக்ஷித்தார். வேறுவழி யின்றி என்பிதா கொடுத்துவிட்டார்! நான் குற்றம் செய் யாமலேயே குற்றவாளியாய் ஆயுள் தண்டனை யடைந்து இந்தக்கம்பியில்லாச் சிறையில் சுமார் 5 வருஷமாக அவ திப் படுகிறேன். பகவானுக்கு இதுகூட பொறுக்காமல் என்னை இன்னும் என்னென்ன செய்ய எண்ணுகிருரோ தெரியவில்லை. இந்த குடும்பத்தில் நான் ஒரு வேலைக் காரியைப் போல் இருப்பினும் என்பிதாவின் தவிப்பை உத்தேசித்தும் இவர் ஏதோ என்னிடம் பக்ஷமாக நடத்து வதாலும் நான் மூத்தவள் மக்களால் படும் துன்பங்களைச் சகித்துக்கொண்டு காலந்தள்ளுகிறேன்...டாக்டர்! இவர் பிழைப்பாரா மாட்டாரா! சொல்லிவிடுங்கள்......என்று தன்னை மீறிய துக்கத்துடன் கேட்டாள்.

மனங் குழம்பியவாறு டாக்டர் அவளைப் பார்த்து தாயே! நாங்கள் ஏதோ கற்ற வித்தையை புத்திசாலித் தனமாகக் கையாண்டு வரும் தொழிலாளிகளே யன்றி உயிரைக் கொடுக்கவோ! போக்கவோ சக்தி சர்வேச்வரன் கையிலிருக்கிறது. நீங்கள் பேசும் த்வனியிலிருந்து இவர் பிழைக்கமாட்டார் என்று தெரிந்த உடனே தற்கொலை செய்துகொள்ள துணிந்திருப்பதை அறிகிறேன். அம் மாதிரி வீணன காரியம் செய்துவிடுவதில் உங்களுக்கும் லாபமில்லை உலகமும் இதைவெறுத்து ஏளனம் செய்யும். இந்த எண்ணத்தைக் கட்டோடு விட்டு விடுங்கள். மனித வாழ்க்கையில் உள்ள அனேக படிப்பினைகளை அறியக் கூடிய அதிக சந்தர்ப்பம் பெற்றவர்கள் நாங்கள். இது போல் பல இடங்களில் பல விசித்திரங்களைக் கண்டிருக் கிருேம். தற்கொலை என்பது மகா பாதகம். தாயே! இப்படி எல்லாம் அசட்டுத்தனம் செய்யாதீர்கள்! என்று

உபதேசம் செய்யும்போது உஷாவின் நினைவு சடக்கென்று தோன்றியது.

எத்தனை விசித்திரங்கள் கண்முன்பு காண நேருகிறது. தன் மனமின்றி வலுக்கட்டாயமாய் மணந்த வெறுப்புக்காக இவள் தற்கொலையை நாடுகிருள்; தன்மனம் நிறைந்து காதலித்தது கைகூடாததால் அந்தப்பெண்ணின் கதி என்னவாகுமோ அதுவும் ஒருவேளை தற்கொலையில் வந்து பாயுமோ! என்று தோன்றும்போது மிகவும் பயமாகவே ஒரு அதிர்ச்சி உண்டாகியது. அம்மாதிரி தற்கொலைக்குத் துணிந்து ஏதாவது செய்துவிடுவாளேயானல் அந்த மகத்தான பாதகம் நம்மையும் நம் குடும்பத்தையுமல்லவா பாதிக்கும்? ஒரே மூர்க்கத்தனமாயிருந்த தம்பியின் நிலைமை எப்படியாகுமோ! என்கிற புதியபுதிய கவலைகள் வந்து சூழ்ந்துகொண்டு வாட்டத் தொடங்கியது.

இம்மாதிரி கிழட்டுப் பிணங்களுக்கு கல்யாண ஆசை எதற்கு பகவானே! இம்மாதிரி மனிதர்களைப் பாழாக்கும் நாசமாய்ப்போன ஆசையை ஏன் நீ படைத்து மக்கள் வாழ்க்கையைச் சிதறவடிக்கிருய்! என்று தனக்குள் மனத்தில் எண்ணியபடியே கிழவருக்குச் சரியானபடி சிகிச்சை செய்யும்போது இவனே ப்ரமிக்கும்படி கிழவருக்கு நல்ல குறிகள் காணத்தொடங்கியதைக் கண்டு சந்தோஷமடைந்தான். இந்த இளம்பெண்ணின் மஞ்சள் குங்குமம் நன்ருயிருக்கும் பொருட்டாவது இந்த கிழவன் பிழைத்து எழுந்தால்போதும் என்னு பலமான யோசனையுடன் மற்றும் சில ஊசிகளைக்குத்தி வயித்தியம் செய்யும் சமயம், அன்று காலையில் ஒரு பெரிய கனவான் கண்ணபிரான் தன் பெண்ணைப்பற்றிப் பேசியவர் இங்குமெல்ல வந்து, "எப்படி ஸார் இருக்கிருர். தேவலையா...உயிருக்கு பயமில்லையே" என்று கேட்டுக்கொண்டே வந்தார். இங்கு ஸ்ரீதரன் இருப்பதைக்கண்டு, பலே டாக்டர்! நீங்கள் வந்தீர்களா! இங்குவந்து பார்த்துவிட்டு உங்களையே

அழைக்கவேணும் என்ற ஆவலுடன் வந்தேன். கும்பிடப் போன தெய்வம்குறுக்கே வந்தமாதிரியாகிவிட்டது. இந்த மனிதன் என் க்ளாஸ்மேட்டு, வெகு நல்லவன், ஆனால் கடைசிகாலத்தில் அவன் செய்துள்ள இந்த விவாக விஷயந்தான் எனக்குப் பிடிக்கவில்லை. எத்தனையோ சொல்லியும் கேட்காதுபாழ்பண்ணிவிட்டான். இனி இதைப்பற்றிச் சொல்லி என்ன லாபம்? எப்படியாவது பிழைத்தால் போதும் என்றுதான் ப்ரார்த்தனை செய்யவேண்டும். இதை எல்லாம் உத்தேசித்துத்தான் என் குழந்தையின் சுக வாழ்க்கைக்காக என்னை நான் சிறந்த மார்க்கத்தில் செப்பனிட்டுக்கொண்டேன்...என்று ஏதேதோ சொல்லும் போது ஸ்ரீதரனுக்கு சடக்கென்று ஒரு எண்ணம் உண்டாகியது.

இவருடைய பெண்ணைத் தான் மணக்கவேண்டுமென்று சொல்லியது இவனுக்கு நினைவுக்கு வந்தது. தன் தம்பியின் இன்றய சோதனை சம்பவத்தினால் மனமுடைந்துத் தவிக்கும் உள்ளத்திற்கு ஆறுதலாய் இந்தப் பெண்ணை அவனுக்கு மணம் செய்துவைத்தால் என்ன! அவனே படாடோப டாம்பீகத்திற்கு ஆசைப்பட்டுழலுகிறான். இவர் சொல்வதிலிருந்து உஷாவைப் போலவே... ஏன் உஷாவை விட அதிகமான படிப்பும் நாகரீகமும் கண்ணியமான குடும்பத்துப் பெண்ணுமிருப்பதால் இவரை எப்படியாவது சரிப்படுத்தி இக் காரியத்தை தாமோதரனுக்கு முடித்துவிட்டால் சகல அம்சத்திலும் நன்மையாக முடியும்—என்ற எண்ணம் தீவிரமாகத் தோன்றியதால் வந்தவரை பலமாக உபசரித்துத் தானே தடபுடல் மரியாதை செய்தான்.

பின்னும் அரைமணிக்கெல்லாம் கிழவருக்கு நன்ருகத் தெளிவுகண்டு கண் திறந்து பார்த்தார். இள நங்கையாகிய அப்பெண்மணியின் முகத்தில் புன்னகை பூத்தது கண்டு ஸ்ரீதரன் மனத்திலும் சந்தோஷம் உண்டாகியது.

மற்றபடி சிறியடாக்டர்களைப் பார்த்துக்கொள்ளச்சொல்லி விட்டு ஸ்ரீதரன் கிளம்பினான்.

வந்த பெரிய மனிதரும் மற்றவர்களுக்குத் தேறுதல் கூறிவிட்டுக் கிளம்பியவர்டாக்டரிடம் தனிமையில்வந்து .. ஸார்! நன்றாக யோசித்து நாளை காலையில் என் மனங் களிக்கும் முறையில் பதில் சொல்லவேணும். உங்களையே நான் ப்ரமாதமாய் நம்பி இருக்கிறேன். நாளை காலையில் நீங்கள் வரவில்லை என்றால் நான் அங்கு வந்து விடுவேன் என்றார்.

கட்டாயம் வருகிறேன் ஸார்! நாளைய தினம் நாம் இந்த விஷயத்தில் பரஸ்பரம் ஒருமனப்பட்டு முடிவு செய்துவிட்டுத்தான் மறுகாரியம் என்று நான்கூட முடிவு செய்துவிட்டேன். நாளைய தினம் நான் கட்டாயம் வரு கிறேன்—என்றுகூறிச் சென்றான். இவ்விஷயத்தை இப்போதே அம்மாவிடம் கூறி யோசனைகேட்டுக்கொண்டு பிறகு தம்பியிடமும் தெரிவித்துச் செய்யவேண்டும் என் கிற எண்ணத்துடன் சென்றான். இன்று நடந்த ஒவ் வொரு புதிய புதிய சம்பவமும் இவனுடைய வாழ்க்கை யில் பெரும் படிப்பினைபோல் தோன்றி ஒரு இன்பமே உண்டாகியது.

# 15

தம்பீ! நன்றாக நீ யோசித்து பதில் சொல்லு. உஷா வைவிட சகல அம்சத்திலும் உயர்ந்தவள்; மேல் நாடெல் லாம் சென்று ஜெயத்துடன் திரும்பும் மேதாவி, உயர்ந்த குடும்பத்துப் பெண். ஆகையால் நான் அதை உன் னிஷ்டப்படி முடித்து வைக்கிறேன். நீயும் என்னுடன் அங்கு வா. நேருக்கு நேராகப் பேசிமுடித்து விடலாம். உனக்குப் பல விதத்திலும் நன்மை உண்டு. உன்னுடைய நலனுக்கே நானும் அம்மாவும் பாடு படுகிறோம். தீர யோசனைசெய்து நாளைக்காலையில் தெரிவி. நிம்மதியாகத்

தூங்கு—என்று இரவே தம்பிக்கும் உபதேசித்துப் பின் தன் விடுதிக்குச் சென்றான்.

மறுதினம் காலையில் தனது வைத்ய சம்மந்தமான அலுவல்களை எல்லாம் முடித்துக்கொண்டு கனவான் வீட்டிற்குப் போவதற்காக தாமோதரன் விடுதிக்கு வந்தான். தாமோதரன் ஸ்ரீதரன்வரவையேஎதிர்பார்த்துக் கொண்டு தடபுடல் அலங்காரத்துடன் இருப்பதைக் கண்டு மிக்க சந்தோஷத்துடன் இருவரும் சென்றார்கள்.

டாக்டர் மட்டுந்தான் தனிமையில் வருவார் என்று துரைக்கண்ணன் எண்ணி ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சகோதரர்கள் ஜோடியாக வருவதைக் கண்டு மிக்க சந்தோஷத்துடன் காரியம் கைகூடி விட்டதாகவே எண்ணி வரவேற்றார்...ஸார்! நேற்றிரவு ஒரு அவஸரத் தந்தி வந்தது. என் மகள் இன்றே காலையில் வந்துவிடுவதாயும் ப்ளேனில் பறந்து வந்துகொண்டிருப்பதாயும் என்உடல் நலம் சரியாக இல்லாததால் ப்ளேன் நிலையத்திற்கு வரவேண்டாம்என்றும் தந்தியில் கண்டிருக்கிறது. அதை உங்களிடம் டெலிபோனில் சொல்வதற்காக இரண்டு முறை கூப்பிட்டேன். நீங்கள் வீட்டிலில்லை என்று பதில் கிடைத்தது. இப்போதே வந்தாலும் வந்து விடலாம். சகலமும் வெகு சுபமாக முடிந்துவிடலாம். என்று மளமளவென்று தனது அபிப்ராயத்தை வெளியிட்டுப் பின், "டாக்டர்! இவர் யாரு?" என்றார்.

டாக்:—இவர் என் சகோதரர்; நல்ல குணசாலி, மகா மேதை...என்று சொல்லிக்கொண்டிருக்கையில் வாசலில் பெரிய கார் வந்து நின்றது கண்டு, துரைக்கண்ணன், "ஸார்! என் மகள் வந்துவிட்டாள்; இதோ போய் அழைத்துவருகிறேன் என்று கூறியவாறு வாசலுக்கு ஓடிவந்தார்.

அசல் ஆங்கிலேய மாதர் இருவரும் இரு வெள்ளைக்கார துரைமார்களும் மட்டும் வண்டியிலிருந்து இறங்கிய

தைக் கண்டு கண்ணபிரான் ஏமாற்றமடைந்து, "நம் மகளென்று எண்ணினேமே! இவர்கள் யாரோ தெரிய வில்லையே" என்றுவிழித்தவாறு நிற்கையில், "ஹல்லோ! மைபாதர்குட்மார்ணிங்க்"...என்றுகூறியவாறு வெள்ளைக் கார உடையிலுள்ள அவர் மகள் தகப்பனுரை சேர்த்துக் கட்டிக்கொண்டதைக் கண்டு திடுக்கிட்ட துரைக்கண்ணன் அப்படியே ப்ரமை பிடித்துப்போய்,"இதென்ன பாமாவா? ...என் கண்மணி பாமாவா?...என்று ஒருவிதமான பதட் டத்துடன் கேட்டு வெறிக்க வெறிக்க பார்த்தார். தன் செல்வி இங்கிருந்து சென்றபோது இருந்த அழகென்ன, அலங்காரமென்ன, ஜாதி மத ஆசையின் ஆழமென்ன— இப்போது தொப்பியும் கவுனும் அணிந்து வந்துள்ள கோலமென்ன என்றதை அவராலேயே நம்ப முடியாமல் மீண்டும்பதறியவாறு... இதென்னம்மாவேஷம்? இதென்ன கண்ருவி கோலம்...என்று வாய்விட்டே உறக்கப் பதட் டத்துடன் கேட்டார்.

பாமா சிரித்துக்கொண்டே, "அப்பா உள்ளே போ வோமே...என் இத்தனை படபடப்பு அப்பா? காலத்திற் கேற்ற போக்கில் மனிதர்கள் வாழ்க்கை வண்டியை செலுத்தினுல் தானே சுகமாய் வாழமுடியும்? அப்பா இதோ இவர்தான் என் கணவர் மிஸ்டர் ஸ்டோன் துரை யவர்கள். இவர்கள் எனது நாத்தனுர் மிஸஸ் ஸ்மித்... இவர் மிஸ்டர் ஸ்மித் என்று கூறும் வார்த்தைகளைக் கேட்ட உடனே பாவம் துரைக்கண்ணனுக்கு வானமே இடிந்து தலைமீது விழுந்துவிட்டது போன்ற மகத்தான அதிர்ச்சி உண்டாகி, "ஹா! டாக்டர்...டாக்டர் ஸ்ரீதர்..... இங்கு வாருங்கள்...என்று கூவியபடியே மூர்ச்சித்து விழுந்துவிட்டார்.

உண்மையில் தன் மகளுடன் ப்ரமாதமாய் குலாவி மகிழ்ந்தவாறு கனவான வரப்போகிருர் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீதரனுக்கு இந்த கூக்குரலின் அலறல் திடுக்கிடச்செய்தது; ஓட்டமாக ஓடிவந்தான்.

நான்கு வெள்ளைக்காரர்கள் நிற்கிறார்கள்; இவர் மூர்ச்சையாகி விழுந்து கிடக்கிறார். விவரம் ஒன்றுமே புரியாத நிலைமையில் துரைக் கண்ணனை சோதித்துப் பார்த்தான். தாங்கமாட்டாத அதிர்ச்சியினால் இதயம் வெகு வேகமாய் அடித்துக்கொள்கிறது. நாடி துடிக்கிறது. நிலைமை திடீரென்று படுமோசமாய் விட்டதைக் கண்டு ஒன்றுமே புரியாத ஸ்ரீதரன் தம்பியின் உதவியால் அவரை உள்ளே கொண்டுவந்து படுக்கவைத்து சிகிச்சை செய்யத் துடங்கினான்.

"ஸார்! என் தகப்பனாருக்கு திடீரென்று எதனால் இப்படியாகிவிட்டது. எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே! தாங்கள் யாரோ தெரியாது. நான் இவருடைய மகள். என் கணவர் இவர்"...என்று அவள் சொல்வதைக்கேட்டு உண்மையில் ஸ்ரீதரன் திடுக்கிட்டு அப்படியே அலறினான் ...இவருடைய மகள் பாமா என்பவரா தாங்கள்...சரிதான் இப்போது விஷயம் புரிந்துவிட்டது. உங்களுடைய விஷயமே அவருடைய அதிர்ச்சிக்குக் காரணம். நான் இவருடைய டாக்டர்...ஸ்ரீதரன். இவருக்கு நான்தான் வைத்யம் செய்து குணப்படுத்தினேன்...என்று சொல்லியபடியே உயர்ந்த மருந்துகளை ஊசி குத்தி பலமான சிகிச்சைகள் செய்தான்.

10 நிமிஷம் கழித்து துரைக்கண்ணன் கண்ணைத் திறந்தார். ஐயோ! குடி முழுகிவிட்டதே...... டாக்டர் ஸ்ரீதரனுக்கு உன்னை மணம் செய்வித்துக் களிக்க நான் கட்டிய என் மனக்கோட்டை எல்லாம் இடிந்து மண்ணோடு மண்ணாகிவிட்டதே! ஐயோ உலகமே இருண்டு என்வாழ்க்கையில் அந்தகாரம் குடிகொண்டு என்னை நாசமாக்கி விட்டது. சகலமும் அழிந்து மண்ணோடு மண்ணாகிமங்கி விட்டது. த்ரோகி! குலநாசகி! குடியைக் கெடுத்தசண்டாளி! நீயா என் மகள், நீயா என் பாமா! நீயா என் வாழ்க்கையின் தீபம்? இல்லை! இல்லை! ஒரு நாளுமில்லை. மானஹீனமற்ற படுபாவி! இனி அரைக்ஷணங்கூட இந்த இடத்தில்

நிற்கக்கூடாது...போய்விடு! வெளியே தொலைந்து போய் விடு...ஏ சண்டாளா! பதிதா! போய்விடு...உம் போ! போ! போ! என்று வீராவேசங்கொண்டு தன்னை மீறிய ஆத்திரத்துடன் தன் மகளைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியவாறு முதுகிலும் நன்ருக அடித்துத் தள்ளி அவளுடைய கணவன் என்று சொல்லிய வெள்ளைக்காரனையும் உதைத்துத் துரத்தினர். ஸ்ரீதரனும் தாமோதரனும் எத்தனை தடுத்தும் எங்கிருந்துதான் அவருக்கு அந்த சமயம் அந்த நிலையில் பத்துயானைபலம் வந்ததோ அதை ஒருவராலும் அறியமுடியவில்லை. வெள்ளைக் காரனுக்கு வந்த அவமானத்திலும் ஆத்திரத்திலும் என்னதான் செய்து விடுவானே என்கிற பயம் வேறு பாதித்து ஸ்ரீதரனை நடுக்கலுறச் செய்கிறது.

துரைக்கண்ணனின் நிலைமை மறுபடியும் மோசமாகி விட்டது; எனினும் இந்த அக்ரமத்தைக்கண்டு தாளாமல் ஆவேசத்தைவிடாமல்,"என் வயிற்றில் பிறந்த பெண்ணை கப்பலேற்றிய அன்றே செத்துவிட்டதாக எண்ணிவிட்டேன். என் கண்மணிக்காக நான் செய்த த்யாகமும் அதற்காக அவள் செய்த த்ரோகமும் இனி என்னல் சகிக்கமுடியாது! தன்னுடைய தாய்நாடு, தன்னைப் பெற்ற பிதா, தான் பிறந்த குலம், தன்னுடைய சிறந்த மதம், தன்னுடைய புனித கடமை எல்லாவற்றையும் மறந்து துறந்து சிற்றின்பப்பேயிக்கு அடிமையாகி மதம்விட்டு மதம்மாறி மானங்கெட்டு என்முன்பு தைரியமாக வந்து நிற்கும் இவளை இப்போதே கொன்றுவிட்டு நானும் தூக்குமரத்தில் தொங்கலாடுகிறேன். பாவிப் பெண்ணைப் பெற்ற இந்தப் பாவியும் கொலைபாதச் சண்டாளனுகட்டும்! மிகச் சிறந்த பாரதநாட்டில் பிறந்த ஒரு இந்து பெண்மணி இப்படி செய்தாள் என்று உலகம் தூற்றும்போது என்னையும் சேர்த்துத் தூற்றட்டும்! தன் தாய்நாட்டின் கண்ணியத்திற்காக, தன் மதத்தின் பெருமைக்காக, தன் ஜாதியின் சிறப்புக்காக தன் பெண்ணைத் தானே கொன்றுன். தன் கைகளாலேயே கொன்றுன்.—என்று உலகம் என்னைக்

கொண்டாடட்டும்! எனக்குள்ள சகல சொத்துக்களையும் தர்மஸ்தாபன நிதிக்காக ஸ்ரீமான் டாக்டர் ஸ்ரீதரனிடம் ஒப்படைத்துவிடுகிறேன். இந்த பங்களா ஒரு தர்ம வைத்யசாலையாக ஆகட்டும். மானங்கெட்ட மிருகங்களின் உபயோகத்திற்கு உதவாமல் இந்த சொத்துக்கள் பூராவும் ஒரு சிறந்த தர்மத்திற்கு உதவட்டும்...டாக்டர்! என் வக்கீல்வெங்கோபராவைக்கூப்பிடுங்கள்...போடா!முனியா! வெங்கோபராவைக் கூப்பிடு...என்று பெரிதாகக் கத்தித் துள்ளி குதிக்கும்போது எற்கெனவே இவருடைய குமாஸ்தாவினால் வக்கீலுக்கு இந்த ரகளையான விஷயம் போன் மூலம் அறிவிக்கப்பட்டதால் அவர் அலையக்குலைய ஓடி வந்தார்.

அதேசமயம் துரைக்கண்ணனை எத்தனை தடுத்தும் ஆத்திரத்தீ அடங்காமல் கொழுந்துவிட்டு ஜ்வாலை வீசி எரிந்ததால் அவர் தன் மகளை சுவருடன் வைத்து மோதுமோது என்றுமோதி உருட்டித் தள்ளினார். அதே சமயம்வந்த வக்கீலும் தடுக்கமுயன்றும், வீணாகிவிட்டது.

துரைக்கண்ணன் வக்கீலைப்பார்த்ததும், வக்கீல் ஸார் ...இந்தவீடு கொலைகளமாகிவிட்டது. அதோ! அதோ! ஸ்ரீதரனை இந்த வெள்ளைக்காரப்பாவி அடித்துத் தள்ளி இருப்பதை முதலில் கவனியுங்கள். என் சொத்துக்கள் பூராவும் துடப்பக்குச்சிமுதல் சகலமும் ஸ்ரீமான் ஸ்ரீதரனின் தர்மஸ்தாபனத்திற்குக் கொடுத்துவிட்டேன்...உம் ...எழுதுங்கள்...ஸார் சாக்ஷி கையொப்பம் போடுங்கள்; என்மகள் குலத்ரோகி; மதத்ரோகி; தாய்நாட்டின் மதிப்பைக் குலைத்த சண்டாளி; அவளை நானே கொன்றுவிட்டேன். இதோ நானும் சாகப்போகிறேன். நான் ஸ்ரீதரனுக்கு சொத்துக்களை சத்யமாகச் சேர்த்துவிட்டேன். காலணா சொத்துக்கூட இந்தப் பாவிகளுக்குச் சேரக்கூடாது. என் பெண்ணை ஏமாற்றி மோசம் செய்து கற்பழித்தது ஒன்று, ஸ்ரீதரனை அடித்துத் தள்ளியது ஒன்று. ஆக இரண்டு குற்றங்களுக்கும் இந்தச் சண்டாள நாயை

கைது செய்து இழுத்துச் செல்லுங்கள்...என்று படபடப் பாய் வெகு ஆவேசத்துடன் கூறியவாறு வக்கீல் எழுதிய கடிதத்தைத் தானே படித்துப்பார்த்துக் கையொப்பமும் இட்டுக் கொடுத்தார்.

அடிபட்டு விழுந்துவிட்ட ஸ்ரீதரனை வக்கீலும் தாமோதரனும் மெல்லத் தேற்றி அழைத்து வந்தனர். "ஸார்! இதென்ன அக்ரமம்? திடீரென்று இம்மாதிரி நிலைமைகள் உண்டாகலாமா! நீங்களாவது தணிந்து போகவேண்டாமா! என்று டாக்டர் சொல்லும்போது துரைக் கண்ணன் மறுபடியும் தன் மகளை ஒரு மிதி மிதித்துத் தள்ளிய வேகத்தில் படீரென்று இதயம் வெடித்து மாண்டாள்!

வெள்ளைக்கார மாப்பிள்ளை கண்ணுமண்ணுதெரியாத ஆத்திரத்தில் "எனக்குப் போட்டியாய் வந்ததுமல்லாமல் நான் சந்தோஷமாய் வந்திறங்கிய உடனே என்மனைவியின் உயிரைக் குடிக்கக் காத்திருந்த எமனே!" என்று ஸ்ரீதரன் மீது அஸாத்ய கோபங்கொண்டு தடார் புடார் என்று அடித்து ஓங்கி அரைய அதிமூர்க்கத்தனத்துடன் வந்ததை அந்த துரைமகனின் சகோதரியே தடுத்துக் கைகளைப் பிடித்துக்கொண்டு பார்த்தும் அவன்சீறிக்கொண்டு வந்து சரியானபடி முதுகிலும் காலிலும் அகப்பட்ட இடத்தில் அடித்து ஆங்கிலத்திலேயே திட்டித் தாண்டவமாடுகிறான். ஒரே தாவாகத் தாவி வக்கீலிடமுள்ள அப்போது எழுதிய கடிதத்தை அப்படியே சடக்கென்று பிடுங்கிக் கொண்டு பதுக்கிவிட்டான்.

இந்த திடீர் பாய்ச்சலைக் கண்ட துரைக்கண்ணன், வெள்ளைக்காரன் மீது அடங்காத ஆத்திரங்கொண்டு "கொலைபாதகா! என் குலத்தை நாசம் செய்யவந்த சண்டாளா! மகா தர்மபிரபுவான டாக்டர் மீது ஏனடா பாய்கிறாய். உன் மனைவியாம், மனைவி, அவரையா நீ அடிக்கிறாய். நாயே! வெளியே போடா கழுதை"...என்று

வெள்ளைக்காரன்மீது பாய்ந்து அவனை நன்றாக அடித்துத் தள்ளினார். மீண்டும் அதிர்ச்சியால் மூர்ச்சித்தார் துரைக் கண்ணன்.

அதே சமயம் துரைக்கண்ணனின் பந்துவும் பாமாவைத் தான் மணக்கவேண்டுமென்று தீர்மானித்தவனுமான சுந்தரம் வெகு நாட்களாய் மலேயா நாட்டில் வ்யாபார நிமித்தம் சென்றிருந்தவன் பாமா இன்று வருகிறாள் என்பதை அறிந்து அவனும் ஆகாய விமானத்தில் வந்து இறங்கியவன் நேராக தன் மாமன் வீட்டிற்கே வந்தான்.

அவன் வந்த சமயமும் இங்கு ரகளை நடக்கும் சமயமும் ஒன்றாயிருப்பது கண்டு ஒன்றுமே புரியாது விழித்தவாறு,மாமா ! மாமா! என்று துரைக் கண்ணனிடம் தாவினான். வெள்ளைக்காரக் கூட்டத்தின் மர்மம் எதுவுமே அறியாததால் மருமகப் பிள்ளையான ஸ்டோன் துரையைக் கண்டு, "ஸார்! நீங்களெல்லாம் யாரு? இதென்ன யுத்த அரங்கம்போல் ஒரே பயங்கரமாயிருக்கிறதே. பாமா வந்துவிட்டாளா!மாமா ஏன் இப்படி விழுந்து கிடக்கிறார்?" என்று பதைக்கக் கேட்டான்.

இவன் யார் என்பதை ஒருவரும் அறியாததால் தனது பக்கம் பேசக்கூடிய ஆள் கிடைத்துவிட்டதாக எண்ணிய ஸ்டோன் துரை...ஸார்! கொலை! கொலை! சகலமும் ஒரு நொடியில் நடந்துவிட்டது. இதோ! செத்துக் கிடப்பவள்தான் பாமா! இவள் என் மனைவி.

என்ன! என்ன! பாமா உன் மனைவியா! செத்துவிட்டாளா!...இதென்ன அதிர்ச்சியான விஷயம்! ஒன்றுமே புரியவில்லையே...நீ யாரு...என்று சுந்தரம் துள்ளியவாறு கேட்டான்.

ஸ்டோன்:—பாமாவை சீமையில் மணந்தவன் நான்... இன்று இப்போதுதான் நாங்கள் வந்து இறங்கினோம்.

இதோ பாவி யாரோ தெரியாது இவன்தான் பாமாவை மணந்து சகல சொத்துக்களையும் அடையக்காத்திருந்தானும்; பாமாவை நான் மணந்துகொண்டு ஜோடியாய் வந்ததைக் கண்டதும் இவனே பாமாவை சடக்கென்று கொலை செய்துவிட்டதோடு என்னையும் கொலை செய்யப்பார்த்தான். துரைக் கண்ணனையும் நன்றாக அடித்துத் தள்ளிக் கொல்ல முயன்ற சமயம் நான் அவனைத் தடுக்க ப்ரம்ம ப்ரயத்தனம் செய்தும் வீணாகி எனக்கே உதை விழுந்து விட்டது. தனக்கு சொத்தும் பெண்ணும் கிடைக்காத ஆத்திரத்தினால் இப்படி செய்யத்துணிந்தான்......

என்று சொல்வதைக்கேட்ட ஸ்ரீதரன் நடுநடுங்கிப் போய்...ஸார்...இவை எல்லாம் சுத்த பொய்! முழுபூசணிக் காயைச் சோற்றில் மறைப்பதுபோன்றிருக்கிறது! துரைக் கண்ணனையே கேட்டால் சகலமும் தெரியும்; அவர் எழுதிய கடிதத்தைக்கூட இந்த மனிதன் அபகரித்துக்கொண்டான். வக்கீலைக் கேளுங்கள் சகலமும் தெரியும்...அவருக்குத் தெளிவு வருவதற்காக நான் இப்போது ஊசிகுத்தியிருக்கிறேன்...என்று சொல்லும்போது...துரைக் கண்ணன் ஆத்திரத்துடன், "சண்டாளா! கொலைபாதகா! என் குடும்பத்தையே நாசம் செய்த காதகா! எங்கள் இருவரின் உயிரையும் பிரித்த பிறகாவது உனக்கு புத்திவருமா! த்ரோகி...பாமா...இதற்காகவா உன்னை இத்தனை செல்லமாக வளர்த்தேன். த்யாகத்தீயில் குதித்தேன்...ஹா... கடவுளே...என்று தன்போக்காகக் கத்தியபோது சுந்தரம் துரைக்கண்ணனின் முகத்தருகில் சென்று...மாமா மாமா...இதோ பாருங்கள். நான் உங்கள் ப்ரிய சுந்தரன். இதென்ன அக்ரமம்...எனக்கொன்றுமே விளங்கவில்லையே ...என்றான். துரைக்கண்ணன் அரைகுறை பார்வையில் அவனைப்பார்த்து...சுந்தரம். .விளங்கவில்லையா......விளங்காது....இதோ... இதோ......இவர்தான்....இவர்தான்... என்று ஸ்ரீதரனைக்காட்டி இவரைக்கேட்டால் சகலமும் விளங்கும் என்று சொல்ல வந்தவருக்கு அதற்குள் அபா

ரமான மயக்கத்தின் அதிர்ச்சியினுல் அப்படியே வார்த்தைகள் நின்றுவிட்டது.

இதையே சந்தரப்பமாகக்கொண்ட ஸ்டோன் துரை... ஸார்! போதுமா! ஆளை நேருக்கு நேராகக் காட்டி இவர்தான் இந்தக் கொலைக்குக் காரணம் என்று சொல்லிவிட்டார். இனியும் சம்சயமா!...என்று சுந்தரத்தின் உள்ளத்தைக் கலக்கி அதேசமயம் மாமா..."ஹா!...என் குடியைக் கெடுத்த கொலைபாதகனின் கண்முன்பு இதோ நானும் வந்துவிட்டேன்...டாக்டர்...டாக்டர்... இந்தக் கொலையை என்று முடிப்பதற்குள் சடக்கென்று உயிர் நின்றுவிட்டது.

அவ்வளவுதான் தாமதம், சுந்தரம், ஐயோ! மாமா... பாமா...கொலையா செய்யப்பட்டு இருவரும் ஒரே காலத்தில் ஒன்ருய்ச் சென்றுவிட்டீர்கள் ... கொலைகொலை...என்று ஆவேசம் வந்தவனைப்போல் கத்திக்கொண்டு வாசலில் ஓடிவந்தான். ஸ்டோன் துரையும் சேர்ந்து 'கொலைகொலை' என்று கத்துகிருன். உண்மையில் ஸ்ரீதரனுக்கு ஒன்றுமே தோன்ருமல் ப்ரமைபிடித்துவிட்டது. தாமோதரனுக்கோ இந்த அதிபயங்கரமான சந்தர்ப்பங்களைப் பார்த்ததும் கதி கலங்கிப்போய் விட்டது. ஏற்கெனவே தன் வீட்டில் அன்று நடந்த பிசாசு சம்பவத்தின் அதிர்ச்சியினுல் உள்ளம் தளர்ந்திருந்ததால் இந்தகோரமானவிபத்துக்களைக்கண்டதும் மயக்கமே போட்டு விழுந்துவிட்டான்.

வெள்ளைக்காரனின் சகோதரியும் அவள் கணவனும் கீழே கிடக்கும் பாமாவை ஆட்டித்தூக்கிப் பார்த்தார்கள். சவமாக விருப்பது கண்டு நடுநடுங்கித் துடிக்கிருர்கள். அதே சமயம் பொதுமக்களில் முக்யமான அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஓடிவந்து பார்த்தார்கள். இரண்டு சவம் இரண்டு மூலையில் இருப்பதையும் டாக்டர் ஸ்ரீதரனின் சரீரத்தில் பல இடங்களில் ரத்தம் வருவதையும் இந்த அதிர்ச்சிகளைத் தாளாமல் தாமோதரன் ஸ்மரணையற்றுக்

கிடப்பதையும் கண்டு விவரம் புரியாமல் போலீஸுக்கு உடனே தகவல் கொடுத்துவிட்டார்கள்.

அடுத்த க்ஷணமே போலீஸார் வந்து விட்டார்கள். ஸ்டோன் துரையே போலீஸாரிடம் முந்திக்கொண்டு, ஸார்! இரண்டு கொலைகளையும் செய்தவர் இதோ! இந்த டாக்டர்தான். என் மனைவியான பாமாவை இவன் மணப்பதாக ஏற்பாடு செய்திருந்தானும். எனக்கும் பாமாவுக்கும் மேல் நாட்டில் சட்டப்படி விவாகமாகிவிட்டதை இவர்களுக்கு பாமா அறிவிக்கவில்லை. தன் பிதா தன் விருப்பத்திற்கு மாருக நடக்கமாட்டார் என்கிற தைரியத்தினல் நேராகவே சென்றபிறகு சொல்லலாம் என்றிருந்தாள். இன்று நாங்கள் இங்கு வரும்போது இந்த மனிதன் இங்கிருந்தான். நாங்கள் தம்பதிகளாக வந்த விவரம் தெரிந்த உடனே முதலில் என் மனைவியை அடித்துக் கொன்றதோடு அவள் பிதாவையும் அடித்துக் கொன்றுவிட்டால் இந்த சொத்துக்கள் பூராவும் தானே அடைந்து விடலாம் என்கிற ஆத்திரத்தினல் கண்ணுல் பார்த்துக்கொண்டே இருக்கையில் இரண்டு கொலைகளை ஒரே நிமிஷத்தில் நடத்திவிட்டான். இந்த வக்கீலும் அவனுக்கு உடந்தை, அதோ நிற்கும் குமாஸ்தாவும் இந்த மனிதனும்...(தாமோதரனைக் காட்டி, இவனும்) கொலைக்கு உடந்தை என்று தானே கடகட வென்று வாக்குமூலங் கொடுத்தான். இதோ! இந்த மனிதர் துரைக்கண்ணனின் சொந்தக்காரராம். இவர் இப்போதுதான் வந்தார். இவரும் சாக்ஷி. சகல விவரமும் இவரைக் கேளுங்கள் என்று சுந்தரத்தைக் காட்டினன்.

இதற்கு சுந்தரமும் தேம்பித் தேம்பிப் புலம்பியபடியே, ஸார்! நான் வெகு நாட்களாக பாமாவை மணக்க ஆவல்கொண்டிருந்தேன். மாமாவுக்குச் சரியாகப் பணம் சேகரிக்க வேண்டி மாமாவின் அனுமதிபெற்று மலேயாவுக்கு அவருடைய உதவியினல் சென்று வ்யாபாரம் செய்து வந்தேன். பாமா வெளிநாடுசென்றதும் எனக்

குப் பிறகுதான் தெரியும். அவள் திரும்பி வருவதை என் நண்பன் மூலமறிந்து நான் ஆகாய விமானத்தில் ஓடி வந்தேன். என் இன்பக் கிளியின் பிணத்தைத்தான் பார்த்தேன். நான் வந்தபோது மாமாவுக்கு உயிர் இருந்தது. இதோ இம்மனிதன் யாரென்றே எனக்குத் தெரியாது. அவருடைய கையில் இஞ்செக்ஷன் ஊசியும் மருந்து புட்டியும் இருந்தது. இப்போதுதான் ஊசி குத்தினேன் தெளிந்துவிடும்.......என்று சொன்னார். இதற்குள் சகல விவரமும் இந்த ஸ்டோன் துரையாலறிந்து துடித்தேன். மாமா கண்ணைத் திறந்தார்...இதோ! இதோ...இவர்தான் என்று இம்மனிதனைக் காட்டினார்...உடனே டாக்டர் என்று பெரிதாகக் கத்தினார். கொலை...என்று ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் உயிர்போய்விட்டது. இஞ்செக்ஷன் செய்தது விஷம் என்று துரை கூறுகிறார்...எனக்கு எந்த தகவலும் விளங்கவில்லை. எனக்குப் போட்டியாக பாமாவை இவர் மணந்து சொத்துக்களை அபகரிப்பதற்காக முன் ஏற்பாட்டுடன் இத்தனை பேர்களின் உதவியினால் இவர் வந்திருப்பதாகத் தான் எனக்குத் தோன்றுகிறது....என்று மடமடவென்று ஆத்திரத்துடன் வாக்கு மூலம் கொடுத்தான்.

உடனேபோலீஸ் இன்ஸ்பெக்டர் எங்கே இஞ்செக்ஷன் ஊசியும் மருந்தும்...என்று கேட்டபடியே ஸ்ரீதரனை அணுகினார். இந்த அதிர்ச்சியில் இஞ்செக்ஷன் ஊசி கீழேவிழுந்து உடைந்து போயிருந்தது. அதன் பக்கத்தில் இஞ்செக்ஷன் மருந்து புட்டிகளுள் இரண்டும் உருண்டு கிடப்பதைப் போலீஸார் கண்டெடுத்தார்கள்...ஒன்று உயர்ந்த மருந்தும்மற்றொன்று விஷமருந்துபுட்டியுமாயிருப்பதைக்கண்டு "ஸார்! இந்த மருந்துகளைத்தானே ஊசி குத்தினீர்கள்?" என்று கடுமையான குரலில் கேட்டார்.

இரண்டு புட்டிகளையும் கண்ட ஸ்ரீதரன் திடுக்கிட்டு நடுங்கியவாறு... ஐயோ! இது எனக்குத் தெரியவே தெரியாது. இதோ இம்மருந்துதான் நான் செய்தது...என்று

கூறும்போது அவன் உள்ளம் ஒரேயடியாக மரத்துத் தம்பித்துவிட்டது. இதென்ன வேடிக்கை, இந்த விஷ மருந்து இங்கு எப்படி வந்தது! என்று அவனுக்கு மகத்தான ஆச்சரியமும் குழப்பமுமே உண்டாகிக் கலங்கிவிட்டான்... இதுதான் சோதனையின் கொடுமைபோலும்... என்று ஒரு மின்வெட்டுப்போன்ற அதிர்ச்சியும் உண்டாகி வதைத்தது.

"ஐயையோ! இது சுத்த பொய்! இந்தச் சண்டாளன் சொல்வது முற்றிலும் பொய். நான் இப்போதுதான் வந்தேன். டாக்டர் ஸ்ரீதரன் வந்ததே எனக்குத் தெரியாது; நான் இவருடைய குடும்பவக்கீல் என்பது உண்மைதான்; இந்தவிஷயங்கள் பூராவும் சுத்தபொய். தன் மகள் தனக்கு த்ரோகம் செய்துவிட்டதால் துரைக்கண்ணன் தானே தன் கைகளால் தன் மகளைக் கொன்றுவிட்டு தன் சொத்துக்களைப் பூராவும் டாக்டர் ஸ்ரீதரனுடைய தர்ம வைத்யசாலைக்குக் கொடுத்துவிடவேண்டும் என்று உயில் எழுதச் சொன்னபடி நான் எழுதினேன். அவர் கையொப்பமிட்டார். அந்தக் கடிதத்தை நான் திருப்பிப் பார்த்து மடிப்பதற்குள் இதோ இந்தப்பாவி என்னிடமிருந்து அதை ஒரே நொடியில் பிடுங்கிக்கொண்டதோடு இத்தகைய அனியாயக் கற்பனையைத் திரித்து உங்களிடம் கூறுகிறான். இவன் சொல்வது முற்றிலும் பொய்...சத்யமாகப் பொய் என்று வக்கீல் கதறுகிறார் பாவம்.

"ஸார்! வக்கீல் சொல்வதுதான் சத்யம்; ஸ்டோன் பெயருக் கேற்றுப்போல் கல்லினும் கடினசித்தத்துடன் பொய்ஜோடனை ஜோடித்து உங்களையும் கலக்குகிறார்!' துரைக்கண்ணன் அவர்களுடைய டாக்டர்நான். அவருக்கு வைத்யம் செய்து குணப்படுத்தினேன். அவருடைய ஒரே மகளை அவர் உயிரினும் இனியதாக நேசித்து வந்தார். அந்த மகள் இந்தப் பாதகனை மணந்த கொடிய விஷயம் தெரியாது. அவருடைய மகளை நான் மணக்க

வேண்டும் என்று அவர் நேற்றுதான் என்னிடம் கூறி னர்! நான் விவாகமே செய்துகொள்ளும் அபிப்ராயமற்ற வன் என்பது இந்த ஊரே அறியும் என்தம்பி தாமோதர னுக்கு இதை முடித்துவைக்கலாம் என்ற நோக்கத்துடன் நான் தம்பியுடன் இன்று அவர் அழைப்புக்கிணங்க வந்த பிறகுதான் இப்போதே ஆகாயவிமானத்தின் மூலம் தன் மகள் வரப்போகும் விஷயத்தைத் தெரிவித்தார். அதே சமயம் அவர்களும் வந்துவிட்டார்கள்.

தன் மகளின் வேஷத்தையும் மதமாற்றத்தையும் விபரீதமணத்தையும் அறிந்து அவருடைய மனந்தாளாது அவர் மகளை அடித்ததும் விரட்டியதும் உண்மை; அவரை நாங்கள் எத்தனை தடுத்தும் அடங்கவில்லை. அதேசமயம் ஸ்டோன் துரை என்மீது பாய்ந்து என்னை அடித்துப் படுகாயப்படுத்துவதைக் கண்ட ப்ரபு பின்னும் ஆவேசங் கொண்டு தன் மகளைக்கடினமாகத் தாக்கினர். தம்வக்கீலை வரவழைக்கும்படி குமாஸ்தாவுக்குக் கூறினர். வக்கீல் வந்த உடனே தமது விருப்பத்தையப்படியே கடிதமாக எழுதச்செய்துத் தாமே கையொப்பமிட்டதும் உண்மை. அதை இவன்தான் அபகரித்துவிட்டான். இவனை இப் போதே சோதனை செய்தால் கடிதம் கிடைக்கும் என்பது என் அபிப்ராயம். (சுந்தரத்தைக் காட்டி) இதோ வந்துள்ள வர் யார் என்பதே எனக்குத் தெரியாது, இவைகளைத் தவிர மற்ற சகலமும் கட்டுக்கதை; பொய்யான விஷயம் என்று ஸ்ரீதரன் வாக்குமூலங் கொடுத்தான்.

"ஸார்! என்னதான் கிராதகனுக இருப்பினும் தான் பெத்த பெண்ணைத் தானே கொலை செய்வானு? இது எந்த உலகத்திலாவது கேட்டிருக்கிறீர்களா! சொத்துக் கும் மற்ற பாத்யதைக்கும உரிமை இன்றி அவனை அல க்ஷியப்படுத்தித் துரத்திவிட்டாலும் விடுவானே யன்றி இப்படி தன் கையால் எந்த தகப்பனும் கொலை செய்ய மாட்டான். இந்த மனிதன் முன் எச்சரிக்கையாய் கட்டுக் கதையை ச்ருஷ்டித்துக் கூறுகிறுன். நாங்கள் இந்த

நிமிஷந்தான் இந்தியாவுக்கு வந்தவர்களாகையால் மற்ற படி எதுவும் தெரியாது. என்னை தாராளமாகச் சோதனை போடலாம். கடிதம் எழுதியது உண்மை; அது யாரிடம் மறைந்திருக்கிறதோ எனக்குத் தெரியாது. என்றுஸ்டோன் திட்டமாகக் கூறி ஊர்ஜிதப் படுத்தினன். அவனுடன் வந்திருக்கும் வெள்ளையர்களும் அவனுடைய வாக்குமூலத் தையே ஊர்ஜிதப்படுத்திப் பேசினார்கள்.

இனி கேட்கவேண்டுமா! ஒரே சமயத்தில் இரண்டு கொலைகள் நடந்திருப்பது கண்முன்பு ப்ரத்யக்ஷமாகத் தெரிகிறது. ஸ்ரீதரன் அனாதைகளின் போஷணைக்காக தர்ம வைத்தியசாலை நடத்துவதும் பணக்காரர்களிடம் நிறைய பணம் வாங்கிக்கொண்டு அதை ஏழைகளுக்கு வினியோகிப்பதும் ஊரார றிந்த விஷயம். வேணுமென்று விவாகம் வேண்டாமென்று வேஷம் போடும் மனிதன் என்பதும் சிலருடைய அபிப்பிராயம். இதைப்பற்றி சிலர் இளப்பமாய் பரிகாஸம் செய்வதும் உண்டு. கள்ளச் சாமி யார்! வேஷதாரி, என்று ஏசுவதும் உண்டு.

இவன் தனது சாமர்த்தியத்தினல் வ்ருத்திக்கு வந்து விடுகிருனே என்கிறவயிற்றெரிச்சல் டாக்டர்களும் உண்டு. இங்குள்ள சகலமான சந்தர்ப்ப சாக்ஷிகளும் வெள்ளையர் களின் வாக்குமூலங்களின் அழுத்தமான வார்த்தைகளும் ஒன்றுசேர்ந்து போலீஸார் தமது வழக்கப்படியான ஜோடனையுடன் "டாக்டர்ஸ்ரீதரனையும் வக்கீலையும் துரைக் கண்ணனின் குமாஸ்தாவான குமரேசனையும் தாமோ தரனையும் சேர்த்து நால்வரையும் நாங்கள் சந்தேகித்து கைது செய்கிறோம்'' என்று முடிவுகூறியதைக் கேட்டதும் ஸ்ரீதரன் நடுநடுங்கினன். ஒரே இருளாக ஆகாயமும் பூமி யும் இருண்டு சுற்றுவதுபோல் தோன்றி வதைத்தது; "சத்யமே ஜயம்; பரோபகாரமே வாழ்க்கையில் லக்ஷயம்'' என்கிற வார்த்தைகள் அவன் காதில் ஒலித்தது.

அடுத்தக்ஷணமே ஏதோ ஆழ்ந்த யோசனை செய்து தனக்குள்முடிவுகட்டிக்கொண்டு..."போலீஸார் அவர்களே!

...இனி நான் ஒளிக்க விரும்பவில்லை. இந்தக் கொலையில் பூராவும் சம்மந்தப்பட்டு இருவரையும் கொன்றது நானேயாகும்; இவர்கள் மூவரும்நிரபராதிகள். இவர்கள் மீது எத்தகைய குற்றமும் கிடையாது! பொருளாசைக்கும் பெண்ணாசைக்கும் அடிமையாகி நானே இரண்டு கொலைகளையும் செய்தவன். ஆகையால் அவர்களை தயவுசெய்து விட்டுவிடுங்கள். கொலை செய்தவன் நான்தான் என்று நானே ஒப்புக்கொள்கையில் நிரபராதிகளை ஏன் வருத்த வேண்டும்? கருணைகாட்டி அவர்களைச் சம்மந்தப்படுத்தாது விட்டுவிடவேண்டும்'' என்று டாக்டர் கெஞ்சிக் கேட்பதைக்கண்ட போலீஸாரே முதலில்வியப்புற்றுநின்றார்கள். வக்கீலும் குமாஸ்தாவும் ''நாங்களும் இக்கொலையில் சம்பந்தப்படவில்லை. அவரும் நிரபராதி; அங்ஙனமிருக்க டாக்டர்சொல்வது பொய்; அவர் குற்றவாளியல்ல... என்று கதறியும் அங்குள்ள சகலமான சந்தர்ப்ப சாக்ஷிகளையும் கொண்டு டாக்டர்தான் குற்றவாளி என்பதை நம்பி டாக்டரைக் கைதுசெய்தார்கள். தாமோதரனின் இரும்பு உள்ளத்தின் கடினம் எப்படியோ நீங்கி தன் அண்ணனின் த்யாக புத்தியின் ப்ரகாசம் அப்போதுதான் பளிச்சென்று புரிந்தது.

---

## 16

தனது இரண்டு குமாரர்களும் ஜெய ப்ரதமான விஷயத்துடன் திரும்பி வரப்போகிறார்கள் என்று கமலவேணியம்மாள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு காத்திருக்கையில் துரைக்கண்ணனுடையவும் அவருடைய மகளுடையவுமான கொலை விஷயம் ஊர் பூராவும் காற்றுப்போல் பரவிவிட்டது மட்டுமின்றி 'டாக்டர் ஸ்ரீதான் குற்றவாளியாய் கைது செய்யப்பட்டு விட்டாராம்' என்ற விஷயம் மூலை முடுக்குகளில் எல்லாம் புகுந்துவிட்டதால் ஸ்ரீதரனுடைய சிநேகிதர்கள், அபிமானிகள், டாக்டர் சிநேகி

தர்கள் ஆகிய பலர் கும்பல் கும்பலாக, சிலர் துரைக்கண்ணன் வீட்டிற்கும், சிலர் போலீஸ்ஸ்டேஷனுக்கும், சிலர் ஸ்ரீதரன் வீட்டிற்குமாய் ஓடிச் சென்றார்கள்.

ஏற்கெனவே தன் கணவன் விஷயமாய் மனமுடைந்து கேவலப்பட்டுத் தவித்துக்கொண்டுள்ள கமலவேணியம்மாள் காதில் இந்த வார்த்தைகள் விழுந்ததுதான் தாமதம், ஹா... என் மகனா! கொலைக் குற்றவாளியாகி கைதியாகிவிட்டான். என் ஸ்ரீதரனா!... என் கண்மணி டாக்டர் ஸ்ரீதரனா! சத்யசந்தனாகிய ஸ்ரீதரனா? மகா த்யாகியும், சிறந்த ஞானியுமாகிய ஸ்ரீதரனா கொலையாளி! ஸ்ரீதரனா கொலையாளி, என்று தன்னை மறந்து கதறியபடியே வீதியில் ஓடத் துடங்கி விட்டாள் பாவம். எங்கு போகிறோம், என்ன செய்கிறோம், என்பதே அவளுக்குத் தெரியாது தடுமாற்றமான நிலைமையில் அவளுடைய பெண்களும் மற்றவர்களும் அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு வந்து வீட்டில் படுக்கவைத்தார்கள். அவளை எத்தனை அடக்கியும் அடங்காத வெறிபிடித்த நிலைமை உண்டாகியதால் எங்கே என் ஸ்ரீதரன்? என் ஸ்ரீதரனைக் கைது செய்த போலீஸ்காரன் எங்கே? அவனைக் கொன்றுவிடுகிறேன், குத்திவிடுகிறேன். என் ஸ்ரீதரனா கொலைகாரன் என் ஸ்ரீதரனா குற்றவாளி என்று மறுபடியும் கத்தியவாறு வீதிக்கு ஓடுகிறாள்.

அந்த ப்ரபுவின் வீட்டிற்கு என்னை அழைத்துப் போங்கள்; என்னை இங்கு தவிக்கச் செய்யவேண்டாம்; நான் உடனே என் ஸ்ரீதரனைப் பார்க்கவேண்டும்; என்று கத்துவதைக்கண்டு ஊர்ஜனங்களின் மனம் உருகிக் கண்ணீர் வழிந்தது.

இவர்களுக்குத் தெரிந்த ஒருவர் உடனே காரில் இந்தம்மாளையும் சகோதரிகளையும் அழைத்துக்கொண்டு அந்த இடத்திற்குச் சென்றார். தாயின் தவிப்பும் பெத்த வயிற்றின் துடிதுடிப்பும் கைம்மாறு கருதாத தாயன்பின்

உயர்வும் ஒப்பிட்டுக் கூறமுடியுமா! ஸ்ரீதரனு! கொலைகாரன்? ஸ்ரீதரனு கைதியாகிவிட்டான்? ஏ! கடவுளே! உனக்குக் கண்ணில்லையா! உனக்கு நியாயமில்லையா! நீதி நிர்ணயமற்றக் கட்டையா நீ! உனக்கு இதயமில்லையா! உனக்கு பச்சாத்தாபமில்லையா! மகா விவேகியாய் சிறந்த பக்த சிகாமணியாய் த்யாகியாய் விளங்கும் என் கண்மணி ஸ்ரீதரனு கொலை செய்வான்! பரோபகாரத்திற்கே பாடு படும் உத்தமனுகிய ஸ்ரீதரனு கொலைசெய்வான்? ஸாராஸார விவேகமற்ற உன்னையா கருணுநிதி, பக்தவத்ஸலன், தீன தயாளன், தயாநிதி என்றெல்லாம் மக்கள் கூறுகிருர்கள் ..

என்று மடைதிறந்த நீரைப்போல் கண்ணீர் பெருகிய வாறு கதறுகிருள். சற்று நேரத்திற்கெல்லாம் துரைக் கண்ணன் பங்களாவின் வாசலில் வண்டி வந்து நின்றது. அங்குள்ள கூட்டமும் போலீஸாரின் தடபுடலும் ஆளுக்கு ஒன்ருகப் பேசும் விமர்சனமும் அளவிட்டுச் சொல்ல முடியாது. வெறும் வேஷச் சாமியாராயிருந்து சரியானபடி கை வைத்ததனுல் ஆள் அகப்பட்டுக்கொண்டான். லக்ஷக்கணக்கான ரூபாய்களுடன் ஒரு பெண்ணை தான் அடித்துக்கொண்டு போக நினைத்தபோது அவனுக்குப் போட்டியாய் ஒரு வெள்ளைக்காரனே வந்துவிட்டான் என்ருல்...கோபம் பாபம் சண்டாளம் என்பது பொய்யாகுமா! ஆத்திரத்தின் தீ அவனையே எரிக்கத் தொடங்கிவிட்டது. என்று பலவிதமான வார்த்தைகள் சொல்வது இந்திரா சந்திராவின் காதில் விழுந்து துடிக்கிருர்கள். மகா மானி யான அண்ணுவுக்குமா இத்தகைய படாப்பழி. இதென்ன உலகம்...

என்று துடிக்கிருர்கள். மெல்ல கும்பலைக் கலைத்துக் கொண்டு கார் கேட்டுக்குள் சென்றதும் கமலவேணியம் மாள் ஒரே கதறலுடன், "ஸ்ரீதர்! ஸ்ரீதர்! இதென்னடா கண்ருவி...ஐயையோ! உன்னையா நான் இந்த நிலைமை யில் பார்ப்பது...ஐயோ! என் மகனின் உத்தம குணமும் பரோபகார சிந்தையும் உங்களுக்குத் தெரியாதா! என்

மகனா கொலை செய்வான்? அனியாயம் அக்ரமம்! என்று கதறியவாறு ஸ்ரீதரனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு தன்னை மீறிய துக்கத்தில் புலம்புகிறாள். அண்ணா என்று சகோதரிகள் கதறுகிறார்கள்.

தன் தாயாருக்கும் இச் செய்தி எட்டிவிடும்; இத்தனை சடுதியில் இங்கு வந்துவிடுவாள் என்று ஸ்ரீதரன் நினைக்கவில்லை. இந்த விஷயத்தைக் கேட்டு எப்படித்தான் அவளுடைய உயிர் துடிக்கும். அவளை யார் தேற்றி தக்கப்படி வைத்யம் செய்வார்கள்? என்று தனக்குள் எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்த ஸ்ரீதரனும் தன் தாயைக் கண்டதும் அம்மா! வென்று தாய்ப் பசுவைக் கண்ட கன்றைப்போல் அவனும் கன்றைக் கண்ட தாய்ப் பசுவைப்போல் அவளும் ஏககாலத்தில் கதறிவிட்டதால் அங்குள்ள கல்நெஞ்சம் படைத்த வெள்ளைக்காரியின் கண்களிலும் நீர் முட்டிவிட்டது என்றால் வேறு கேட்கவேண்டுமா! அங்குள்ள அத்தனைபேர்களின் உள்ளமும் உருகியது.

தாயாரைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு கதறிய ஸ்ரீதரன் சற்று தன்னைச் சமாளித்துக்கொண்டு தம்பியை நோக்கி... தம்பீ! விதியை விலக்க மனிதனால் முடியாது. விதியை மதியால் வெல்லலாம் என்கிற பழமொழிப்படிக்கு சாமான்ய விஷயங்களாயின் ஒரு சிறிது கை கூடும். இத்தகைய மகத்தான சோதனையை உண்டாக்கிய பகவானே அதைத் தீர்க்கமுடியுமேயன்றி மற்றவர்களால் முடியாது. ஒரு விஷமருந்தைக் கொடுத்த டாக்டர்தான் அதற்கு மாற்று மருந்தையுங் கொடுத்துத் தீர்க்கவேண்டுமேயன்றி அதற்குமாற்று பிறருக்கு எப்படித் தெரியும். ஏதோ பகவானை நம்பி நான் நல்ல காரியத்தை எண்ணி இங்கு உன்னையும் அழைத்துவந்தேன். பூர்வ கர்மாவின் செயல் என்னைச் சுற்றியடிக்கிறது, இந்த இடத்தில் இந்தக் கண்றாவி காட்சியைப் பார்க்க நம் தாயார் இங்கு கூடியிருப்பது சரியில்லை. இத்தகைய பயங்கர அதிர்ச்சி

யான வழியைக் காட்டிய பகவான் இதற்கு விமோசனத்தையும் காட்டி ரக்ஷிக்காது கைவிடமாட்டான். என் பாபம் அதையும் தடுத்தால் உலகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான கைதிகளுடன் நானும் இன்பமாய் தூக்குமேடையில் தொங்கலாடி சாந்தியின் சிகரத்தையடைந்து மகிழ்வேன்! நீ இனி அனுவச்யமாய் அழுதுகொண்டு நிற்பதில் உபயோகமில்லை; அம்மாவை முதலில் அழைத்துக் கொண்டு போய் கண்ணேபோல் காப்பாற்று. இனி இந்த விஷயத்தில் யாரும் தலையிடவேண்டாம்; வக்கீலை வைத்து வாதிக்கவும் வேண்டாம் பகவான் திருவுள்ளம் துணிந்து என்னைக் கைதியாக்கியதுபோல் சீக்கிறத்தில் தூக்கிலிட்டும் வேடிக்கைப்பார்க்கட்டும்! தம்பீ! அம்மாவை அழைத்துச் சென்றுவிடு; அன்புடன் ஜாக்ரதையாகப்பார்த்துக்கொள். கஷ்டப்படுவதற்கே ஜென்மமெடுத்துள்ள நம் தாயின் கடைசீ காலத்தில் உயிர் போகும் தருவாயிலாவது சாந்தியைக் கொடுத்துக் கடவுள் காக்கட்டும். அன்று எந்த ஒரு கடிதத்திற்காக நம் வீட்டில் பல குழப்பங்கள் நேர்ந்ததோ! அதே கடிதத்தை இப்போது பலரறிய எழுதிக் கொடுத்துவிடுகிறேன். என்று கூறியவாறு தனது சகல சொத்துக்களையும் தம்பியே அடைந்து வாழவேண்டியது என்று வக்கணையாக வரைந்து தம்பியின் கையில் கொடுத்தான்.

இதுபரியந்தம் வேறு உணர்ச்சியுடன் இருந்த தாமோதரன் கடிதத்தை வாங்கி சுக்கலாகக் கிழித்தெரிந்தான். "அண்ணு! சாந்தியை அடைய பல மார்க்கங்களை பகவான் காட்டியிருந்தும் நான் அதை அடைய வழி தவறி அவதிப்பட்டு என்னையும் உன்னையும் சேர்த்து அலட்டிப் பாழாக்கிவிட்டேன். எனக்குப் பெண்பார்ப்பதற்காக நீ இங்கு வந்ததனுலல்லவோ நமக்கு இத்தகைய பேராபத்து இந்தச் சண்டாள ஆங்கிலேயப் பாவிகளால் விளைந்தது. நம் குடும்பமே சின்னுபின்னமாய்ச் சிதறிப் பாழாகிய பிறகு நீயே இக்கதிக்கு வந்த பிறகு

எனக்கு இனி சொத்தா! சுதந்திரமா; வாழ்க்கையில் இன்பமா? அண்ணு! என் கண் திறந்துவிட்டது. என் னிதயம் உணர்ச்சியை அறிந்துநடக்கும் சக்தியைப்பெற்று விட்டது. இனி எனது வாழ்க்கை, புதிய பாதையில் ஆரம்பமாகிவிட்டது. நீ என்னசொன்னுலும் நான் இந்த வழக்கில் என்னுயிரைக் கொடுத்தாவது நீ நிரபராதி என் பதை ருஜுப்படுத்தாமல் நான் இருக்கப்போவதில்லை. அதுவரையில் நான் தீக்ஷை வளர்த்து ஒரு வேளை புசித்து வ்ருதமிருந்து பகவானை பூஜித்து வேண்டித் தொழுது சத்யத்திற்கு ஜெயத்தைக் கொடுத்து ரக்ஷிக் கும்படி நான் போராடுவேன். நான் வெற்றி பெறவில்லை என்ருல் சத்யத்திற்கு மதிப்பில்லை. தர்மத்திற்கு ஜெய மில்லை—என்றதை கடவுளே காட்டிவிட்டால் நானும் தயைதாக்ஷிண்யமின்றி இந்த வெள்ளைக்காரனை வேண்டு மென்று கொலை செய்துவிட்டு அங்கு உன்னுடன் வந்து விடுகிறேன்...'' என்று அதீத உணர்ச்சியுடன் கூறும் வார்த்தைகளைக்கேட்டு எல்லோரும் திடுக்கிட்டார்கள். கதறித்துடிக்கும் தாயின் நிலைமையை கவனியாமல் இருவ ரும் இப்படிப் பேசுவதும் சபதம் செய்வதையும் கண்ட பொதுமக்கள் வியப்புற்ருர்கள். போலீஸார் எத்தனை தடுத்தும் கேட்காமல் உணர்ச்சிப் பெருக்கால் பொங்கி வரும் துக்கத்துடன் தாமோதரன் துடிக்கிருன்.

ஸ்ரீதரன் தாமோதரனைக் கட்டியணைத்து... தம்பீ நீ முற்றிலும் மாறிப்போய் புனர்ஜென்மம் எடுத்துவிட்டதை யறிந்து நான் பரமசந்தோஷமடைகிறேன். நீ புனர் ஜென் மம் எடுத்ததன் பலன் நீயும் ராக்ஷஸனுகி கொலைகாரனுகி விடுவது சற்றும் பொருந்தாது. என்னை நீ முற்றிலும் நம்புகிருயா! உன்னிதய பூர்வமாய் நேசிக்கிருயா! என்ருன்.

தாமோ:—சத்தியமாய் என்னிதயக் கோயிலில் உன்னை சாதாரண அண்ணனுகக்கொள்ளாமல் அண்ணன் என்கிற மகிமையை விளக்கிக்காட்டிய சாக்ஷாத் ஸ்ரீராமசந்திரனைப் போலவே உன்னை நான் மதித்துப் பூஜிக்கிறேன் அண்ணு.

ஸ்ரீதர:—பேஷ்! தம்பீ! என் ஜென்மம் இன்றே சாபல்ய மாயிற்று. நீ எந்த ராமசந்திரனுக என்னை பூஜிக்கிருயோ ! அதுபோல் உன்னைப் பரம பக்தசிகாமணியான பரத னுகவே நான் கருதுகிறேன். அண்ணன் இட்டகட்டளைப் படியே பரதன்நடந்தான்; அதுபோல் நீயும் என்கட்டளைப் படியே நடக்கவேண்டும்; இதுசத்யம். ஸ்ரீ ராமசந்திரன்மீது ஆணையாக இது சத்யம்: உனக்கு நான் ப்ரமாண பூர்வமாய் கட்டளை இடுகிறேன். நீ அதீத ப்ரவ்ருத்தியில் இறங்கி நம் தாயைக் கொலைசெய்தபாதகத்தில் இறங்காதே, அவர் களை இப்போதே அழைத்துச் சென்றுவிடு. இனி என் னைப் பற்றி நினைக்கவே நினைக்காதே ..

அண்ணு! இதென்ன கொடிய தண்டனை, இப்படியா என்னை மடக்கி வாய்ப்பூட்டுப் போடுவது? இதுவா எனக் கிடும் கட்டளை...என்று பின்னும் ஏதேதோ சொல்ல வாயெடுத்த சமயம் போலீஸ்காரர்கள்...ஸார்! இம்மாதிரி பேசிக்கொண்டு போவது சட்ட விரோதமாகும். தயவு செய்து நீங்கள் விலகிவிட வேண்டும். எங்கள் கடமைப் படி எங்கள் வேலைகள் நடக்கவேண்டும். சந்தர்ப்ப சாக்ஷி யமும் நேரடியான சாக்ஷியமும் எங்களுக்குக் காட்டும் உண் மைப்படி நாங்கள் செய்யக் கடமைபட்டிருப்பதால் இனி மேல் வீணுகப் புலம்பிப் புலம்பி நேரத்தைக்கடத்த நாங்கள் அனுமதிக்கமுடியாது. போய்விடுங்கள்.. அம்மணீ! இந்த இடத்திற்கு நீங்களேன் வரவேண்டும். இம்மாதிரி யான பரிதாபகர காட்சியைக்கண்டு தவிப்பதைக்காண நாங்களும் விசனிக்கிறேம். என்ன செய்வதம்மா! நீங்கள் வீட்டிற்குப் போய்விடுங்கள். என்று தன்னையும் மறந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் கூறியதோடு தாமோ தரனையும் தேற்றினர்.

இனி அதிகம் கூறுவானேன்! அவர்களுடைய சட்டப் படிக்கு மேலதிகாரிகள் வந்து சகல விசாரணையும் செய்து பதிவாக்கிக்கொண்டு ஸ்ரீதரனை மரியாதையாக அழைத் துச்செல்லும் சமயம் லேடி டாக்டர் அலையக்குலைய ஓடி வந்து கண்ணீர் விட்டுக் கலங்குவதைப் பார்த்த ஸ்ரீதரன்

அம்மணி! கடவுளின் சித்தப்படியே சகலமும் நடக்கட்டும். நான் அதை ஆனந்தமாகவே ஏற்று நடக்கக் காத்திருக்கிறேன். நீங்கள் என்னிடம்வைத்துள்ள மதிப்பும் விச்வாசமும் கடவுள் மீது ஆணையாக இருப்பது உண்மையாயின் என் தாயாரையும் என் குடும்பத்தையும் நீங்கள் கவனித்துக்கொள்வதோடு தர்ம வைத்யசாலையின் சகல நிர்வாகத்தை தம்பி தாமோதரனுடன் சேர்ந்து நீங்கள்கவனித்து வ்ருத்தியடையச் செய்யவேண்டும். இதுதான் என்னுடைய ஜீவியத்தில் நான் கோரிய லக்ஷியம், இதுதான் என் வாழ்க்கையின் இன்பம். இவைகளை நிறைவேற்றி வைத்தால் அதுதான் என்னிடம் நீங்கள் காட்டும் மரியாதையாகும். என் தாயாரை கவனித்துத் தேறுதல் கூறுங்கள்.

பிறகு தன் தாயைப்பார்த்து,தம்பியின் புனர்ஜென்மம் எனக்கு பரிபூர்ண சாந்தியைக் கொடுத்துவிட்டது. இந்த வழக்கில் யாரும் எத்தகைய முயற்சியும் எடுக்கக்கூடாது. சத்யமே பகவான்! பகவானே சத்யம்! என்பது சாஸ்திரம். அந்த இரண்டு தத்துவங்களும் உண்மையாயிருப்பின் அதற்கு ஜெயத்தை பகவானே கொடுத்து அதன் மகிமையை உலகறியச்செய்யட்டும். அதற்காக நீங்கள் நிச்சயமாய் பாடுபடக்கூடாது. இதுதான் என் கோரிக்கை அம்மா...அம்மா! உன் மனத்தைத் தளரவிடாதே...வீட்டிற்குப் போங்கள்...சந்திரா!...இந்திரா...தாமோதரா... போகிறேன்...என்று கல்லும் கரைந்துருகும்படிக் கூறியவாறு காரில் அமர்ந்தான்.

காரும் பலருடைய கதறலையும் பீறிக்கொண்டு கத்தியவாறு பறந்து சென்றது. அந்தோபரிதாபம்! கல்யாணத்திற்காக பெண் பேசவந்த இடத்தில் இப்படியா விபரீதம் நடக்கவேண்டும்! என்று வானமே கண்ணீர்விட்டு அழுவதுபோல் சிறு தூரல் தூர வாரம்பித்தது.

"சாந்தியின் சிகரம்"

முதல் பாகம் முற்றிற்று.

★

## 17

இந்த அதிர்ச்சிகரமான விஷயத்தைக் கேட்ட அந்த ஊர் ஜனங்கள்—ஸ்ரீதரனின் அபிமானிகள்—அப்படியே கலங்கித் தவிக்கிறார்கள். பல பத்ரிகைகளில் பலவிதமான தலையங்கங்களுடன் வந்துள்ள விஷயத்தைக்கண்டு பொது மக்கள் ப்ரமித்துத் திடுக்கிட்டார்கள். "டாக்டர் ஸ்ரீதரனா இப்படிக் கொலை செய்திருக்கக்கூடும்? இது வெறும் கட்டுக் கதைதான், ஸார்! அவரைப்போன்ற தயாளன் உத்தமன் வேறு யாருமில்லை. அவருடைய மனத்தினால்கூட கொலையை நினைக்கமாட்டார் ஸார்! இது வேண்டுமென்றே அந்த வெள்ளையர்கள் ஜோடித்துக் கூறிய கற்பனைதான். நிச்சயமாய் நான் சொல்வேன்" என்று பலர் மார்தட்டிப் பேசுகிறார்கள்.

ஏழைப் பங்காளனாய் ஏழைகளின் நலனுக்கே பல விதத்திலும் உழைத்துக் காப்பாற்றும் உத்தமனாய் விளங்கும் ஸ்ரீதரனுக்கு இத்தகைய படாப்பழி வந்து விட்டதை ஒருவருமே நம்பாது கூட்டங்கூட்டமாய் அவனைப் பார்க்க போலீஸ்ஸ்டேஷனில் கூடிவிட்டனர். ஸ்ரீதரன் சற்றும் கண்கலங்காமல் வந்தவர்களை எல்லாம் நோக்கிப் பரம வேதாந்தியாய்ச் சாந்தகுணசம்பன்னனாய்க் கைகுவித்தவாறு..."அன்பர்களே! போலீஸ் ஸ்டேஷன் வாசலில் இத்தகைய கூட்டம் கூடுவது சரியில்லை. பிறகு போலீஸார் கூட்டத்தைக் கலைக்கத் தடியடிப்ரயோகம் செய்ய நேரும். இத்தகைய குழப்பத்திற்கு இடம் வைக்காதீர்கள். என்னிடம் இத்தனை அன்புடன் நீங்கள் பார்க்க வந்தது பற்றி நான் பரமசந்தோஷமடைகிறேன். அன்பர்களே! ஒரே ஒரு வார்த்தை சொல்கிறேன்:

இச் சரீரத்தைச் சிறையில் அடைப்பதற்கும் தூக்கிலிட்டுப்போவதற்கும் இத்தனை வருத்தப்படுகிறீர்களே!

இச்சமயம் ஒரு விநாடி சிந்தித்துப்பாருங்கள். நிரந்தரமான சிறையில் நமது பவித்திரமான ஆத்மாவைப் போட்டு வருத்துவதை நாம்சற்றும் நினைத்தே பார்ப்பதில்லை. அத்தகைய விஷயம் ஒன்று இருக்கிறது என்பதைக்கூட எண்ணிப்பார்ப்பதில்லை. சிந்திக்க நினைப்பதுமில்லை. மகத்தான குற்றங்களை—பாபங்களை—சிறிது சிறிதாகச் செய்து அழியாத சிறையில் பயங்கரமான கொடிய நரகத்தில் விழுந்து தவிக்கத் துணியும் நாம் இந்தச் சாதாரண சிறைவாஸத்திற்குப் பயப்படுகிறோம். இதெப்படி இருக்கிறதென்றால் மனிதன் சிறுதூரலுள்ள மழைக்குப் பயந்து நடுங்கி ஒதுங்கப் பார்க்கிறான். ஆனால் காலவெள்ளத்தின் கர்ஜனை இவனைக் கூவியழைக்கின்ற பயங்கரத்தை நினைப்பதே இல்லை.........மழைத்துளிக்கு பயமா!...... காட்டுவெள்ளத்தையும் மிஞ்சிய காலவெள்ளத்திற்குப் பயமா!...இதை நினைத்துப்பாருங்கள். என்னிதயம் ஏழைகளுக்குச் சேவை செய்யவும் அநாதைகளுக்கு உதவிபுரியவும் தூய த்யாக வாழ்க்கை வாழ்ந்து அந்த உத்ஸாகத்துடன் சாந்தியின் சிகரத்தில் நிம்மதியாக வாழவுமே விரும்பியது. அந்த விருப்பத்தை பகவான் தூக்குமரத்தின்மூலம் அளிக்கத்தான் இந்த விஷப்பரீக்ஷையில் என்னை மாட்டியிருக்கிறார் என்று நான் சந்தோஷமே படுகிறேன். உங்களை நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தயவுசெய்து இனி இப்படிக் கூட்டம் போடாமல் போய்விடுங்கள். போலீஸாருக்கு வீண் தொந்தரவு கொடுக்காமல் கலாட்டாசெய்யாமல் போய்விடுங்கள். இதுதான் வேண்டிக்கொள்கிறேன்" என்று வாய்விட்டுப் பெரியதாகக் கூறிய கம்பீரத்தையும் அழகையும் கண்ட பொதுமக்கள் அடைந்த வியப்புக்கும் ஆனந்தத்திற்கும் எல்லையே இல்லாதுபோய்விட்டது.

"இத்தகைய கருணாமூர்த்தியா கொலை செய்வார்? இத்தகைய வேதாந்தியா கொலை செய்வார்? அநியாயம்! கேவலம் மதம்விட்டு மதம் மாறச்செய்து ஒரு இந்துப்

பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு சொத்துக்காக ஆசைப்பட்டு வந்த வெள்ளைக்காரனின் சாட்சியங்களையும் சந்தர்ப்ப சாட்சியங்களையும்வைத்து இந்த மகானுபாவனை இப்படிக் கைது செய்யலாமா! போலீஸ்காரர்கள் செய்தது அக்ரமமேயன்றி வேறில்லை. இந்த அநியாயத்தைப் பொதுமக்களாகிய நாங்கள் பொறுக்கமாட்டோம். இந்த ஏழைப் பங்காளனை நிரபராதி என்று விடுதலை செய்துவிட்டுத்தான் நாம் சும்மா இருப்போம். அநியாயத்திலும் கொடிய அநியாயம் இது!...ஊரறிந்த பெரிய டாக்டரா இத்தகைய கேவலமான காரியத்தைச்செய்வார்? ...என்று கொஞ்சங்கூட யோசிக்காமல் போலீஸார் கைது செய்தது தவறு தவறு" என்று ஒரே கூக்குரலிட்டுக் கத்தும் பொதுமக்களைப் போலீஸார் எத்தனையோ ப்ரயாஸைப்பட்டு விலக்கினார்கள்.

சில மனிதர்களின் ஸ்வபாவத்தில் சிறிய சிறிய விஷயங்களுக்கெல்லாம் மனம் அதிர்ச்சி தாளாமல் சோர்ந்து மூர்ச்சையாகிவிடுவதும் இதயமே நின்றுவிடுவதும் அல்லது பலஹீனப்பட்டுப் பலபல வ்யாதிகளில் கொண்டுவிடுவதுமாக ஆகிவிடுகின்றன. ஆனால் அவர்களுக்கே மகத்தான பெரிய பெரிய அதிர்ச்சிகள் உண்டாகிவிடும்போது அதே மனிதர்களின் இதயத்தளர்ச்சி எப்படியோ மாறிப்போய்க் கெட்டிப்பட்டு மேலும்மேலும் உழைக்கப் பின்வாங்காத நிலையை அடைந்துவிடுவதை உலகில் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம்.

தற்சமயம் கமலவேணியம்மாளின் நிலைமை அதே ரகத்தைச் சேர்ந்து உரம்பெறத் தொடங்கியது. மகன் விவாகம் செய்துகொள்ளாமல் சன்யாசியாகிவிடுகிறான் என்றதைக் கேட்டு இடிந்துபோன இதயம் இப்போது கொலைக் குற்றத்திற்காகத் தன் மகனை அக்ரமமாய், அநியாயமாய்க் கைது செய்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டதும், தீவிரமான ஆக்ரோஷம் உண்டாகி, எப்படியாவது சண்டைசெய்து தன் மகன் நிரபராதி என்பதை நிலை

நாட்டி உலகமறியச் செய்யவேண்டும் என்கிற ஆவேசம் வந்துவிட்டதால் கத்துவதும் கதறுவதும் வீராவேசத்துடன் திட்டித் துடிப்பதும் அவனைக் கைது செய்த பாவிகளை நானே கொலைசெய்துவிடுகிறேன் என்று அதீதமான நிலைமையில் பயித்தியம் பிடித்தவள்போல் இரைவதும் சிறிய மகனிடம் ஓடி, "தாமோதரா! கிளம்பு! உடனே கிளம்பு! அந்த அதிகாரமடையன்களிடம் எல்லாம்போய் உண்மையின் உயர்வைக் கூறி முறையிட்டு அண்ணுவை அழைத்துவருவோம், வா! வா!" என்று வற்புறுத்தும் படியான நிலைமையில் வந்துவிட்டது.

உண்மையில் தன்னுடைய அண்ணனின் உத்தம குணமும் மதிப்பும் தெரியாமல் தனக்கு த்ரோகம் செய்யும் பங்காளி, பகையாளி, தன்னுடைய க்ஷேமத்தையே கருதாத கல்நெஞ்சன் என்றெல்லாம் தவறுதலாகவே எண்ணி அதற்கேற்ற முறையிலேயே தன்மனோபாவத்தை விரியவிட்டதோடு அதே இதய உணர்ச்சியுடன் அதே கண்களால் அண்ணனை நோக்கிவந்ததால் இதுபர்யந்தம் விரோதியாகவே காணப்பட்டான்.

இன்றய சம்பவத்தின் பயனால் பூகம்பத்தில் ஒரு கட்டிடம் அழிந்து மறைந்துபோய் நூதன கட்டிடம் ஒன்றுபுதுமையாக எழுவதுபோல் தாமோதரனின்பழைய பகைமையான எண்ணம் அடியோடுமாறிப்போய் அண்ணனின் உண்மையன்பும் த்யாகத்தின் சிறப்பும் அவன் சத்யமான கொள்கையுடையவன் என்கிற தத்துவமும் நன்றாக மனத்தில் பதிந்து ஊர்ஜிதமாகிவிட்டதால் அடியோடு புதிய மனிதனாக மாறிப்போய்விட்டான்! தன்னுடைய கல்யாண விஷயமாய்ப் பெண்பார்க்கப் போனதின் பலனல்லவா இத்தகைய விதியமைந்தது என்று தனக்குள் எண்ணி எண்ணி உருகித் தவிக்கிறான்.

அண்ணனின் தீவிரமான ப்ரம்மசரிய வ்ருத அனுஷ்டானத்தின் உயர்வும் தான் மனத்தை அடக்காது திரிய

விட்டுவிட்ட வேகத்தின் அலங்கோலத்திஞல் உத்தமஞகிய அண்ணனையே தீராத விரோதிபோல் எண்ணிவிட்டோமே என்ற விசனமும் அவனை வெகுவாய்ப் பாதித்து வாட்டுகிறது.

'எந்தவிதமான காரியத்தைச் செய்தால் நிரபராதியான அண்ணனின் இந்த அபவாதப் பழியை நீக்கி விடுதலை பெறச்செய்யலாம்?...என்னுடைய பாபத்தைப் போக்கிக்கொள்ள வழிதேடலாம்' என்கிற அபாரமான உணர்ச்சிதான் தலைதூக்கி நின்றது. இந்த நிமிஷம் வரையில் ஆத்மார்த்தமான எந்த விஷயத்திலும் சம்மந்தப்படாது வெளிவேஷத்திலும் டாம்பீகத்திலும் சிற்றின்பத்திலும் அநாகரீகத்தையே தனது வாழ்க்கையின் சாச்வதமான நாகரீகம், பண்பாடு, சுக்ருதம் என்றெல்லாம் எண்ணி மனத்தையும் தனத்தையும் நாசம் செய்துவந்த ஊதாரித்தனத்தின் அவகேடு இப்போதுதான் நன்ருகப் பளிச்சென்று தெரிந்தது.

முதல்நாள் உஷாதேவி மூலம் ஏமாற்றம் உண்டாகிய போது அண்ணன் மீதுதான் அஸாத்ய கோபம் வந்தது. தேவதாசிவகுபபில் பிறந்தவர்களுக்கு உறவுமுறை என்ன வேண்டிக்கிடக்கிறது! "தேவடியாள் மக்களுக்குத் தகப்பன் யாரு?" என்பது பழமொழி! அங்ஙனமிருக்க, தேவடியாளின் உறவில் அண்ணஞவது தம்பியாவது? இதெல்லாம் வீணுன வார்த்தைகள். ஆதலால் இதைப்பற்றி அண்ணனை எதிர்த்தடித்துப் பின் உஷாவையே மணந்து உல்லாஸமாயிருப்பதே சரி என்று தீர்மானித்த அதே மனிதன்..உஷாவின் வார்த்தைகளைக்கேட்டபிறகு மனது குழம்பிய அதே மனிதன்...இன்று இச்சம்பவத்திஞல் முற்றிலும் மாறிவிட்டான் என்ருல் எத்தனை ஆச்சரியம்!

அவன் ஜென்மத்தில் ஜாதிவழக்கப்படி வேஷ்டி உடுத்தியதே கிடையாது. சதா கால்சட்டையே அணிந்திருப்பவன். இன்று அண்ணனைக் கைதுசெய்து அழைத்

துச்சென்றதும் அளலிடை மெழுகெனத் துடித்து உருகிய் வாறு வீட்டிற்கு வந்தான். அந்தோ! பூஞ்சோலைபோல் குளுகுளுவென்று காட்சியளித்த அதேமாளிகை சூனியமே குடிகொண்ட பயங்கர நரகம்போல் காட்சியளிக்கும் உணர்ச்சியை கமலவேணியைவிட தாமோதரன் அதிகம் உணர்ந்து துடித்தான். நேரே சென்று ஸ்நானம் செய்துவிட்டு அவன் ஜென்மத்தில் முதல் தடவை யாக வேஷ்டியை அணிந்து நெற்றியில் விபூதி குங்கும மணிந்துகொண்டு நேரே பூஜா ரூமுக்குச் சென்றான். காலையில் தன் அண்ணன் பூஜைசெய்துவிட்டுச் சென்ற அழகும் வாஸனாத்ரவ்யங்களின் பரிமளமும் தீபஜோதி யின் ப்ரகாச எழிலும் பகவானின் தரிசன அழகும் ஒன்று கூடி இதுவரையில் அனுபவித்திராத ஒரு தனி உணர்ச்சியும் வசீகரமும் மின்ஸார சக்திபோல் இதயத் தில் பாய்ந்து விசித்ரமான தாக்குதலை உண்டாக்கிக் கண் ணீரை அவனறியாதபடியே உதிரச் செய்தது.

"அடாடா! இத்தகைய அபூர்வமான ஆனந்தத்தை உண்மையான ஆனந்தமென்றே மதியாமல் இதுகாறும் பாழாகிவிட்டோமே" என்று தானே நெஞ்சுருகும்படி யான நூதன உணர்ச்சி உண்டாகியதும் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தான். "என்னப்பனே! ரக்ஷகா! என் அஜ்ஞான இருளைப் போக்கி ஏதோ ஒரு சிறிது புத்தி யுண்டாக்கிக் கண் திறக்கச் செய்ததுமட்டும் போதாது. இத்தகைய உணர்ச்சிக்குக் காரணமாயமைந்த கொலைக் குற்றச்சாட்டை என் அண்ணன் மீது சாராது மாற்றி அவன் உடனே விடுதலையாகி வந்து உங்களை ஆனந்த மாய் ஸேவிக்குபடியான சந்தர்ப்பத்தைக் கொடுத்து எங்களை ரக்ஷிக்கவேண்டும். என்னருமைத் தாயாரின் உள் ளத்தை மகிழ்ச்சியடையச் செய்யவேண்டும் நீ உண்மை யான கடவுளாக இருந்தால் உத்தமனை உத்தமன் என்று உலகமறியச் செய்துகாட்டவேண்டும். என் அண்ணனின் மகிமையை நான் இதுகாறும் அறியாதபாவியாகிவிட்டது

போதும். இனி உலகம் அவனைப்போற்றி அவன் புகழை அறியும்படிக்குச் செய்தால்தான் நீ சத்தியமான தெய்வ மென்று நம்பமுடியும்......ஐயோ! எனக்குத் தோத்திரம் செய்யக்கூடத் தெரியவில்லையே! பகவானைப் பற்றிய தோத்திரப் பாடல்களோ, ச்லோகங்களோ ஒன்றுமே தெரியாது மரத்த கட்டையாய்த் தடிமரம்போல் வளர்ந்து விட்டேனே! ஒன்றுமே தெரியாத முட்டாள் பிழைப்பில் காலம் கடந்துவிட்டதே!'' என்று மனமுருகித் துக்கித்த வாறு உட்கார்ந்துவிட்டான்.

ஸ்ரீதரன் ப்ரதிதினம் பாராயணம் செய்யும் புத்தகங் களை அங்கு ஸரஸ்வதிபீடத்தில் அழகாகவைத்து அதன் மீது புஷ்பம் சாத்தியிருக்கும் அழகும் இவன் கருத்தைக் கவர்ந்து இழுத்தது. உடனே அவைகளை எடுத்துப் பார்த்தான். ஸ்ரீராமாயணம், பகவத்கீதை, திருப்புகழ், திருக்குறள், தேவாரம், ஸ்ரீஸ்துதி, ஸ்தோத்ர ரத்னகரம், திவ்யப்ரபந்தம், ஸ்காந்தபுராணம், லலிதா ஸ்தோத்ரம், திருவருட்பா, முகுந்தமாலை, திருவேங்கட சதகம் முதலிய பலபல புத்தகங்கள் இருப்பதைக் கண்டு அவற்றில் ஏதோ சில தோத்திரப் பாடல்களைப் பாடி தோத்திரம் செய்தான்; வேண்டிக்கொண்டான்; மனத்தில் ஏதோ ஒரு புனிதத் தன்மை....இன்பம்...சாந்தியின் திவலை முதலியவைகள் படருவதுபோன்ற ஒரு உணர்ச்சி உண்டாகியது!...

கடவுளை வணங்கிவிட்டு நேரே தாயாரிடம் வந்தான். அந்தம்மாளே எதிர்பாராதவிதம் தாயாரின் காலில் விழுந்து வணங்கி, "அம்மா! என்னுடைய போதாத காலக்கொடுமையினால்தான் அண்ணனுக்கு இத்தகைய அவமான கதி உண்டாகியது. இதற்குக் காரணம் நானே தான்; எனக்காகப் பெண் பார்க்கும்பொருட்டு என்னை அழைத்துச்சென்றதனால்தானே இம்மாதிரி ஆகிவிட்டது. இத்தகைய உத்தமனான அண்ணனை நான் மிகவும்

கடுமையாக எண்ணிவிட்டேன். அநியாயமாய்த் தாக்கிப் பேசி மனத்தைப் புண்படுத்திவிட்டேன். அவன் பரம பக்தன், உத்தமன், அனுதைகளின் போஷகன் என்ற சிறந்த செய்கைகளை எல்லாம் நான் வெறும் வேஷம், போலி டாம்பீகம், ஊரை ஏமாற்றும் மோசடிச்செய்கைகள் என்று எண்ணிவிட்டது மகா பாதகம் என்பதை இன்று உணர்ந்துவிட்டேன். இனி நான் எதை உணர்ந்து என்ன உபயோகம்? காரியம் கரைகடந்து விட்டது. இனி நான் அழுதாலென்ன! முட்டிக்கொண் டால்தான் என்ன! அண்ணுவை நிரபராதி என்று ருஜு செய்யும்வரையில் நான் ஒரு வேளை உபவாஸமிருந்து தீக்ஷை வளர்த்து கங்கணங்கட்டிக்கொண்டு உழைக்கப் போகிறேன். துப்பறியும் நிபுணர் ஸ்ரீ ராஜாராம் நாயுடு காருவின் உதவியைக் கோரி அவருடைய திறமையினுல் இந்த வழக்கில் அண்ணனுக்கு ஜெயத்தைப் பெற வேண்டும் என்று மனது துடிக்கிறது. அண்ணுவோ எதையும் செய்யக்கூடாதென்று தெய்வசாட்சியாக ஆணை யிட்டு உத்திரவு செய்திருக்கிருர். நான் என்ன செய்வேன் அம்மா!'' என்று கதறினுன்.

கமலவேணியின் நிலைமையில் சிறிய மகனின் மாறு தலைக் கண்டு ஒருபுறம் வியப்பும் ஒருபுறம் சந்தோஷமும் உண்டாகியது. "குழந்தாய்! தாமோதரா! இத்தனை நாள் உன்னுடைய நலனுக்காகவே நான் சொல்லிய சகலமொழி களும் உனக்கு விபரீத தீமைகளாகவே தோன்றின. பெற்ற தாயின் தவிக்கும் உள்ளத் துடிப்பை நீ அறியாது வீணுகிவிட்டாய். போனது போகட்டும்; இப்போதாவது உனது நல்ல காலத்திற்கு இத்தகைய மாறுதல் உண் டாகியது பற்றிச் சந்தோஷப்படுகிறேன். அண்ணனின் ஆணையின்படிக்கு நீ வேண்டுமானுல் நேரடியாக எந்த ப்ரயத்தனமும்செய்யவேண்டாம்; என்மனம் கேட்கவில்லை; தவிக்கின்றது; நானும் உன்னைப்போல் துப்பறியும் ராஜா ராம் நாயுடுவின் உதவியைப் பெற்று எப்பாடு பட்டேனும்

அண்ணனின் தூய்மையை உலகிற்குக் காட்டிவிடவே சங்கற்பம் செய்துகொண்டிருக்கிறேன். நீ உன் அண்ணன் கவனித்துவரும் அனுதை நிலையத்தையும் தர்ம ஆஸ்பத்ரியையும் சரியான முறையில் கவனித்து நடத்திவா. அவன் இல்லை என்றதனால் அந்த ஸ்தாபனங்கள் சரிவர நடக்காது வீணாகிவிடக்கூடாது. எரிகிற வீட்டில் கிடைத்தது லாபம் என்று எவராவது சுரண்டிக்கொண்டுபோய் விடுவார்கள். தம்பீ! ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ளு" என்று இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் இவர்களே ப்ரமிக்கும்படி மிகவும் எளிய முறையில் சர்வசாதாரண மான உடையில் கம்பீரமான பார்வையுடன் உஷாதேவியும் அவளுடைய தாயாரும் வந்தார்கள்.

"அண்ணா! இதென்ன? அநியாயமான விஷயத்தைக் கேள்விப்பட்டு நாங்கள் திடுக்கிட்டு ஓடோடிவந்தோம். பெரிய அண்ணா இப்போது எங்கிருக்கிறார்? ஏன் ஜாமீனில் விடுதலைசெய்ய ப்ரயத்தனப்படக்கூடாது?...பெரியம்மா! பழைய விஷயங்கள் சகலத்தையும் மறந்து மன்னித்து விடுங்கள். உங்கள் இந்திரா, சந்திராவைப்போல் நானும் ஒரு மகள் என்பதனால் என்மீது கருணை காட்டவேண்டும். முத்தண்ணாவின் உத்தம குணமும் த்யாகச் சுடரும் அவருடைய வாழ்க்கையின் அபாரமான பண்பாடும், யாவும் நான் நேற்றுதான் என் சிநேகிதர் ஒருவரால் அறிந்து பரம சந்தோஷப்படுவதற்குள் இத்தகைய அதிர்ச்சியான விஷயத்தைக் கேட்டு இதயம் தவித்துப்போகிறது. என்னுடைய நேற்றுவரையிலிருந்த டாம்பீக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து நானும் எளிய வாழ்க்கையில் வாழத் துடங்கிவிட்டதன் பலன் பரோபகாரமே செய்து என் காலத்தை நல்ல முறையில் அண்ணாவுடன் கூடவே சேர்ந்து நர்ஸ் தொழில்செய்து சந்தோஷமாய்க் கழிக்கத் தீர்மானம் செய்துவிட்டேன். என்னுடைய மனக்கோட்டையின் விபரீதத்தினுல்தான் இப்படி ஆய்விட்டதோ என்றுகூட எண்ணித் துடித்தவாறு ஓடிவந்தேன்....

பெரியம்மா!......அண்ணு! நீங்களிருவரும் கவலையே படவேண்டாம். நான் இப்போது லேடி டாக்டர் துளஸீ பாயைப் போய்ப் பார்த்துவந்தேன். எந்தவிதமாவது பாடு பட்டு அண்ணுவை நிரபராதி என்று உலகமறியச் செய்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பது என்று நாங்கள் கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டோம். நானே இனி அனுதைநிலயத்தின் பொறுப்பை சகல விதத்திலும் முன்நின்று கவனிப்பதாகச் சொல்லிவிட்டுப் பின்னர்தான் இங்கு வந்தேன். போலீஸ் கமிஷனர் ஸ்ரீமான் அச்சுதன் அவர்களை எனக்கு நன்ருகத் தெரியும்: (குறிப்பு: ஸ்ரீமான் அச்சுதனைப்பற்றி அறிய ஆவலுள்ளவர்கள் வை. மு. கோ. வின் 50-வது புத்தகமாகிய ஆத்மசக்தி என்கிற துப் பறியும் நாவலை வாங்கிப் படித்தால் தெரியும்) அச்சுதனின் மகளும் நானும் க்ளாஸ்மேட்டுகள். அடிக்கடி அவர்கள் வீட்டிற்குச் சென்றிருக்கிறேன்: அவர் மிகவும் கெட்டிக் காரர்; நல்ல உத்தமர். அவருடைய மனைவி மகாமேதை; தர்மலட்ச்மி என்ருல் தகும். அந்த உபகாரியிடம்போய் நான் இதுவிஷயமாக விசாரித்துப் பின் பெயிலில் அண் ணுவை மீட்க ப்ரயத்தனம் செய்யப்போகிறேன்...எப்படி யும் அண்ணுவுக்கு விடுதலை கிடைத்துவிடும்...''

என்று மூச்சுகூட விடாமலும் எதிரிலுள்ளவர்கள் பேச இடமில்லாமலும் படபடவென்று தானேபேசுகிருள். தாமோதரனும் முற்றிலும் புதிய வாழ்க்கையை ப்ரமாண பூர்வமாய் மேல்கொண்டுவிட்டதால் இப்போது உஷா வைப் பார்த்ததும் பழைய கல்மஷமான எண்ணங்கள் தோன்ருமல் ஒருவித வியப்பும் புனிதத் தன்மையின் சாயலும் தோன்றித் திகைக்கச் செய்தது.

உஷாவின் தாயார் சுந்தராம்பாள் மிகுந்த வணக்கத் துடன், "அக்கா! நான் பலவிதத்திலும் கீழ்த்தரமானவள் எனினும் முறைதவறி ஒழுங்கற்றுக் கற்பிழந்து வாழ வில்லை. அவரை மணந்து அவருடன் சகலமும் மறைந்

தது; எனினும் நம் உஷாவுக்காக எனக்குள்ள சங்கீதம் நடிப்புக் கலை இரண்டையும் உபயோகித்துப் பொருள் சம்பாதித்தது உண்மை. அதுகூட விட்டுச் சில வருஷங் களாகிவிட்டன. எத்தனை குற்றங்களிருப்பினும் மன் னித்து குழந்தை உஷாவின் எதிர்காலத்தின் வாழ்க் கைக்கு நீங்கள் தான் துணைபுரிந்து உதவியளிக்கவேணும். நம் குழந்தை டாக்டரைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண் டாம். நான் துப்பறியும் ராஜாராம் நாயுடுவைப் பார்த்துத் தகுந்த ஏற்பாடுசெய்து கட்டாயம் விடுதலை பெறும்படிச் செய்கிறேன். பயப்படவேண்டாம். பெற்ற வயிற்றின் துடிப்பு எத்தகையது என்பதை என்னுள்ளம் அறியாம லில்லை...தம்பீ! நீயும் கண்ணீர்விடாதே. பணத்தை ஜல மாகச் செலவிட்டு கடைசீவரையிலும் அப்பீல் செய்தே தீர்த்துவிடுவது என்று உஷாவும் நானும் சங்கல்பம் செய்துவிட்டோம். இனி ஆகவேண்டிய காரியத்தைப் பார்க்காமல் கண்ணீர்விட்டுக்கொண்டே உட்கார்ந்திருக்கக் கூடாது; வா, தம்பீ! நாம் நாயுடுகாருவின் வீட்டிற்குப் போகலாம்''...என்று மரியாதையாய்க் கூறினாள்.

கமலவேணியின் ஆச்சரியம் கரைபுரண்டது. நேற்று ப்ரமாதமான ஆடம்பரத்திலிருந்த அதேபெண்ணு இன்று இப்படி மாறிவிட்டதோடு அல்லாமல் பழைய எண்ணங் களை அடியோடு மறந்துபோய் முற்றிலும் புனர்ஜென்மம் எடுத்தமாதிரி ஆகிவிட்டது என்ன விசித்திரம்? பாவம்! சிறு பெண்ணுயிருந்தும் எத்தனை விவேகம் உதயமாகி விட்டது!...என்ற பச்சாத்தாபமும் அன்புமே தோன்றிய வேகத்தில் உஷாவை இழுத்து அணைத்துக்கொண்டு "குழந்தாய்! உலகச்சுழலில் எத்தனை விசித்ரமான மாறுதல் களை நாம் காண்கிறோம் பார்த்தாயா! சகலமும் பூகம்பத் தின் அதிர்ச்சியும் விசித்திரமுமாகவே இருக்கிறது. சகல மும் பகவானின் செயல். அந்த ரக்ஷகன் நம் ஸ்ரீதரனின் நிரபராதித்தனத்தை வெளியிட்டு அவனுடைய லக்ஷி யப்படி அவனை சாந்தியின் சிகரத்தில் வைத்து ரக்ஷித்தால்

போதும். ஒருவருடைய முறையீட்டிற்கு இரங்காவிடினும் மற்றொருவருடைய அவக்குரலுக்கு இரங்கி அபயந்தரமாட்டானா! என்று நம்பித்தான் இருக்கிறேன்...அம்மா சுந்தரா! ...நீயும் உன் முயற்சியினால் நம் குழந்தையின் விபத்தை நீக்கி உதவினால் போதும். எந்தக் காரியமாவது செய்து அவனை விடுதலைசெய்து அழைத்துவாருங்கள். மகா பாபியாகிய என் துரதிருஷ்டத்தின் பலனால் உண்டாகிய சோதனைகள் நீங்கி உங்கள் போன்றவர்களின் நல்லெண்ணத்தினால் நன்மையாகவே முடிந்தால் போதும்" என்று கண்ணீர்விட்டாள்.

தாமோ:—உஷா! 'நான் எத்தகைய முயற்சியும் செய்யக்கூடாது. பகவானே சத்தியத்திற்கு ஜெயமுண்டு என்பதை உலகத்திற்கு நிரூபித்துக் காட்டவேண்டும்; நீ ஒன்றும் ப்ரயத்தனம் செய்யக்கூடாது' என்று அண்ணா ப்ரமாணமாய் ஆணைவைத்துக் கட்டளை இட்டிருப்பதால் நான் எந்தவிதமும் செய்யமுடியாமல் தவிக்கிறேன். நல்ல வேளையாய் நீயும் சின்னம்மாவும் வந்தீர்கள். அண்ணாவுக்குத் தெரியாமலேயே முயற்சிகள் செய்து வெற்றியைப் பெறவேண்டும். நீங்கள் இப்போதே அந்த இரண்டு சவங்களும் அடக்கமாவதற்கு முன்பே நாயுடுகாருவைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிவிடவேண்டும்—என்றான்.

உடனே உஷாவும் அவள் தாயாரும் உத்திரவு பெற்றுச் சென்றார்கள். கமலவேணியம்மாளின் புகைந்து கொண்டு கிளம்பும் துக்கத்திலும் தனது சிறிய மகனின் மாறுதலும் சேர்ந்தாப்போல் உஷாவின் மாறுதலும் அபாரமான வியப்பைக் கொடுத்துத் தம்பிக்கச் செய்தன.

---

## 18

**பா**ர்ப்பதற்கு ஸ்ரீதரனும் தாமோதரனும் ஒரே சாயலாக கம்பீரத் தோற்றத்துடன் இருப்பார்கள். தர்ம வைத்யசாலைக்கும் அனாதைநிலையத்திற்கும் இதுவரையில்

தாமோதரன் சென்று பார்த்ததே கிடையாது. இந்த இரண்டு ஸ்தாபனங்களையும் வைத்து இவற்றின்பேரால் பணம் சம்பாதிப்பதாயும், பணக்காரர்களிடம் அனுகரிக மாய் பணம் அதிகம் பறிப்பதாயும், பரமயோக்யன் ப்ரம்ம சாரி என்று வேஷம்போடும் அண்ணு தீய நடத்தை நடத்த இந்த ஸ்தாபனங்களை உதவியளிக்கும் கொடிய இடங்களாக அமைத்துக்கொண்டிருக்கிருன் என்றும் அபாண்டமாய் எண்ணி ஏளனம் செய்துவந்த தாமோ தரன் ஆடம்பரமற்ற சர்வசாதாரண உடையில் மிகவும் அமரிக்கையாயும் சோகமே வடிவாயும் முதலில் அனுதை நிலயத்திற்குச் சென்று பார்த்தான்.

"என்ன பரிதாபம்! எத்தனை குழந்தைகள் ! எத்தனை பெண்மணிகள் !...நாதியற்றுக்கிடக்கும் பரிபவத்துடன் இங்குக் காட்சியளிக்கின்ருர்கள்! நம் நாட்டில் இத்தனை கோராமைகளா இருக்கின்றன ? அடாடா!...இதுகாறும் இத்தகைய பரிதாபம் நம் கண்ணில் படவேஇல்லையே ; உம்! என் கண்கள் அஞ்ஞான அந்தகாரத்தில் மூடிக்கிடந்த சமயத்தில் மற்ற எதுதான் என்கண்களில்படும்? நான் அத் தகைய உணர்ச்சியுடன் பார்த்திருந்தால் அண்ணுவைப் போல் அவ்வளவு சிறந்த ஸேவையைச் செய்து த்யாகத் துடனிருக்காவிடினும் ஏதோ பச்சாத்தாபமாவது உண் டாகி இருக்குமல்லவா! இத்தனை குழந்தைகளும் அனுதை களா? பெற்ருேரை இன்னுரென்று அறியாத பரதேசி களா?"...என்ற ஒருவிதமான் உணர்ச்சி இதயத்தில் வேகமாய் உண்டாகியது.

ஒரு நாளும் இல்லாமல் திருநாளைப்போல் இன்று தாமோ தரன் வந்திருப்பதையும் அவனுடைய மனமாறுதலையும் ஆடம்பரமற்ற எளிய உடையையும் சாத்வீகமான பார்வை யையும் கண்டு அங்குள்ள மானேஜர் முதல் சகலரும் வியப் புற்றது ஒருபுறம் ; தங்கள் எஜமானருக்கு இத்தகைய விபரீத சம்பவம் நேர்ந்துவிட்ட துக்கம் ஒருபுறம்; இரண் டும் பாதிக்க தாமோதரனை வரவேற்றதுடன், "எஜமான

ருக்கு இத்தகைய அபவாதம் வரலாமா? அனுவசியமாய், அநியாயமாய் எஜமான்மீது பழியைச் சுமத்திய அந்தச் சண்டாளர்களாகிய வெள்ளைக்காரப் பாவிகளைச் சும்மா விடக்கூடாது. ஏதோ போலீஸார் அவர்களையும் லாக்கப்பில் வைத்திருப்பதையே தாளாது பல வெள்ளையர்கள் ப்ரமாதமாய்ச் சீறி எழுந்து அவர்களை விடுதலை செய்யப் போராடுகிறார்கள். சின்ன எஜமான்! சத்யமாக இந்தக் காரியத்தை அதே வெள்ளையர்கள்தான் துணிந்து செய்திருக்கவேண்டும்: தான் ஒரு இந்துப் பெண்ணின் மனத்தைக்கெடுத்து மாற்றி விவாகம் என்கிற ஒரு பந்தத்தை உண்டாக்கிக்கொண்டு அந்தப் பெண்ணின் சொத்துக்களையும் தானே அபகரிக்க வந்தவிடத்தில் இத்தகைய விபரீதம் நடந்துவிட்டதால் அந்த வஞ்சம் தீருவதற்காக அந்தப் பாவிகள்தான் இக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும். இதில் சந்தேகமே இல்லை. நம் எஜமானரை விடுதலை செய்ய நாம் உடனே ப்ரமாதமான முஸ்தீப்புகளுடன் வேலை செய்யவேண்டும். எங்களுக்கு இந்த கஷ்டம் சகிக்கவே முடியவில்லை"...என்று தம்தம் அபிப்ராயத்தைச் சொல்லிக் கண்ணீர்விட்டார்கள்.

சற்று புத்தி தெரிந்த குழந்தைகள் ஓடிவந்து "டாக்டர் மாமா எப்போ வருவா?...டாக்டர் எங்கே போயிருக்கா?" என்று களங்கமற்ற உள்ளத்துடன் கேட்பதைக் கண்டு தாமோதரனுக்கு இதுகாறும் அனுபவித்தறியாதவிதம் மனத்தில் ஏதோ செய்து பலவித உணர்ச்சிகளை உண்டாக்கியது. "சின்னஞ்சிறு குழந்தைமுதல் பெரிய கிழவர்கள்வரையிலும், பெரியபெரிய ஞானிகள் முதல் பிச்சைக்காரர்கள்வரையிலும் போற்றிக்கொண்டாடக்கூடிய ஒரு திவ்ய சக்தி வாய்ந்த அபூர்வ மனிதனை நான் உடன்பிறந்த அண்ணனுகப் பெறும் பாக்யத்தைச் செய்திருந்தும் அந்த அருமையை—அந்த உயர்வை—அறிந்து நடந்து இன்புருது, கேவலம் அவனை எனது ஜென்மவிரோதி என்ற உணர்ச்சியுடனல்லவா என் வாழ்

நாளைக் கழித்துவிட்டேன்! அண்ணாவின் பெருமையை அம்மா எடுத்துச் சொல்லும்போதெல்லாம் அம்மாவை வஞ்சனைக்காரி என்றும், பக்ஷபாதமுள்ள மோசக்காரி என்றும் வாய்கூசாமல், பெற்ற மனத்தின் தவிப்பை அறியாமல் திட்டினேனே. இந்தக் குழந்தைகள் கேட்கும்போதல்லவா என் முட்டாள்தனம் இன்னும் அதிகமாய்த் தெரிகிறது...''

என்று தனக்குள்ளேயே எண்ணும்போது கண்ணீர் அடக்கமுடியாமல் மளமளவென்று வந்துவிட்டது. ஏதோ ஒருவாறுசமாளித்து அடக்கிக்கொண்டுஉள்ளே சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே வருகையில்அந்த நிலையத்தின் பூஜாக்ருகத்தில் சில வயதுவந்த அனாதைப் பிள்ளைகள், பெண்கள், சில பெரியவர்கள் முதலிய பலரும் பகவான் முன்பு மண்டியிட்டு ப்ரார்த்தனை செய்து, "என்னப்பனே! எங்கள் எஜமானர் நிரபராதி என்பதை நீயுமா அறியமாட்டாய்? அவர் மிதித்த மண்கூட கொலைசெய்யாதே! அப்படி இருக்க பரோபகாரத்திற்கே உழைத்துப் பாடுபடும் எங்கள் உத்தம த்யாகியை கொலைகாரன் என்று சிறையில் அடைப்பதை நீ பார்த்துச் சகித்துக்கொண்டிருக்கிறாயே! இது உனக்குத் தகுமா? இது அடுக்குமா? உன் பெருமைக்கு இது பொருந்துமா? எங்கள் வள்ளலான டாக்டரை நிரபராதி என்று விடுதலை செய்யப்போகிறாயா? அல்லது அவர் வளர்த்துப் பயிரிட்டு உருப்படியாக்கி வரும் எங்களை எல்லாம் கொலைசெய்யப்போகிறாயா? எங்க டாக்டரை நீ நிரபராதி என்று காட்டாமல் தூக்குமரத்தில் மாட்டி வேடிக்கை பார்ப்பாயானால், நாங்கள் அத்தனை பேர்களும் தற்கொலை புரிந்துகொண்டு அந்தக் கொலை பாதகத்தை உன்மீதே சாரும்படிச் செய்வோம்! எங்கள் டாக்டர் சத்யசந்தன்; அவர் மகாஞானி; கருணாமூர்த்தி; த்யாக பிம்பம்; அவருடன் பிறந்த அல்பனைப்போல் அவரையும் நினைத்துவிட்டாயா?''...என்று மனமுருகிக் கண்ணீர் பெருகக் கதறி ப்ரார்த்தனை செய்யும் உள்ளன்பையும் பக்தியையும் நேரில் காணும் தாமோதரனின்

உள்ளம் படும்பாட்டை விவரிக்கவே முடியவில்லை. தன்னுடைய அல்பச்செயலும் பொறுமையின் வேகமும் விவரம் புரியாமலேயே எத்தனை தூரம் பரவி ஆழமாகப் பாய்ந்து வேலை செய்கிறது? "ஆம்! அன்று நம் தாயின் உடல் நலம் குன்றி இருந்த சமயம் மகா உத்தமனாகிய அண்ணனே ஏதோ செய்துவிட்டதாக மனந்துணிந்து கூறிய பாதகன்தானே நான்? ஏன் என்னைத் தூற்றக் கூடாது? ஏசிப்பேசி நோகச் செய்யக்கூடாது? எனக்கு இதுவும்தகும், இன்னமும் தகும்! இந்த முன்பின்னறியாத அனாதைகளுக்குள்ள ஒரு அன்புகூட உடன்பிறந்த அண்ணன்மீது எனக்கில்லாது போய்விட்டதே! கண்கெட்டபிறகு சூர்யநமஸ்காரம் செய்யும் பழமொழி எனக்கே ஸ்திரமாகி விட்டது" என்று பலபல எண்ணங்களுடன் இந்த ப்ரார்த்தனையின் ஆனந்தத்தைப் பின்புறமே நின்று கவனித்துத் தானும் மனப்பூர்வமாய் அண்ணனின் விடுதலைக்காக வேண்டிக்கொண்டான்.

ப்ரார்த்தனைசெய்பவர்கள் தாமோதரன் வருகையைக் கண்டு ஆச்சரியமடைந்து திடுக்கிட்டு எழுந்தார்கள். தாங்கள் இதே மனிதனைப் பற்றி இழிவாகப் பேசி விட்டோமே...என்று பயந்து நிற்பதைக் கண்ட தாமோதரன், "பயப்படாதீர்கள்!...நல்ல உத்க்ருஷ்டமான நெல் பயிருடன் புல்பூண்டுகளும் முளைப்பதுபோல் மகா வீரத்யாகியாகிய என் அண்ணனுடன் கூட நானும் பிறந்து அவருடைய மேன்மைக்கும் தூய்மைக்கும் களங்கத்தை உண்டாக்கிவிட்டேன். இனி நானும் புனர்ஜென்மமெடுத்து விட்டதால் என் அந்தகார ஆசாபாசங்கள் ஒழிந்தன. என்னருமை அண்ணனின் விடுதலையைக் கோரி நாம் ப்ரார்த்தனை செய்வோம். என்னுடைய வேண்டுகோளுக்கிரங்காவிடினும் உங்களுடைய ப்ரார்த்தனைக்கு பகவான் மனமிரங்கி என் அண்ணனின் படாப் பழி நீங்கி விடுதலையடைந்தால் போதும்!" என்று தானே கூறி ப்ரார்த்தனையும் செய்து பின் தர்ம ஆஸ்பத்ரிக்குச் சென்றான்.



பக்கம் 135



பக்கம் 152

என்ன ஆச்சரியம்! தன்னிலே மறந்து படுத்துள்ள நோயாளிகளும்கூட, "ஐயோ! எங்க டாக்டருக்கா இந்த கதி வருவது? அவரா கொலைசெய்திருப்பார்! இதென்ன அக்ரமம்? இதென்ன அநியாயம்? இதைக் கேட்பார் இல்லையா? கடவுளே! எங்கள் உத்தமரான டாக்டரை விடுதலை செய்துவிடு. படாப்பழியை நீக்கிக்காப்பாற்று" என்று வேண்டிக்கொள்வோரும் சில நோயாளிகள் கும்பல்கும்பலாக இதைப்பற்றியே பேசுவதும் கண்ட தாமோதரனுக்கு அண்ணன்மீதுள்ள மதிப்பும் ப்ரேமையும் பின்னும் பன்மடங்காய்ப் பெருகியது. அந்தந்த ஸ்தாபனங்களின் மானேஜர்களைக் கண்டு அவர்களிடம் தனது மாறுதலையும், தான் இதுகாறும் செய்துவந்த கொடுமையையும், தானே பகிரங்கமாகக் கூறி வருந்தினான். "ஸார்! அண்ணா எப்படி எல்லாம் இந்த ஸ்தாபனங்களுக்குச் செய்துவந்தாரோ அதேபோல் என்னை நடத்தும்படி அண்ணாவின் கட்டளையைச் சிரசாவகித்து வந்திருக்கிறேன். ஆகையால் பணத்தைப்பற்றி யோசிக்க வேண்டாம்...ஸ்தாபனங்கள் முன்னிலும்சிறப்பாக நடந்து அதைக் கண்டு அண்ணா மனப்பூர்வமாய்க் களிக்கும்படி நாம் செய்யவேண்டும். இதுதான் எனது லக்ஷ்யம்! என்னைப் பழையதாமோதரனாக இனி எண்ணவேண்டாம்: நானும் மனிதனாகவே மாறிவிட்டேன். ஆகையால் சகல காரியங்களும் நன்றாக நடக்கட்டும். அண்ணாவுக்குப் பதில் அவருடைய நண்பரும் பெரிய டாக்டருமான ஸ்ரீமான் ஆத்மநாதரை நான் நேரில் சென்று பார்த்து வேண்டிக் கொண்டு இங்கு அழைத்துவருகிறேன். அவர் பூராவும் கவனித்துக்கொள்வார். லேடி டாக்டர் துளஸீபாய் கவனித்துக்கொள்வதாக ஏற்கெனவே கேள்விப்பட்டுச் சந்தோஷமடைகிறேன். எந்த விதத்திலும் ஒரு குறைவுமின்றி ஸ்தாபனங்கள் நடக்கவேண்டிய முறையில் நடக்கட்டும், நான் வருகிறேன்!" என்று கூறிவிட்டு, சகல நோயாளிகளையும் பார்த்து, "நீங்கள் கவலைப்படாதீர்கள்;

உங்கள் அன்புக்குரிய டாக்டர் வந்துவிடுவார்கள். கடவுளை வேண்டி ப்ரார்த்தனை செய்யுங்கள்'' என்று தேறுதல் கூறிச்சென்ருன். டாக்டரின் அக்ரமக் கொலைக் குற்றத்தின் அதிர்ச்சியையும் பீறிக்கொண்டு தாமோதரனின் மாறுதலால் உண்டாகிய ஆச்சரியம் எல்லோரையும் ப்ரமிக்கச்செய்தது. 'உலகமிப்படித்தான் விசித்ரங்களைக் காட்டித் தன்னுடைய பெருமையை விளக்கும்போலிருக்கிறது'...என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்கள். பல பேருடைய உள்ளம் பல மாதிரி எண்ணின; ஒரே வியப்புத்தான் எல்லோரையும் கவர்ந்தது.

---

## 19

தன்னுடைய முட்டாள்தனத்தையும் தகாத வழியில் நடந்துகொண்டு காலத்தைக் கடத்தியதையும் எண்ணி எண்ணி ஏங்கியவாறு வீட்டிற்கு வந்தான். தாயாரின் பரிதாபமும் வீடு உள்ள களையற்ற அலங்கோல நிலைமையும் பளிச்சென்று தெரிந்து பின்னும் விசனத்திலாழ்த்தியது. இதுகாறும் இருந்த இரும்புநெஞ்சம் எப்படியோ மாறிப்போய் பூராவும் இலவம் பஞ்சு நெஞ்சாகிக் கண்ணீரைக் கக்கும்படிச் செய்துவிட்ட ஆச்சரியத்தை அவனாலேயே அடக்க முடியவில்லை.

நேரே தன் அண்ணன் விடுதிக்குச் சென்ருன். இதுகாறும் அண்ணனிடம் இவ்விடுதியில் நின்று சுமுகமாகப் பேசியறியாத தாமோதரனுக்கு அவ்விடத்தைப் பார்த்ததும் வெடிச்சென்று தோன்றி கபீரென்று அலறும்படியாயும் தாளாத துக்கம் பீறிக்கொண்டும் வந்துவிட்டது. சிறிது நேரம் ஒன்றும் தோன்ருமல் ப்ரமை பிடித்தது போல் நின்ருன். பிறகு மேஜைமீதிருந்த டாக்டரின் தினக்குறிப்பு டயரி கண்ணில்பட்டதும் அதை எடுத்துப்பார்க்கலாமா? கூடாதா? என்ற யோசனையுடன் குழம்பினுன்.

'ஒருவேளை இந்தக் கொலைவழக்கிற்கு இவனுக்கு ஸாதகமானது ஏதாவது குறிப்புகள் இருக்குமோ?' என்ற நோக்கத்துடன் பார்த்தான். அது வெறும் டயரியாய் இல்லாமல் ஏதோ ரஸமான—ஸ்வாரஸ்யமான—கதைகள். பாடங்கள், தோத்திரங்கள் படிப்பதுபோன்ற ஆனந்தமான விஷயங்கள் காணப்பட்டனவே யன்றி அசட்டுப் பிசட்டு வார்த்தைகளோ, காதல் கீதல் பிதற்றல்களோ காணப்படவே இல்லை. அந்த டயரியில் இவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட சில பாகங்களைத் திரும்பத் திரும்பப் படித்தான். அவைகள் வருமாறு:—

தேதி......மாதம்...

இன்றய சம்பவங்களில் மாதவன் வீட்டில் நடந்தது ஒரு வியப்பிலும் வியப்பானதாகும்! ரதியோ, தேவகன்னியோ, வனமோகினியோ என்றெல்லாம் வர்ணித்து ஒரு பெண்தெய்வத்தை என்னெதிரில் கொண்டு நிறுத்தி அவளை மணக்கும்படி வேண்டினார்கள். அந்தப் பெண்ணைப் பார்த்ததும் அவளை விழுந்து நமஸ்காரம் செய்யவேண்டும்போல் தோன்றியது. அதை நான் தெரிவித்தபோது என்னை நம்பாது அவர்கள் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பு என்னை அசைக்கவில்லை. அதே சமயம் அங்கு மாட்டப்பட்டிருந்த பகவானின் படம் என்னைப் பார்த்து புன்முறுவல் பூத்து, "சபாஷ்! ஸ்ரீதர்! இந்த உறுதியை நான் மெச்சுகிறேன்" என்று சொல்லியது போன்ற ஒரு தோற்றம் உண்டாகியது. அதுவே எனக்குப் போதும். நான் பார்க்கும் சகலமான பெண்களும் என் கண்ணுக்கு தெய்வங்களாகவே தோன்றுகிறது. இதுவே எனக்குப் பேரானந்தமாயிருக்கிறது.

தேதி......மாதம்...

என் தம்பியின் நடத்தையைப் பற்றிப் பிறர் குறைசொல்லக்கேட்கும்போது மிகவும் மனம்கலங்கித் தவிக்கிறது. என் தாயாரிடம் எத்தனை சொல்லியும்

அவள் பிடிவாதமாக என் விவாகத்திலேயே நிற்கிருள். எனக்கோ இதைப்பற்றி நினைக்கவும் பிடிக்கவில்லை. அம்மாவை எப்படியாவது சமாதானம் செய்து தம்பிக்கு அவன் விரும்பும் பெண்ணையோ, அல்லது அன்று மாதவன்வீட்டில் பார்த்தவளையோ மணம் செய்துவைத்தால் சந்தோஷமாயிருக்கும். என்ன செய்வேன்! என் மனத்திலுள்ள ஆவலை யறியாது அவன்என்னை விரோதிபோல் எண்ணுகிருனே! இதை பகவான்தான் மாற்றி நல்ல புத்தியைக் கொடுக்கவேண்டும். சகல சொத்துக்களையும் நான் அவனிடமே கொடுக்க என்றும் தயாராயிருக்கிறேன். இப்போதேஅவனிடம் கொடுத்துவிட்டால் அநியாய மாய் அழித்துவிடுவான்......அத்தகைய சகாக்களும் சந்தர்ப்பமும் நேர்ந்துவிடும் என்ற பயத்தால் பேசாமலிருக்கிறேன். விவாகமாகிவிட்டால் பொறுப்பு உண்டாகும். சொத்தைக் கொடுத்துவிடலாம்.கடவுள் என்னுடைய எண்ணத்தைப் பூர்த்திசெய்துவைக்க வேண்டும்.

தேதி......மாதம்...

இன்று துரைக்கண்ணனுடைய உடம்பு குணமாகியதற்காக இரண்டாயிரம் ரூபாய் தனது நன்கொடையாகக் கொடுத்தார். தர்மவைத்தியசாலைக்கும் அனுதைநிலையத்திற்கும் உதவி கிடைத்தது பற்றிச் சந்தோஷந்தான். ஆனால் அவருடைய மகளை நான் மணக்கவேண்டுமென்று கேட்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. என் மனோதிடமும் சங்கல்பமும் பிறருக்கு எப்படித் தெரியும்? உம்!...கடவுள் க்ருபை கைகூடுமானுல் அவரிஷ்டப்படி தம்பிக்கு மணம் முடிக்கலாம்...போகப்போகப் பார்ப்போம்.

தேதி......மாதம்...

அடாடா! இத்தனை வயதான கிழவன் மனம் துணிந்து நான்காந்தாரத்தை மணந்திருப்பதுஎன்ன

அநியாயம்! கிழவன் படுக்கையில் கிடக்கையில் அவனுடைய வ்யாதியைக்கூட மறந்து அந்த நான்காந் தாரமாகிய பெண் என்னிடம் பேசுவதை எத்தனே விபரீதக் கண்களுடன் பார்த்து அந்தப் பெண்ணைத் திட்டி உள்ளே அனுப்பினுன். இந்த ஆச்சரியந்தான் என்னெஞ்சைவிட்டு அகலவேயில்லை. தகாதகாரியம் செய்யும் எவருக்கும் புத்தி இப்படித்தானிருக்கும் போலும். தகாத சகவாஸம் செய்யாதே; பக்தியாயிரு; ஊதாரித்தனம் வேண்டாம் என்று நானும் அம்மாவும் எத்தனேயோ சொல்லியும் தம்பி கேட்கிருனு? தான் செய்வது தெரியாமல் எங்கள்மீது கோபங்கூட வருகிறது! உலகமே இப்படித்தான்போலும். எப்படியாவது என் தம்பி நல்ல வழியில் திருந்தி உலகம் போற்றக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்டால்போதும்.

இதற்குமேல் தாமோதரனுல் படிக்கமுடியாது கண்ணீர் முட்டித் தடுத்துவிட்டது. தன்மீது அண்ணனுக்கிருந்த அளவிடமுடியாத விச்வாஸத்தின் ஆழத்தைப் பின்னும் நன்ருக அறிந்துகொண்டான். 'உன்னுடைய மதிப்பையும் அன்பையும் இதுகாறும் அறியாத பாவியாக இருந்த நான் இனிமேல் அறிந்துகொண்டதைக் கைவிடாது காப்பாற்றிக்கொள்ளும் சக்தியைக் கொடுத்து பகவான் ரக்ஷிக்கவேணும்' என்று வேண்டிக்கொண்டான்.

அவ்வறையிலுள்ள சகலத்தையும் பார்த்தான். பீரோக்கள் நிறைய வைத்யசாஸ்திரப் புத்தகங்களும் உயர்ந்த ஞானத்தை வளர்க்கும் புத்தகங்களும் இருந்தனவேயன்றி புத்தியை மயக்கும் குப்பைகூளங்கள் ஒன்றுகூட இல்லாததைக் கண்டு வியந்தான். 'இத்தகைய அண்ணனுடன் கூடப் பிறந்த பாவியான நான் எப்படியெல்லாம் நடந்து அவருக்கும் மீளாப்பழியை உண்டாக்கிவிட்டேன்' என்று மனங்கலங்கியவாறு தடதடவென்று தன்னறைக்குச்சென்ருன். அங்குமதியைமயக்கும் கண்ட கசடாப் படங்கள் நிறைந்த புத்தகங்கள், ஆபாஸப்

படங்கள் நிறைந்த ஆல்பம்கள், பத்ரிகைகள், சகலத்தையும் எடுத்துத் தோட்டத்தில்போட்டுத் தீயிட்டுக்கொளுத்தினன்: "எரிந்து சாம்பலாகிவிடுங்கள்! இனி தாமோதரனின் விடுதியில்கூட உங்களுக்கு இடமில்லை" என்று தனக்குள் எண்ணிக் களித்தான். சுவரில் மாட்டப்பட்டிருந்த கண்ட சினிமாக்காரிகளின் படங்களையும் கழற்றி வீசி எறிந்தான். உத்தமமான சிறந்த கடவுளின் படங்களையும் புண்ய புருஷர்களின் படத்தையும் தன் அண்ணுவின் படத்தையும் மாட்டி முதலில் தன் விடுதியைப் புனிதமாக்கிவிட்டுத் தாயாரிடம் ஓடிவந்தான். தலை தூக்காமல் புலம்பும் கமலவேணிக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டு தன் சகோதரிகள் பக்கத்திலிருப்பதைக் கண்டான்.

அதே சமயம் தபால்காரன் சந்திராவுக்கு ஒரு கடிதம் கொண்டு கொடுத்தான். அதையவள் படித்து அப்படியே விம்மிவிம்மி அழத்தொடங்கினள். இதைக்கண்ட தாமோதரன் ஒன்றுமே புரியாமல், "என்ன சந்திரா! கடிதத்தில் என்ன இருக்கிறது?"...என்று அன்புடன் கேட்டான். சந்திரா கடிதத்தையே அவனிடம் கொடுத்தாள். தாமோதரன் மனத்திற்குள் படிக்கலானுன்:

"சந்திராவுக்கு; இன்று பத்ரிகையில் அதிர்ச்சியான விஷயத்தைப் பார்த்து எங்கள் மானம் போகிறது. உங்கப்பன் பவிஷை எப்படியோ மறந்து நாங்கள் உங்களைச் சம்மந்தம் செய்து வாழ்வது போதும்! கொலைகாரனின் தங்கைகள் என்கிற வசைச்சொல்லுக்கும் இழிவுக்கும் உள்ளாகவேண்டிய காலம் வந்துவிட்டதுபற்றி மிகமிக விசனித்து வெட்கமடைகிறேன். இந்திராவின் கணவனும் இங்குதானிருக்கிருர். நீங்களிருவரும் இந்த ஆபாஸம் நடந்தவுடனேயே வீட்டைவிட்டு வந்திருக்க வேண்டும். இன்னும் வராததால் இதை எழுதுகிறேன். கண்ணியமான வாழ்க்கை வாழவேணு

மாயின் நீங்களிருவரும் உடனே புறப்பட்டு வந்து சேருங்கள். கள்ள வேஷச் சாமியாராயிருந்தவன் கொலைகாரனுகிவிட்டதுடன் போதும்! ஏற்கெனவே சந்திசிரிக்கும் உன் சிறிய அண்ணனின் சகவாசமே வேண்டாம். மரியாதையாய்க் கிளம்பித் தாயார் வீட்டின் உறவைத் தலைமுழுகிவிட்டு வரவும். இன்று தவறினல்கூட உங்களை இனி ஏற்றுக்கொள்ள முடியாது; ஜாக்ரதை!''

என்று எழுதியிருந்ததைப் படித்ததும் தாமோதரனுடைய தலைமீது இடி இடித்தமாதிரி இருந்தது. "இத்தகைய படாப்பழியைத் தீர்க்கத் தாமும் முன்வந்து உதவிசெய்து பாடுபடுவதுபோக இப்படியா எழுதியிருக்கிருர்கள்! உலகத்தின் விசித்ரம் இதுதான?''...என்று தனக்குள் குழம்பினன்.

தங்கைகளைத் தனியே அழைத்து, இந்த விஷயத்தைத் தாயாருடன் தெரிவிக்கவேண்டாம் என்று சொல்வதற்குள், கமலவேணியம்மாள் மிகவும் தீர்க்காலோசனை உடையவளாகையால் இப்படித்தானிருக்கும் என்று ஒருவாறு யூகித்துக்கொண்டு, "தாமோதரா! இப்படி வாப்பா! நீ உலகானுபவம் போராதவன். நான் குட்டுப்பட்டுத் தேறியவள். கொலைகாரன் ஒரு அண்ணன்! சோதா—காமுகன்—இன்னெரு அண்ணன்! ஆகையால் உடனே வந்துவிடும்படியாகத்தானே எழுதியிருக்கிருர்கள். மிக்க சந்தோஷம்... தம்பி! உடனே தகுந்த நம் ஆளுடன் இவர்களைக் கூட்டி அனுப்பிவிடு...போய்வாருங்களம்மா! நீங்களாவது கணவனுடன் சுகமாய் வாழுங்கள்! நான் பட்ட... படும்...அவஸ்தை போதும்! பெண்களுக்குத் தாய் வீட்டில் எத்தனைதான் உயர்விருப்பினும் அது பெருமையல்ல. கஞ்சிக்குப் பஞ்சாய்ப்பறந்தாலும் கணவன்வீட்டில் வாழ்வதுதான் பேரின்பம்...கண்ணியம்...சகலமும் ஆகும். அண்ணுவின் விதியும் என் விதியும் எப்படி பகவான்

நிர்ணயிக்கிருளே அதுபோலாகட்டும். நீங்கள் உடனே இளம்புங்கள்...தாமோதரா! முடிந்தால் காரிலேயேயனுப்பி விடு......என்ன தியங்குகிருய்?...எனக்கு பகவான் துணை போதும். உம்!...புறப்படுங்கள். இவ்விருவருடைய கவலை யாவது எனக்கு இல்லாமலிருக்கட்டும்...'' என்று வெகு அழுத்தமாகக் கூறித் தானே அவர்களுக்கு வேண்டிய சகலத்தையும் செய்து காரில் ஏற்றி அனுப்பிவிட்டாள்.

இந்தத் தீரச் செயலைக் கண்ட தாமோதரனுக்குக் கூறத்தரமற்ற வியப்பும், மனிதர்களின்போக்கு இப்படியா இருக்கிறது என்ற திகைப்பும் உண்டாகியது. "பெற்றோர்கள் இல்லாதிருப்பினும் சீரும் சிறப்புமாகச் செய்தால் அப்போது பிறந்தகத்தின் பெருமையும் சகோதரர்களின் மகிமையும் தெரியும். ஏதாவதொரு சங்கடம் உண்டாகிவிட்டால் இத்தகைய மனோவேறுபாடுகள் உண்டாகி விடுவதா மனித இயல்பு?'' என்று தனக்குள் எண்ணியவாறு மறுபடியும் தாயாரிடம் வந்து பேசத் தெரியாமல் கண்ணீர் பெருக உட்கார்ந்து, "அம்மா!'' என்று தழுதழுத்துக் கூப்பிட்டான்.

கமல:—தம்பீ! அண்ணன் வாய் ஓயாமல் 'சாந்தியின் சிகரத்தை அடையவேண்டும்; நிர்மல நித்யாநந்தத்தை அடையவேண்டும்' என்று சொல்லிக்கொண்டிருந்ததற்குக் குழப்பத்தின் மத்தியில் தத்தளிக்கும் விதியே அமைந்து விட்டது! இந்த விதியை எப்படியாவது மாற்றியமைக்க நாம் பாடுபடவேண்டும். உன் சகோதரி உஷாதேவி வந்திருந்தாள். அவளும் அவள் தாயாரும் துப்பறியும் நாயுடுவினிடம் சென்றிருந்தார்களாம். என்ன ஆச்சரியம்! அதே நாயுடுவினிடம் கொலைக்குக் காரணமாயிருந்த வெள்ளைக்காரர்களுக்கு வேண்டியவர்களாம்—சில வெள்ளைக்காரர்கள்—அவரிடம் வந்து தமக்குத் துப்புத் துலக்கி வழக்கில் ஜெயத்தைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்களாம்.

மகா கெட்டிக்காரியான உஷாதேவி தான் வந்துள்ள காரியத்தின் சகல விவரங்களையும் எழுதி நாயுடுவினிடம் கொடுத்தாளாம். நாயுடு மிகவும் சந்தோஷத்துடன் இவர்களைத் தனியாகப் பார்த்துப்பேசி தன்னாலாகியவரையில் உழைத்து டாக்டரின் பழியைத் தீர்ப்பதாகச் சொல்லியிருக்கிறாராம். அதை நம்மிடம் தெரிவித்து நம்மைத் தேற்றிவிட்டுச் செல்வதற்காகவந்தாளாம். என்ன அருமையான குணசாலியப்பா அவள்! உங்களுடன் பிறந்த சகோதரிகளுக்குத்தான் நிர்ப்பந்தம்; இவளாவது பாடுபட்டுக் காப்பாற்ற வந்திருப்பதும் ஒரு பாக்யந்தான். நீ அண்ணா சொல்லியுள்ளபடி சகலமும் செய்து நடத்து!... என்ன யோசிக்கிறாய்?...

தாயோர்:—ஒன்றுமில்லையம்மா! அண்ணா அத்தனை பெரிய ஸ்தாபனங்களைத் தனது சொந்த உழைப்பின் வருவாயினாலேயே நடத்திவருகிறார். இப்போதோ வருவாய்க்கு வழியில்லை. நமது பணத்தையே செலவிட்டு நடத்த உத்தரவு தரவேண்டும். அதைக் கேட்பதற்குத் தான் வந்தேன். என்னுடைய மூளைகெட்டதனத்தின் அலங்கோலமே அண்ணாவுக்கு இந்தக் கதியாகிவிட்டது என்பதை நன்றாக உணர்ந்துகொண்டேன். அம்மா! அண்ணா சாதாரண மனிதரல்ல. அவர் அவதார புருஷர் என்றால் தகும். எப்போது அவருடைய பழி நீங்கி நல்ல காலம் பிறக்குமோ என்று ஏங்குகிறேன். இப்போது மருந்துகள் வாங்குவதற்கும் உணவுப் பொருள்கள் வாங்கவும் 5 ஆயிரம் ரூபாய் வேணும். கொடம்மா!'' என்றான்.

மறுபேச்சின்றி கமலவேணி செக்கு எழுதிக்கொடுத்ததும் அதை எடுத்துக்கொண்டு சென்றான். அவனுள்ளத்தில் ஊற்றுப்போல் சுரக்கும் புதிய உணர்ச்சியை அப்போதுதான் அவன் உணர்ந்து பூரித்தான். எனினும் அண்ணனின் நினைவு அலைமோதியது!

20

"மிகச் சிறந்த கீர்த்திவாய்ந்த பெரிய டாக்டரை இம் மாதிரி கைது செய்திருப்பது சற்றும் பொருந்தாது. இது அநியாயம்; அக்ரமம்; அவருடைய குணமும் நடத்தையும் நன்ருக அறிந்தவர்களுக்கு அநியாயத்தைப் பொறுக்க முடியாது. சர்க்காரும் போலீஸாரும் இந்த விஷயத்தை நன்ருக யோசித்துப் பார்த்துப் பின் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பல பத்ரிகைகள் தலையங்கம் எழுதின. பலப்ரமுகர்கள் சர்க்காருக்கே மனுசெய்துகொண்டார்கள். டாக்டரின் அபிமானிகள் பலர் கூட்டங்கூட்டமாகச் சென்று பெரிய அதிகாரிகளை நேரில் வேறு பார்த்து விண்ணப்பம் செய்துகொண்டார்கள். பல சங்கங்கள், க்ளப்புகள், ஸொஸைடிகள், மருத்துவச்சம்மந்தப்பட்ட சகல நிலையங்கள் முதல் சர்க்காருக்கு மகத்தான மனுவைச் செய்து பெருங்கிளர்ச்சி பண்ணத் தொடங்கிஞர்கள்.

சிறைச்சாலையில் தனி லாக்கப்பிலுள்ள ஸ்ரீதரனுக்கு உண்மையில் கடுகளவும் விசனம் என்பதே இல்லாமல் மனச்சாந்தியே உண்டாகியது. அவமானமே தோன்ற வில்லை. பலபல பக்தர்களின் சரிதைகளை எல்லாம் அவன் மனத்திரையில் படம்போல் கண்டுகளித்தான். பக்த ராமதாஸர் என்ன! தொண்டரடிப்பொடிகள் என்ன! ...இவர்கள் இப்படியே அபாண்டப் பழிக்காகச் சிறையில் அடைபடவில்லையா? அத்தகைய மகான்களுக்கே இக் கதியாயிற்று என்ருல் நான் எந்த மட்டும்...கேவலம் ஒரு பூச்சிக்குச் சமமானவனல்லவா? நிம்மதியாக நாம ஸங்கீர்த்தன பஜனை செய்துகொண்டு ஆனந்தமாய்க் காலத்தைக் கடத்தலாம். இதுதான் உண்மையான சாந்தியை அடையும் மார்க்கமென்று பகவான் காட்டியிருக்கிருர்போலும்!" என்று தனக்குள் தீர்மானமாய் எண்ணி ஆனந்தமாய் பஜனை செய்துகொண்டிருப்பதைக் கண்ட ஜெயிலதிகாரி முதல் சகலரும் வியப்புக் கடலாடிஞர்கள் என்ருல் மிகையாகாது.

"தம்பி, அம்மா உள்பட என்னை யாரும் பார்க்க வர வேண்டாம்; எனக்கு அது பிடிக்கவில்லை; அவர்களோ! இந்த சம்பவத்தைப் பெரும் விபரீதமாக எண்ணிக் கதறுவார்கள். அவர்களுக்குத்தான் துன்பமேயன்றி எனக்கொன்றுமில்லை. ஒருவரையும் நான் பார்க்கவிரும்பவில்லை என்று சொல்லிவிடுங்கள்"......என்று கட்டளையிட்டு விட்டான். வெளிவிஷயம் இவனுக்கு எதுவுமே தெரியாமலிருக்கவே வேண்டினன்.

சட்டப்படி வழக்கு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணையாகி செஷன்ஸ் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டுவிட்டது. ஸ்ரீதரன் பணக்காரப் பொதுமக்களிடம் அதிகம் பணம் வாங்கி அதைக்கொண்டு தர்ம வைத்யசாலையும் அனுதை நிலயமும் நிர்வாகம் செய்வது உலகப்ரஸித்தம். துரைக்கண்ணன் தனக்கு வ்யாதி குணமாக்கியதற்காக இரண்டாயிரம் ரூபாய் இனம் வேறு கொடுத்திருக்கிறார். பெண்ணையுங் கொடுத்து லக்ஷக்கணக்கிலுள்ள சொத்தையுங் கொடுத்துவிடுவதாகச் சொல்லிய துரைக்கண்ணனிடம் டாக்டர் அதிக அன்புவைத்து எதிர்பார்த்தார். பெண் சீமையிலிருந்து வேறு கணவனுடன் வந்து இறங்கிவிட்டதால் அந்த ஆத்திரத்தில் தகப்பனையும் மகளையும் கொன்றுவிட்டு அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போகத் தம்பியையும் உடந்தையாக அழைத்துவந்தான். பழியை வெள்ளைக்காரர்மீது போட்டுவிடவே எண்ணினன். ஆனால் அந்த ஜோடைகள் இவன்மீதே பாய்ந்துவிட்டன...என்று சாட்சிகள் மூலம் நிரூபணமாகிவிட்டதால் ஸ்ரீதரனே குற்றவாளி என்று கூறி வெள்ளையர்களை விடுதலை செய்து வழக்கை மேல் கோர்ட்டுக்கு மாற்றிவிட்டார்கள். சந்தர்ப்ப சாட்சியங்களே டாக்டருக்கு விபரீதமாகிவிட்டன.

இதைக் கீழ்க்கோர்ட்டுக்கே போகாமல் எப்படியாவது தடைசெய்துவிடவேண்டும் என்று உஷா முதலியவர்கள் செய்த ப்ரயத்தனம் வீணுகிவிட்டது கண்டு எல்லோரும்

துக்க ஸாகரத்தில் மூழ்கிவிட்டார்கள். எல்லோரையும்விட தாமோதரனே அதிகமாய்த் தவிக்கிருன். தனக்குப் பெண் பார்க்கச் சென்றதனுல்தானே இத்தகைய சங்கடம் உண்டாகியது என்பதை அவனுல் மறக்கவே முடியாது இதயம் வெடித்துவிடும் போலாகிவிட்டதால் உடல் மெலிந்து நோயாளியைப்போலாகிவிட்டான்.

துரைக்கண்ணன் வீட்டில் சட்டப்படி போலீஸ் காவலுடன் பந்தோபஸ்து செய்திருப்பதால் யாரும் உள்ளே வரமுடியாது. காவலிருக்கும் போலீஸ்காரனின் மனைவி சாப்பாடு கொண்டுவரும்போது மிகவும் பயந்து நடுங்கியவாறு வீதிப் பக்கத்துத் தோட்டத்திலேயே நின்று கூப்பிட்டுச் சாப்பாட்டைக் கொடுத்துப் பின், "இன்னுங்க! ராவுலே ஒரு பயமும் இல்லாமே இருக்குதுங்களா? என்ன இருந்தாலும் ரெண்டு கொலை நடந்த எடமாச்சே! அந்த ஆத்துமா இங்கே தானே சுத்தி அலையும்! அதெப் பார்த்துப் பயந்துக்கபோரே!... இந்தா! நம்ப மாணிக்கப் பண்டாரத்துக்கிட்டே விபூதி மந்திரிச்சு வாங்கியாந்தேன். இந்தா! இதை நெத்திலே வச்சுக்கோ; பொட்டளத்தெ மடியிலேயே வச்சிருந்தா பயமே தெரியாதாம்......

போலீ:—அட போயேன்! இந்த போலீஸ் உத்யோகத்திலே வந்தப்பரம் பயமாம்! புனங்காயாம்!...எத்தினி திருடன், எத்தினி கொலேக்காரன், எத்தினி பொணம், எத்தினி கத்திக்குத்து!... அடேயப்பா! இதுக்கெல்லாம் அசங்காத அம்பலவாணனு இந்த சுண்டக்கா கொலேக்கி பயந்துடப் போரேன்! ஏய்! நீ சும்மாசும்மா இதெப்பத்தி தொணதொணன்னு பேசி நீயே காபுரா பண்ணுதே...

மனைவி:—ஆமாம்! நானு காபுரா பண்ணத்தான் வந்திருக்கேனுங் காட்டியம்!...நேற்று மூலத்தெரு பீட் சேவக ஐயா இந்தப் பக்கமா போவச்சிலே அந்த பிசாசு இந்த ஊட்டேலே நடமாடிச்சாம்! அவரு பயந்துபோய் தான் இண்ணக்கி இந்த விபூதியெ மந்திரிச்சு எடுத்துக்கிட்டுப்போய்க்

கொடுன்னு சொன்னரு. அதனலே வந்தேன், இன்ன தான் சூரப்புலியாயிருந்தாலும் பிசாசு,பேயி, பூதம்னு பயப் படாமே இருக்க முடியுமா? அசட்டு தைரியமா அந்தக் கொலை நடந்த எடத்துலே படுக்காதே...பத்ரமான ஒரு தனி எடத்துலே படுத்துக்கோ; விபூதியெ மடியிலேயே வெச்சுக்கோ; அப்பத்தான் பயப்பட மாட்டே...

போலீ:—அட...சும்மா இரு!...அந்த ப்ரகஸ்பதி இங்கே வந்து பாத்தானே? இதெல்லாம் சும்மா மூட்டே அளக்கர பேச்சு! இந்த அம்பலவாணன் இருக்கர எடத் துலே பேய் உலாவுவதாம்! பிசாசு நடக்குதாம்! அப்படி என் கண்முன்னே வந்தா கொண்ணுப்புடமாட்டேனு? கொண்ணு!...நீ பயப்படாதே தைரியமாயிரு; போய்வா, போ—என்று நயமாகக் கூறினன்.

மனைவி:—தே! இதோபாரு! நீ என்னமோ சுலபமா சொல்லிப்புட்ரே, ஊட்டெ கெடக்கர நானு என்ன பாடு பட்ரேன் தெரியுமா? எந்தத் தடியனையாவது காவல் வெச் சுப்புட்டு நீ ஊட்டுக்கு வந்துடு. இதென்ன பீடெ புடிச்ச கொலையும் காவலும்! இந்த கொலையிலே சம்மந்தப்பட்ட பாவிங்க ஒன்னெயும் ஏதாச்சும் செஞ்சுவிட்டால்......

போலீ:—அட பயித்தியமே! என்னையாவது கொலை செய்வதாவது! அந்தப் பாச்சாவெல்லாம் இங்கே பலிக் காது; புள்ளே! போ'...ஊட்டுக்குபோ! வீணு மனசெ கொழப்பிக்காதே!—என்று கூறி அனுப்பினன். அசகாய சூர வீரனுகிய அம்பலவாணன் வெகு தைரியமாய்ச் சாப்பிட்டுத் தாம்பூலம் தரித்து வாசல் கேட்டை பூட்டிக் கொண்டு உள்ளே சென்றான்.

என்ன தான் இருந்தாலும் இதுகாறும் இதைப்பற்றி அதிகம் எதுவுமே எண்ணுததால் இதைப்பற்றிக் கவலையே இல்லாதிருந்தது. இப்போது மனைவி சொல்லியது மின்றி பீட் கான்ஸ்டேபில் ஏதோ உலாவுவதைப் பார்த்த

தாகக் கூறியதுதான் சடக்கென்று நினைவுக்கு வந்ததும் இத்தனை நாட்கள் இல்லாமல் இன்று கண்கள் பங்களாவின் கதவையும் ஜன்னலால் உட்புறத்தையும் நோக்கின. அதே சமயம் நெஞ்சும் அவனையறியாது 'திக்'கென்று அலறச்செய்தது. "சே!...ப்ரமை!...உள்ளேயாவது பிசாசு உலாவுவதாவது?'' என்று தன்னைத்தானே தைரியம் செய்துகொண்டு பங்களாவின் முன்பக்கத்து வீதி வராண்டாவில் விளக்கைப் பெரிதாகப் போட்டுவிட்டு உட்கார்ந்தான்.

களங்கமில்லாதவரையில் பயமே இல்லை. ஒரு சிறிய புள்ளி களங்கம் உண்டாகிவிட்டால் இனி கேட்கவேண்டுமா? எலி, பெருச்சாளி ஓடினுல்கூட பயம் 'திடும்திடும்' என்று தூக்கி வாரிப்போட்டுக் கலக்குகிறது. சற்றுநேரம் சமாளித்துக்கொண்டான். ஐயையோ!... அப்பா!...அப்பா! என்மீது கருணையில்லையா?''...என்று தீனஸ்வரத்தில் மெல்லிய ஓசையுடன் குரல் கேட்பதுபோல் ஒரு சப்தம் கேட்டதும் உண்மையில் அம்பலவாணனை கால்முதல் தலைவரையில் ஒரு ஆட்டு ஆட்டி நடுக்கி வெயர்வையைச் சொட்டவிட்டது. மிகுந்த ப்ரயாஸைப்பட்டு சமாளித்துக்கொண்டு தன் மனைவி கொடுத்த விபூதியை ஒரு பிடி எடுத்துத் தலைமுதல் கால்வரையில் தேய்த்துக்கொண்டு வாயிலும்போட்டுக்கொண்டு "ஹர ஹரமகாதேவா! சுடலையிலேயே வாஸம் செய்யும் சாம்பமூர்த்தியே! இந்தக் கொலைக்களத்திலும் நீயேவந்திருந்துஎன்னைக்காப்பாற்று; வீண் ப்ரமையான பயத்தை உண்டாக்காதே" என்று பலமாக வேண்டிக்கொண்டபோது, "குலத்ரோகி! சண்டாளீ! போய்விடு; என்னெதிரில்,நில்லாமல் போய்விடு...நாசகாலீ! போய்விடு; மானஹீனமற்ற பாவியே! பாய்விடு''...என்று ஆண்குரல் மிகவும் கரகரப்புடன் அழுத்தமாய் அடித்தொண்டையிலிருந்து மெல்லவரும் சப்தம் கேட்டதும் அம்பலவாணன் எழுந்தே ஒரு குதிகுதித்தான். "இது என்ன கூத்து!.....அந்தப் பாவி ஏன் இப்படிச் சொல்லிச்

சென்று என் மனத்தைக் கலக்கிவிட்டுப்போனுள்? அப்பனும் மகளும் பேசுவதுபோலவே குரல் கேட்கிறதே!பிசாசு இப்படித்தானே பேசும் என்று பெரியவர்களும் சொல்வார்கள்!ஐயையோ! இப்போது பேச்சுக் கேட்பதுபோல் இங்கு உருவமும் உலாவ வந்துவிடுமா? என்ன செய்வேன்? இதென்ன க்ரகசாரம்?'' என்று இவன் பயந்து தவித்துக்கொண்டே ஜன்னலால் உள்புறம் பார்த்தான்.

ஒரே இருள் சூழ்ந்திருக்கும் இடத்தில் எங்கோ சிறிய வெளிச்சம் தெரிகிறது. அதில் கவுனணிந்த வெள்ளைக்கார உடையுடன் ஒரு பெண்ணுருவம் உலாவுவதையும் சாக்ஷாத் துரைக்கண்ணனே மகத்தான கோபத்துடன் உலாவுவதுபோல் தோன்றியதும் துள்ளிக்குதித்தான்... நேரே வீதி கேட்டுக்கே ஓடிவந்துவிட்டான். கதவைத் திறந்துகொண்டு ஓடிவிடலாமா என்றும் எண்ணினுன்...

''அப்படிச் செய்தால் ஒரு வீரஞன போலீஸ்காரனுக்கு தைரியம் இல்லை, கோழை! இவன் இனி எதற்கும் லாயக்கற்றவன்' என்று அதிகாரிகள் கரும்புள்ளி வைத்து விடுவார்களோ!'' என்ற பயமும் தோன்றியது. ''பிசாசாவது? பேயாவது?...சீச்சீ! செருப்பாலடிப்பேன் ...ஜோட்டாலடிப்பேன்......சிவசிவ, சிவசிவ......'' என்று தனக்குள் தானே தைரியம் செய்துகொண்டு ஜபம் செய்ய வாரம்பித்தான்.

சுமார் அரைமணிநேரம் வீதிக் கதவருகிலேயே நின்ற பிறகு மறுபடியும் உள்பக்கம் வந்தான். 'திக்குதிக்கு' என்ற பயம்மட்டும் நீங்கவே இல்லை. மறுபடியும் தைரியமாய் உள்புறம் பார்த்தான். எங்கும் ஒரே இருள்தான் சூழ்ந்துகொண்டிருக்கிறது. ஒருவிதமான உருவத்தையும் காணவில்லை. சப்தமும் கேட்கவில்லை ''அட க்ரகசாரமே! இந்த செங்காத்தா சுப்பா போகாமல் ஏதோ கலக்கிவிட்டுப் போனதனுல் எனக்கு என்னையறியாமலேயே பயமும் ஏதோ ஒருவித வெளித்தோற்றம் போன்ற அதிர்ச்சி

கரமான காட்சியும் தோன்றிவிட்டது! சீ!...இந்த அம்பல வாணனையாவது பேய்வந்து விரட்டவாவது? சுத்த ஹம்பக் நாடகம்" என்று வெகுவெகு தைரியம் செய்து கொண்டு மறுபடியும்விபூதியை எடுத்துத்தடவிக்கொண்டு பத்ரிகையைப் படிக்கவாரம்பித்தான்.

மறுபடியும் உள்ளே ஏதோசத்தம் கேட்பதும் வெளிச் சம் தெரிவதும் பேச்சுக் குரல்போலும் ஊளையிடுவது போலும் கேட்டதை உணர்ந்த அம்பலவாணன் உண்மை யில் நடுநடுங்கிப்போய் தானே ஊளையிட்டவாறு வெளியில் கேட்டருகில் வந்துவிட்டான். சாதாரணமாய் செத்த வீட்டிலேயே சிலர் பயப்படுவார்கள் என்றால் இந்தக் கொலை நடந்த இடத்தில் எப்படி பயம் இல்லாமல் இருக்க முடியும்? "இதென்ன சனியன் பிடித்த எழவாகி விட்டது?" என்று தனக்குள் நினைத்தபடியே கேட்டின் பக்கத்திலேயே சற்றுநேரம் நின்றான்.

அப்போது வாசலில் ரோந்துபோகும் கான்ஸ்டேபில் செல்வதைக் கண்ட அம்பலவாணன் தைரியமாய் அவ னைக் கூப்பிட்டான். "என்னப்பா! வீதியிலேயே இந்த நேரத்துலே நிக்கிறே?"...என்றான், ரோந்துக்காரன்.

அம்பல:—எத்தகைய பயங்கர விஷயத்திற்கும் அஞ் சாத என் மனசுகூட ஏதோ ஒருமாதிரி பயந்து நடுங்கு தப்பா! கொலை நடந்த ஊடோல்லியோ?...ஏதோ பேச்சுக் குரல் கேக்குது, ஊளையிட்றதுபோல் சத்தங் கேக்குது! என்னென்னமோ பயமாயிருக்குதப்பா!...நானும் தைரிய மாத்தான் இத்தினி நாளா இருந்துட்டேன். அந்தப் பாவி என் பொஞ்சாதி இருக்காளே! அவ ஏதோ ஒள றிட்டுப்போனா; அதுலேந்து எனக்கு காபுரா நடுங்கு தப்பா! ரவே நீ வந்து பாத்துட்டுப் போயேன். அதுக்குத் தான் கூப்பிட்டேன்...

என்று இவன் கூறி முடிப்பதற்குள், 'யம்மாடீ! யப் பாடீ!" என்று கத்தியவாறு அந்த ரோந்துக்காரன் ஒரே

ஓட்டமாகப் போயே போய்விட்டான். "இதென்னடா சனியன் பிடித்தவன்!...எனக்குமேல் சூரப்புலியாய் ஓடி விட்டானே; படுபாவி!"...என்று எண்ணியபடியே சற்று நேரம் கழித்து மறுபடியும் வராண்டாவிற்கு வந்து நடுங் கியபடியே பார்த்தான். மறுபடியும் ஒரு சந்தடியும் தெரிய வில்லை. "சரி! இனி எதுவானுலும் ஆகட்டும்! கால் முதல் தலைவரையில் கம்பளியை இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்துவிடுகிறேன்; கண்ணையே திறப்பதில்லை. எந்தப் பிசாசு என்னை என்ன பண்றதோ பார்க்கலாம்? விபூதியைத்தான் மடியிலேயே வைத்திருக்கிறேமே" என்று எண்ணியவாறு விபூதியை மறுபடி நெற்றியில் பூசிக்கொண்டு சாமியைக் கும்பிட்டுப் பிறகு நீளநெடுகப் போர்த்திக்கொண்டு கண்ணையும் கெட்டியாய்மூடியபடி படுத்துவிட்டான். போர்வை பலமாக இருந்ததேயன்றி பயமென்னவோ நடுக்கிக்கொண்டே இருந்தது!

---

## 21

சிறைச்சாலையிலுள்ள ஸ்ரீதரனைக் கண்டு சிறைச்சாலை அதிகாரிகளே வியப்புற்று மூக்கின்மீது விரலை வைக் கிறார்கள். காரணம்: ஸ்ரீதரன் தான் ஒரு விபரீதமான கொலைக்குற்றத்திற்காகச் சிறையிலிருப்பதுபோல்எண்ணி ஒரு கடுகளவுகூடக் கலங்காமல் கண்ணீர்விடாமல் சர்வ சகஜபாவத்துடன் ஒருவிதமான பற்றுதலும் இன்றி பரிசுத்தமான இதயத்துடன் சதா ஏதோ ஜபிப்பதும் பஜனை செய்வதுமாக இருப்பதைப் பார்த்தால் யார்தான் வியப்புறமாட்டார்கள்?

ஜெயிலர் அன்று காலையில் வந்தார்; "குட்மார்னிங்கு ஸார்!" என்று ஸ்ரீதரன் வரவேற்றதும் அவருக்கு மிக்க வியப்பாகிவிட்டது. 'கீழ்க்கோர்ட்டு விசாரணையிலிருந்து மேல் கோர்ட்டுக்கு மாற்றிவிட்ட அதிர்ச்சியினுல் குன்றிப்

போய் சோகமே வடிவாய்ப்புலம்பிக்கொண்டிருப்பார், சிபார்சுக்கு வேண்டுவார், என்றெல்லாம் மனத்திற்குள் எண்ணியவாறு அட்டகாஸமாய் வந்தவருக்கு தாமரை இலை நீர்த்துளிபோன்ற வைராக்யத்துடன் தன்னை வரவேற்கும் டாக்டரைப் பார்த்து உண்மையில் முழ உயரம் தூக்கி வாரிப்போட்டது! சற்றுநேரம் ப்ரமிப்புடன் மவுனமாகவே நின்றார்.

இவரைக் கண்ட டாக்டர் மிகவும் சாந்தமாயும் அமைதியாயும் பார்த்து, "ஸார்! ஏன் ஏதோ மாதிரி நிற்கிறீர்கள்? என்ன சமாச்சாரம்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

ஜெயிலர்:—ஸார்! நீங்கள் அஸகாய சூரர், ஸார்! நானும் ஜெயில் உத்யோகத்தில் வந்து பல வருஷங்களாகின்றன. இதற்குள் கணக்கற்ற கைதிகளை அதிலும் விதவிதமான குற்றங்களைச் செய்தவர்களை, செய்ய உடந்தை இருந்தவர்களை, தூண்டிவிட்டவர்களை, படாப்பழி ஏற்றவர்களை—ஆக, பலரகங்களில் நான் பார்த்திருக்கிறேன். எப்படிப்பட்டவர்களும் இம்மாதிரி மேல் கோர்ட்டுக்கு மாற்றிவிட்ட பிறகு ஒரு அப்பீல் செய்வார்கள்... அதிலும் தோல்வியான பிறகு ஒரு அப்பீல்... இப்படியாக கடைசிவரையில் எட்டிப் பார்த்துவிடுவதே தொழிலாகச் செய்வார்கள். அத்தகைய லீலையைத்தான் நான் கண்டிருக்கிறேன். அதோடு அத்தகையவர்களின் பரிதாபகரமான புலம்பலையும் சோகக் கண்ணீரின் நெஞ்சுருக்கும் தன்மையையுந்தான் பார்த்திருக்கிறேனேயன்றி உம்மைப்போல் நிச்சிந்தையாய் ஒரு அணுவளவும் விசனமே இல்லாத மன உறுதியுடன் கூடிய மனிதரை என் ஜீவியகாலத்தில் நான் இதுவரையில் பார்த்ததே இல்லை, ஸார்! உம்மைத்தான் முதல்முறையாகப் பார்க்கிறேன். என் வியப்பு கரைகடந்து செல்கிறது...

ஸ்ரீத:—(மறுபடியும் ஒரு பெரிய சிரிப்பு சிரித்தபடியே) ஸார்! இதற்கா தாங்கள் இப்படி வியப்புக்கடலாடுகிறீர்கள்!

மனிதர்களே பார்த்துச் செய்த சிறையில் மனிதர்களா லேயே அடைக்கப்பட்ட இந்தச் சரீரத்தைமட்டும் மதித்து அனுதாபப்படுகிறீர்களே! அங்கிங்கெனுதபடி எங்கும் ப்ரகாசமாய் சர்வ வ்யாபியாய் இருக்கும் எம்பெருமானின் சொந்தப்பொருளாகிய நமது ஆத்மா பகவானுல் செய்யப் பட்ட சரீரமென்கிற சிறையில் அடைப்பட்டு விடுதலை பெறமுடியாது தவிக்கின்றதே! அதைப்பற்றி இவ்வுல கத்தில் யாராவது ஒரு கடுகளவேனும் சிந்தித்துப் பார்க் கிருர்களா? அந்தச் சிறையிலிருந்து விடுதலையானல் சகல மோட்ச சாம்ராஜ்யத்தையும் பெறலாம்....

இந்தச் சிறையைப்பற்றி நாம்ஏன் கவலைப்படவேணும் ஸார்? நான் இதை மிகமிக மகிழ்வுடன் விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறேனே. இதற்காக நான் ஏன் ஸார் கவலைப் படப்போகிறேன்? நம்மைப்போன்ற சாதாரண மனிதர் களிடம் சிபார்சுகளில் பல்லை இளிக்க நான் தயாராயில்லை. நிம்மதியான ஆனந்த நிலைமையில் இந்த இடத்தில்தான் சாந்தியின் சிகரத்தை எட்டிப் பேரின்பத்தை யடையமுடி யும். ஆகையால்தான் சந்தோஷமாயிருக்கிறேன். எனக் காக எத்தகைய ப்ரயத்தனமும் யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்பது என் வேண்டுகோள். என்னை நம்பி நீங்கள் அனுமதித்தால் நான் வைத்தியத் தொழிலில் இங்கு ஸேவை செய்து இன்புறுகிறேன். இல்லையேல் கல்லை உடைக்கச் சொன்னுலும் சரி, கட்டை வெட்டச் சொன்னுலும் சரி, தயாராக இருக்கின்றேன்—என்று ஏதோ அபரிமிதமான சந்தோஷத்தை யடைந்தவன் பேசுவதுபோல் சொல்லும் மன உறுதியைக் கண்ட ஜெயிலர் அசையாது நின்று பின், "ஸார்! பிறகு வந்து உம்மைப் பார்க்கிறேன்" என்று கூறி மற்றொரு கைதி யிடம் சென்ருர்.

வழக்கம்போல் அக் கைதி புலம்பித் தவிப்பதும் தனக்கு எப்படியாவது அப்பீல்செய்து விடுதலை வாங்கித் தரவேண்டும் என்று கதறியதோடு தன் குடும்பத்தில்

மனைவி மக்கள் தவிப்பார்கள் என்றெல்லாம் கூறி ப்ரலாபிப்பதைக் காண ஜெயிலருக்கு மனவெறுப்பே உண்டாகியதால் அங்கு அதிக நேரம் தங்காமல் சென்றார்...இந்த உலகத்தின் விசித்திரப்போக்கும் மக்களின் அதிசயமான மனோபாவத்தின் வேறுபாடுகளும் ஒன்றுகூடி அவர் உள்ளத்திலும்கூடச் சிந்தனை அலைகளை எழுப்பித் திகைக்கவைத்தது.

---

## 22

"அம்மா! நீங்கள் இப்படியே சதா கண்ணீரும் கம்பலையுமாய்ப் படுத்திருந்தால் சின்ன அண்ணனுக்கு அது மிகவும் விசனமாக இருக்கிறது. அவர் தனது பழைய நிலைமை மாறி முற்றிலும் புனர்ஜென்மம் எடுத்துப் பெரிய அண்ணனைப்போல் நல்லமுறையில்வரும் நோக்கத்துடன் இருக்கையில் உங்கள் பரிதாபம் தாங்காது உடல் மெலிந்து நோயாளிபோலாகிவிட்டார். அதை நீங்கள் பார்க்கவேண்டாமா? அம்மா! எழுந்து உட்காருங்கள்" என்று உஷாதேவி மிகவும் சாந்தத்துடனும் கனிந்த அன்புடனும் கூறிக் கமலவேணியம்மாளைத் தூக்கி உட்காரவைத்துத் தானே தாங்கிக்கொண்டாள்.

கமலவேணியம்மாளுக்கு உஷாவினிடம் உண்டாகியுள்ள அளப்பரிய வாத்ஸல்யத்தின் தன்மை கூறத்தரமில்லை. உஷாவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு "செல்வீ! பூகம்பம் வருகிறது...அதில் 'எத்தனையோ கட்டிடங்கள் பூமியில் மறைந்துபோவதும், பூமியில் புதைந்திருந்த கட்டடம் மேல்நோக்கி எழும்புவதும் வியப்பிலும் வியப்பு!' என்று கூறக் கேட்கிறோமேயன்றி...நாம் கண்ணால் காணவில்லை. அந்த விசித்திரத்தைவிடப் பன்மடங்கு விசித்திரமாக உள்ளது உன்னுடைய மாறுதலும் தாமோதரனுடைய மாறுதலும். கண்மணீ! உன்னைப் பார்க்கும்பொழுதெல்லாம் குளிர்ந்த சோலையைப்போன்று

குளுகுளுவென்றிருந்த உன்னுடைய உள்ளத்தில் மகா பாவியாகிய நான்...

"அம்மா! நிறுத்துங்களம்மா! சோலைவனமாவது? பாலைவனமாவது? இம்மாதிரி இனி பேசவேண்டாம், தாயே! என்னுடைய நல்லகாலத்தின் புண்ணிய வசத்தினால் அவிந்துபோக விருந்த என் கண்கள் ப்ரகாசம் பெற்றுப் புனிதமாகியது கண்டு நான் பூரிக்கின்றேன். அத்தகைய சன்மார்க்கத்தைக் காட்டிய உங்களையா நான் நொந்துகொள்வேன்? எதற்காக நீங்கள் இம்மாதிரி நினைக்கவேண்டும்? தாயை மகனும் தங்கையை அண்ணனும் மணக்க நாம் என்ன ம்ருக ஜாதியா? அம்மா! இந்த மாதிரி எண்ணத்தையே நீங்கள் இனி விட்டுவிட வேண்டும். நான் இன்று முக்யமான ஒரு விஷயத்தையே கூற வந்திருக்கிறேன். அதாவது: என் படாடோபத்திற்கெல்லாம் ஆஸ்பதமாயிருந்த ஆடையாபரணங்களை எல்லாம் ஒருமுறை எடுத்துப் பார்த்தேன்!...

தாயே! என்னையே நான் வெறுத்துக்கொண்டு உண்மையில் கண்ணீரே விட்டேன். எத்தனையோ கோடிக் கணக்கான மக்கள் அன்றுடம்கஞ்சிக்கில்லாமல் பஞ்சாய்ப் பறக்கும் நிலைமையை அடியோடு மறந்து எனது நாற்றச் சரீரத்தை அழகுபடுத்தவும்அதைக் கண்டு பிறர் மனம் சலிக்கவுமான பாதகத்தையல்லவா செய்தோம்!...என்று மனது துடித்தது....

உடனே அவைகளை மானங்கெட்ட தாசிவகுப்பில் உள்ள சிலருக்கு விற்றுப் பணமாக்கியதில் 25 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. அதை உங்கள் மூலமாக அண்ணாவின் அனாதைநிலயத்திற்குக் கொடுத்துவிட்டு உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம்என்று வந்தேன். அதோடு பெரிய அண்ணனைச் சிறையில் சென்று அம்மாவும் நானும் பார்க்கப்போகிறோம்-அதற்காக உத்திரவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். ஒருவேளை நீங்களும்

சின்ன அண்ணனும் கூட வருவீர்களோ என்று தெரிந்துகொண்டு போகத்தான் வந்தேன். வீணாகக் கவலைப்பட்டுக் கண்ணீர்விட்டுக் கொண்டிருப்பதில் பலனேது? சின்ன அண்ணா எங்கேம்மா?''...

என்று சகல விஷயத்தையும் தானே முடுக்கிவிட்ட மிஷின்போல் சொல்வதைக் கேட்டு கமலவேணியம்மாள் தம்பித்துத் திகைத்துப்போய் பதிலே பேசத்தெரியாமல் பரமித்தாள். அதிக துக்கம் வந்தாலும் அதிக சந்தோஷம் வந்தாலும் சிலருக்கு ஒரே மவுன நிலைமையில் வாய் அடைத்துவிடுவது சர்வசகஜம்! சிலருக்கு ஒரேயடியாய்ப் பொருமித்தள்ளிவிடும்படி ஆவேசம் உண்டாகும்! சிலர் தீரமாய் யோசித்து நிதானித்து பதில் பேசுவார்கள்! உலகம் பலவிதமல்லவா?

அதேபோல் கமலவேணியம்மாளுக்கு நிலைதெரியாத மவுனமும் ஆனால் ஒருவித உணர்ச்சியின் வேகமும் உண்டாகி பரம சந்தோஷத்தை யளித்தது. உஷாவை மீண்டும் சேர்த்துக் கட்டித்தழுவி முத்தமிட்டாள்...“கண்மணி! நீ என் வயிற்றிலேயே பிறந்திருக்கும் பாக்யத்தை நான் செய்யவில்லையே என்று வருந்துகிறேன். உன் சகோதரிகளின் விஷயம் தெரியுமல்லவா?...என்றபோது கண்ணீர் முட்டிவிட்டது. “அம்மா! சகலமும் எனக்குத் தெரியும்; எப்படி என்று கேட்பீர்களோ? சந்திராவின் புருஷன் அகாரணமாய், அனுவசியமாய், என்னைத் தாறுமாறாகத் திட்டியும் இல்லாத பொல்லாத வசை பாணங்களைத் தொடுத்தும் தனக்குத் தோன்றியபடி எல்லாம் கடிதம் எழுதியிருக்கிறார்.'' என்றாள்.

கமல:—என்ன! என்ன! உனக்கா கடிதம் எழுதியிருக்கிறான்? உனக்கும் அவனுக்கும் என்ன சம்மந்தம்?

உஷா:—அம்மா! திட்டுவதற்கும் வீணாக தூஷிப்பதற்குமே நாக்கைத் தீட்டிக்கொண்டு காத்திருப்பவர்

களுக்கு காரணமும் சம்மந்தமும் வேணுமா?...தம் வாய்த்தினவைக் கையால் எழுதித் தீர்த்துக்கொண்டு விட்டால் அவர்களின் ஆத்திரம் அடங்கிவிடுகிறது போலும். இதனால் எனக்கென்னம்மா குறைவு? கரை காணாத சமுத்திரத்தில் புனித கங்கை யமுனைபோன்ற உயர்ந்த நதிகளின் ப்ரவாகமும் வந்து சேருகிறது. சாக்கடையும் வந்து சேருகிறது. அதனால் சமுத்திரத்திற்கு எங்காவது இழிவு உண்டாகுமா? அல்லது அதை இந்த அல்ப நீர்கள் கலக்கிப் பாழாக்கிவிடமுடியுமா? அதுபோல் கடலின் பரந்த வெளியில் எதுவேணுமாயின் வந்து குவிவதுபோல் நமது அப்பழுக்கற்ற விசால நிலைமையில் எதுவாவது வந்துவிட்டுப் போகட்டுமே!...நமக்கென்னம்மா குறைவு?...

கமல:—கண்மணீ! உனது அதிக உண்மையானதும் ஆழமானதுமான வார்த்தையைக் கேட்டு நான் எனது அபாரமான துக்க நிலையிலும் பூரிக்கின்றேன்...தான் செய்த குற்றத்தைத் தானே உணரச் செய்வதற்கு ஆயுதம் பொறுமைதான்...என்று பெரிய அண்ணா அடிக்கடி சொல்வான். அந்த அடிப்படை ஞானத்தையே நீயும் கைப்பற்றியிருக்கிறாய். இந்த விஷயங்களில் இன்று இத்தகைய அக்ரம மார்க்கத்தில் சென்றாலும் பிறகொரு நாள் தெரியாமலா போகும்? என்ன காரணத்திற்காக உன்னைத் திட்டியிருக்கிறான்?

உஷா:—தாயே! அதைப்பற்றி நீங்கள் ஏன் இப்படி மனத்தை அலட்டிக்கொள்ளவேணும்? என்னால்தான் இந்த குடும்பத்திற்கு இத்தகைய விபத்து வந்ததாம். நான் இன்னும் சாகாமலிருப்பது பொறுக்கவில்லையாம். ...சரி! சரி! அதுகிடக்கட்டும்! நான் கேட்டதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?...பெரிய அண்ணாவைப் பார்க்க நீங்கள் வருகிறீர்களா? எனக்கு நேரமாகிறது...சின்னண்ணாவிடம் நீங்கள் இந்த 25 ஆயிரம் ரூபாயையும் அனாதை நிலயத்திற்காகக் கொடுத்துவிடுங்கள்'' என்று கூறிய

வாறு நோட்டுகளாக உள்ள ஒரு கத்தையை கமலவேணி யின் கையில் கொடுக்கும்போது தாமோதரன் அங்கு வந்து, 'அம்மா! ஒரு நல்ல சமாச்சாரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்...அட!...உஷாவா? என்னம்மா? சவுக் யமா? எங்கே உன்னைக் காணவே இல்லையே? ஒருவேளை ஊருக்குப் போயிருக்கிருயோ என்று எண்ணினேன். அம்மா சவுக்யந்தானே?...என்று களங்கமற்ற நிலைமையில் மிகவும் அன்புடன் கேட்டான்.

உஷா:—உட்காருங்கள் அண்ணு! ஊருக்குப் போனல் சொல்லிக்கொள்ளாமல் போவேனு? ஏதோ கொஞ்சம் வேலையிருந்தது. அதனுல் வரமுடியவில்லை.........என்ன நல்ல சமாச்சாரம்?... அதைச் செல்லுங்களண்ணு!...

கமல:—தாமூ! வேலையாயிருந்ததன் பலன் இதோ உருவாகி இருக்கிறது! இதை உன்னிடம் கொடுக்கச் சொல்லி என்னிடம் கொடுத்தாள். நீயே வந்துவிட்டாய்... இந்தாம்மா, உஷா! நீயே உன் அண்ணனிடம் கொடுத்து விடு—என்று 25 ஆயிரம் ரூபாயுள்ள பர்ஸை எடுத்துக் கொடுத்தாள்.

உஷா:—(அதைத் தடுத்து) 'அம்மா! இதென்ன விளையாட்டு? அண்ணனிடம் நீங்கள்தான் கொடுத்து ஆசிர்வதியுங்கள். நீங்கள் வேறு நான் வேருு? இனியுமா இந்தப் பிரிவினை வார்த்தைகள்?...அண்ணு! வாங்கிக் கொண்டு,ஏதோ சந்தோஷசமாசாரம்என்றீர்களே அதைச் சொல்லுங்கள்—என்று ஆவலே வடிவாய்க்கேட்டாள்.

கமல:—தாமூ! பெரிய அண்ணனின் ஸ்தாபனங் களாகிய அனுதைநிலயமும் தர்ம வைத்யசாலையும் நன்ருக நடப்பதற்காக உஷா தன் நகைகள், சகலத்தை யும் விற்றுப் பணமாக்கி இதோ, 25 ஆயிரம் ரூபாயாகக் கொடுத்திருக்கிருள்! இம்மாதிரி யொரு த்யாகபுத்தி யுடைய சகோதரியை என்னுயுளிலேயே நான் கண்டது

இல்லை! உங்கள் பிதாவின் மிகவும் கீழ்த்தரமான போக்கிற்கு அந்த ஆபாஸ மனிதனின் வயிற்றில் இத்தகைய பரிசுத்தாத்மாக்களாயும் த்யாகச் சுடராயுமுள்ள அண்ணனும் தங்கையும் எப்படித்தான் பிறந்தீர்களோ!...என்று நான் வியக்கிறேன். உங்கள் லட்சியமும் ஈடேறி வெற்றி பெறவேண்டும்... தாமூ! என்ன விஷயம் நீ சொல்லவந்தது; அதைச் சொல்லு.

தாமு:—இதுவரையில் அண்ணாவைப் பார்க்கவேண்டுமென்று கேட்டதற்கு அண்ணா ஒரே பிடிவாதமாய்க் கண்டிப்பாய்த் தன்னை யாரும் பார்க்கவேண்டாம்; உத்திரவு கொடுக்கவேண்டாம் என்று ஜெயில் அதிகாரிக்குத் தெரிவித்துவிட்டார். நானும் மாதாமாதம் அவரைப் பார்க்க வேண்டுமென்று போடுகிற விண்ணப்பத்தை நிறுத்தாமல் போட்டுக்கொண்டே வந்தேன். இதோ கடிதம் ஜெயிலரிடமிருந்து வந்திருக்கிறது: அண்ணா நம்மைப் பார்க்க இசைந்திருக்கிறாராம். வரும்போது உஷாவையும் லேடி டாக்டர் துளஸிபாயையும் அழைத்துவரும்படியாக அண்ணாவே எழுதச்சொன்னார்களாம். இதைவிட நல்ல சாமாசாரம் நமக்கு வேறென்ன இருக்கிறதம்மா?...

என்று முடிப்பதற்குள் உஷா சிறு குழந்தையைப் போல் ஒரு துள்ளுதுள்ளி குதித்து, "அடாடா! பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் இருக்கிறதம்மா! என்றைக்குப் போகலாம்? இன்றே புறப்படலாமா?" என்று வெகு ஆர்வத்துடன் கேட்டாள்.

கமலவேணியம்மாளுக்குமட்டும் தன்மகனைப் பார்க்கப் போகிற சந்தோஷத்தைவிட அவனை ஒரு கைதியாய் சிறையில் எப்படிப்போய்ப் பார்த்துச் சகிப்பது? என்கிற மகத்தான துக்கந்தான் பீறிக்கொண்டு வந்துவிட்டதால் குலுங்கக்குலுங்க அழுதுவிட்டாள். கோர்ட்டில் தீர்ப்புச்

சொல்கிற அன்றுகூட துக்கம் தாங்காமல் வீட்டிலேயே புலம்பிக்கொண்டு கிடந்துவிட்டாள். மகனைப் பார்த்து எத்தனையோ யுகங்களாகிவிட்டதுபோல் வேதனையும் சங்கடமும் உண்டாகி வதைக்கிறது. பார்க்கவும் ஆசை அடித்துக்கொள்கிறது. மகத்தான பதவியில் புகழ்மாலை சூடிப்பார்க்கவேண்டிய மகனைச் சிறைச்சாலைக் கம்பிகளுக்குள் கொலைகாரக் கைதியாய்ப் பார்ப்பதற்கு மனது சகிக்காமல் துடிப்பதால் போகவேண்டாம் என்றும் தோன்றுகிறது.

இந்தக் குழப்பத்தில் தவிக்கும் தாயாரை தாமோதரன் தேற்றி சமாதானம் செய்து ஒருவாறு அமர்த்தினான். மறுநாள் அதிகாலையில் எல்லோரும் கிளம்பிக் காரிலேயே போவது என்கிற தீர்மானம் முடிவாயிற்று. உஷாவும் விடைபெற்றுக்கொண்டு சென்றாள். இதே மனிதன்... இதே உஷா... இதே கண்கள்... இதே மனது தான்!...

ஆனால் அன்று இருந்த விசித்திரப் போக்கென்ன! இன்று பரிசுத்தமாய் ஸ்புடம் வைத்ததுபோன்று அப்பழுக்கற்ற தூய சிந்தனையின் பரிமளமென்ன! எப்படி பாசி பிடித்த இடத்தைச் சுண்ணும்புபோட்டுத் தேய்த்துச் சுத்தம் செய்தால் எப்படி துலாம்பரமாய் இருக்குமோ அதுபோல் தனது இதயம் பரிசுத்தமாய் தன்னாலேயே உணரமுடியாத புதிய தேஜஸுடன் ப்ரகாசிப்பதுபோன்ற உணர்ச்சி உண்டாகியது. அதைக் கண்டு தனக்குள் தானே வியந்துகொண்டான். பிறந்த நாள்முதல் இத்தகையபரிசுத்தத்திலேயே லயித்துஆனந்தமாய் பக்தியும் கருணையும் இதய தடாகத்தில் தேக்கிக்கொண்டு பரம த்ருப்தியுடன் தொண்டுசெய்துவந்த மகா மேதையும் உத்தமனுமாகிய அண்ணனின் அன்பையறியாது ஆதியில் மோசம் போனேமே! என்ற துயரமே உண்டாகி வருத்தியது.

சிறைச்சாலையையே தவச்சாலையாக எண்ணிப் பூரிக்கும் மனிதர்கள் ஆயிரத்தில் ஒருவர்கூட கிடைக்கமாட்டார்கள். அத்தகையவர்களைப் பார்க்கும் எத்தகையோருக்கும் அளப்பரிய ஆச்சரியமும் கரைகாணாத வியப்பும் உண்டாகித் திகைப்பது சகஜந்தானே. டாக்டர் ஸ்ரீதரன் கைதி என்கிற பெயருடன் சிறையிலிருக்கிறானேயன்றி அவனுடைய முகத்தில் காணும் சந்தோஷமும் சாந்தியும் மற்றப்படி வெற்று மனிதர்களிடம் காண்பதே அரிதாகி விடுகிறது. என்ன அதிசய உள்ளம் படைத்த மனிதன் என்று ஜெயிலில் உள்ள கைதிகள் உள்பட சகலமான வேலைக்காரர்களும் உத்யோகஸ்தர்களும் மூக்கின்மீது விரலைத்தான் வைத்தார்கள்.

ஸ்ரீதரனைப் பற்றிய சகலவிதமான புகழையும் அவனுடைய சகாக்களும் இன்னும் இதரர்களும் சரமாரியாய் பத்திரிகைகளிலும் கடிதமூலமாயும் எழுதித் தெரியப்படுத்தியிருப்பதால் ஜெயிலில் உள்ள எல்லா உத்யோகஸ்தர்களுக்குமே அவனிடம் அனுதாபமும் ஒருவித மதிப்புந்தான் உண்டாகியது.

ஏற்கெனவே தண்டனை அனுபவிக்கும் கைதிகள் மட்டும் இவனைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசையால் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்யும்போது எப்படியோ தெரியாமல் வந்து கண்காட்சியில் பொருளையோ, மிருகத்தையோ பார்ப்பதுபோல் பார்த்துவிட்டு சிலர் பேசாமல் போய்விட்டார்கள். சிலரோ... அடேயப்பா! இத்தினிபெரிய டாக்டராயிருந்து கொலெகூடவா பண்ணிப்புட்டான்!... ஏய், அப்பேன்!..நாங்கல்லாந்தான் படிக்காதமுட்டாளுங்க. பொயக்கத்தெரியாத கட்டெங்களா காலத்தெ ஓயிச்சிப் புட்டோம். அதினாலே திருடியும்... கொலெ செஞ்சும் இப்படி அவதிபட்றோம். நீகூடவா, படிச்சவன், இந்தமாதிரி வந்துட்டே...என்று துடுக்காகக் கேட்டுவைப்பார்கள்.

அவர்களிலேயே இன்னொருவன்...டேய்! நாம்ப படிக்காத முட்டாளு; அவரு படித்தமுட்டாளு! அவ்வளவுதானேடா? ...என்று ஏளனமாய்ச் சொல்வான்.

இதைவிட துடுக்கான இன்னொரு அஸல் கொலைகாரன்...அட!...இவரு டாக்கட்டருன்ன மொறெலெ தண்டனை இல்லாமே எத்தினியோ கொலை பண்ணியிருப்பாரு! அந்தக் கைப்பழக்கம் இப்படி ஒன்னு சாம்பிலு (ஸாம்பில்) பாத்துட்டாரு!...என்றுமிகவும் அலட்சியமாய்ச்சொல்லும் போது, இந்தக் கைதிகளை மேய்க்கும் மேஸ்த்ரியும் ஹெட் வார்டரும் இதைக் கேட்டுக்கொண்டே வந்து தங்கள் கையிலுள்ள தடியினால் அவர்களை நன்றாக அடித்தார்கள்.

இதைக் கண்ட ஸ்ரீதரன் பரிதாபத்துடன், "அப்பா! வார்டர்! அடிக்காதே! அவர்கள் சொல்வதில் குற்றமென்னப்பா? உலகத்தில் பெரும்பாலான மனிதர்களின் போக்கும் எண்ணமும் அறிவு வளர்ச்சியும் இவ்வளவு தானேப்பா! இது தெரியாமல் ஏன் அடிக்கிறாய்? அவர்களைப்போன்ற—அவர்களுக்குச் சமமான—ஒரு கைதியாகவே தற்சமயம் நான் அவர்களுடைய கண்களுக்குக் காணப்படுவதால் அப்படித்தானே சொல்வார்கள். பாவம்! அறிவிலிகளை அடிக்காதேப்பா" என்று பரிந்தும் பரிதாபகரமாயும் சொல்வதைக்கேட்ட கைதிகளே ஒரு மாதிரியாய் ஆய்விட்டார்கள். வார்டரை ஏமாற்றிவிட்டு வந்த குற்றத்துடன் இப்படி அவமரியாதையாய்ப் பேசிய குற்றம் ஆகிய இரண்டுக்கும் தண்டனையைச் சட்டப்படி விதிக்கப்படவேண்டியதை அதிகாரத்துடன் அதட்டிக் கூறியபடி அவர்களைத் தள்ளிக்கொண்டு போவதைக் கண்ட ஸ்ரீதரன் இதயத்தில் அது சுருக்கென்று பொத்தியது.

அவன் நயமானகுரலில் ஹெட்வார்டரைக் கூப்பிட்டு, "ஐயா! உங்களை நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். என் தலைவிதியின் நிழல் அந்த அபாக்யப்

பிண்டங்களின்மீது பாயவேண்டாம். என்னைச் சொல்லிய தற்கு நானல்லவா கோபிக்கவேண்டும். எனக்கு அவர்கள் சொல்லியதிலிருந்து ஒரு அதிசயமான உலகானுபவமும் பாடமும் கற்பித்ததுபோன்ற சந்தோஷமே உண்டாகியது. அதனால் நான் பரம சந்தோஷத்தை அடைகிறேன். நீங்கள் தயவுசெய்து அவர்களை ஒருவித தண்டனைக்கும் உள்ளாக்காதபடி காப்பாற்றவேண்டும். இதை மேல் அதிகாரிகளுக்குச் சொல்லாமல் எனக்காக மன்னித்து இதோடு விட்டுவிடவேணும்'' என்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டான்.

இத்தகைய அபூர்வமான மனிதனை இதுவரையில் பார்த்திராததால் வார்டருக்கும் அந்த கைதிகளுக்கும் ஆச்சரியமாகிவிட்டது. அவர்களில் சிலர் தாங்கள் இளப்பமாகப் பேசிவிட்டதை எண்ணி வருந்தினார்கள். வார்டர் மட்டும் ஒரு விழி விழித்துப்பார்த்துவிட்டு அவனுக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தை இழக்க மனமின்றிச் சென்றான். சின்ன வேலையாயிருப்பினும் பெரிய வேலையாயிருப்பினும் அவரவர்களின் அதிகாரத்தையும் கீழே உள்ளவர்களை மிரட்டும் அட்டகாஸத்தையும் ஒருவருமே விடுவதில்லை. இதுதான் உலகத்து மக்களின் பிறவிக் குணம் போலிருக்கிறது! இத்தகைய மனோபாவம் நிறைந்திருக்கும் இடத்தில்—இதயத்தில்—அன்பு என்பது எங்கிருந்து உண்டாகும்? எஜமானன் என்ற பட்டம் வந்துவிட்டாலே தன்னை நம்பியுள்ள வேலைக்காரர்களை அடிமைபோல் நடத்துவதுதான் அவர்களுடைய கடமை என்று நினைத்துவிடுகிறார்கள்.

கணவன் என்கிற பதவி வந்தவுடனே மனைவியை அடிமைப்படுத்தி நடத்தவே தாம் பிறந்திருப்பதாகச் சில மூடர்கள்...ஏன்?...பல மூடர்கள்...நினைத்து நடத்துவதால் எத்தனை பெண்கள் இதே ஏக்கத்தில் நோயாளியாகி விடுவதை என் அனுபவத்திலேயே பார்த்துவருகிறேன்! இதேபோல் தான் மாமியாராக ஆய்விட்டால் கேட்கவே

வேண்டாம்! சிம்மாசனத்தில் அமர்ந்து செங்கோல் செலுத்தும் மகாராணிதான் தான் என்கிற அகம்பாவத்துடன் மருமகளை நடத்தும் புண்யவதிகளின் சரித்திரமோ சொல்ல சாத்யமில்லை! சரி!... இனி இப்படியே பார்த்துக் கொண்டுபோனால் ஆயிரக்கணக்கான விசித்திரங்கள் கிடைக்கும்... அடாடா! என்ன ஆச்சரியமான உலகம்!... என்று ஸ்ரீதரன் தனக்குத்தானே நினைத்துக்கொண்டு வியப்பே வடிவாய் நின்றிருந்தான்.

அதே சமயம் வெளிப்புறத்தில் கைதிகள் எல்லோரும் கட்டைவெட்டும் இடத்தில் ஒரே கூச்சலும் பரபரப்பும் அலறலுமான சத்தமும் கேட்டு வார்டர்கள் ஓடினார்கள். "என்னமோ தெரியவில்லையே! இந்தக் கைதிகளை அந்த வெட்டவெளியிடத்தில் கொண்டுபோய் (பனிஷ்மெண்ட்) தண்டனை கொடுக்கிறார்களா, என்ன? அதைக்கண்டு மற்ற கைதிகள் இத்தகைய கூக்குரலிடுகிறார்களா? ஒன்றும் தெரியவில்லையே! ஐயோ பாவமே! அம்மாதிரி கைதிகளை அடிப்பதாயிருந்தால் அந்த பாதகத்திற்குக் காரணம் நானல்லவா? கடவுளே! என் புத்தி தெரிந்தநாளாக நான் ஒருவிதமான குற்றமும் செய்தறியமாட்டேனே; அங்ஙனமிருக்க என்னை முன்வைத்து அந்த நிரபராதிகளுக்கு இத்தகைய கொடிய தண்டனை கொடுக்கலாமா? அவர்கள் உள்ளம் என்னையல்லவா சாபமிடும்; எப்போதும் என் உள்ளத்திலேயே நீ வீற்றிருக்கிறாயே! இந்த பாதகத்தை நீயும் கண்டு சகிக்கலாமா?... என் உள்ளம் இப்போது துடிக்கும் துடிப்பில் நான் ஒரு பறவையைப்போல் சிறகுள்ளவனாய்ப் பறந்துசென்று அந்த அதிகாரதேவதைகளான வார்டரின் காலில் விழுந்து மன்னிப்புக் கோருவேனே! என்ன செய்வேன்?......

இந்த சமயந்தான் என்னுள்ளத்தில் இன்னொரு தத்துவம் நன்றாகப் புலப்படுகிறது. மனிதன் செய்யும் அக்ரமங்களை—பாவங்களை—சகிக்காமல் ஆத்மா இப்படித்

தானே துடிக்கும்! வெளியே செல்ல வழிதெரியாமல் அவஸ்தைப்படும்!...என்று தனக்குள் பலமாக எண்ணிய படியே அசைவற்று நின்றிருந்தான். மனமோ 'பதபத' வென்று துடிக்கிறது. யாரையாவது கூப்பிட்டு விசாரித் தறியலாமென்ருலோ யாரையும் காணவில்லை. ஏங்கி எதிர்பார்த்து நிற்கையில், ஒரு வார்டர் சற்றுதூரத்தில் போவது தெரிந்து; "ஐயா!...ஐயா!......தயவுசெய்து இப்படி வாருங்கள்; ஒரே நிமிஷம்!" என்று கத்தினன்.

அவன் திரும்பிப்பார்க்காமலே போய்விட்டான். "உம்!"...என்று ஒரு பெருமூச்சுடன் மறுபடியும் வழியைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். இதே வார்டுக்குக் காவலிருக்கும் வார்டர் வருவதைக் கண்டு வெகு ஆவலுடன் பதறியவாறு, "ஐயா! இப்படி வாங்களேன்; அங்கு என்ன அத்தனை கலாட்டா? இங்கு வந்த கைதிகளைத் தண்டனைசெய்து வருத்துகிருர்களா? சற்று சொல்லப்பா?" என்று மனந்தவித்தவாறு கேட்டான்.


வார்:—ஓகோ! நீங்க இப்படி நெனச்சுக்கிட்டு கேக்கிறீங்களா! தண்டனெகிண்டனெ அல்லாம் இப்பிடி இந்த எடத்துலே நடக்காது. அங்கே கைதிங்க கட்டெ வெட்ரப்போ ஒருத்தன் கோடாலி தவறி கால்லெ பட்டுடுச்சு; ரத்தமா ஊத்தி ஆளு உயிந்துபூட்டான்! அதனலே அல்லாருமா சேர்ந்து கூப்பாடு போட்டாங்க; அதான் விசயம்; வேறென்னுமில்லெ" என்று சர்வ சாதாரணமாய், அலட்சியமாய்ச் சொன்னன்.

இதைக் கேட்ட ஸ்ரீதரன், "அப்படியா விஷயம்! ஐயோ பாவம்! எந்த மனிதன் காலில் பட்டதோ? ஏம்பா! ஒடனே இப்படிப்பட்டவங்களே பாத்து நல்லா வயித்தியம் செய்வாங்களா? அவனுக்கு அதிகமாக ரத்தம் கொட்டி உயிர் போய்விட்டால் என்ன செய்வது?...


என்று முடிப்பதற்குள், அந்த வார்டர் மிகவும் இளப்பமாய் நகைத்துக்கொண்டே, "இந்தக் கொலைகாரப் பாவிங்கல்லாம் செத்துட்டாக்கா ஊரே இருண்டுபூடும்! காடெல்லாம் எலும்பாபூடுங்களா? அவதிப்பட்டு சார சனியன் ஒன்னு தொலைஞ்சுபோவுது! இவ்வளவுதானேங்க! நீங்க கேக்கறபடி வயித்தியம் செய்வாங்க; செய்யாமே இருக்கமாட்டாங்க. கைதியானுகூட...கொலைகாரக் கைதியானுகூட...விதியேன்னு பாக்கரத்தெ பாத்துத்தான் உடுவாங்க. ஜெயிலாச்சே, கைதியைகவனிப்பாங்களான்னு நெனச்சிங்களா?...என்றபோது ஒரு கைதி ஓடிவந்து, "அந்த மனுசனுக்கு உசிரு வருமா? பூடுமான்னு இருக்கு துங்க! டாக்குட்டரு எங்கேயோ வெளி ஊருக்குப் போய் விட்டாராம்; நாளைக்குத்தான வருவாராம். ஆஸ்பத்திரிலே இருக்கற நர்ஸ் இன்னமோ கட்டுகட்டிச்சு; ரத்தம் பீறி இணு வருதுங்களாம்; நல்ல ஆத்துமா! கடைசீவரைக்கும் கயிஷ்டப்படாமே இப்பவே போயிட்ருன்!...என்று அங்க லாய்த்தான்.

இதைக் கேட்ட ஸ்ரீதானுக்கு மனது துடிக்கிறது. தனக்கு உத்தரவு கொடுத்தால் அந்த ஆபத்தான நிலையி லுள்ள அனுதைக்கு உதவி செய்யலாமே; அநியாயமாய் ஒரு உயிர் போய்விடப்போகிறதே...என்று தவித்தவாறு, ..."ஏம்பா! வார்டர்! இதோபாரு; தயவுசெய்து ஜெயி லரை சற்று அழைத்துக்கொண்டுவா! அவருடன்கூடவே நான் இருந்து இந்த அபாக்யப் பிண்டத்திற்கு வயித்திய சிகிச்சை செய்துவிட்டு உடனே இங்கு கொண்டுவிடும்படிச் சொல்லி நானே வந்துவிடுகிறேன்...சற்றுப்போயேன்... சொல்லித்தான் பாரேன்...என்று கெஞ்சிக்கேட்டான்.

இதைக் கேட்ட வார்டரும்கைதியும் கடகடவென்று சிரித்தார்கள். ஸ்ரீதரன் சற்று அச்சத்துடன், "ஏம்பா இப்படிச் சிரிக்கிறீர்கள்? அவனும் கொலைகாரக் கைதி, நானும் கொலைக்குற்றக் கைதி; இருவரும் ஒரே திராசு



பக்கம் 168



பக்கம் 171

நிறைதானே! அவன் செத்தால் முழுகிவிட்டதா என்று சொன்னோமே; அதைப்போலத்தானே இவனும்; இதை உணராது வைத்யம் செய்வதாகக் கூறுகிறான்...... மடையன்!......என்றுதானே எண்ணிச் சிரிக்கிறீர்கள்" என்று கேட்டதும், வார்டர் சற்று திடுக்கிட்டு நின்றான். "நான் அப்படி நெனச்சு சொல்லலீங்க; கைதியாயிருக் கறப்போ ஒங்களெ வைத்யம் செய்ய உடமாட்டாங்க. அப்படி இருக்கச்சே நீங்க கேக்கறீங்களேன்னு நெனச் சேன்....சிரிப்பு வந்திடுச்சுங்க" என்றான்.

அதே சமயம் ஹெட்வார்டர் அவசரமாக வந்து "ஜெயிலர் உங்களைக் கூப்பிடுகிறார்கள்; வாருங்கள்" என்றபோது, ஸ்ரீதரனுக்கு விவரிக்க இயலாத யோசனை களே உண்டாகிவிட்டன...!ஏதோ பெரிய விஷயம் இருப்ப தனால்தான் திடீரென்று கூப்பிடுகிறார்கள். அம்மாவுக்கு... தம்பிக்கு...ஏதாவது ஆபத்து வந்துவிட்டதா? அன்றி, அனாதைநிலயத்திற்கோ, தர்மவைத்யசாலைக்கோ ஏதா வது வந்துவிட்டதா?...என்ற பெரிய சந்தேகமும் பயமும் தோன்றிவதைக்கிறது...எத்தனை சொல்லியும் கேட்காமல் மேலே அப்பீல் செய்துவிட்டுத் தம்பிதான் வந்திருக் கிறானோ?...என்று பலபலவிதமாக எண்ணியபடியே சென்றான். அவன்உள்ளத்தில்மட்டும் அவன்தாயாருக்குத் தான் ஏதோ ஆபத்தான நிலைமை வந்துவிட்டது என்று சொல்லப் போகிறார்களோ...என்ற புதிய அதிர்ச்சியான கவலை பாதித்தது.

---

## 24

"ஸார்! என் மதருக்கு ஏதாவது ஆபத்தென்று ஆள் வந்திருக்கிறதா? அல்லது தந்தி வந்திருக்கிறதா? ஏனென்றால் என் தாயார் இதயபலவீனப்பட்டவள்; இந்த அதிர்ச்சியினால் எப்போது அவள் உயிர் போய்விடுமோ;

என்ன விஷயம் எப்போது வந்துவிடுமோ என்று பயந்து நான் இரவு பகல் பகவானை வேண்டி என் தாயாருக்கு அத்தகைய விபத்து ஏதும் வாராது காப்பாற்றும்படி ப்ரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன்; அதனால்தான் அப்படி பயந்து கேட்கிறேன்" என்று பதறியவாறு கேட்டான்.

ஜெயிலர் வெகு சாந்தத்துடன்; "ஸார்! அப்படி எல்லாம் ஒன்றும் பயப்படவேண்டாம்; உங்கள் மனிதர் யாரும் வரவில்லை, நான் உங்களை ரூலுக்கு விரோதமாய் ஒரு முக்ய காரியமாய் அழைத்தேன். கைதியொருவனுக்கு பலமான அடிபட்டு ஆபத்தான நிலைமையிலிருக்கிறான். ஜெயில் டாக்டர் வெளியில் சென்றிருக்கிறார். அவர் வருவதற்குள் என்ன ஆகிவிடுமோ? என்று பயமாயிருப்பதாலும் வேறு டாக்டரைக் கூப்பிட்டுக் காட்டுவதைவிட நீங்கள்தான் அன்றே இம்மாதிரி தொழில் செய்வதாகக் கேட்டுக்கொண்டதாலும் அவசரம் ஆபத்து இரண்டும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டதாலும் உங்களைக் கூப்பிட்டேன். ஆஸ்பத்திரிக்கு வாருங்கள். அந்தக் கைதியைக் கவனிக்க வேண்டும்."

என்று கூறியதைக் கேட்ட ஸ்ரீதரனுக்கு ஆனந்தத்தினால் முகம் பூரித்து ஒரு குதி குதிக்கச் செய்தது. தன்னை விடுதலை செய்திருந்தால்கூட இத்தனை சந்தோஷம் உண்டாகியிருக்காது. தனது இதயத்தில் கொந்தளிக்கும் ஸேவையின் துடிதுடிப்பையும் ஆனந்தத்தையும் அப்படியே எடுத்துக்காட்டுவதுபோல், "ஸார்! இதோ காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று கூறிக் கிளம்பினான்.

ஆஸ்பத்திரியை அடைந்ததும் அந்த அடிபட்ட கொலைகாரக் கைதி ப்ரக்ஞையே அற்றுக் கிடப்பதையும் கட்டைவெட்டும் கோடாலியால் காலில் வெட்டுப்பட்டு விட்டதால் ரத்தம் ப்ரவாகம்போல் பெருக்கெடுத்துப் போய்விடவே அவனுக்கு மயக்கம்போட்டுவிட்டதையும் உணர்ந்தஸ்ரீதரன் உடனே ரணத்திற்குவேண்டிய மருந்து

களைப்போட்டுக் கட்டியவாறு பேஷண்டை நன்ருக உற்றுக் கவனித்தான். மூச்சு இருக்கிறதா? இல்லையா ?... என்கிற ஒருவித சந்தேகமே உண்டாகிவிட்டது. பல உயர்ந்த மருந்துகளை ஊசி குத்தியவாறு நோயாளியை வெகு கூர்மையாய் ஏதோ அதிர்ச்சியுடன் ஆழ்ந்து கவனித்தான்...ஊசி குத்துவதற்காகக் கையை எடுத்துப் பார்த்தபோது தீயை மிதித்தவன் போல் கூறத் தரமற்ற அபாரமான அதிர்ச்சியுடன் அந்தக் கையை அப்படியே பார்த்துக் கதிகலங்கிவிட்டான்...கையில் ராஜாத்னம்என்ற பெயர் பச்சைகுத்தியிருந்ததோடு ஒரு பக்கம் சிறிய படகும், ஒரு பக்கம் தாமரைப்புஷ்பம்போன்ற கோலமும் பச்சைகுத்தியிருந்ததைக் கண்டான்.

அவ்வளவுதான்!...வானமே இடிந்து இவன் தலையில் விழுந்துவிட்டது போன்றும் உலகமே தட்டாமாலை ஆடுவதுபோல் சுற்றுவது போன்றும் ஒரு உணர்ச்சிவேகம் அவனைச் சுற்றிக்கொண்டு வதைத்துத் திக்குமுக்காடச் செய்துவிட்டதால் அவனே மயக்கம்போட்டு விழுந்துவிடுவான்போலாகிவிட்டான்! தனக்குள் "ஹா !...சோதனையே! இத்தகைய வேடிக்கையும் நீ பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டாயா? இவர் என் பிதாவல்லவா! என் சிறிய பிராயத்தில் இதே பச்சைக் குத்து வடுவையும் கன்னத்திலுள்ள ஆபரேஷன் காயத்தையும் பார்த்தது இன்னும் மறக்கவில்லையே! இவரா கொலைகாரக் கைதி?...இவருமா இங்கிருக்கவேண்டும்? ஐயையோ! இந்த ரகஸியத்தை வெளியாரறியாதவாறு எப்படி மறைப்பது?"...என்றெல்லாம் தனக்குள் பலவிதம் எண்ணியவாறு ஊசிகுத்தாமல் திக்ப்ரமைபிடித்ததுபோலிருப்பதைக்கண்ட ஜெயிலருக்கு ஒன்றும் புரியாத சந்தேகம் உண்டாகிவிட்டது. எதற்காக இம்மாதிரி அதிர்ச்சியினல் தாக்கப்பட்டவன் போலிருக்கிருன்? ஒருவேளை உயிர்போய்விட்டதா?... என்ற சந்தேகத்துடன்..."ஸார்! என்ன யோசிக்கிறீர்கள்? ...கைதியின் உயிர் போய்விட்டதா?...என்ன? சீக்கிரம் சொல்லுங்கள்" என்ருர்.

அப்போதுதான் விழித்துக்கொண்ட டாக்டர், இந்த பரம ரகஸியத்தை வெளியிடவே கூடாது; எப்படியும் தன்னைத் தன் பிதா அடையாளம் தெரிந்துகொள்ளமுடியாது. ஏனெனில் தன்னை வெகு இளமையில் பார்த்தது. அதோடு இப்போது தாடியும் மீசையும் வளர்ந்திருப்பதால் முதலே தெரிந்து கொள்ளமுடியாது. ஆகையால் இந்த ரகஸியத்தை—மர்மத்தை—மறைத்தே பேசி நாம் இவ்விடத்தைவிட்டு எப்படியாவது வேறு ஜெயிலுக்கு மாற்றிக்கொண்டு போய்விடவேணும்....என்ற உறுதி தோன்றியது. அதனால் தன்னைத்தான் மெல்ல சமாளித்துக்கொண்டு, "ஸார்! உயிர்போகவில்லை. ஆனால் போய் விடுமோ என்கிற சந்தேகமாயிருக்கிறது. உடம்பிலிருந்து ரத்தம் அதிகமாய்ப் போய்விட்டதால் மருந்துகள் வேலை செய்வது கஷ்டம் என்று தோன்றுவதால் என் சரீரத்திலிருந்து முதலில் வேண்டிய அளவு ரத்தத்தை ஏற்றுவதற்காகவே யோசனை செய்கிறேன். உத்தரவு கொடுத்தால் ஒரு கைதிக்கு ஒரு கைதி இந்தமுறையில் உதவி செய்தால் கட்டாயம் பிழைத்துக் கொள்ளலாம். நான் திட சரீரமுடையவன்; ஆகையால் என்னுடைய ஆவலைப் பூர்த்திசெய்ய வேண்டும்" என்று என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அதிகாரியும் உடனே உத்திரவு கொடுத்துவிட்டார்.

டாக்டருடைய உள்ளத்தில் செய்யும் வேதனையும் நடக்கும் போராட்டமும் சொல்லிமுடியாது. தன் பிதாவைப்பற்றி அவன் எந்தவிதமாகவும் நினைக்கவுமில்லை, எதிர்பார்க்கவும் இல்லை. அந்தகாலத்தில் கொலைக் குற்றத்திற்காக அந்தமானுக்கு அனுப்பிய கைதியைப்பற்றி யார்தான் என்ன எதிர்பார்க்கமுடியும்? இத்தகைய சோதனையாய் இதே சிறையில் கைதியாகவேகண்டு துடிக்கும்படியான விதியமைந்தாலும் தன்னருமைத்தாயாரின் ஸௌமாங்கல்ய வளர்ச்சிக்கா

கவும் அவளுடைய மனம் கலங்காமலிருப்பதற்காகவும் தன் பிதா உயிர்பெற்றெழுந்தால் போதும். இம்மாதிரி இங்கிருக்கிருர் என்பதை அம்மா அறிந்தால் கூட சந்தோஷப்படுவாளேயன்றி துக்கப்படமாட்டாள். ஆனல் இந்த சமயம் நாம் எதையும் வெளியிடக்கூடாது. எல்லாவற்றையும் ரகஸியமாகவே நடத்தவேணும்—என்கிற திடமான உறுதியுடன் ரத்தத்தை ஏற்றியதோடு மேற்கொண்டு செய்யவேண்டிய சிகிச்சையை வெகுகனிகரத்துடன் அழகாகச் செய்வதைப் பார்க்க ஜெயிலதிகாரிக்கு இவனுடைய டாக்டர் தொழிலில் உள்ள திறமையையும், சுருசுருப்பாய் செய்யும் அழகையும் பார்க்கப்பார்க்க, இவனைப்பற்றி வந்துள்ள கடிதங்கள் பொய்யே இல்லை. உண்மையான மதிப்புரைகள்தான் என்றும் தோன்றி ஊர்ஜிதப்படுத்தியது...பாவம். விதியின் கொடுமையினல் இப்படி யொருபடாப்பழிவந்துவிட்டது. பொறுமைஎன்ருல் இம்மாதிரியல்லவா இருக்கவேணும் என்று தனக்குள் எண்ணியபடியே கவனித்துவந்தார்.

டாக்டர்:—ஸார்! இதோ இந்த மருந்தைத் தருவித்துக்கொடுத்தால் ஊசி குத்துகிறேன். அது செய்தால்தான் இதயம் சரியாக வேலைசெய்யும். அதோடு மருந்துகள் உள்ளேவேலை செய்யும் சக்தியை உண்டாக்கும், இல்லாவிட்டால் உபயோகமில்லாதுபோய்விடும். இதுமிகவும் விலை உயர்ந்தது என்பது எனக்குத் தெரியும். ஒரு கொலைகாரக் கைதிக்கு சர்க்காரில் இத்தனை பணம் செலவிடுவதற்கு யோசிப்பது சகஜந்தான்..ஸார்! கடவுள் எனக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்திருக்கிருர். ஆகையால் நான் எத்தனையோ ஏழைகளுக்காக தர்ம வைத்யசாலை வைத்து நடத்திவருகிறேன்; அந்தக் கணக்கோடு இதுவும் சேரட்டும். என் பணத்

தில் இந்த மருந்தை தயவுசெய்து உடனே வரவழைத் துத்தாருங்கள். அர்ஜண்டாக அதை ஊசி குத்தினால் தான் சகலமும் பயனளிக்கும். எனக்காக நீங்கள் கருணைகாட்டவேண்டும். நானும் ஒரு கைதிதானே என்று என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்காதிருக் கக்கூடாது ஒருகைதியின் உயிரைக்காப்பதற்கு ஒரு கைதியின் வேண்டுகோளை அங்கீகரிக்கவேண்டும்— என்று மிகவும் அழுத்தமாயும் ஒருவித உணர்ச்சியுட னும் கூறினான்.

எங்கே தன்னுள்ளத்திற்குள் புதைந்து கிடக்கும் புதிய உணர்ச்சியின் வேகத்தில் மர்மம் வெளியாகி விடுமோ! என்கிற பயத்தினால் இதயம் படபடவென்று அடித்துக்கொள்கின்றது. பரிதாபகரமாய் ஜெயிலர் முகத்தை மறுபடியும் கெஞ்சுவதுபோல் பார்த்தான்.

மறுபேச்சின்றி ஜெயிலர் அப்போதே அந்த மருந் தைவாங்கி வருவதற்கு வார்டரிடம் உத்திரவிட்டார். ஸ்ரீதரனின் முகத்தை எதனாலோ கூர்ந்து கவனித்த ஜெயிலர், ஸார்! மிகவும் பரோபகாரி, இளகிய மனது டையவர், என்றெல்லாம் ஜனங்கள் உங்களைக் கொண் டாடி கணக்குவழக்கற்ற கடிதங்கள் எனக்கு எழுதி யிருக்கிறார்கள். அந்த உண்மையை இன்று ப்ரத்யக்ஷ மாகப் பார்க்கிறேன். இருப்பினும், இந்த மனிதன் பெருங்கொலையாளி! மகாபாவி பண்ணியபாவங்கள்எல் லாம் போதாமல் இந்த சிறைச்சாலையில் இத்தனை சிறு மைப்பட்டுத் தவித்தும் அவனுக்கு புத்தி என்பதே இல்லாமல் இங்கேயும் சதாசண்டையும் சச்சரவும் கல கமும் செய்து கொண்டிருப்பதால் இவனைக்கண்டாலே இங்குள்ள சகலருக்கும் வெறுப்பு. இவன் சாகமாட் டானா என்று கூட சில கைதிகள் சொல்வதுண்டு. அத்

தகைய பாவிக்கு நீங்கள் இப்படி கருணைகாட்டு கிறீர்கள்....என்று அந்த கைதியைப்பற்றி விமர்சனம் கொடுப்பதைக் கண்ட ஸ்ரீதரனின் வயிற்றில் தாள மாட்டாத சங்கடத்தைச் செய்து வாட்டுகிறது. பதில் பேசவும் முடியவில்லை; பேசாதிருந்தால் என்ன நினைப் பாரோ என்கிற பயமும் உண்டாகிவிட்டது. அந்தளை கலவரப் போராட்டத்தில் மெல்ல சமாளித்துக் கொண்டு...உம்...இந்த மனிதன் அப்பேர்ப்பட்டவனு! ஆச்சரியமாயிருக்கிறதே. பாவம் செய்வதைக்கண்டு பயந்து அஞ்சுகிறவர்களுக்கு அதைப்பற்றி நினைப்ப தற்கே பயம்தோன்றும். எங்கே தன்னைத் தெரியாமல் பாவம் செய்து விடுகிறேமோ என்றும் நடுங்குவார்கள். பாவம் என்கிறஒரு பயங்கரம் உலகில் இருக்கின்றது என்பதையே மறந்து முடிவில் பாவத்திற்கேதான் அடி மையாகி விடுபவர்களுக்கு அளவு வைத்துக் கூறமுடி யுமா ஸார்! நளமகாராஜனை சனீச்வரன் பிடிக்கக்காத் திருந்தானும். ஒரு கடுக்களவு பாவம் கூட அந்த நளனி டம் காணப்படவில்லையாம். ஒரு தினம் சாப்பிட்டு விட்டு காலை அலம்பும்போது எங்கேயோ ஒரு சிறிய இடத்தில் ஜலம் படாதுபோய் விட்டதை நளன் கவனி க்கவில்லையாம். இதையே ஒரு பாவம் செய்ததாக வைத் துக்கொண்டு சனீச்வரன் நளனைப்பிடித்துக் கொண்ட தாக நாம் படிக்கிறோம். இக்காலத்திலோ சாப்பிட்ட கையைக் கூட சரியானபடி அலம்புவதில்லை. அனேகர் சாப்பிட்ட தட்டிலேயே ஜலத்தைத் தெளித்து போன பத்தும் போகாத எச்சிலுமாய் அலம்பிவிடுகிறார்கள். இதில் பாபமேது புண்ணியமேது ஸார்? என்றான்.

ஜேயி:—உம்மைப் பார்த்தால் இப்போது ப்ரஸங் கியோ! கதாகாலக்ஷேப உபன்யாஸகரோ என்று தோன்றுகிறது. நீங்கள் இத்தனை தொல்லைகளுக்கும்

மத்தியில் எப்படி இத்தகைய விஷயங்களில்மனத்தைச் செலுத்திப்படிக்கமுடிந்தது. இத்தனை வயதாகிக்கூட என்னால் உத்யோக உழைப்பைத்தவிர வேறெந்தவேலையையும் கவனிக்கவே நேரமில்லை. அதில் நோக்கமும் விழவில்லையே ஸார்!

டாக்டர்:—ஒரு தாயானவள் குழந்தையின் பசியறிந்து வேளாவேளைக்கு ஆகாரத்தை ஊட்டிவிடுவது தன் கடமையாகக்கொண்டு முதல் காரியமாய் அதைச் செய்துவிடுகிறாள். அதோடு தாயின் கடமைமுடிந்து விட்டதாக சில அறிவிலித்தாய்மார்கள் நினைத்துவிடுகின்றார்கள். ஆனால் அவளுடைய கடமை அதுவல்ல, ஆகாரத்தைஊட்டி தேகத்தைவளர்ப்பதுபோல்அறிவுப்பாலூட்டி ஆத்மரக்ஷணத்திற்கான அஸ்திவாரத்தைப்போட்டு வளர்ப்பதும் பெத்த தாயின் பொறுப்பாகும். இதேபோலத்தான் நாம் உத்யோகம் செய்யும்வரையில் அந்த முறையிலேயே கவனத்தை மாடுபோல்உழைத்து விட்டால் ஆகாரத்தை ஊட்டிசரீரத்தை வளர்த்த தாயின் பொறுப்புபோலாகிவிடுகிறது. அறிவுப் பாலை ஊட்டும் தாயைப்போல் நாம் நமக்குத் தாயாகி ஆத்மரக்ஷணத்திற்கான வழியையும் செய்து கொள்ள வேண்டும்.

ஸார். ஏற்கெனவே என்னை ப்ரஸங்கி. உபன்யாஸி என்று சொல்லிவிட்டீர்கள். அதையே நான் நிரூபிப்பதுபோல் தொணதொணவென்றுபேசுகிறேன். நமது வாழ்க்கைப் பாதையை எந்த விதத்தில் பகவான் வழி வகுத்துக் காட்டுகிறானோ அந்தமார்க்கத்தில் நடத்தியபடியே மூன்று தத்துவங்களை நாம் மறக்காமல் ஒரு நாளைக்கு ஒருதரமாவது நினைத்துப்பார்க்கவேண்டும் ஸார்...

ஜேமி:—என்ன! மூன்று தத்துவங்களா! அதென்ன ஸார்? சொல்வதுதான் சொல்கிறீர்களே, மருந்து வரும் வரையில் விரிவாகச் சொல்லிவிடுங்கள், கேட்கலாம்.

டாக்டர்:—ஸார்! நான் வைத்யத் தொழில் சேவையுடன் இவைகளையும் சேர்த்தே தான் செய்து வருகிறேன். சமயம் வாய்க்கும்போது எதையும் விடக்கூடாது. மூன்று தத்துவங்கள் எவை என்றால், நாம் என்று பூமியில் பிறந்தோமோ, இறப்பது நிச்சயம். அதை எத்தகைய மகான்களாலும் தடுக்கமுடியாது. இறந்துவிட்ட பின் பிறப்பு என்பதை இல்லாமல் நாம் ஜீவித்திருக்கும் போதே அதற்கான முறையில் வாழ்க்கையை நடத்தவேண்டும். இது ஒன்று

இரண்டாவது. பாபம் என்கிற ஒரு பயங்கரம் மனிதனைச் சுத்தி யலைகிறது. அதைத் தெரிந்து செய்தாலும் குற்றம். தெரியாமல் செய்தாலும் குற்றம் என்பதை முதலில் உணரவேண்டும்...

ஜேமி:—என்ன! தெரிந்து செய்தால்தான் குற்றம். தெரியாமல் செய்தால் எப்படி ஸார் குற்றமாகும்? நான் தெரியாமல் செய்துவிட்டேன் என்று ஒப்புக் கொண்டால் அதற்கு தண்டனைகூட குறைக்கப் படுகிறதே...

டாக்டர்:—ஸார்! உங்கள் வார்த்தையையே வைத்துக்கொண்டு பாருங்கள். தெரியாது செய்த குற்றத்திற்கும் தண்டனை உண்டு என்றும், குறைக்கப்படுகிறதென்றும் சொல்கிறீர்கள். அப்போது என்ன அர்த்தம். தெரியாது முள்ளின் மேல் காலை வைத்தாலும் குத்துகிறது. தெரிந்து வைத்தாலும் குத்துகிறது.

பாவமென்றே நினைக்காமல் புண்ணியமாகவே எண்ணிச் செய்யும் சில காரியத்திற்கும் தண்டனை உண்டு என்று பெரியவர்கள் உதாரணத்துடன் கூறுகிறார்கள், அதாவது ஒரு ராஜா மகா தர்மிஷ்டன். பாவம் என்பதையே அவன் அறியாதவன். பரம பக்த சிகாமணி. தெய்வ வழிபாடுகளைத் தனது ஜீவநாடியாகச் செய்து வருபவன். அத்தகைய அரசன் ஸம்ஸ்க்ருத பண்டிதன். மற்ற எந்த பாஷையையும் வெறுத்து மட்டமாக நினைப்பவன். அவன் சமூகத்திற்கு ஒரு ப்ராம்மணன் கவிபாடுவதற்காக வந்து, தமிழ் பாஷையில் பகவானின் மீது கவிகள் பாடினான். அரசன் அதை வெறுத்து உத்க்ருஷ்டமான ஸம்ஸ்க்ருதபாஷையில் பாடாமல் தமிழில் பாடியதற்காக ப்ராம்மணனைச் சிறையிலிட்டு விட்டானும். ஸம்ஸ்க்ருத பாஷையைத் தவிர வேறு எந்த பாஷையில் பாடினாலும் குற்றம் என்று அவன் எண்ணம். காலாந்தரத்தில் அரசன் உயிர் நீத்தபோது அவனை எமபடர்கள் நரகத்திற்கு இழுத்துச் செல்லவந்தார்களாம். நான் என் மனமறிய பாபமே செய்ததில்லையே, எனக்கெதற்காக நரக தண்டனை என்று கேட்டு வருந்தினானும் அரசன்.

நீ பாவம் என்று அறியாமலேயே செய்த பாவத்திற்காக இந்த தண்டனையை நீ அனுபவித்தாக வேண்டும். பகவானின் நாமத்தைப் பாடுவதற்குத் தமிழ் பாஷையானால் என்ன! வேறு எந்த பாஷையானால் தான் என்ன? விஷயந்தானே ப்ரதானம்! பகவானின் நாமத்தை நீ கவனியாமல் பாஷையில் விரோதங் கொண்டு ஒரு ப்ராமணனை தண்டித்தது மகா பாதகத்தில் சேர்ந்ததல்லவா... என்றானும் எமதர்ம ராஜன். பாவம் என்று நினையாத செய்கைக்கே இப்படியாயின் பாவத்தையே தெரிந்து அறிந்து மனம், வாக்கு, காயம்,

மூன்றும் செய்யும் பாவிகளுக்கு எத்தகைய பயங்கரமான கொடிய நரகம் இருக்குமோ! என்று அரசன் நடுநடுங்கினனும்...

இம்மாதிரியான நீதிக் கதைகளையாவது நாம் கேட்டு அறிந்தால் ஒரு சிறிதாவது பயம் தோன்றும். கொலைகளவு, முதலிய கொடும் பாவத்தையாவது செய்யாமல் தன்னைத்தான் காத்துக்கொள்ளலாமல்லவா?

பகவானின் நாமத்தைத் தவிர நமக்கு வேறு துணையோ சார்த்தகமோ! கிடையாது. அவன் திருவடிதான் தஞ்சம் என்பதை உணர்ந்துவிட்டால் மனிதனை அந்த நாமமே காத்து ரக்ஷிக்கும். இதுதான் மூன்றுவது தத்துவம் என்று சொல்கிறபோது மருந்துக்குச் சென்ற ஆள் வந்து விட்டான். உடனே ஸ்ரீதரன் வெகு கனிகரத்துடன் அந்த மருந்தை ஊசி குத்தினன்.

ஸ்ரீதரனின் வார்த்தைகளைக் கேட்டு மனத்திற்குள் ஒருவிதமான ஆச்சரியமும் இத்தகைய மனிதனின் தலையில் இம்மாதிரி யொரு விதியமைந்துவிட்ட பரிதாபமும் கூடிவதைத்தது. இதையே பார்த்துக்கொண்டிருக்கையில், ஸார்! ஒருவேண்டுகோள்! என்று ஸ்ரீதரன் மிகவும் தாழ்ந்த குரலில் கேட்டான்.

ஜெயி:—பேஷ்! இப்போதுதான் நானும் சந்தோஷப்படுகிறேன். அப்பீல் செய்வதற்காக...

ஸ்ரீத:—(கடகடவென்று சிரித்தான்.) ஸார்! நீங்கள் அப்படித்தான் நினைப்பீர்கள் என்றுநான் அப்போதே நினைத்தேன். அப்பீல் செய்வது என்பது இந்த ஜென்மத்திலில்லை. நான் இந்த சிறைச் சாலையை என்னுடைய லக்ஷியத் தவச் சாலையாகவே கருதி இதி

லேயே இருக்கவிரும்புவதால் இதிலுள்ள பாவப் பிண்டங்களாகிய ஆத்மாக்களுக்கு ஹிதோபதேசம் செய்து அவர்களுக்கு தெய்வ பக்தியை உண்டாக்கி ஸத் விஷயத்தில் புத்தியைச் செலுத்தும்படி ஒரு ஸேவை செய்ய உத்தேசம். அதனால் நான் பல ஊர் களிலுள்ள சிறைச்சாலைகளிலும் இருக்க ஆசைப்படுகி றேன். தயவு செய்து என்னை வேறு ஊர் ஜெயிலுக்கு மாற்றி விடும்படி சிபார்சு செய்து உதவினால் அதுவே போதும்.

ஜே:—அடாராமா! என்னவோ! ஏதோ என்று எண்ணினேன்! சரி. உமது இஷ்டப்படி அதற்கு ஏற் பாடு செய்கிறேன். உமது தங்கையாமே! உஷாதேவி. அந்தம்மாள் உங்கள் அனாதை நிலயத்தைப் பற்றியும் தர்ம வைத்யசாலையின் விஷயமாகவும் நேரில் சில விஷ யங்கள் பேசவேண்டுமாம். அதனால் கட்டாயம் பார்க்க அனுமதி கொடுக்கும்படி எழுதியிருக்கிறார்; உங்கள் சகோதாரும் எழுதியிருக்கிறார். அவர்களுக்கு என்ன பதிலனுப்புவது...என்றார்.

இதைக் கேட்ட ஸ்ரீதரனுக்கு மிகுந்த குழப்பமும் வருத்தமும் உண்டாகிவிட்டது. தன் பிதாவைப் பார்த் ததுமுதல் எப்படியாவது இந்த ரகஸியச் செய்தியை அம்மாவுக்கு தெரிவித்தால் அம்மா பரம சந்தோ ஷத்தை அடைவாள். தம்பியும் பூரித்துப்போவான். உயிருடன் இருக்கிறாரோ! இல்லையோ! என்பதுகூட தெரியாமலிருக்கும் நிலைமையில் தவிக்கின்றவர்களுக்கு கைதியாகவாவது உயிருடனிருக்கிறார் என்றால் எத்தனை மகிழ்ச்சி உண்டாகும். அம்மாவின் ஸௌ மாங்கல்ய பாக்யத்தைக் கண்டு அம்மாவின் இதயம் ஆனந்தமயமாய்ப் பொங்குமல்லவா! கைதியாயிருப்

பினும் தனது தெய்வமாகையால் தூரவிருந்தாவது தரிசிப்பாளல்லவா! உஷாவுக்கும் அவள் தாயாருக்கும் கூட எத்தனை சந்தோஷமாயிருக்கும் என்று தனக்குள் ப்ரமாதமான யோசனையிலாழ்ந்து தம்பித்து விட்டதால் பதிலே பேசாமல் மவுனியானான்.

இதைக் கண்ட ஜெயிலர், என் ஸார் இத்தனை கலக்கம்... என்று முடிப்பதற்குள் ஸ்ரீதரன் சற்று தெளிவு பெற்றவனாய், "ஸார்! மன்னிக்கவேணும். என் தாயார் மிகவும் பலவீனப்பட்டவள். அவள் என் விஷயத்தில் மிகவும் ஷாக்கடித்து கொண்டிருக்கும் சமயம் கம்பிகளின் இடுக்கில் என்னைப் பார்ப்பது என்றால் எங்கே அவளுடைய மனோ வேதனையில் இதயமே நின்றுவிடுமோ என்று பயப்படுகிறேன். ஆனால் என்னைப்பார்க்கவேண்டுமென்கிற ஆவலின் துடிதுடிப்பால் இதயம் பாதிக்கப்படுமோ என்றும் தோன்றுகிறது. அதனால்தான் குழம்பித் தவிக்கிறேன்...சரி... தாங்கள் தயவுகூர்ந்து என்னை வேறு ஊருக்கு மாற்றி விடுவது உண்மையானால் கடைசீதரமாக என் தாயின் விருப்பப்படிக்கு நான் பார்க்க சம்மதப்படுவதாகவே எழுதிவிடுங்கள். கம்பிகளுக்குள் மிருகம்போல் நான் என் தாயாருக்கு காட்சிகொடுக்கவேண்டாமென்று நினைத்தேன். கடவுள் சித்தம்; அதுதான் அவருக்கு த்ருப்திபோலும்! என்று கூறும்போது அவனையுமறியாமல் கண்ணீர் முட்டிவிட்டது.

ஜெயி:—ஸார்! என்னாலாகிய உதவி உங்களை வேறு ஊருக்கு மாற்றுவதுடன் உங்கள் தாயார் உங்களைக் கம்பிகளுக்குள் பார்த்துப் பரிதவிக்காமல் பக்கத்திலேயே இருந்து பார்த்துக் களிக்கும்படிக்குச் செய்கிறேன். சரிதானே? என்றபோது ஜெயிலரின் முகத்

தில் ஒரு புதிய உணர்ச்சி தவழ்ந்து கண்களில் ப்ரகாசித்தது.

இந்த வார்த்தையைக் கேட்ட ஸ்ரீதரான் உள்ளம் பூரித்துப் புலகிதமுற்ற வேகத்தில் தான் ஒரு கைதி, அதிலும் கொலைக்குற்றம் செய்ததாக தண்டனையடைந்த கைதி என்பதையே மறந்து ஜெயிலரின் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு தனது சந்தோஷத்தையும்நன்றியறிதலையும் தெரிவித்து வணங்கினான். அதே சமயம் அடிபட்டுள்ள கைதி சிறிது கண்ணைத் திறந்து பார்க்கவும் நாக்கை கொஞ்சி தாகம் என்று தெரிவிப்பதுபோலும் செய்வதைக் கண்டு மிக்க சந்தோஷத்தையடைந்த ஜெயிலர் அந்த கைதிக்கு ஜலம் சிறிது குடிக்கவைத்தார். ஜலம் குடித்த கைதி நன்ருகத் தெளிவு பெருததால் அப்படியே மறுபடியும் கண்ணை மூடிப் படுத்துவிட்டான். சரி...எனக்கு வேறுவேலை இருக்கிறது. நான் வருகிறேன் உங்கள் தம்பிக்கும் தங்கைக்கும் இன்றே கடிதம் எழுதிவிடுகிறேன் என்று கூறிவிட்டு பழயபடி காவல் பந்தோபஸ்துடன் ஸ்ரீதரனை ஜெயில் ரூமுக்கு அனுப்பிவிட்டுச் சென்ருர். ஸ்ரீதரனுக்குமட்டும் இன்னதென்று விவரிக்க முடியாத உணர்ச்சி மனத்தில் பொங்கதளித்தது.

# 25

"ஹல்லோ! யார்பேசுவது......உஷாதேவிதானே! குட்மார்னிங் ஸிஸ்டர்! என்ன சமாசாரம்...என்ன! டாக்டர் ஸ்ரீதரனைப் பார்க்க உத்திரவுகிடைத்துவிட்டதா? மெத்த சந்தோஷம். நான் கட்டாயம் வருகிறேன்...என்ன! அவரே சொல்லியனுப்பினரா!... ஆச்சரியமாயிருக்கிறதே. மிஸ். உஷாதேவி! இன்னும் ஒரே ஒரு விஷயம். டாக்டர் ஸ்ரீதரனுடைய முக்ய

பேஷண்டு ஒரு அனாதைப் பெண்ணிருக்கிறாள். அவளுக்கு சதா சர்வகாலமும் டாக்டரின் நினைவாகவே தவிக்கிறாள். அவளையும் கூட அழைத்துச் சென்றால் மிகவும் சந்தோஷப்படுவாள். பாவம், டாக்டருக்கும் சந்தோஷமாகவே இருக்கும். அம்மாவிடம் இதைத் தெரிவித்து உத்திரவு வாங்குங்கள். நான் அந்தப் பரதேசியைக்கூட அழைத்து வருகிறேன். சரி...மறுபடியும் போன் செய்கிறீர்களா! நல்லது...என்று டாக்டர் துளஸிபாய் வெகு உத்ஸாகத்துடன் உஷாவிடம் டெலிபோனில் பேசிவிட்டு உடனே தர்ம ஆஸ்பத்ரிக்கு ஓடி வந்தாள்.

இவளைக்கண்ட உடனே நோயாளிகளில் சிலர், டாக்டர்! ......கேஸ் விஷயம் ஏதாவது தெரிந்ததா! நம் பெரிய டாக்டர் எப்போது வருவார்கள். அவரைப் பார்த்து எங்கள் ஆவலைக்கூறி மகிழவேண்டுமே என்று ஒரேமுகமாய்க் கேட்டார்கள்.

படுக்கையோடு படுக்கையாய் ஒட்டிக்கொண்டு மிகவும் பலவீனமானநிலைமையில் உள்ள ராதா என்கிற அனாதைப்பெண் துளஸியைப் பார்த்ததுமே தாங்கமாட்டாத பதைப்புடன், டாக்டர்!...டாக்டர்! இப்படி வாருங்கள். ஏதாவது தகவல் கிடைத்ததா! உங்கள் முகத்தைப் பார்த்தால் ஏதோ விசேஷசமாசாரம் கொண்டுவந்திருப்பதுபோல் பரபரப்பும் பூரிப்பும் தெரிகிறதே. டாக்டர் வீட்டிற்குப்போயிருந்தீர்களா? என்று அன்பே வடிவாய்க் கேட்டாள்.

துளஸி மிக்க ஆர்வத்துடன்...ராதா! உனக்கு சந்தோஷசமாசாரத்தைத் தெரிவிப்பதற்காகவே நான் ஓடோடிவந்தேன். டாக்டர் ஏதோ பெரியமனது செய்து அவர்களுடைய தாயார், தம்பி, முதலானவர்

களைப்பார்க்கலாம் என்று உத்திரவு கொடுத்திருக்கிறார். நானும் கூடப்போகப்போகிறேன். இரவு பகல் சதா காலமும் நீ அவருடைய க்ஷேமத்தையே கோரி ப்ரார்த்தனை செய்வதால் உன்னையும் அழைத்துப் போகலாமென்று நான் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகள் செய்துவிட்டேன். ராதா நீ இதைக் கேட்க மிகமிக ஆனந்தப்படுவாயல்லவா! என்று அன்பொழுக கேட்டாள்.

எத்தகையோருக்கும் அதிக துக்கம் வந்தாலும் அதிக சந்தோஷம் வந்தாலும் பேசமாட்டாமல் ஒரு விதமான உணர்ச்சியுடன் வாயடைத்து ஊமையாகிக் கண்கள் நீர் அருவியைப் பொழிய உணர்ச்சிவயப்பட்டு விடுவது சர்வசகஜமான ப்ரத்யக்ஷமாகும். பாவம்! அனாதையாய் நிர்க்கதியாய்த் தெருவில்கிடந்த தன்னை எமனிடம் வாதாடி ஒரு பொருளாக்கி அளப்பரிய அன்பைக் கொட்டியளந்து இவ்வுலகத்தில் தானும் உயிருடன் இருக்க அருகதையுண்டு என்கிற நிலைமைக்குக் கொண்டு வந்த வள்ளலை அனாதையான ராதா கோயிலிலுள்ள தெய்வமாகவே எண்ணி இருப்பதால் இதைக் கேட்ட உடனே வாயடைத்து மவுனியாகி ஆனந்தப்பதுமைபோல் கண்ணீர் வழியஉணர்ச்சிவயப் பட்டு அப்படியே தம்பித்துவிட்டாள்.

சில வினாடிகள் கழித்து துளஸிபாயின் கைகளைப் பிடித்துக்கொண்டு...தாயே: இந்தப் பாவிக்கு ஆகாயம் போட்டது: பூமி ஏந்திக்கொண்டது என்கிற நிலமைதான் தெரிகிறதேயன்றி எத்தகைய அன்பும் ஆதரவும் தெரியாது வரண்டுகிடந்த உள்ளத்தில் அன்புப்பயிர் துளிர்த்து ஆதரவுக்கனியும் குலுங்க வைத்த வள்ளலை நினைக்காமலும் பார்க்காமலும்கூட இருப்பார்களா! எனக்கு ஒன்றுமே சொல்லத் தெரிய

வில்லை டாக்டர். ஸ்ரீகிருஷ்ணனின் ஜன்ம பூமியில் தவம் கிடக்கும் மகானுபாவரை தரிசிக்கும்படிக்குச் செய்யும் உங்களை நான் எப்படித்தான் போற்றிவணங்குவேன் என்றே தெரியவில்லை. தாயே! என்னை மறக்கவேண்டாம். என் மனத்துடிப்பின் வேகம் அந்த த்யாக பிம்பத்தை தரிசித்தபிறகே சாந்தியை அடையும்...என்று அவள் உள்ளத்தை அப்படியே திறந்துகாட்டுவது போல் பேசினாள்.

துளஸிபாயிக்கு இந்த ஆழமான அன்பின் ஜ்வாலையின் வேகம் நன்றாக மனத்தில் பட்டது...ராதா! நீ கவலைப்படாதே. நீ சொல்லியா நான் உன்னை அழைத்துப்போக ஏற்பாடு செய்தேன். எப்போது புறப்படவேணுமோ அதை நான் பிறகு தெரிவிக்கிறேன். இதை வெளியே சொல்லாதே...என்று எச்சரித்துவிட்டுச்சென்றாள்.

அதிமனோகரமான காலைநேரம். எங்கு பார்த்தாலும் சிலுசிலுப்பான காற்று ஜம்மென்று வீசுகிறது. பக்ஷி இனங்கள் தனிக்காட்டு அரசுபுரிவதுபோல் இங்குமங்கும் சுதந்திரச் சிரகடித்துப் பாடியவண்ணம் பறக்கின்றன. தொழிலாளர்கள், கலப்பையும் கையுமாக சிலர், மாடுகளை ஓட்டிச் சிலர், தயிர் பால்...காய்கறிகள் முதலிய பண்டங்கள் சகிதம் சிலர், இப்படியாக சாரிசாரியாகச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

இந்த அழகை அள்ளிப்பருகியவாறு காலைந்து கார்களில் தாமோதரன், உஷா, துளஸி, ராதா, கமலவேணி, முதலிய பலர் செல்கிறார்கள். ஒவ்வொருவருடையஉள்ளம்ஒவ்வொருவிதமான பூரிப்பை அடைந்து கும்மாளமிடுகின்றது. எனினும் தன்னருமைக்

கண்மணியை கம்பிக்குள்ளே கைதியாய் எப்படிக்காண் பது என்கிற ஒரு மகத்தான வேதனைமட்டும் இத யத்தை வாட்டி வதைத்து கமலவேணியைக் குலுக்கு கின்றது. அதனால் ஒருவரிடமும் பேசாமலும் ஒரு விதமான குதூகலமும் இன்றி உட்கார்ந்திருக்கிறாள்.

குறித்த நேரத்தில் ப்ரம்மாண்டமான சிறைச் சாலையின் முன்பக்கம் கார்கள்வந்து நின்றன. அதைப் பார்த்த உடனே கமலவேணியின் நெஞ்சில் செம்மட்டி யாலடிப்பதுபோல் ஒரு வேதனை தாக்கி அழுத்து கிறது. பெத்த வயிற்றின் சங்கடம் தாளாமல் மளமள வென்று கண்களில் கட்டறுத்த வெள்ளம்போல் தண் ணீர்பொங்கி மடமடவென்று வழிந்துவிட்டது.

தாமோதரனின் நெஞ்சம் திக்குதிக்கு என்று அடித்துக்கொள்கிறது. இதற்குள் சிறைச்சாலையின் சிறியகதவு திறக்கப்பட்டு இவர்களை வார்டர் அழைத் துச்சென்று இன்டர்வ்யூ ரூமில்கொண்டு உட்காரவைத் தான். அங்கு கம்பிக்கூண்டுகள் நிற்பதைப் பார்த் ததுமே கமலவேணியம்மாளுக்கு வயிற்றில் தாங்கமுடி யாதவேதனைசெய்து அவளுடைய இதயத்தைப் பிறிக் கொண்டு துக்கம் குமுறியது.

ஜெயிலரும் ஜெயில் மேட்ரனும் அங்குவந்தார்கள். இவர்களைப் பார்த்ததும் அவர்களுக்கே மனதில் ஏதோ சங்கடம் செய்தது. ஜெயிலர் சமாளித்துக் கொண்டு, அம்மணீ!...ஐயா! டாக்டர் ஸ்ரீதரன் ஒரு நிபந்தனையைத் தெரிவித்திருக்கிறார்: அதற்கு ஒப்புக்கொள்வதாயின் அவர் தாராளமாய் வந்துபேசு கிறாராம்;இல்லாவிட்டால் உங்களுக்குத்தன்னைப்பார்க் கும்படியாய் தூரநின்றுவிட்டுப் போய்விடுவாராம். அதாவது, அவரைக்கண்டு யாரும் கண்கலங்கிப் புலம்

பக்கூடாதாம். மறுபடியும் மர்ஸி பெடிஷனே! அப்பீலோ! செய்வதாக உத்தேசமே இருக்கக்கூடாதாம். அம்மாதிரி கண்டிஷனுக்கு இணங்குவதாயின் வருகிருராம். என்ன சொல்கிறீர்கள்? என்று மரியாதையாய்க் கேட்டார்.

இதைக்கேட்ட எல்லோரும் ஒரு முறை ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். கமலவேணி அம்மாளால் பேசவேமுடியவில்லை. மவுனமே ஸாதித்து விக்கிவிக்கிப் புலம்புவதைத்தடுக்க வெகு ப்ரயாஸைப் பட்டுக்கொண்டிருந்தார்கள். உஷாதான் கமலவேணியைத் தாங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்...... ஸார்! பெத்தவயிற்றின் துடிதுடிப்பு எப்படிப்பட்ட கொடுமையானது என்பது உங்களுக்குத் தெரியாதா! பரோபகாரத்திற்கே பிறந்துள்ள உத்தம கர்மவீரனை இத்தகைய படாப்பழியுடன் கம்பிக்குள்ளே பார்ப்பதென்றல் யார் மனந்தான் கரையாது ஸார்! இதைக் கட்டுப் படுத்தவோ தடுக்கவோ! பகவான்தான் அத்தகைய ஒப்புயர்வற்ற மனநிம்மதியை—மறத்ததன்மையைக் கொடுத்து சாந்தியின் சிகரத்தில் ஏற்றிவிடவேணுமேயன்றி மனிதபாசத்தின் மத்தியில் நினைந்து கொண்டிருக்கும்போது அந்த நிலை கிட்டுமா. ஏதோ முடிந்தவரையில் எல்லோரும் அண்ணனின் விருப்பப்படியே நடக்கிறோம். தயவுசெய்து அந்த த்யாக பிம்பத்தை அழைத்துவாருங்கள்... என்று வெகு அழகாகவும் சாந்தமாகவும் பேசினுள்.

தாமோதரனுக்குள்ள உணர்ச்சியைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. மெல்ல சமாளித்துக்கொண்டு, ஸார்! நாங்கள் கண்ணுல்பார்த்து எங்கள் கவலைதீர்ந்தால்போதும். எப்படியும் பகவான் ஒருவன் இருக்

கிருன். கைவிடாமல் காப்பாற்றுவான் என்கிற நம்பிக்கை இருப்பதால் அவன் சரணரவிந்தங்களை நம்பி நாங்கள் ப்ரார்த்தனைசெய்து அண்ணனின் பழியைக் களைந்து அவன் விரும்பும் சாந்தியின் சிகரத்தில் அவரை அமர்த்தி ரக்ஷிக்கும்படி வேண்டுகிறோம். எத்தகைய அப்பீலோ, மற்ற எதுவுமோ செய்யவில்லை என்பதை அண்ணனிடம்சொல்லி யழைத்துவாருங்கள் என்று நெஞ்சடைக்கும் துக்கத்துடன் வேண்டினுன்.

உடனே ஜெயிலர் வார்டரையனுப்பி ஸ்ரீதரனை அழைத்துவரும்படி உத்திரவிட்டார். சில நிமிஷங்களுக்குள் சாந்தமே வடிவாய், புன்னகை தவழும் கம்பீரமான தோற்றத்துடன் முன்னிலும் தெளிவான நிலைமையில் ஸ்ரீதரன் வருவதைக்கண்டதும் எல்லோரும் அப்படியே ப்ரமித்துத் தம்பித்து செய்வதறியாது நின்றுவிட்டார்கள். தன் மகன் இளைத்துப்போய் எலும்புக்கூடாய் உலர்ந்து பார்ப்பதற்குப் பரிதாபமாய்வந்து நிற்பான் என்று கமலவேணியம்மாள் எண்ணித் துடிதுடித்த வண்ணமிருந்ததற்கு நேர் மாருக வீட்டிலிருப்பதைவிட நன்ருகவும் கலக்கமற்ற நிலைமையிலும் இருப்பதைக்கண்டதும் பரிதவிக்கும் உள்ளத்தில் ஒரு தனித்த உணர்ச்சியும் உவகையும் உண்டாகியது. தனக்குள் ஏதேதோ எண்ணியவாறு ஓரேப்ரமிப்புடன் நிற்கையில் ஸ்ரீதரன் தாய்ப்பசுவைக்கண்ட கன்றுக்குட்டியைப்போல் ஒரே தாவலாகத் தாவியவாறு வந்து, அம்மா!...என்று கூவியபடியே சாஷ்டாங்கமாய்க் காலில் விழுந்து வணங்கி எழுந்து சேர்த்துக்கட்டித் தழுவி பின் தம்பியை அப்படியே சிறு குழந்தையைப்போல் சேர்த்து அணைத்துக் கொண்டு தன்னுள்ளத்தில் பொங்கும் ஆசை வெள்ளத்தை அப்படியே அள்ளி வீசியதுபோல் காட்டி...

தாழு! சவுக்யமா? அனுதை நிலயத்தின் வேலேயும், தர்ம வைத்யசாலேயின் ஸேவையும் சிறப்பாக நடக்கிறதா;...ஓ,துளஸியா...ராதாவா! அடேடே...இவ்வளவு தூரம் வருவதற்குத்தக்கபடி குணமாகிவிட்டதா... தங்கச்சி; உன் ஸேவைஎல்லாம்எப்படி இருக்கிறதம்மா சின்னம்மா...உங்களே எல்லாம் ஒரே இடத்தில் சேர்த்தாப்போல் பார்ப்பது எனக்குப் பரமசந்தோஷமாயிருக்கிறது...இதென்ன அசட்டுத்தனம்...யாரும் கண்ணீர் விடக்கூடாதென்று சொல்லிவிட்டுத் தானே வந்தேன். இப்படி கோழையாயிருக்கலாமா!...என்பதற்குள்... தம்பி!உன்னேப் பார்த்த ஆநந்தத்தில் கண்ணீர் தானுக வந்து விட்டது. நாங்கள் அழவில்லே. நீ போய் விடாதே தம்பி! என்று உஷாவின் தாயார் இதயபூர்வமாய்க்கூறினுள்.

இதைக்கேட்ட ஸ்ரீதரன் கடகடவென்று நகைத்தான். அந்தச் சிரிப்பொலியிலே த்யாகத்தின் கம்பீரமும் அமைதியின் அஸ்திவாரமும். பக்தியின் ஆழமும் சாந்தியின் சிகரத்தில் நிம்மதியாய் நிற்கும் பெருமையும் வெகு நன்ருகத்தெரிந்தது...உம்...என்னேப் பார்ப்பதா ஆநந்தம். அந்த ஆநந்தத்திலா கண்ணீர் பெருக்கு...அடாடா! இத்தகைய உறுதியான ப்ரேமையை—ஆழமான அன்பை—சாக்ஷாத் ஜகத்ரக்ஷகன் மீதுவைத்திருந்தால் எத்தனேஸார்த்தகமும்,இகத்திற்கும் பரத்திற்கும், ப்ரயோஜனமும் உண்டாகும். இன்று இருந்து நாளே அழிந்து நாற்றக் குப்பையாய் நசித்துப் போகக்கூடிய மாமிஸப் பிண்டத்தினிடத்திலா இத்தனே அன்பு...இந்த தத்துவத்தைத்தான் நம் ஜனங்கள் அடியோடு உணருது பாசமாகிய பாசியிலேயே புரண்டுத் தவிக்கிருர்கள்...இதைத்தான் பட்டிணத்து அடிகள் “ செத்த பிணத்தருகே சாகும்பிணம் குந்தி கத்துதைய்யோ” என்று கதறிப்பாடி இருக்கிருர்.

சரி...நீங்கள் வந்துள்ள சிறிதுநேரத்தில் நான் ப்ரஸங்கம்செய்து நேரத்தை வீணுக்குவதாக உங்கள் இதயநாதம் தாபகீதத்தை எழுப்புகிறது...அம்மா!...வந்துள்ள சற்றுநேரமும் பேசாமல் மவுனம் சாதிக்கிருயே அம்மா. தம்பி இப்பொழுது எப்படி இருக்கிருன் பார்த்தாயா! இந்த மகானுபாவரின் தயவால் நான் இப்பொழுது கம்பிக்கு வெளியில் பேசுகிறேன்...தம்பீ! இரண்டு ஸ்தாபனங்களுக்கும் பணத்திற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிருய்...உஷா...எனம்மா பதுமைபோல் நிற்கிருய்...ராதா! உன் உடம்பு நன்ருகக் குணமாகிவிட்டதா...ஸார்...இந்தப் பெண்ணுல் எனக்குக்கிடைத்தற்கரிதான ஒரு புகழும்வெற்றியும் கிடைத்தது. பாவம். அனுதை, திக்கற்றபரதேசி என்ருல் தகும், ப்ரமாதமான உடம்புக்கு வந்ததால் என்னுடைய ஆஸ்பத்திரியில் யாரோ தெருவோடுபோகிறவர்கள் கொண்டுபோட்டார்கள். மூளேயில் பலத்த கோளாறு உண்டாகியிருந்தது. மேல் நாட்டாரைப் போல் நாமும் மூளேயில் ஒரு ஆபரேஷன் சிகிச்சை செய்துபார்க்கவேண்டும். அனுதைப் பெண்தானே இருந்தாலும் இறந்தாலும் கேள்வி இல்லே. அந்த சிகிச்சையின் வெற்றி பகவானின் கையிலிருக்கிறது. அவர்விட்ட வழியாகட்டும்! என்று துணிந்து சிகிச்சை செய்தேன். பகவான் வெற்றியைக்கொடுத்தார். பாவம் நிர்க்கதியான இப்பெண்ணே நான் தர்மவைத்யசாலேயிலேயே வைத்து மேலும் சிகிச்சைகள் கொடுத்துவருகையில்தான் இக்கதி வந்துவிட்டது. எனக்கு பதில் இதோ இந்த லேடி டாக்டர் பார்த்துக்கொள்கிருர்கள் என்று தானே முன்கூட்டித் தெரிவித்தான்.

இதைக்கேட்ட ஜெயிலர் மேலும் வியப்பும் ஸ்ரீதரனிடம் நன்மதிப்பும் கொண்டு ப்ரமித்துப்போனுர்.

இத்தகைய அழகிகளைச் சுற்றிலும் வைத்துக்கொண்டு இந்த மனிதன் சற்றும் சபலமோ! கெட்ட எண்ணமோ இல்லாது எப்படித்தான் த்யாகத்துறவியாய்—ஜிதேந்திரியனாய்— வாழ்க்கை நடத்துகிறான். இதுவெறும் மனிதபலம்மட்டும் இருந்தால் போதாது. தெய்வ பலமும் யோகசாதனமும் வைரம்போன்ற உறுதியும் சேர்ந்திருப்பதனால்தான் நடக்கமுடிகிறது......என்று தனக்குள் எண்ணி வியப்புற்றார்.

வெகு ப்ரயாஸைப்பட்டு தன்னுடைய மனக் கொதிப்பை அடக்கிக்கொண்ட கமலவேணியம்மாள்... தம்பீ! இதற்கு விமோசனம் எப்போ... என்று தடுமாறியபடியே கேட்டாள்... அம்மா... விமோசனமா... இப்பொழுது ஏதாவது வபரீதம் இருப்பதாக நினைப்பவர்களுக்கல்லவா விமோசனத்தைத் தேடவேண்டும். எனக்குள்ள நிம்மதியும் சந்தோஷமும் சொல்லிமுடியாதம்மா! இந்த மகானுபாவர் கருணை கூர்ந்து இங்கும் ஸேவைசெய்ய எனக்கு அனுமதியளித்துவிட்டதால் இனி சொர்க்கப்பதவிவேண்டாம். அடிக்கடி முடிந்த போதெல்லாம் உங்களைப்பார்க்கிறேன்... தாமு! என்னப்பா யோசனை செய்கிறாய்... என்று தானே ஏதோ பேசிவார்த்தைகளை மாற்றிப் பார்த்தான்.

தாமு:—அண்ணா! ஏதேதோ பேசவேண்டும் என்று நான் எண்ணிக்கொண்டுவந்தேன். ஆனால் தொண்டையை அடைத்துவிட்டது. பேசவேதெரியவில்லை!...உஷா தன்னுடைய ஆடையாபரணங்களை எல்லாம் விற்று 25 ஆயிரம் ரூபாய் இந்த ஸ்தாபனங்களுக்காக நன்கொடை கொடுத்தாள். அதைத்தவிர தேவதாசிகளில் உத்தமிகளாயிருப்பவர்களிடமெல்லாம் நிதி திரட்டி உஷாவின் தாயார் 50 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள். உன்னுடைய ஆப்த சிநேகிதர்கள்

சிலர் பணமனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். நமது சொத்திலும் பெரும்பாகத்தை இதற்கே செலவுசெய்வதென்று தீர்மானித்துச் செய்துவருகிறேன். இரண்டு ஸ்தாபனங்களும் வெகு நன்றாக நடக்கின்றன. ஆனால்,

சந்திரனில்லா வானம், தாமரை இல்லாப் பொய்கை
மந்திரி இல்லா வேந்தன், மதகரி இல்லாச்சேனை
மந்திரமில்லா மறைவன், மாதர்களில்லா மனைகள்
தந்திகளில்லாவீணை, தாயில்லாக்குழவிபோலாம்...

என்கிறபாடல்படி நீ இல்லாத எந்த இடமும் சகலமும் பாழாகவே தோன்றுகிறது. அண்ணா! இந்தப் படுபாவி தம்பியின் பொருட்டல்லவா உனக்கு இக்கதி நேர்ந்தது. இந்த பாவத்தை நான் எப்படி... எங்கு போய்த்தீர்ப்பேன்... என்றுகூறும்போது துக்கம் தாங்காமல் இதயத்தைப் பிளந்துகொண்டு வந்துவிட்டது.

ஸ்ரீதரன் தாமோதரனைச்சேர்த்தணைத்துக்கொண்டு, தம்பி! கலங்காதே... எல்லாம் நன்மைக்கே என்ற பாடத்தின் உண்மையை நாம் இப்போது நிதர்சனமாக அறிகின்றோம்... மனத்தைத் தளரவிடாதே... சகலத்தையும் பகவானின் திருவடிகளில்போட்டு நம்பிக்கையுடன் காரியத்தைச் செய். வீணாகவருந்தாதே... என்று தேறுதல் கூறினான். ஜெயிலர் முகத்தைப் பார்த்தான்: நேரமாகிவிட்டது என்று தெரிவிக்கிறாரா என்று அறியவே பார்த்தான் என்பதை உணர்ந்த ஜெயிலர், ஸார்! பயப்படவேண்டாம். நீர் வந்து இத்தனை நாளைக்காக இன்றுதான் உமது மக்கள் மனிதர்களைப்பார்ப்பதால் மணிகணக்குக்குக் கட்டுப்படவேண்டாம். நான் உத்திரவுகொடுக்கிறேன். பயப்படாமல் பேசும், என்றார்.

ஸ்ரீதரனுக்கு மட்டும் எப்படியாவது தன் பிதா வந்திருக்கும் விஷயத்தைத் தன் தாயிடம் ரகஸிய மாய்க் கூறிவிடவேணும் என்று உள்ளுக்குள் பதை பதைக்கிறது. ஜெயிலரின் எதிரில் தெரிவிக்க மன மில்லை. என்ன விதமான தந்திரம் செய்யலாம்,எப்படி இந்த முக்ய விஷயத்தை அறிவிக்கலாம், என்று தனக்குள் பலமாக எண்ணமிட்டவாறு அதை வெளிக் குக்காட்டிக்கொள்ளாமல் அவரவர்களுக்குத் தகுந்த படி பேசிக்கொண்டிருக்கையில் சிறைச்சாலைக்குள்ளே ஓரே இரைச்சலும் கலாட்டாவுமாக சத்தங்கேட்டது; உடனே ஒரு வார்டர் ஓடிவந்து ஜெயிலரிடம், ஸார்... உள்ளே கைதிகளுக்குள் திடீரென்று கலகம் உண்டாகி பலத்த அடிதடியில் முடிந்து ப்ரமாதப்படுகிறது. உடனேவாருங்கள்என்று அவஸரமாகக் கூப்பிட்டான்.

சிறைச்சாலையில் இம்மாதிரி அடிக்கடி நேருவதும் தண்டனைக்குமேல் தண்டனையாகப் பலதரம் கொடுப் பதும் வழக்கமாதலால் ஜெயிலருக்கு இதைக்கேட்ட தும் எரிச்சலாக இருந்தது. ஹெட்வார்டரையனுப்பி முதலில் பார்க்கச் செய்தார். அவன்போய்ப்பார்த்து வந்ததும், ஸார் நீங்கள்தான் சவுக்குடன் வரவேண்டும். கடுமையான சண்டையாகிவிட்டது;அடிதடியில் ரத்தம் கூட பீறிவிட்டது. சீக்கிரம் வாருங்கள்! என்று அவ சரமாகக் கூப்பிட்டான்.ஹெட்வார்டரை இங்குநிறுத்தி விட்டு சவுக்குடன் ஜெயிலர் ஓட்டமாக ஓடினார்.

ஹெட்வார்டர் ஸ்ரீதரனுக்குக் காவலாகஇருந்தான் அந்தசமயம் வீதியில் போலீஸ் வேன் வரும் சத்தம் கேட்டு வார்டர் பெரிய கேட்டருகில் ஓடி சந்தால் எட்டி வாசல்பக்கம் பார்த்தான். ஏதோ கைதிகளை ஏற்றிக்கொண்டு போலீஸ்வேன் வந்திருப்பதை

அறிந்து அதை ஜெயிலரிடம் தெரிவிக்க உள்புறம் ஓடினன்.

இதையே ஒரு நல்ல சமயமாக எண்ணிய ஸ்ரீதரன் தன் தாயாரின் காதோடு மிக ரகஸியமாய்... அம்மா! ஒரு அதிசயம். வெகுநாட்களாகப் பிரிந்துள்ள என் பிதா இதே சிறைச்சாலையில் கொலைக்கைதியாயிருக்கிறார். அவருக்கு ஏதோ விபத்து நேர்ந்துவிட்ட சமயம் என் கையினல் நானே வைத்தியம் செய்து என் ரத்தத்தைக் கொடுத்து என் கடமையைச் செய்தேன். இந்த விஷயத்தை வெளியில் சொல்லாதே. என்னை இன்னரென்று அவருக்குத் தெரியாது. ஏதாவது விசேஷமிருந்தால் அதையொரு சிறுகதைபோல் கடிதமூலம் எழுதியனுப்புகிறேன். வீட்டிற்குப் போன பிறகு தம்பி, தங்கை, சின்னம்மா, முதலியவர்களிடம் சொல்லுங்கள். உங்கள் ஸௌபாக்யத்திற்குக் குறைவு வராமல் காக்கும்படி பகவானை ப்ரார்த்திக்கின்றேன்.

என்று சொல்லியதைக்கேட்ட கமலவேணியம்மாளுக்கு இன்னதென்று கூறத்திறமற்ற வியப்பும் திகைப்பும் உண்டாகிவிட்டது...ஏதோசொல்வதற்கு வாயெடுத்தாள். அதை நோக்கமறிந்து அப்படியே ஜாடை காட்டி அடக்கிவிட்டுத்தான் கூண்டினருகில் போய் நின்றுவிட்டான்.

தன் தாயுடன் அண்ணன் என்ன சொல்லி இருப்பான் என்று அறியாத தாமோதரனுக்குப் பெரிய யோசனையாகி அதைப்பற்றியே நினைத்திருக்கையில் ஜெயிலர் வந்துவிட்டார். ஸ்ரீதரன் வெகு மரியாதையுடன் பேசாமல் தூரநிற்கும் பெருந்தன்மையைக்கண்டு பூரித்த ஜெயிலர்... ஸார்... இனி நேரமாகிவிட்டது. வேறு கைதிகள் வந்திருப்பதால் நான் வெளியேபோக

வேண்டும். எப்போதும் கைதிகளின் இண்டர்வ்யூவுக்கு நான் வருவதே வழக்கமில்லை. உங்களிடம் நான் கொண்டுள்ள நன்மதிப்பினுல் இன்று வந்தேன்... அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிடுங்கள்! என்று மரியாதையாய்க் கூறினர்.

தம்பீ! எல்லோரும்போய்வாருங்கள். அடிக்கடி பார்க்கவேணும் என்கிற ஆசையை விட்டுவிடுங்கள். பகவானை நம்பி அவனிடம் பக்திசெய்து பேறுபெறுங்கள். ஆச்ரமத்து குழந்தைகளுக்கும் ஆஸ்பத்ரி நோயாளிகளுக்கும் எனது ஆசிகளைக்கூறுங்கள். என்றுகூறிவிட்டு சடக்கென்றுஉள்ளேபோய்விட்டான்.

ஒரு மகத்தான லக்ஷ்யபுருஷனின் கம்பீர தோற்றம் பரிபூர்ணமாய்க் குடிகொண்டிருப்பதைக் கண்ட ஜெயிலரே மறுபடியும் ப்ரமித்துப்போனர். 'உம்! தாமரை இலைத்தண்ணீர்போன்ற மனிதப்பிறவி இவர்!' என்று அவருடைய அந்தரங்கத்தில் ஏதோ ஒன்று சொல்லியது.

## 26

கட்டுக்கடங்காத ஒரு பெருமிதமான உணர்ச்சி கமலவேணியம்மாளின் நெஞ்சில் அலைமோதுகிறது. இந்த அபரிமிதமான சந்தோஷத்தை எப்போது தாமோதரனிடமும் உஷாவிடமும் சொல்லிக்களிக்கப் போகிறோம் என்று ஆவல் துடிதுடிக்கின்றது. ஆனல் கூடவிருக்கும் மற்றவர்களிடம் சொல்ல விரும்பவில்லை. ஸ்ரீதரனைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் வரும்போதிருந்த உணர்ச்சியின் வேகமும் பார்த்த பிறகு உள்ள மனநிலைமையும் எப்படி இருக்கிறது என்கிற தாரதம்யத்தையும் ஸ்ரீதரனின் அப்பழுக்கற்ற சிறந்த

த்யாகமே வடிவான மனோ உறுதியையும்கண்டு அதைப் பற்றியே எல்லோரும் பேசிப்பேசி ப்ரயாணத்தை முடித்து வீடுவந்து சேர்ந்தார்கள்.

ஒவ்வொருவருடைய உள்ளத்தில் ஒவ்வொரு வித மான உணர்ச்சியும் எண்ணங்களும் உண்டாகிய நிலைமையில் தம்தம் இருப்பிடம் சென்றார்கள். ஆனால் கமல வேணியம்மாள் மட்டும் உஷாவையும் அவளன்னையையும் தாமோதரனையும் அழைத்துச் சென்று அங்கு பெரியதாக மாட்டப்பட்டுள்ள தன் கணவனின் புகைப் படத்தின் திரைச்சீலையை விலக்கி அதைக்காட்டி, கண்மணீ! உஷா! உஷா! ஒரு அதிசயத்தை இன்று உன் அண்ணன் அங்கு தெரிவித்தான். அதை உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன். இதோ இந்த உன் பிதா எங்கே மறைந்துவிட்டாரோ! உயிருடன் இருக்கிறாரோ! இல்லையோ! என்று இரவுபகல் ஏங்கித்தவித்த வாறு என்னுடைய ஸௌமாங்கல்யத்தின் வளர்ச்சிக்காக நான் பகவானை இடைவிடாது வேண்டிக்கொண்டிருந்தேன். அத்தகைய உங்கள் பிதாஉயிருடன் இருக்கிறாராம். கொலைக்கைதியாய் அண்ணனிருக்கும் சிறையிலேயே இருக்கிறாராம். ஏதோ விபத்து அவருக்கு உண்டாகியதாம். அதற்கு அண்ணனே அவருக்கு சிகிச்சைசெய்து தன் ரத்தத்தையும் கொடுத்து உதவினனும். அவருக்கு அண்ணனைத் தெரியாதாம். அண்ணனுக்கு அப்பாவை நன்றாகத் தெரிந்துவிட்டதாம். இந்த ரகஸியங்களைச் சொல்வதற்காகவே நமக்கு இண்டர்வ்யூ கொடுத்தானும். இதுபற்றி விஷயம் ஏதாவது தெரிந்தால் அதையொரு சிறு கதையைப் போல் எழுதியனுப்புகிறானும். இந்த ரகஸியம் யாருக்கும் தெரியக்கூடாதாம்...என்று ஒரே உணர்ச்சி வேகத்தில் மூச்சுக்கூட விடாமல் சொல்வதையும் பட

படபடப்புடன் துடிப்பதையும் கண்டும் கேட்டும் தாமோதரனும் உஷாவும் ஒரே துள்ளு துள்ளுகிறார்கள். என்னம்மா...நம்மப்பாவா சிறையிலிருக்கிறார்... அதையா உன் காதோடு அண்ணா தெரிவித்தது...என்ன ஆச்சரியம்...அம்மா! அவரைப் பார்க்கமுடியாதா...அவருடைய விஷயம் வேறு ஒன்றுமே சொல்லவில்லையா... என்று பதறியவாறு கேட்டார்கள்.

உஷாவின் தாயார் எதுவும் பேசவில்லை.படத்தைத் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டாள். கண்ணீர் ஆறாய்ப்பெருக அப்படியே சோகப் பதுமைபோல் நின்றுவிட்டாள். அவள் குலத்தில் தேவதாசியானாலும் எத்தனை ஆழமான அன்பு வேரூன்றிப்போய் இதயத்தில் பாய்ந்திருக்கிறது. என்ன ஆச்சரியம் என்று சில விநாடிகள் கமலவேணியே திகைத்தாள். தான் அக்னி சாக்ஷியாகத் தாலிகட்டிக்கொண்ட உயர் குலத்துப் பெண்ணாக இருப்பினும் தாசிக்குள்ள அளப்பரிய அன்பின் ஆழம் விசித்ரமாகவன்றோ என்னையும் விஞ்சிய நிலைமையில் இருக்கிறது! என்று தனக்குள் எண்ணி அந்த வேகத்தில் அந்தம்மாளை அப்படியே சேர்த்துக் கட்டிக்கொண்டாள். "தங்கச்சீ! உன்னுடைய பக்திக்கும் கரைகடந்த அன்பின் ஆழத்திற்கும் நான்கூட தோற்றவளாகிவிடுவேன்போல் தோன்றுகிறது. எத்தனை ஆர்வத்துடன் நீ அவரிடம் உயிரையே வைத்திருந்தாய் என்பதை இப்போது நான் அறிகிறேன். நான்தான் உரிமைக்குகந்தவள் என்கிற இறுமாப்பில் நான் ஆதியில் அவரைத்திட்டியதுகூட உண்டு. எந்த தாசிவலையிலோ விழுந்து நாசமாகிறாரோ என்கிற அங்கலாய்ப்பினால் தாசிகளையும் திட்டுவேன். கேவலமான ஒரு தாசிக்கு அன்பு என்பதே இருக்கமுடியாது. அவள் இதயம் பசையற்ற பாலைவனம்போன்றதாகும்;

கொடிய கரடி புலிகள் வாழும் கானகம்போன்றதாகும். அட்டையைப்போல் ரத்தத்தை உறிஞ்சும் துஷ்ட ஜந்துவின் ரகத்தைச்சேர்ந்தவர்களாகும். என்றெல்லாம் நான் எண்ணி திட்டியதுண்டு. ஆனால் இன்று என் கண்களால் உன்னுடைய அதி அத்புதமான ஆழ்ந்த அன்பைக்காணும்போது என்னுள்ளம் என்னையே தோற்றுப்போனவள் என்று இடித்துக்காட்டுகிறது. விஷப்பூண்டு உத்க்ருஷ்டமான இடத்திலும் முளைக்கிறது; உதவாக்கரை இடத்திலும் முளைக்கிறது. அதுபோல் உத்தமர்கள் எந்த இடத்திலும் உதிக்கிறார்கள். சுந்தராம்பாள்! உன்னுடைய அன்பு வெள்ளத்தில் நாங்கள் இன்று திளைகின்றோம்" என்று தன் போக்காகப் பேசிப் பூரித்தாள்.

சுந்தராம்பாள் எதுவுமே பேசவில்லை. "அக்கா! உலகம் பலவிதமல்லவா! தாசி வகுப்பில் பிறந்து திலகமாய் விளங்குகின்ற எத்தனையோ பெண்மணிகளின் சரிதையை நாம் படித்து இன்புறுகிறோம். அதாவது ஏட்டுச்சுவடி தானே எனலாம். இப்பொழுது நாம் கண்ணால்பார்க்கிறோம். தாசிகுலத்தில் பிறந்த ரத்னப்ரபா என்ன (பவித்திரப்பதுமை என்ற நவீனத்தின் கதாநாயகி) நிர்மலாதேவி என்ன (ஜீவியச்சுழலின் கதாநாயகி) அம்புஜம் என்ன (ராதாமணி நவீனத்தின் நாயகி) இவர்களைப்போல் உத்தமிகளை இன்று ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கிறோமே இதுவே போதாதா! இத்தகைய மாணிக்கங்களினால்தான் எங்கள் ஜாதியில் சிலராவது அழுக்கு விலகி தூய்மை உண்டாகி அறிவு பரவி மானத்துடன் பிறர் கொண்டாடும் முறையில் வாழ்க்கை நடத்துகிறார்கள். அந்த முறையில் தாசிகுலத்தையே மாற்றியமைத்துத் தொண்டாற்றவே நானும் ஆதியில் கங்கணம் கட்டியும் என்விதி அதைத்

தடைசெய்து என் எண்ணத்தில் மண்ணைப்போட்டு விட்டது. என் ஒரே ஒரு கண்மணிக்காக நானே ஆடவும் பாடவும் பணம் சம்பாதிக்கவும் செய்துவிட்டது ஒரு பெருங்குற்றந்தானே. தாசிதானே! சினிமாவில் ஆடினாள் என்று உலகம் சொல்லிவிடுமல்லவா! என்று வருத்தத்துடன் கூறினாள்.

இதற்குள் உஷாவும் தாமோதரனும் இதே விஷயத்தைப்பற்றி பலமாகப்பேசி யோசித்து ஒரு முடிவு செய்துகொண்டு கமலவேணியிடம் ஓடிவந்து, அம்மா! நாங்கள் ஒரு யோசனை செய்திருக்கிறோம் என்றார்கள். உஷாவே முந்திக்கொண்டு அம்மா! அம்மா! நான் சொல்கிறேன் கேளுங்கள். அண்ணா என்னவோ கேஸ் விஷயமாய் நாம் எந்த ப்ரயத்தனமும் செய்யக்கூடாதென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டதால் அந்த விஷயத்தில் நாம் ப்ரவேசித்தால் அவருக்கு கோபம்வரும். இன்று புதிதாகக் கேள்விப்பட்ட விஷயம் நம்முடைய குடும்பத்திற்கே முக்யமானதல்லவா! அப்பாவும் கொலைக்குற்றத்திற்காகவே தண்டிக்கப்பட்டிருப்பதால் அந்த வழக்குவிஷயமாய் நாம் ஆராய்ச்சி செய்து அதுவே பொய்யா! மெய்யா என்று இத்தனை வருஷம் கழித்து கண்டுபிடித்துவிட்ட பெருமையுடன் அவரையும் விடுதலை செய்யலாம். அந்த வ்யாஜமாக அண்ணான் வழக்கையும் ஆராயலாம். என்னதான் நம் பிதா கொடிய துஷ்டராய், துன்மார்க்கராயிருப்பினும் கையினால் கொலைசெய்திருக்கவே மாட்டார் என்பதுதான் என் துணிவு...

என்பதற்குள் சுந்தராம்பாள், “உஷா! இந்த யோசனையை நான் விரும்பவில்லை. அக்கா! நீங்கள் இதை ஆமோதிக்கிறீர்களா! அவரிடம் பலவிதத்திலும் நெருங்கிய நமக்கல்லவா அவருடைய மூர்க்கத்தனத்

தின் கொடுமையும் விபரீதமும் தெரியும். அந்த அடங்காத ஆத்திரத்தில் அவர் எதை வேண்டுமானாலும் செய்திருக்கலாம் என்பது எனக்குத்தெரியும். ஓரே ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்.

என்னுடைய சொந்த மாமன் வ்யாபார நிமித்தம் வெளியூருக்குச் சென்று பலவருடங்கள் அங்கு தங்கி விட்டார். அவர் பிறகு தாய்நாடு திரும்பியபோது என்னைப் பார்க்கவந்திருந்தார். அப்போது தான் நான் இவரைமணந்து இன்ப வாழ்வு உலகில் ப்ரவேசித்த சமயம். என் தாய்மாமனை நான் வெகு சிறுப்ராயத்தில் பார்த்ததுகூட நினைவில்லை. அவர் மிகவும் அழகாய் கம்பீரமாயிருப்பார். அவர் என்னுடன் வெகு அன்பாக உள்ளவர் என்னைப்பார்க்கவந்தார்; அவருடன் நான் பேசிக்கொண்டிருந்தேன்.

இவர் வந்தார். வந்தவருக்கு என்மாமனை அறிமுகப்படுத்த நான் வெகு உத்ஸாகத்துடன் ஆரம்பிப்பதற்குள் அவரை யாரோ அன்னியபுருஷன். வித்யாஸ புத்தியுடன் வந்திருக்கிறார். அவரிடம் நான் கள்ளத்தனமாய்ப் பழகுகிறேன்...என்றெல்லாம் கணக்குவழக்கற்ற சந்தேகங்களுக்கும் குயுக்திக்கும் இதயத்தில் இடத்தைக்கொடுத்து எதையும் தீர ஆறவிசாரிக்காமல் ம்ருகத்தைவிட மோசமான ஆவேசத்தையடைந்து என்னை அவரெதிரில். தாறுமாறாகத்திட்டி அடித்ததுடன் அவர்மீது பாய்ந்து மென்னியையே பிடித்துக் கொல்ல முயற்சித்த பயங்கரத்தை இப்போது நினைத்தாலும் என்னுள்ளம் நடுங்குகிறது.

எனக்கு எப்படித்தான் யானைபலம் வந்ததோ தெரியவில்லை. இவரை இழுத்து வெளியில் தள்ளிவிட்டு

என் மாமனைக் கெஞ்சிக் காலைப்பிடித்துக்கொண்டு வெளியே போய்விடும்படியாய்த் துரத்தினேன்; என் மாமனுக்கு வந்த கோபத்தில் பதிலுக்கு இவரையே நசுக்கியிருப்பார். என்னுடைய முகத்திற்காக விட்டு விட்டுச்சென்றவர் மறுபடி என்னைப்பார்க்கவே இல்லை. அவருடைய உறவே விட்டுவிட்டது. இவருடைய விஷயம் விபரீதமாகி என்னைப் பிரிந்துஓடிவிட்டபிறகு தான் மாமா என் வீட்டிற்குவந்து என்னையே திட்டினார். பிறகு என்னசெய்யமுடியும். இத்தகைய கதிவரும் என்று நான் நினைத்தேனா; குழந்தையுடன் நான் திண்டாடும் சமயம் என்னுடைய மக்கள் மனிதர்கள் அத்தனை பேரும் திட்டுவதோடு பரிகஸித்து இளப்பம் செய்தார்கள். அத்தனைபேர்களையும் நான் வெறுத்து வைராக்யமாய் வாழ்க்கையை நடத்தவே துணிந்து தனித்து வந்து விட்டேன். ஸங்கீதக்கலையும் நடிப்புக் கலையும் எனக்குத் துணைபுரிந்தது. உஷாவை ஒரு புதுமைப்பெண்ணாக்கிவிட என் தாயுள்ளம் துடித்தது; இப்போதும் புதுமைப்பெண்ணாகத்தான்—கண்ணகி, மணிமேகலை, ஔவை முதலிய உத்தமிகளைப்போல் வாழ திட்டமிட்டுவிட்டாள்.... போனதுபோகட்டும்... என்று நாம் பேசாமலிருக்கவேண்டுமேயன்றி இந்த பழைய குப்பையைக் கிளறினால் அண்ணனுடைய புகழுக்கு ஹானிதான் உண்டாகும்; இன்னாருடைய மகன் என்பது தெரியமல் பூடகமாய்ப் பிழைக்கும் நாம் எதற்காக விதிப்பழத்தை விலைகொடுத்து வாங்கி சங்கடப்படவேணும்! பகவான் வைத்த உறவுமுறையின் கடமைபடிக்கு முக்யமான விபத்துக்காலத்தில் மகனே உதவி செய்துவிட்டது பெரும் பெருமையாகிவிட்டது. உண்மையிலேயே அவர் கொலைசெய்திருந்தால் நாம் வீண் ப்ரயத்தனப்பட்டு நம் மதிப்பைக் குலைத்துக்

கொண்ட நிலைமையில்தானே வருவோம். ஆகையால் இதைப் பற்றிப் பேசாமலிருப்பதுதான் சகல அம்சத்திற்கும் நன்மையாகும். அண்ணனே ஒரு கதைபோல் விஷயம் எழுதி யனுப்புவதாகச் சொல்லி இருப்பதால் அதை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கலாம். அதைவிட்டு நாம் வேறுவழியில் செல்வது தகாது. உஷா! நீ அவசரப்பட்டு எதையும் செய்யாதேம்மா...தாமூ! நீயும் இது விஷயத்தை நம்மைத் தவிற பிறருக்குத் தெரிவிக்கவே வேண்டாம். ஆண்டவனிருக்கிறுன். நம்மைக் கைவிடமாட்டான்.

என்று பெரிய ப்ரஸங்கம்போல் சொல்வதைக் கேட்டு கமலவேணி பூரித்துப்போனுள்.விஷயமே அறியாத உஷாவும் தாமோதரனும் தாம் ஏதோ பெரிய காரியத்தை ஸாதித்துவிட்டதாக எண்ணி அபரிமிதமான உத்ஸாகத்துடன் தெரிவித்தகாரியம் உடனே தோல்வியடைந்துவிட்டதால் மன அதிர்ச்சிஉண்டாகி ஒருமாதிரியாகிவிட்டது. பிறகு ஆழ்ந்து யோசித்துப் பார்த்த பிறகுதான் சுந்தராம்பாள் சொல்வது முற்றிலும் சரியானது என்று தோன்றியது. மறுபடியும் கமலவேணியம்மாள் சுந்தராம்பாளின் அன்பைக்கண்டு வியந்தாள்.

அம்மா! அண்ணனின் மனங் கோணுதபடி நாம் வேலை செய்து எப்படியும் அண்ணன் நிரபராதி என்பதைக் காட்டவேண்டும். அதற்கு எந்த வழியில் வேலை செய்யலாம் என்று உஷா வருத்தத்துடன் கேட்டாள்.

கண்ணா! மனித ப்ரயத்தனம் என்பது ஒரு வ்யாஜமே யன்றி பகவானின் நாமத்தை விட வேறு ஒரு மார்க்கம் இருக்கிறதா! அதைத்தான் நன்ருக விளக்கி பாமரமக்களின் உள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்து பக்திக்

கவலை வளரச்செய்யும் பொருட்டு ஸ்ரீபுரந்தரதாஸர் ஒரு பாட்டில், நீ எதற்கு? உன் பிருதுகள் எதற்கு? உனது அட்டகாஸங்கள் எதற்கு? உன்னுடைய நாமம் ஒன்றே எனக்குப்போதும்! என்று ஆணித்தரமாய்ப் பாடி இருக்கிறார். அந்தவழியை நாமும் பின்பற்றி சதா நாம பஜனை செய்து வேண்டுவோம். அந்த திவ்ய நாமமே நமக்குத்துணை புரிந்து தனது சக்தியையும் பக்தியின் சிறப்பையும் காட்டி அண்ணனுக்கு அவன் விரும்புகிறபடி சாந்தியின் சிகரத்தில் ஒரு தனி பீடத்தைக் கொடுத்து ரக்ஷிக்கட்டும். ஆகையால் பூஜை பஜனை த்யானம் முதலியனசெய்து நாமும்க்ருதார்த்தமடைவோம், இதைத் தவிற வேறு மார்க்கமே இல்லை. நாம் கனவில் கூட நினைக்காத விதம் அந்தக் கடவுள் உன் பிதா உயிருடனிருப்பதைக் காட்டி எங்களுக்கு ஸௌபாக்யத்தை வளரச்செய்தாரே அவர் இதையும் செய்யாமல் விடமாட்டார். ஆகையால் பயப்படவோ, கவலைப்படவோ வேண்டாம்! என்றாள்.

அதுவே எல்லோருக்கும் சரி என்று தோன்றியதால் அதையே எல்லோரும் ஆமோதித்தார்கள். அச்சமயம் டெலிபோன் மணி அடித்தது. உடனே உஷாவே ரீஸீவ் செய்தாள். ஹல்லோ...யார் பேசறது...நான் உஷாதேவி...ஆமாம். தாமோதரன் வீடுதான், அவர் இதோ இருக்கிறார். நீங்கள் யாரு...அம்புஜமா...நாயுடுவின் மகளா! வெகு சந்தோஷம் ஸிஸ்டர்! என்ன விசேஷம்...என்ன என்ன அண்ணனின் வழக்கில் அனுகூலமான விஷயங்கள் கிடைத்திருக்கிறதா...அடாடா, இதைக்கேட்கும்போதே மனது துள்ளிக்குதித்துத் தாண்டவமாடுகிறது ஸிஸ்டர்! சற்று இருங்கள். அம்மா பெரியம்மா...சின்னண்ணா...அண்ணாவின்வழக்கில்அனுகூலமான விஷயங்கள் கிடைத்திருக்கிறதாம். ஸ்ரீ அம்

புஜம் சொல்கிருர்...ஹல்லோ...எங்கண்ணன்நிரபராதி என்றதை நாயுடு ஒருவரால்தான் விளக்கமுடியும்என்று அன்றே நான் சொன்னேன்...மேலே என்ன ஸிஸ்டர்? நாங்கள்தானே...இப்போதே வருகிருேம்...இப்பதான் ஜெயிலில்போய் அண்ணனைப் பார்த்துவிட்டுவந்தோம்; சவுக்யமாயிருக்கிருர்...அவரைப் பார்த்தால் ஒருகைதி என்ருே! சாமான்யமனிதன் என்ருே நினைக்கவேமுடிய வில்லை...சரி...இப்போதே வருகிருேம்...

என்று சந்தோஷச் சிறகடித்துப் பறக்கும் பறவை போல் உஷா ஒரே பூரிப்புடன்...சின்னண்ணு! இப்பவே புறப்படுங்கள்...பெரிய அம்மா! நீங்களும் வருகிறீர் களா! அம்மா! நீயும் வாம்மா...என்று எல்லோரையும் அழைத்துக் கொண்டு கட்டுமீறிய வாஞ்சையும் ஆத்தி ரமும் கொண்டுதானே காரை ஓட்டிக்கொண்டு கிளம்பி ஞள். கண்ணு! பகவந்நாமத்தின் மகிமையைப் பார்த்தாயா! நாமம் ஒன்றே நமக்குத் துணை என்று எண்ணித் தீர்மானித்த உடனேயே எத்தகைய நல்ல செய்தி கிடைத்ததுபாரு. நினைத்த மாத்திரம் இத்த கைய நன்மையைச் செய்யும் என்னப்பன் கருணமூர்த் தியை நம்பி பஜித்தால் கைவிடவே மாட்டான் என்று மறுபடியும் சுந்தராம்பாள் சொல்லியபோது அந்த உணர்ச்சி உஷாவின் இதயத்தில் இன்னும் ஆழமாகப் பதிந்தது.

---

## 27

ஸ்ரீதரன் மனத்தில் ஒரு புத்துணர்ச்சி எப்படியோ குடிகொண்டு இதயத்தை நிரப்பிக் கொந்தளித்துத் தளும்புகிறது. இதற்கு என்ன காரணம் இருக்கும் என்று அவனுலேயே நம்பமுடியவில்லை. இனி கண் ணுல்பார்க்கவேமாட்டோம் என்று எண்ணி கைவிட்டு

விட்ட தந்தையைப்பார்த்துத் தன் கையினுலேயே சிகிச்சை செய்யும்பாக்யம் கிடைத்த ஒரு சந்தோஷமாக இருக்குமா?

இன்று ஒரே சமயம் நம் பந்துக்களையும் உயிர் சினேகிதர்களையும் உதாரணமாகக் கூறக்கூடிய உஷா தேவியையும், என் தொழில் முறையில் புதிய ஜால வெற்றியைக் கொடுத்த ராதாவையும், 'இவன் கூட திருந்துவானு?' என்று இரவுபகல் ஏங்கிய தம்பியை இன்று த்யாகப் பிழம்பாய் காணும் உத்தமனை... ஆக பலபேர்களையும் ஒருங்கே பார்த்த சந்தோஷம் கட்டுமீறி கரையறுத்துக்கொண்டு கும்மாளமிடுகிறதா! என் தந்தையின் ரகஸியமறிந்ததும் என் தாயாரின் உள்ளம் பூரித்த பூரிப்பைக்கண்டு என்னிதயமும் எக்காளமிடுகிறதா! ஒன்றுமே புரியவில்லையே! எதற்காக இத்தகையப் புதிய ஆநந்த உணர்ச்சி? என்று தனக்குள் பலபலவாறு எண்ணியபடியே அங்கு மிங்கும் உலாவினுன்.

ஜெயில் டாக்டர் வெளியூர்போன இடத்தில் அவரே பலமான ஜுரங்கண்டு படுத்துவிட்டதால் ஸ்ரீதரனையே அடிபட்ட நோயாளிக்கு வைத்யம் செய்வதைத் தொடர்ந்து செய்யச்செய்தார்கள். ஒரு கொலைகாரக்கைதிக்கு இன்னொருகைதி வைத்யம் செய்வதை அங்குள்ள பலரும் குசமசவென்று தம்தம் மனம்போன படி எல்லாம் பேசிக்கொண்டார்கள். நோயாளிக்குக் கட்டுகட்டுவதற்காக வார்டர் ஸ்ரீதரனை அழைத்துச் சென்றுன். டாக்டர் என்ற முறையில் செல்கையில் ஸ்ரீதரன் கைதி உடையின்றி சாதாரண உடையுடன்செல்ல அனுமதிக்கப்பட்டான். அப்போது நோயாளி சற்று தெளிந்த நிலைமையில் பாதை தாங்காமல் முனகிக் கொண்டிருந்தான். ஸ்ரீதரனுக்கு மட்டும் ,கடவுளே! இவ

ருக்கு நினைவுவராதிருந்தவரையில் நான் நிம்மதியாக வைத்யம்செய்தேன். இப்போது ஏதோமாதிரிதோன்றுகிறதே! இத்தனை வருஷத்திற்குப்பிறகு என்னை அடியோடு அடையாளம் தெரிந்துகொள்ள மாட்டார் எனினும் புத்திர வாத்ஸல்யம் என்கிற சக்தி இந்த ரகஸியத்தைக் காட்டிக்கொடுத்துவிடுமோ! என்கிற பயம்வேறு பாதிக்கிறதே! எங்களுடையரகஸியத்தைவெளியிடாது காப்பாற்று! என்று வேண்டியபடியே நோயாளியினருகில் சென்று, என்ன! பெரியவரே! வலி எப்படி இருக்கிறது. நன்று தூங்கினயா! என்று கேட்டபடியே முதலில் நாடியைப்பிடித்துப் பார்த்தான்.

எத்தனை தான் த்யாக அக்கினியாயிருந்தபோதிலும், ஐயோ! என் பிதாவை இந்த கதியிலா பார்க்க வேணும். இப்படியா விதி அமைந்தது... அப்பா! என்று வாயாரக் கூப்பிட்டுவிடலாம்போலிருக்கிறதே, என்ன செய்வேன்? மனமே! சாந்தியை அடைந்து சமாதானமாயிரு என்று தனக்குள் எண்ணி தேற்றியபடியே நோயாளியைப் பார்த்தான்...

அவன் முகத்தில் தன் தம்பியின்சாயல்அப்படியே தத்ரூபமாய்ப் படர்ந்திருப்பதைக்கண்டு உள்ளுக்குள் ஒருவிதமான சந்தோஷத்தையடைந்து தகப்பனுரைத் தடவிக்கொடுத்தான். நோயாளி டாக்டரின் கைகளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு... உம்... இந்தப் பாவியைத் தடவிக் கொடுப்பதற்குக்கூட இந்த உலகத்தில் ஒரு மனிதர் இருக்கிருரா என்று நான் ப்ரமிப்படைகிறேன்... பழைய டாக்டருக்கு நான் கொலைகாரன் என்பது வெகு நன்ருகத் தெரியும். நீங்கள் புதிய டாக்டரல்லவா! நான் சாதாரணக் கைதியல்ல என்பதை நானே சொல்கிறேன் டாக்டர். நான் கொலைகாரன், கொலைகுற்றவாளி! என்னை எதற்காகப் பிழைக்க வைத்

தீர்கள். நான் வேணுமென்று தானே காலை கோடாலியால் நசுக்கிக்கொண்டேன். அதனாலாவது சாவுவரட்டுமென்று எதிர்பார்த்தால் நீங்கள் தடையாக வந்து சேர்ந்தீர்களே! என்று தன்னுடைய மனத்திலுள்ள வெறுப்பை அப்படியே எடுத்துக்காட்டுவதுபோல் பேசுவதைக்கேட்ட ஸ்ரீதரனுக்கு வியப்பிலும் வியப்பாகத் தோன்றியது.

ஆதியில் எல்லாம் நல்ல நீதி நெறியுடன் இருந்து வாழ்க்கை நடத்தாதவர்களுக்கு ஆட்டங்கள் ஆடிப்பாடி ஓய்ந்த பிறகு ஒரு விதமான வெறுப்பும் வாழ்க்கையே கசந்து விடுவதும் சகஜந்தானே, அந்த கோஷ்டியில் இவரும் சேர்ந்தவராதலால் இப்போது ஞான உதயமாகி ஒரு சிறிது ஞானக்கண் திறந்திருக்கிறது பாவம்...என்று தனக்குள் எண்ணியபடியே, எம்பா! நீ பேசுவதைப்பார்த்தால் உலகத்தில் கடவுள் என்று ஒருவர் இருப்பதாகவே தெரியவில்லை—உன் கையினால் நீ சம்பாதித்த சொத்துதான் உன்னுடைய உயிரும், என்கிற மனோபாவத்தில் பேசுகிறாயே; அந்த உயிர் உன்னுடையதல்ல, கடவுளுடையது. அதைச்சிலகாலம் உன்னிடத்தில் கொடுத்துவைத்துப் பிறகு அவன் சொத்தை அவன் எடுத்துக்கொண்டுபோவான் என்கிற ஞானமே இல்லாமல்பேசுகிறாயேப்பா-இதோ பாரப்பா தற்கொலை செய்துகொண்டாவது சாகவேணும் என்ற அதீதமான எண்ணத்திற்கு வரும்படி வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டி விட்டாயே! அந்த ஞானத்தில் அரைக்கால் வாசியாவது ஆதியில் ஸ்திரமாகக் கொண்டிருந்தால் இந்த கதிக்கு வருவாயாப்பா!

என்று முடிப்பதற்குள் நோயாளி, உம்...அத்தனை தெளிந்த புத்தி எனக்கிருந்தால் நான் இந்த கதிக்கு வந்திருப்பேனா! எனக்குத்தான் புத்திமங்கிப்போச்சே!

என்மனைவி...ஐயோ! இந்தகாற்றவாயால்...அந்த உத்தமியைச் சொல்லவும் எனக்கு அருகதை இல்லை. அத்தகைய உத்தமி எனக்குப் படித்துப்படித்துத்தான் புத்திசொன்னுள். அதுமட்டுமா! நான் ஒரு தாசியை மறுமணம் செய்துகொண்டிருந்தேன். அந்த தாசி எத்தனை தூரம் புத்திசொல்வாள் தெரியுமா! நான் அப்போதெல்லாம் மனித—ம்ருகமாய் கேடுகெட்ட நிலைமையில் இருந்ததன் பலனை இப்போது சரியாக அறிந்துவிட்டேன்.

டாக்டர் இடைமறித்து, ஏம்பா! ஒரு மனைவி இருக்கையிலா மறுமனைவியைத் தேடினுய்...ஐயோ! ஒழுக்கம், உண்மை, நாணயம், சத்தியம், இவைகள் ஒன்று இருக்கிறது என்பதையே நீ நினைத்தும் பார்க்க வில்லையா! ஐயோ! பாவம். சர்வலோகரக்ஷியாகிய சாக்ஷாத்பராசக்தியான உமை இருக்கிருளே! அந்த உமையை நாம் அடைவதற்கு மத்தியில் ஒரு அரண் சேர்ப்பதுபோல் மூன்றுசுழி ண் என்ற எழுத்தைப் போட்டுக்கொண்டு நாம் உண்மையான மார்க்கத்தில் நடந்தால் அது உமையின் தரிசனத்திற்குக் கொண்டு விடும். அதற்கு வாழ்க்கைப்பாதையை பக்தி என்கிற காப்புடன் நடத்தவேணும். உமையை அடைய ண் என்பதைச் சேர்த்ததுபோல் பக்தி என்பதில் க் என்ற அக்ஷரத்திற்குப்பதிலாகத் என்பதைச்சேர்த்தால் பத்தி என்றபதமாகும். பத்துவது என்றுல் எதைத் தெரியுமா! உண்மையுடன் உழைத்து உமையின் பாதத்தைப் பத்துவதாகும். அந்த தேவியின் பாதத்தைப் பத்திய பிறகு இனி கவலையோ! பாபமோ! துன்மார்க்க ப்ரவர்த்தகமோ உன்னைவந்து அணுகவே பயப்படுமே. இதை நீ நினைக்கவே இல்லையே...

கிழவனுக்கு நோயின் பாதைகூட தெரியாது மறந்துவிட்டதுபோல் ஒரு பூரிப்பு உண்டாகியது...... ஆஹாஹாஹா...என்ன அருமையான வார்த்தைகள்... உமை—உண்மை...பக்தி—பத்தி...டாக்டர்! நீங்கள் சாதாரணமானதேகநோயைத் தீர்க்கும் டாக்டரல்ல. ஆத்மாவுக்கே வைத்யம் செய்யும் வைதீச்வரன் என்று சொன்னால் மிகையாகாது...ஆகா...உமை...உண்மை பக்தி...பத்தி. இதை இனியாவது இந்தப்பாபி மறக்காதிருப்பானே...டாக்டர்! இத்தகைய மேதாவியான நீங்கள் இந்த சனியன் பிடித்த ஜெயிலுக்கு ஏன் டாக்டராகவரவேணும். படுபாவிகள். கொலையாளி ப்ரம்ம ஹத்திக்காரர்கள். திருடர்கள், மோசக்காரர்கள்... அப்பப்ப. இனி சொல்லவே முடியாது உலகத்தில் எத்தனை விதமான துன்மார்க்கர்கள் உண்டோ! அத்தனையும் சேர்த்துவைத்து ஒரே இடத்தில் பார்க்கச் செய்யும் நரகமல்லவா இது. இந்த நாற்றக் குப்பைக்கு ஏன் டாக்டர் நீங்கள் வரவேணும்...

இந்த வார்த்தையைக் கேட்க ஸ்ரீதரனுடைய இதயத்தில் ஏதோ சங்கடம் செய்துவருத்துகிறது. நானும் ஒரு கைதிதான் என்பதை உணர்ந்துவிட்டால் இப்போது வைத்துள்ள மதிப்பு திடீரென்று இறங்கி விடுமல்லவா! உம் இவர் சொல்வதும் ஒருவிதத்தில் உண்மைதான். நரகம் என்றால் வேறு வேண்டாம். இதிலும் தப்பித் தவறி நிரபராதிகளும் என்னைப் போல் அகப்பட்டுக்கொண்டிருக்கலாமல்லவா! என்று எண்ணியபடியே நோயாளியை உற்று கவனித்தான்.

இயற்கையிலேயே அவனும் புத்திசாலியாகவே இருந்திருக்கவேணும்என்றும் செயற்கையின் மோகத்தில் இத்தகைய கதிக்கு வந்துவிட்டதாயும் எண்ணினான். எந்த விதமாவது ஆப்பா! என்று அழைக்கும்

தோரணையில் தான் பேசி இன்புறவே இவன் உள்ளம் பறந்தது. அப்பா! இதோ பாரு, உன் வார்த்தையின் நியாயப்படியே பேசுகிறேன். பசி எடுத்தவனுக்கு ஆகாரமும், வெயிலில் தவிப்பவர்களுக்கு நிழலும் நோயாளிகளுக்கு வைத்தியனும் மருந்துகளும், அனாதைகளுக்கு ஆதரவளிக்கும் தயாளர்களும் வேணுமே யன்றி இதற்கு எதிர் முறையாய் புறம் பட்டதற்குத் தேவையில்லையல்லவா?

இந்த இடத்தில் வந்துள்ளவர்களுக்குத்தானேப்பா கண் திறக்கச்செய்துத் தாங்களும் மனிதர்கள் தான்,மிருகமல்ல என்பதை உணர்த்தவேண்டும்.ஏதோ வைத்தியம் செய்தபடியே இதையும் செய்தால் நல்ல தல்லவா! இங்குள்ள டாக்டர் ஊருக்குப் போயிருப் பதால் நான் இங்கு தற்காலீகமாய் வந்திருக்கிறேன், நான் ஊருக்குப்போய்விடுவேனப்பா...இந்த சிறையில் உனக்கு வைத்யம் செய்யவே நான் வந்ததுபோலாகி விட்டது. ஆமாம் நீயாகக் காலில் கோடாலியைப் போட்டுக்கொண்டதாகச் சொன்னாயே எதற்காகப்பா?

இதற்குள் நோயாளியின் கால்களுக்கு மருந்து போட்டுக் கட்டியாயிற்று. ஊசிகுத்த மருந்துகளை எடுத்துக்கொண்டிருக்கையில் நோயாளி மீண்டும் பேசத்தொடங்கி, உம் நான் நினைப்பதும் செய்வதும் எதுவுமே பலிக்கிறதில்லையே டாக்டர்! எங்கிருந்தோ நீங்கள் வந்து மூளைத்திராவிட்டால் ஏதோ ஒருவாறு பலித்திருக்கலாம். நான் என்னுடைய கதையைச் சொல்ல ஆரம்பித்தேன். அதற்குள் நீங்கள் ஏதேதோ பேசி என்னுடைய இருண்டஇதயத்தில்ஒரு ஜோதியை எழுப்பினீர்களே! அதனால் என்னுடைய எண்ணமே மாறிவிட்டது. என்னுடைய குப்பைத் தொட்டி புராணத்தை இனி வாயினால் சொல்லவும் வெட்கப்

படுகிறேன். நான் பாவி, த்ரோகி, கட்டிய...பெற்ற மக்களை நிற்கதியாக்கிவிட்டுச் சிற்றின்பச் சேற்றில் விழுந்து புரண்டு நோயாளியாகி படாதபாடுபட்டு எல்லோராலும் வெறுக்கப்பட்டு கேவலம் நாயைப் போல் எனக்கே நான் காணப்பட்டேன். அதனால் என்னையே நான் வெறுத்துக்கொண்டு என்னையும்மீறி என் வாழ்நாளில் நானே வியக்கும்படி ஒரு த்யாகத்தைச்செய்து கொலைகாரக் கைதியாக இங்குவந்து சேர்ந்துவிட்டேன்.

என்ன! என்ன! த்யாகத்தைச்செய்து நீயே மாட்டிக்கொண்டாயா! அதென்னப்பா! நிரம்ப ஸ்வாரஸ்யமான கதைபோலிருக்கிறதே. இப்போதே தயவு செய்து சொல்லப்பா...நானும் போகவேணும். என்று கூறிவிட்டு ஜெயிலரின் முகத்தைப்பார்த்தான். நேரமாகி விட்டதென்று முகத்தைச் சுளிக்கிறாரா! அல்லது பேசாமலிருக்கிறாரா என்று அறியவே அப்படிச் செய்தான். ஜெயிலர் ஸ்ரீதரனிடத்தில் அளவுகடந்த மதிப்பு வைத்திருப்பதால் அவனிடம் வெகு நம்பிக்கையே கொண்டு, ஸார்! இந்த மனிதனின் பொய்ப் புராணங்களை இந்த ஜெயிலின் சுவர் முதல் கம்பிகள்வரை கேட்டு வெறுத்தாயிற்று. ஆனால் ஒருவரிடம் சொல்லியபடி ஒருவரிடம் சொன்னதில்லை. உம்மிடம் என்ன வருகிறதோ வரட்டும், கேளும் கேளும்! என்று குத்தலாகக் கூறி ஏளனமாய் நகைத்தார்.

நோ:—அவர் சொல்வது ரொம்ப சரி டாக்டர்! எனக்கு நல்ல பயன்படக்கூடிய வழியில் கற்பனைகளை உருவாக்கி உலகிற்கு உதவும் பாக்யமில்லை எனினும் கற்பனையில் மிகமிக ருசி உள்ளவன். நான் இங்கு கணக்கற்ற கைதிகளின் சரித்திரங்களைக் கேட்ட பிறகு அந்த கற்பனை பின்னும்விஸ்தாரமாய் வளரத்தொடங்

கியது. நான் ஒரு ஆசிரியனாக இருந்தால் என் சரிதை யையே ஒரு பெரிய கதைப் புத்தகமாய் எழுதிவிட லாம். வெறும் ம்ருகமனிதன்...அல்ல; ஆசைக்கு அடி மையாகி அவதியுற்ற மனிதன்...அதனால்தான் என் மனம் போனபடி பொய்சொல்லி அதில் ஒரு த்ருப்தி யடைந்தேன். இப்போது சொல்லப்போவது பொய்யே யல்ல! ஸத்தியமான வார்த்தைகளாகும் அப்பழுக் கற்ற உண்மையாகும். சுருக்கமாய்ச் சொல்கிறேன்... என்னுடைய ஆபாஸ நடத்தையினால் என்னையே நான் நாய்போல் வெறுத்தேனல்லவா! அச்சமயம் மகா உத்தமியான என் மனைவி மக்களைப் பார்க்கவும் அவர் களிடம் மன்னிப்புக்கோரவும் நான் ஆசைப்பட்டேன்.

ஆனால் என் மனைவி எப்படியோ சாமர்த்தியமாய் என்னுடைய குழந்தைகளைப் படிக்கவைத்து முன் னுக்குக் கொண்டுவர ப்ரயத்தனப் படுவதையும் பெண் களுக்கு வரனும் தேடி விவாகத்தைச் செய்துவிட நினைப்பதாயும் அறிந்தேன். கெட்டு அலைந்த மகா பாவி எங்கேயோ கண்காணாது ஓடிவிட்டான்; துலைந்து விட்டான் என்கிற ஓரே எண்ணத்தில் என்னை மறந் தும் என்னால் ஏற்படக்கூடிய களங்கத்தை நீக்கியும் முன்னுக்குவர ப்ரயத்தனப்படும் சமயம் நான் ஊரே வெறுக்கக்கூடிய நிலைமையில் அங்குபோனால் மிகமிக விபரீதந்தான் உண்டாகிவிடும்; குழந்தைகளின் எதிர் கால வாழ்க்கை பாழாகிவிடும். என்னால் ஒரு நிமிஷ மாவது இன்பமடையாத குடும்பத்தில் ஆயுள் பூராவும் ஒரு களங்கத்தை உண்டாக்கிப் பாழாக்கவேண்டாம் என்கிற ஒரு ஆவேசமும் உறுதியும் எப்படியோ வந்து விட்டது. என் மூத்த மகனாகிய ஸ்ரீதரனை ஒரு முறை பார்க்க மனம் துடித்தது.

என்று சொல்லும்போது டாக்டரின் இதயம் கன வேகமாக அடித்துக்கொண்டது. எங்கே உண்மை எந்தவிதமாகவாவது வெளியாகிவிடுமோ என்கிற பயத்தினுல் தலை சுற்றியது. மெல்ல சமாளித்துக் கொண்டு...உம் அப்புறம் பாத்தியா இல்லையா! சீக் கிறம் சொல்லு. என்று தானே சமாதானத்துடன் கேட்டான்.

உம், பார்த்தேன். அவன் சிநேகிதர்களுடன் உல் லாஸமாய் செல்கையில் பார்த்துவிட்டு உடனே மனத் தை முறித்துக்கொண்டு சென்றவன்தான் மறுபடி ஒருவர் கண்ணிலும் படாமல் இருப்பதற்கு எந்த இடம் சரியானது என்று யோசித்தேன். சிறைச் சாலைதான் சரியானது என்றுதீர்மானமாய்த் தோன்றி இரும்புப் பிடியாக என்னை மாற்றிவிட்டது. என்னை அக்கினி சாக்ஷியாய் மணந்து அடிமைபோல் பக்தி கொண்டு வாழ்ந்த க்ருகலட்ச்மியின் இதயத்தையும் எதிர்கால வாழ்வையும் முறியடித்த பாவிக்கு இது தான் சரியான சிக்ஷை; சரியான ப்ராயச்சித்தம், என்று தோன்றியது; இதற்கும் சரியான சமயம் வர வேண்டாமா!

ஒரு ஏழைச்சிறுவன்,பாவம்! தன்னுடைய தாயா ருக்கு ஆபத்தான நிலைமை உண்டாகி விட்டதால் கையில் காலணு காசுகூட கிடைக்காமல் தவிக்கும் சம யம் அவன் வேலை செய்யும் எஜமானன் வீட்டிலேயே அவன் துணிந்து 500 ரூபாயைத் திருடிக்கொண்டு சுவரேறி குதித்தான். இவன் குதித்த இடத்தில் ஒரு ரிக்ஷாக்காரன் சீக்கினுல் படுத்திருந்தான்: அவன் மீது குதித்துவிட்டான். கையிலிருந்த சில நோட்டுகளும் சிதறிவிட்டது. அதேசமயம் ரிக்ஷாக்காரன் கூகூ

வென்று கத்தினன். நான் இவைகளை தற்செயலாகப் பார்த்துவிட்டேன்.

அந்தச் சிறுவனிடம் உள்ள நோட்டுகளுடன் அவனை ஓட விட்டுவிட்டு நானே அங்கு சில நோட்டு களைப் பொருக்கிக்கொண்டு அகப்பட்டுக்கொண்டேன். என் நல்ல காலத்திற்கு ரோந்துக்காரர்கள்வந்தார்கள். உடனே சந்தோஷமாகப் பிடிபட்டுவிட்டேன். நான் தாடியும் மீசையும் வளர்த்துக்கொண்டு பெயரையும் ஊரையும் மாற்றிக்கொண்டே திரிந்ததால் வெகு சுலப மாய்ப் பிடிபட்டுவிட்டேன்.

இனி கேட்கவேண்டுமா? நான் திருடிக்கொண்டு வந்ததை ரிக்ஷாக்காரன் பார்த்துப்பிடிக்க வருகையில் ரிக்ஷாக்காரனை அடித்துக் கொன்றுவிட்டதாக வழக்கு வெகு ஸ்வாரஸ்யமாய் ஜோடனையாகி விட்டது. ரிக்ஷா காரன் ஏற்கெனவே சீக்காளி எனக்கு தெரியும். அவன் மீது குதித்த வேகத்தில் அவன் சில நிமிஷங்களுக்குள் ளேயே இறந்துவிட்டான். அதுவே எனக்கு அனு கூலமாயிற்று. ஜம்மென்று மரணதண்டனையில் சிறை புகுந்தேன். பிறகு ஆயுள்தண்டனையாக மாறியது அந்தமான் முதல் பல ஊர் சிறைகளைப்பார்த்தேன். சிறையைவிட்டுப்போகாமலேயே ஸ்திரமாயிருப்பதற்கு நான் துன்மார்க்கனுகவே நடந்துகொண்டுஎன்னுடைய தண்டனையை ரெட்டிப்பாக்கிக்கொண்டுவெளியாருக்கு துஷ்டனுயும் என் அந்தரங்க வாழ்க்கையில் காமபஜனை யும் செய்து கொண்டு காலத்தைக்கடத்துகிறேன். சிறை யில்உழைக்க தேகத்தில் சக்தி இல்லை. உழைக்காதிருப் பதற்கு வழியில்லை. அதனுல் விறகு பிளக்கையில் நானே உயிரையும் பிளந்து கொள்வதற்காக இந்த காரியத்தை செய்துவிட்டேன். இதிலும் நான் எதிர்

பார்க்கும் சந்தோஷ நிம்மதி உண்டாகாது தவிக்கும்படி நீங்கள் செய்துவிட்டீர்களே...

என்றுமுடிப்பதற்குள் ஆயாஸம்மேலிட்டு அயர்ந்து போய்விட்டான். இதற்கு மேலும் பேசினால் தனது குடும்பரகஸ்யங்கள் எங்கே வெளியாகிவிடுமோ என்கிற பயத்தினால் அவனுக்கு ஆகாரத்தைக் கொடுத்து களைப் பைத்தீர்த்துவைத்துப் பின், இதோ பாரப்பா! எத்தனை யோபேரிடம் எத்தனையோ விதமாய் உன் சரித்திரத் தைச் சொல்லியதாக நீயே சொல்கிறாய். என்னிடமும் ஒரு தினுஸாய் ரஸமாய் சொல்லிவிட்டாய்—ஒருவனை சிறுவனுக்காக நீ செய்த காரியம் உண்மையாயிருந் தால் உன்னுடைய முக்கியபாவத்திற்கு ஒரு அளவு பரி காரத்தை நீ செய்த புண்ணியத்தால் பெற்றாய். இந்த உலகத்தை விட்டு நாம் அங்குபோயும் என்ன செய்யப் போகிறோம் என்று எண்ணுகிறாய். இந்த ஜென்மத்தில் செய்துள்ளபாபங்களை அங்கு நரகத்தில் அனுபவித் தும் அதிலும்தீராமல் மறுபடியும் ஒரு பாவஜென்மம் பூச்சியோ புழுகோ நாயோ! பேயோ...எடுத்து இதை பூராவும்தீர்த்த பிறகுதான் முடிவு ஏற்படும்தெரியுமா? ஆகையால் நீ அதை உணராமல் மேலும் மேலும் பாதகத்தைச்செய்து பாவத்தைக்கட்டிக்கொள்ளாமல் பகவானை பஜனை செய்...என்று ஒருமாதிரியான உணர்ச்சியுடன் கூறிவிட்டுச் சடக்கென்று போய்விட் டான்.

நானும் நிரபராதியாயிருந்து சிறையில் தவிக்கி றேன், என்பிதாவும் நிரபராதியாயிருந்து இத்தனை துன்பங்களைப்படுவதா...என்ன உலகம். என்னவிதி யின் வலிமை...ஆகா! கடவுளே! உன் மாயா விசித்தி ரமே விசித்ரம், என்று பல விதமான எண்ணத்தினால்

மோதப்பட்டு நடந்தான். பிறகு ஒரு ஆவேசத்துடன், ஜெயிலரை நோக்கி, ஸார்! என்னை எப்போது மாற்றப்போகிறீர்கள். எனக்கு இங்கு பிடிக்கவே இல்லை. தயவுசெய்யவேணும். என்ருன்.

ஜெயி:—டாக்டர்! என்னுல் முடிந்ததை நான் கட்டாயம் செய்கிறேன். டாக்டர்! ஒரு சமாசாரம்! தயவுசெய்து என்னுடைய தனிவிடுதிக்கு வரவேணும்; நான் உம்மிடம் சில நிமிஷங்கள் தனிமையில் பேச வேண்டும்...என்று ஒரு பீடிகைபோட்டார்.

இதைக் கேட்ட ஸ்ரீதரனுக்கு மிகமிக ஆச்சரியமும் அதிர்ச்சியும் சேர்ந்து உண்டாகியது. உடனே ஜெயிலரை நிமிர்ந்துப் பார்த்து சார்! உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகிறது. என்னுடைய வழக்கு விஷயத்தில் அப்பீல் சம்மந்தமாகத்தான் பேசப்போகிறீர்கள் என்று தெரிகிறது. அதுமட்டும் வேண்டாம். என்னைப்படைத்த ஆண்டவன் இருக்கிருன் இதைப் பற்றித்தீர்ப்பு செய்வதற்கு; தாங்கள் தயவுசெய்து இது விஷயத்தில் தலையிடக்கூடாது...என்று சொல்வதைத் தடுத்து ஜெயிலர் ஸ்ரீதரனை ஒரு கைதி என்றும் பாராமல் கையைப்பிடித்துக்கொண்டு, டாக்டர்! நான் அப்பீல் விஷயமாய்ப் பேசக் கூப்பிடவில்லை. எனக்கு ஜோசியம் சிறிது தெரியும். அதுவிஷயமாய்ப் பேசவே கூப்பிடுகிறேன். உங்களை நான் வெளியூருக்கு மாற்றி விட்டால் நீங்கள் உங்கள் தகப்பனுரைப் பார்க்கமுடியாமல்போய்விடுமே; இப்போதுபயந்துபயந்து ரகஸியமாய்ச் செய்யும் சிகிச்சையும் பாதியில் விட்டுப்போய் விடுமே...என்று ஜெயிலர் சொல்லும் திடீர் வார்த்தைகளைக்கேட்ட ஸ்ரீதரனுக்கு ஆகாசமும் பூமியும் ஒரே சுற்றுச் சுற்றி அவனே மூர்ச்சைபோட்டு விழுந்து

விடுவான்போலாகிவிட்டது. சில விநாடிகளுக்குப் பிறகு சற்று சமாளித்துக்கொண்டு "சார்! உங்களுக்கு" என்று ஆரம்பித்த உடனே ஜெயிலர் அவனை அப்ப டியே பிடித்து நடத்தித் தன்னறைக்குக் கொண்டு போய் நாற்காலியில் உட்காரவைத்து "டாக்டர்! அதிர்ச்சிவேண்டாம். எனக்கு ஒருவாறு சகலமும் விளங்கிவிட்டது. மிகவும் பரிதாபப் படுகிறேன். என்னுடைய உள்ளத்தில் இப்போது எப்படி சங்கடம் செய்கிறது என்பதை என்னாலேயே விவரிக்க முடியவில்லை. இதோ இக்கடிதத்தைப் பாரும் என்று ஒரு கடிதத்தை ஜேபியிலிருந்து எடுத்தார். இதற்குள் ஸ்ரீதரனின் உணர்ச்சி அதிகரித்த வேகத்தில் அப்படியே மூர்ச்சித்து சாய்ந்துவிட்டான்; ஜெயிலரின் உள்ளம் இதைக்கண்டு துடிதுடித்தது.

## 28

வெகு ஆவலுடன் தானே உஷா காரை ஓட்டிக் கொண்டு அம்புஜத்தின் வீட்டை நோக்கிப் பறந்து செல்வதுபோல் சென்றாள். இவர்களுடைய வரவையே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அம்புஜம் இவர்களைக்கண்டதும், வாருங்கள் வாருங்கள்! நானே நேரில் வரலாம் என்று நினைத்தேன். அதற்கு சில இடையூறுகள் இருந்ததால் உங்களையே வரச்செய்து விட்டேன். டாக்டரைப்போய் பார்த்துவந்தீர்களாமே, எது, அவர்கூட ஒப்புக்கொண்டது. பேசினாரா! உடம்பு ஒன்றுமில்லாதிருக்கிறாரா! என்ன சொன்னார். அப்பீல் வேண்டாம். கேஸ் விஷயமான எதுவுமேவேண்டாம் என்று சொன்னாரா... என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டாள்.

உஷா:—ஸிஸ்டர்! அதை ஏன் கேட்கிறீர்கள். எங்களுக்கு சந்தோஷத்திற்குமேல் சந்தோஷமாகவே சகலமும் நடந்தது. அண்ணா எப்படித்தான் இளைத்து இலும்புக் கூடாகஇலும்புக் கம்பிக்குள் காட்சியளிப் பாரோ என்று பயந்து நடுங்கினோம். அதற்கு நேர் விரோதமாய் அண்ணா முன்னிலும் தெம்பாயும், தேறியும் சாந்தஸ்வரூபியாயும்காணப்பட்டதோடுசாதாரணமாய் நேரிலேயே எங்களிடம் தாராளமாகப்பேசினார்; அம்மாவையும் சின்னண்ணாவையும் அப்படியே கட்டித் தழுவிக்கொண்டு தனது அன்புமாரியைப் பொழிந்து பூரித்த காட்சியை நினைக்கநினைக்க உள்ளத்தில் ஆநந்த ஊற்று சுரக்கிறது.

கமலவேணி:—நான் மக்களைப்பெற்றபலனை இன்று தான் பரிபூர்ணமாய் அனுபவித்தேன். புத்திரவாத்ஸல்யத்தின் வேகம் எவ்வளவுபெரியது என்பதையும் அதன் அடங்காத இன்பவெள்ளத்தையும்இப்பொழுது தான் உணர்ந்தேன்; அந்த ஆநந்த அலைமோதிக் கொண்டிருக்கையில் உங்களுடைய அம்ருதவாக்யங்கள் போன்மூலம்வந்ததும் எனக்குஉண்டாகிய சந்தோஷத் திற்கு எல்லையே இல்லாது பொங்கித் ததும்புகிறது. என் கண்மணியின் விஷயத்தில் என்ன அனுகூலம் கிடைத்தது. அதை தயவு செய்து முதலில் சொல் லுங்கள்.

சுந்தரா:—தாயே! பிதாவுக்குமேல் ஒரு படிக் கட்டு சாமர்த்தியசாலியாகிய உங்களிடம் இன்னொரு ரகஸியத்தைக்கூட நாங்கள் இப்போது சொல்லப் போகிறோம்...ஆனால் அதற்கு முன்பு நீங்கள் சொல்லி விடுங்கள்; அதைப் பிறகு நாங்கள் சொல்கிறோம்...

அம்பு:—அதற்காகத்தானே உங்களை அழைத் தேன். நீங்கள் ஏதோ பெரியதாக—புதிதாக—கூறப்

போகும் ரகஸியத்தை நானும் அப்பாவும் ஏற்கெனவே அறிந்து விட்டோம்: அதை நானே சொல்லி விடுகிறேன்......டாக்டருடைய தகப்பனர் அதே சிறைச்சாலையில் இருக்கிறார்; அவருக்கு உண்டான திடீர் விபத்திற்கு டாக்டரே வைத்தியம் செய்கிறார். இதுதானே நீங்கள்சொல்லப்போவது? இதையே நான் முதலில் உங்களுக்குச் சொல்வதற்காகவே வரவழைத் தேன். ஏனெனில் சிறைச்சாலையின் விஷயம் எதை யும் கைதிகள் வெளியில் சொல்லக்கூடாது!என்பது பெரிய சட்டம். அதனால் இதையொரு வேளை அண் ணன் சொல்வதற்குச் சந்தர்ப்பப்படாமல் தவித்திருப் பாரோ என்னவோ என்று நான் எண்ணியே வர வழைத்தேன்—என்று சொல்வதைக் கேட்ட எல்லோ ரும் அதிக வியப்படைந்து, எப்படி ஸிஸ்டர் உங்க ளுக்கு இதுவிஷயம் இதற்குள்தெரிந்துவிட்டது என்ன ஆச்சரியம்! அண்ணன் சமயம்பார்த்து அம்மாவிடம் இந்த ரகஸியத்தைக்காதோடு சொல்லிவிட்டார். அதை உங்களிடம் தெரிவித்து எப்படியாவது அவரை நாங் களும் பார்க்கும்படிக்கு உங்களைக் கேட்கவேண்டு மென்று எண்ணினேம். இது தவிர வேறு என்ன தகவல் கிடைத்திருக்கிறது. சொல்லுங்கள்......என்று தாமோ தரன் பதைக்கப் பதைக்கக் கேட்டான்.

அம்பு:—மிஸ்டர் தாமோதரம்! உங்களுடைய ஆவலும் அன்பும் எத்தனை உச்சஸ்தாயியில் கிர்த்தனம் செய்கிறது என்பதை உங்கள் முகமும் ஒவ்வொரு மூச்சும் நன்றாக எடுத்துக் காட்டுகிறது. இந்த அன் பும் ஐக்யமும் ஆதியிலேயே இருந்திருக்குமாயின் உங்கள் குடும்பம் இம்மாதிரி சிதறி சீர்குலைந்திருக்கா தல்லவா...போகட்டும். இனியாவது திருந்திவிட்டதே

அதுவே மிகமிக சந்தோஷம் இனி விஷயத்தைக் கேளுங்கள் சொல்கிறேன்.

எங்களைப்பற்றி நன்ருகத் தெரிந்தவர்கள் எங்களை என்ன சொல்வார்கள் தெரியுமா? மாயாவி, த்ருலோக சஞ்சாரி, செப்பிடுவித்தைக்காரர்கள், மந்திர மாயக்காரர்கள் என்றெல்லாம் சொல்வார்கள். அதுபோல் நாங்களும் பலவிதத்திலும் உழைத்தால்தானே இத்தனைதூரம் வெற்றியடைந்து பொதுமக்களின் அன்பிற்குப் பாத்திரமாக முடியும். அதுபோலவே இந்த விஷயத்திலும் நாங்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி நடித்துத் துப்பறியத் துடங்கினேம்.

உஷா:—அதென்ன ஸிஸ்டர் நீங்கள் சொல்வதிலிருந்து நீங்கள் எதிரிகளிடம் அவர்களுக்காகத் துப்பு துலக்குவதாக ஒரு சந்தேகம் உண்டாகிறதே...

அம்பு:—பேஷ்! உஷா! உன்னைப்பற்றி அப்பா அடிக்கடி என்ன சொல்லுகிருர் தெரியுமா! டாக்டர்களுக்கு வ்யாதியின் கூறுகளை அறிவது எப்படி முக்யமோ! அப்படி துப்பறிபவர்களுக்கு நாய்போல்மோப்பங்கூட அறியும் திறமையும்சக்தியும் வேண்டும்; உஷாவிடம் அத்தகைய சக்தி இருக்கிறது. அவளை உனக்குத் துணையாகப் பழக்கிவிடவேணும் என்பார்...சரி அதைப்பற்றி பிறகு பார்ப்போம்...எதிரிகளாகிய வெள்ளையர்களை அழைத்துக்கொண்டு சிலபிரபலஸ்தர்கள் வந்து உதவி கோரினர்கள். அப்பாவும் நானும் நன்ருக யோசித்து முடிவுசெய்த பிறகு அவர்களுக்கே உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தோம். அதன்பிறகு அதற்குத் தக்கமுறையில் அவர்களுக்கு நம்பிக்கை உண்டாக்கவே சகலவிதத்திலும் நடித்தோம். அவர்களுடனேயே சுற்றினேம். கண்ணபிரானின் உயி

ருக்கே எமனுன வெள்ளையர்களுக்குத் தங்குவதற்குச் சொந்தமனிதர்விடுதிகள் இல்லாததால் ஹோட்டலில் தங்கினுர்கள். இந்த வழக்கிற்கும் தமக்கும் சம்மந்தமில்லாததால் எப்படியாவது தாம் உடனே கப்பலேறி விடவேண்டும். என்று தீர்மானித்து மூவரும் கிளம்பினுர்கள். ஆனுல் இந்த வழக்கின் தீர்ப்பு முடியும் வரையில் இவர்கள் வெளியூருக்குப் போகக்கூடாதென்று சர்க்கார் திட்டமிட்டுவிட்டதால் அவர்கள் ஓட்டலிலேயே தங்க நேர்ந்தது. ஊரும் புதிது;ஏதோ ஒரு மகத்தான எண்ணத்துடன் வந்தவர்களுக்கு எதிர்பாராத விதமாய் இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்து விபரீத சம்பவத்தில் முடிந்தவுடனே வந்த மூவரில் மருமகப்பிள்ளையின் சகோதரிக்கு இந்த அதிர்ச்சி தாளாமல் உடம்புக்கு வந்து படுத்துவிட்டாள்.இந்தப் பாழும் இந்தியாவுக்கு ஏன் வந்தோம்? வந்ததும் வாராததுமாய் இத்தகைய நிலைமையில் மாட்டிக்கொண்டு ஏன் சங்கடப்படவேண்டும். இந்தச் சனியன்பிடித்த கேஸ் எப்போதுமுடியும்? எப்போது நாம் கப்பலேறி நிம்மதியாய் நம் தாய் நாடு போய்ச் சேரலாம்—என்கிற கவலையால் மிகவும்பீடிக்கப்பட்டு ஏங்கிப்போனுள். இத்தகைய சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்திருந்த நான் உடனே ஸர்வெண்டுபோல் வேஷமணிந்து என் கணவரும்நானும் அந்த ஹோட்டலில் அவர்களுக்கு ப்ரத்யேகமாய் வேலைசெய்ய நாங்கள் அமர்ந்தோம்.

உஷா:—அடாடா! லக்ஷாதிபதியாகிய நீங்களா வேலைக்காரர்களைப்போல் அமர்ந்தீர்கள். இதென்ன வேடிக்கை...அப்புறம்...அப்புறம் என்ன நடந்தது.

அம்பு:—உம்...இதற்கேவா இத்தனை வியப்படைகிறீர்கள். எத்தனையோ இடத்தில் கஷ்டமான வழக்குகளைக் கண்டுபிடிக்க குப்பைக்காரர்களின் வேஷங்கூட

அணிந்து வேலை செய்திருக்கிறோம் உஷா! நான் வேலைக்காரியாய் அமர்ந்து அந்தம்மாளுக்கு சிச்ருஷை செய்வதில் முனைந்தேன். சீமையில் மிகவும் குளிரில் இருந்தவள் இங்கு வெய்யிலில் வந்ததும் இத்தகைய அதிர்ச்சி உண்டாகிவிட்டதால் ஒரே யடியாய் படுத்து விட்டாள். மீன் குட்டிக்கு நீந்தவா கற்றுக்கொடுக்க வேண்டும். பால்காரனுக்கு ஜலம்விடவா பழகவேண்டும். சாதாரண மனிதர்களுக்கு உடம்புக்கு வந்தால் எப்படி இருப்பார்கள்? ஊர்மாறியவர்களுக்கு வந்தால் எப்படி இருக்கும்? இம்மாதிரி சங்கடமான நிலைமையில் திடீரென்று ஒன்றுமே புரியாதவிதம் நிரபராதிகளாய் அகப்பட்டுக்கொண்டால் எப்படி இருப்பார்கள்? குற்றத்தில் மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ யார் யார் சம்மந்தப்பட்டிருக்கிறார்களோ, அவர்கள் எப்படியிருப்பார்கள்?—என்கிற விஷயங்களில் தண்ணீர் குடிப்பதுபோன்ற அனுபவம் இருப்பதால் அந்தம்மாளைப் பார்த்த உடனேயே அவர்களுடைய இதயத்தில் குற்றத்தின் கறைபடிந்து ரத்தத்தில் கலந்து நரம்புகளை ஆட்டி அசைத்து சதையைக் கரைத்துவருவதை ஒரு நொடியில் அறிந்துகொண்டேன். அந்தம்மாளுக்கு சிச்ருஷை செய்யும் நேரத்தைத் தவிர சதா அவளுடன் பேசிக்கொண்டிருப்பது என் வழக்கம். அதிலும் பொழுதுபோகாமல் ஏதாவது படிக்கும்படிக்குச் சொல்வாள். பயங்கரமான கதைகள், ந்யூஸ் பேப்பரில் கொலை களவு முதலிய விஷயங்களாகவே பார்த்துப் படித்துக்கொண்டே அவளுடைய உணர்ச்சிகள் எப்படி இருக்கிறது என்பதை முதலில் அறிந்துகொண்டேன்.

தாமோ:—கேட்கக் கேட்க ஆச்சரியமாயிருக்கிறதே! இம்மாதிரி விஷயங்களைப் படித்தால் எப்படி அவர்களின் உணர்ச்சிகளை உணரமுடியும்.

அம்பு:—அதுதான் சாமர்த்தியமும் அனுபவமும் கொண்டுசெய்யும் வேலையாகும். ஏன்! நீங்கள்கூட இது விஷயத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டு மானால் படிக்காமல் பேச்சிலேயே பார்க்கலாமே! எவர் மீதாவது ஏதாவதொரு சந்தேகம் தட்டினால் அதே விஷயம் போன்று வேறு இடத்தில் நடந்ததாயும் பிறர்பார்த்து சொன்னதாயும் கயிறுதிரித்துக் கற்பனை செய்துப் பேசிப்பாருங்கள். அவர்களுடைய முகம் போகும் மாதிரியும் சரீரத்தில் உண்டாகும் மாறுதல் களையும் படம்பிடித்ததுபோல் பார்க்கலாமே! அதே போலத்தான் இதுவும். எனது செய்கைகளின் மூலம் அந்தம்மாளின் உள்ளத்தில் கொந்தளிக்கும் பலவித உணர்ச்சிகளையும் அவ்வப்போது படமெடுப்பதுபோல் எடுத்துக்கொண்டேன்.

என்னைப் பற்றியும் என் வாலாற்றைப் பற்றியும் அந்தம்மாள் ஒருநாள் கேட்டாள். அதற்குச் சரி யான ஜோடனையுடன் ஒரு கதை தயாரித்து வைத் திருந்தேன். அதாவது என்னைப் பெற்ற தாயார் சிறுவயதிலேயே செத்துவிட்டதாயும் என்னுடைய அத்தைக்கு ஒரு மகன் இருந்தான், அவனை நான் என் மனப்பூர்வமாய் காதலித்தேன். அவனுக்காக நான் என்னுயிரையும் த்ருணமாக எண்ணி அன்புகொண் டிருந்தேன். அதே மனிதனை இன்னொரு இளநங்கை காதலித்தாளாம். அது எனக்குத் தெரிந்திருந்தால் நானே அவனை த்யாகம்செய்து அவளுக்கு மணமுடித் திருப்பேன்; அது தெரியாதுபோயிற்று.

என் அத்தை மகனுக்கு என்னிடம்தான் ப்ரீதி அதிகம்: அவளிடம் இல்லை என்பதை அந்தப்பாவி உணர்ந்து மனமும்மெய்யும் துணிந்து என்அத்தானை விஷமருந்தினால் கபடமாகக்கொன்றுவிட்டாள். அத்

தான் இறந்த துக்கத்தில் நான் மயக்கம்போட்டு விட்டேனும். அந்தப் படுபாவிக்கு உடனே இந்த அதிர்ச்சி தாங்காது பயித்தியம் பிடித்ததுபோலாகி விட்டதுடன் நோயும் பாயுமாகிவிட்டாள். அத்தான் சாதாரணமாக செத்ததாகவே எல்லோரும் எண்ணி இருந்தோம். அந்தச் சண்டாளிக்கு இதயம் பல வீனப்பட்டுத் தான் செய்த கொலைக்குத் தானே தாள மாட்டாது வெடித்துவிடும்போலாகிவிட்டதால் தன்னு யிர் இனி நிற்காது என்று தெரிந்துகொண்டு அத்தா னின் சமாதியருகில் தன்னைக்கொண்டு போகச்செய்து அங்கு தானே தன்வாயினுல் சகலமான விஷயங்களையும் சொல்லிக் கதறி கர்த்தனிடம் மன்னிப்புக்கோரினுள். அசரீரியாக கர்த்தனும் "மன்னித்தேன். இனி யாரும் இம்மாதிரி உயிரைக் கொண்டுபோகும் காரியத்தை மட்டும் செய்யாதீர்கள். அம்மாதிரி செய்கிற வர்கள் கணக்கற்ற கஷ்டங்களை அனுபவிப்பார்கள். ஏதோ ஆத்திரத்தினுல் மூளைகுழம்பி செய்து விட்டபோதிலும் கடைசீ காலத்திலாவது தம் குற் றத்தை என்னிடம் நேரில் வாயார முறையிட்டு விட்டால் நான் மன்னித்து ரக்ஷிக்கக் காத்திருக் கிறேன்" என்று இன்னும் ஏதேதோ சொல்லிய அதி சயத்தை நானே கூடவிருந்து காதால் கேட்டேன். அடுத்த நிமிஷமே அந்தப் பெண்ணைக் கைது செய்ய எண்ணியதற்குள் அவளுடைய ஆவி பறந்துவிட்டது. அன்று முதல் நான் என் அத்தானின் சமாதிக்கு நமஸ் காரம் செய்வதும் இப்படி வேலை செய்து வயிறுவளர்ப் பதுமாக என் காலத்தைக் கடத்தி வருகிறேன்.

என்று கூறும்போது கரைகாணுத துக்கத் துடன் புலம்பித்துடிப்பதுபோல் ப்ரமாதமாய் நடித் தேன். அந்த நோயாளியின் நிலைமையை அடாடா!

அப்போது பார்க்கவேண்டுமே! வர்ணிக்கவே முடியாத படி தவித்துப் பெருமூச்செறிந்துத் துடித்தபடியே, ஐயோ பாவம்! காதல்த்யாகம் செய்தவளா! நீ என்று என்னை மார்புறத்தழுவிக் கொண்டு தேற்றினாள்.

என்ன ஆச்சரியம்! அவளுடையசொக்காய்களுக்கு உள்ளுக்குள்ளே ஏதோ ஒன்று உருத்திய ரகஸியத்தை அறிந்தேன், சதா சட்டைக்குள் மறைத்து வைக்கும் ஏதோ ஒரு ரகஸியப்பொருள்தான் இது என்பது எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டதால் அதை எப்படிப் பார்ப்பது என்ற யோசனையிலாழ்ந்தேன். அன்றிரவு நன்றாக மயங்கித் தூங்கும்படியான மருந்தை பாலில் கலந்து கொண்டு வந்து கொடுக்கும்படி பட்லராகிய என் கணவருக்கு ரகஸியமாய்த் தெரிவித்தேன்.

அப்படியே இரவு பாலைச்சாப்பிட்டதும் அயர்ந்து தூங்கிவிட்டாள்.சட்டைக்குள் புகுந்திருந்த வஸ்துவை எடுத்துப்பார்த்தேன். என்ன ஆச்சரியம்.என்னாலேயே என்னை நம்பமுடியவில்லை. கொலையான ப்ரபுவுக்கு ஏதோ விஷமருந்து குத்தப்பட்டிருப்பதாகவும் அந்த புட்டி கீழே போட்டிருந்ததாகவும் முன்பு சாட்சி ஏற்படவில்லையா? அதே விஷமருந்து பாட்டில் சிறியது இரண்டும் அதோடு சில கடிதங்களும் இருந்தன.

அந்த மருந்து சீமையில் தான் கிடைக்கும். இங்கு எளிதில் கிடைக்காது. அந்த மருந்து விஷயத்தில் தான் அப்பா முற்றிலும் கவனத்தைச் செலுத்தி ஆராய்ச்சிசெய்துவருகிறார்.இது போன்ற மருந்துகளை ஸ்ரீதரனே ரகஸியமாகத் தருவித்து வைத்திருப்பதாக எதிரிகள் முடிவு கட்டிவிட்டார்கள். அதுவும் தவிர அதோடு கூட இருந்த கடிதத்தில் இன்னும் முக்ய மான விஷயங்கள் எனக்குக் கிடைத்துவிட்டது.

அதாவது கொலை நடந்த அன்று அந்த கண்ணபிரான் எழுதிக்கொடுத்த உயிலை அந்தகலபையில் வெள்ளைக்காரன் மறைத்துவிட்டு தனக்குத் தெரியாதென்று சாதித்த விஷயம் உங்களுக்கு நினைவிருக்கிறதா!...... அதே வில்லை உடனே கிழித்தெறிய முடியாமல் நிஜார் பேக்கட்டுகுள்ளே திணித்துவிட்டால் ஒரு வேளை தன்னை சோதனைபோட்டால் எங்காவது கிடைத்து விடப்போகிறதே, அதுதானே ப்ரதானம் என்பதால் அதை இவளிடம் கொடுத்து மறைக்கச் செய்தார்களாம். இவள் அந்த வீட்டிலேயே எங்கயோ பதுக்கி விட்டாளாம். அதைப் பிறகு அதே வீட்டில் நடுநிசியில் ரகஸியமாகச்சென்று டார்ச்சுமட்டும்போட்டுக்கொண்டு தேடியதாயும், கிடைக்கவில்லை என்றும், நீஎங்கு தான் பதுக்கித்துலைத்தாய் என்றும், அவளுடைய அண்ணன் ரகஸியமாய்க் கேட்டு எழுதியுள்ள கடிதம் அவள் சட்டைக்குள் இருந்தது.

உஷா:—ஏம்மா!. இது போல விஷயங்களை நேரில் கேட்காமல் எழுதிவைத்தால் பிறர்கையில் கிடைத்து விட்டால் என்ன செய்வது என்கிற பயம் இருக்காதா? அப்படிச்செய்வார்களா?

அம்பு:—அப்படிக்கேளம்மா...நமக்கு அனுகூலத்திற்குஇடம்இருப்பதனால்தான்இப்படிநடந்தது.கொலை நடந்த உடனே வெள்ளைக்கார புருஷர்களையும் கைது செய்திருந்தார்கள்;பிறகு பெயிலில் விட்டார்களல்லவா! அப்போது அவர்களைச்சுற்றியாராவதுகாவல்இருப்பது போல் சுற்றிக்கொண்டிருந்ததால் இது விஷயத்தில் உறக்கப் பேசமுடியவில்லை. எழுத்துமூலம் பேசிக்கொண்டார் பாவம். எப்படியாவது அக்கடிதத்தைத் தேடிப்பிடித்தாலன்றி தமக்கு அபஜெயம் நிச்சயம்

என்று தெரிந்துவிட்டது. அதற்காக எழுதிய கடிதம் அது. அதுகிடைத்தது. ஆனால் வில் மட்டும் கிடைத்ததா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை.

இவர்கள் இரவில் அந்த வீட்டில் தேடியதை பிசாசு என்று பாராக்காரனும் போலீஸ்காரனும் எண்ணி நடுங்கிவிட்டார்கள் பாவம்! அதுமட்டுமின்றி அதே ஜோபியில் சீமையிலிருந்து இவர்களுக்கு வந்திருந்த மற்றொருகடிதமும் இருந்தது. அந்தக்கடிதத்தின் மூலம் இந்த கூட்டம் பூராவும் ஒரு மட்டமான கூட்டம்; இந்தியாவிலிருந்து வருகிறவர்களில் சிலரை ஏமாற்றி மோசம் செய்வதே இவர்களின் தொழில் என்பதும் அதைப்பற்றிய இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எழுதியிருந்ததில் நன்றாகப் புலனாகியது. அதுவேறு நமக்குப்போதிய ஆதாரமாகக் கிடைத்துவிட்டது. எனக்குண்டாகிய சந்தோஷம் சொல்லிமுடியாது. மறுபடியும் கடிதங்களை அப்படியே வைத்து விட்டு நானும் என் படுக்கையில் படுத்தபடியே தூங்காது விழித்திருந்து இவள் மயக்கம் தெளிந்ததும் என்ன செய்கிறாள் பார்க்கலாம் என்று கவனித்தேன்.

நடுநிசி சமயத்திற்குத்தான் அவளுக்கு தூக்கம் தெளிந்தது. கண்விழித்த உடனே அலறியவாறு தன் மார்பில்கையைவைத்துப் பார்த்துக்கொண்டாள்; இதே போல் இவள் தினம் பார்த்துக் கொள்வாள். அப்போது நான் இதன் ரகஸியம் தெரியாததால் ஏன் இப்படி செய்கிறாள் என்று மட்டும் யோசிப்பேன், அதன் உண்மை ரகஸியம் இப்போது தெரிந்தது. இன்னும் என்ன செய்கிறாள்என்று பார்ப்பதற்காக நான் பேசாமல் படுத்திருந்தேன். அந்த கடிதங்களை மறுபடியும் எடுத்துப்பார்த்தாள். உடனே பழையபடி வைத்து

விட்டுப்படுத்தாள். மீண்டும் எழுந்து உலாவினுள். அதே க்ளப்பில் மற்றொரு அறையில் அவள் கணவன் என்பவன் படுத்திருந்தான். அவன் தற்செயலாக எழுந்துவந்தான். இவளும் அவனும் ஏதோ குசமசவென்று ரகஸியமாய்ப் பேசிக்கொண்டார்கள். என் காதுதான் பாம்புச் சுழிபோன்றது. அதிலும் கேட்காதபடி பேசிக்கொண்ட முதல் வார்த்தைகள் காதில் விழவில்லை: இடைஇடையே ஒவ்வொரு வார்த்தை மட்டும் காதில்பட்டது. அதைக்கொண்டு நான் ஊகித்தது என்னவெனில் அந்த உயிலை நாம் தேடிப்பிடிக்காவிட்டால் ஆபத்து நிச்சயந்தான். உன் அண்ணனுக நடிப்பவன் சொல்லாமல் கப்பலேறி அமெரிக்கா முதலிய இடங்களுக்குப்போய் மறைவாய்த் திரியப் போவதாக ஒரு தீர்மானம் செய்கிருன். நானும் அப்படியே போனுலும் போய்விடலாம். ஜாக்ரதையாய் அந்த உயில் விஷயத்தில் நாம் நாளையே மறுபடியும் போய்ப் பார்க்கவேணும். கேஸ் விஷயம் பலமாகிக்கொண்டு வருகிறது. நாளை இரவு நாம் சினிமா போவதாகக் கூறி அந்த இடத்திற்கு மறுபடியும் போகவேண்டும். என்று எச்சரித்ததுபோல் பொருள் விளங்கியது.

அவன் போனபிறகு மறுபடியும் அவள் ஏதோ நடமாடினுள்: படுக்கையில் படுத்தாள். என் பெயர் மேரி என்று வைத்திருந்தேன். மேரி மேரி என்று அழைத்தாள். உடனே அலறிப்புடைத்துக்கொண்டு எழுந்திருப்பதுபோல் எழுந்து ஓடிவந்தேன். குடிப்பதற்கு ஏதாவது கொஞ்சம் பானம்வேண்டும்...ஏதோ மயக்கமாயிருந்ததாகவும் கண்களில் ஏதோமாதிரி சோர்வு உண்டாகித் தூக்கம் கலைந்துவிட்டதாயும் கூறினுள்.

உடனே சுடச்சுட கோகோ போட்டுக்கொடுத் தேன். அதைக் குடித்த பிறகு சற்றுமவுனமாக இருந் தாள். எதையோ எண்ணியவள்போல், மேரி! உன்னு டைய கதையைக் கேட்டது முதல் எனக்கு மனது மிக வும் கஷ்டப்படுகிறது. இத்தனை வைராக்யமாயிருக்கும் உனக்கு நான் எங்கள் நாட்டில் ஏதாவது உதவி செய்துக்காப்பாற்றவேண்டுமென்று ஆசை அடித்துக் கொள்கிறது. உனக்குத்தான் மக்கள் மனுஷ்யாள் இல்லை என்கிறாய். நீ என்னுடனேயே வந்துவிடுகிறாயா உன்னை நான் உயர்ந்த நிலையில் வைத்துக் காப்பாற்று கிறேன்—என்றாள்.

நான் முதலில் சற்று தயங்குவதுபோல் நடித் தேன். அழுதேன், யோசித்தேன். மீண்டும் அவள் என்னை வேண்டினாள். உடனே அவளுடன் வருவதாக வாக்குக் கொடுத்துவிட்டேன்; மறுபடியும் என்னைக் கட்டிக்கொண்டு என் கைகளைக் குலுக்கினாள். என்னை நீ பரிபூர்ணமாய் நம்புகிறாய்;நானும் உன்னை பரிபூர்ண மாய் நம்பலாமா! என்றாள். கட்டாயம் நம்புகிறேன் என்று உறுதிகொடுத்தேன். இவளிடம் வேஷம்போட்டு நடிக்க நான் வந்திருக்கையில் என்னிடம் நாடகம் நடிக்க அவள் ஆரம்பித்து.........மேரீ இப்போது நன்றாகத் தூங்கினேன் பாரு, அப்போது ஒருஅத்புத மான கனவுவந்தது. அந்தகனவில் தெய்வமாது ப்ரத் யக்ஷமாகி ஒரு இடத்தைக் குறிப்பிட்டு காட்டி அதில் போய் இப்போதே பாரு, ஒரு புதையல் கிடைக்கும், அதை நீகொண்டு உபயோகப்படுத்திக்கொள். உனக்கு அதிருஷ்டகாலம் வந்துவிட்டது...என்று சொல்லி மறைந்தாள். நீ என்னுடன் சகாயமாய்வா! நாம் போய் பயப்படாமல் புதையலைக் கண்டெடுத்து வந்து

நாம் இருவருமே பகிர்ந்துகொள்ளலாம் என்று கூறினுள். உடனே நான் இசைந்தேன்.

அதே நடு நிசியில் என்னை அழைத்துக்கொண்டு தைரியமாய்க் கிளம்பினுள். நான் குழா யருகில் போய் வருவதாகக்கூறிவிட்டு என் கணவரிருக்குமிடம் சென்று அவரிடம் விஷயங்களைக் கூறி எங்களைப்பின் தொடரும்படிக்குக் கூறிவிட்டுஇவளுடன் புறப்பட்டேன். அந்த உயிலுக்காகத்தான் இவள் கிளம்புகிருள் என்பது எனக்கு வெட்டவெளிச்சமாகிவிட்டது. ஓரே உயிலுக்கு இவளும் இவள் கணவனுக நடிக்கும் சோதாவும் சண்டை இடுவதாகத் தெரிந்தது. கிடைத்துவிட்டால் அதைவைத்துக் கொண்டே ஒருவரிடம் ஒருவர் பணம் பறிக்கலாம் என்று உள்ளுக்குள் இருப்பதையும் நான் ஊகித்தறிந்தேன்.

நான் நினைத்தபடியே தோட்டத்துப்புறமாக ஏறிகுதித்து கண்ணபிரானின் பங்களாவையே அடைந்து அவள் தேடவாரம்பித்தாள். இதே சமயத்தை நானும் எதிர்பார்த்திருந்ததால் நானும் அவளுடன் தேடுவதுபோல் பார்த்து எங்கெல்லாம் காகிதக்குப்பை கூளங்கள் இருந்ததோ அதை எல்லாம் நான் கிளறிப் பார்த்தவாறு தரையில் தட்டி தட்டி புதையல் இருக்கும் ஓசைகேட்கிறதா என்று பார்ப்பதாக அவளிடம் நடித்து வந்தேன்.

பாவம் வாசலில் காவலிருக்கும் டாணுக்காரன் பயந்து நடுங்கி ஓடுவதையும் நான் ஜன்னல் கண்ணுடியால் பார்த்துக்கொண்டு தானிருந்தேன். எப்படியும் காரியம் ஜெயமாகிவிட்டால்போதும் என்ற எண்ணத்துடன் வெகு மும்முரமாகப்பார்த்தேன். அதே ஹாலில் ஒரு சாக்கடை பூமிக்குள் போவதும்

அதன் மேல் கடப்பைக்கல் மூடியிருப்பதும் என் கண்ணில் பட்டது. நான் அவளுக்குத் தெரியமால் கடப்பைக் கல்லை காலாலேயே புரட்டி சாக்கடைக் குள் காலைவைத்துக் காலாலேயே துளாவினேன். சில காகித குப்பைகள் அதில் எலியோ பெருச்சாளியோ இழுத்துத் தள்ளியிருந்தது தெரிந்தது; உடனே அவை களைக் காலாலேயே எடுத்து என் ஜோபிக்குள் அடைத் துக்கொண்டு கடப்பைப் பாரையைத் தள்ளிவிட்டு அவளிடம் ஓடிவந்து அதோ ஒரு கடப்பைப் பாரை மூடியிருக்கும் இடத்தில் புதையல் இருக்குமோ பாருங்கள், நான் இங்கு காவல் இருக்கிறேன் என்று அதனிடம் அவளையனுப்பிவிட்டு மறைவான இடத்தில் டார்ச்சு விளக்கில் இந்த கடிதங்கள் குப்பைகாகிதமா? சரியான புள்ளியா என்று கவனித்தேன். என்ன ஆச்சரியம்! கண்ணபிரானின் கையெழுத்து பளிச் சென்று தெரிந்தது; தேதியை முதலில் பார்த்ததும் கொலை நடந்த தேதியே ப்ரதானமாய்த் தெரிந்ததும் நான் துள்ளி குதித்து மகிழ்ந்து கடவுளை எல்லாம் வணங்கி மானஸீகமாய் டாக்டருக்கு ஆசி கூறினேன். எந்த மனுஷியை சந்தேகித்தேனோ! பாவம் அவளே வந்து உண்மையைக் காட்டியதுபோலாகிவிட்டது

என்றதைக் கேட்டதும் எல்லோரும் ஆனந்த மாய்க் குதித்தார்கள். தன்னைமீறிய உணர்ச்சியுடன் தாமோதரன் அப்படியே அம்புஜத்தின் காலில் விழுந்து நமஸ்கரித்து, தாயே! நீங்கள்தான் எங்கள் குலதெய்வம்! இதற்குமேல் எங்களால் சொல்லவே தெரியவில்லை! என்றான்.

எல்லாம் ஸ்ரீ கீதாசாரியன் செயல்; என்னால் என்ன இருக்கிறது. இத்தனை சுலபமாய் இந்த வெற்றி

கிடைத்துவிடும் என்று நான் நினைக்கவேஇல்லை. நான் இருட்டில் நகர்ந்தவாறு சென்று கடிதங்களை என் கணவரிடமே கொடுத்து பத்திரப்படுத்தி அவரை எங்கள் வீட்டிற்குப் போய்விடும்படிக் கூறிவிட்டு உடனே நான் இங்குவந்தேன். அதற்குள் அவள் சாக்கடையைக் கையினுல் கிளறிப்பார்க்கையில் அவளுக்குப் போதாக் காலக்கொடுமையினுல் ஒருசிறியதேள் கையில்கொட்டி-விட்டது. திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல... என்கிற பழமொழி சரியாகிவிட்டதால் அவள் ஒரு துள்ளுதுள்ளியவாறு, ஐயோ! மேரி...போய்விடலாம் வா......என்று கூறியபடியே எப்படியோ நோயைப் பொறுத்துக்கொண்டு ஓட்டமாக வீதியை அடைந்து டாக்ஸி வைத்துக்கொண்டு ஓட்டலையடைந்தோம்.

தேள் கொட்டிய உபத்திரவம் தாங்காமல் அவள் அலறத் தொடங்கினுள். நான் எனக்குத்தெரிந்த ஏதேதோ மருந்துகளைப் போட்டேன், ஒன்றுக்கும் கேட்கவில்லை. டாக்டரைக் கூப்பிடவேண்டாமென்று கத்தினுள். நான் செய்வதறியாது தவிப்பதுபோல் பாசாங்கு செய்தவாறு மறுபடியும் மயக்கமருந்தையே அவளுக்குக்கொடுத்துவிட்டு நான் நேரேஎன்வீட்டிற்கு ஓட்டம் பிடித்தேன்.

உடனே என் கணவரும் நானும் அந்தக் கடிதத்தைத் திரும்பத்திரும்பப் படித்துப் பூரித்துப்போனும். அப்பா இது விஷயமாகத்தான் வெளியே போயிருந்தார். அவர் வரவுக்காகவே இரண்டுநாள் காத்திருந்தோம். நேற்று அவர் வந்த உடனே அவரிடம் இதைக் காட்டினேம். இன்னென்று முக்யமானதைச் சொல்ல மறந்துவிட்டேனே...சிறைச்சாலையில் உங்கள் பிதா கைதியாயிருப்பதும், ஸ்ரீதரனே வைத்தியம் செய்வதை

யும் எப்படியோ அறிந்து அதை ரகஸியமாக இவளுக்கு எழுதியிருந்த ஒரு கடிதமும் இவள் பையில் கண்டெடுத்தேன். அதனுல்தான் இவ்விஷயத்தை முதலில் உங்களிடம் சொல்ல ஆரம்பித்தேன். வழக்குவிஷயத்திலேயே பேச்சுமாறிவிட்டது. இதற்குள் உங்களுக்கும் வெற்றிகரமான இண்டர்வ்யூ கிடைத்தது. பல வருஷங்களாக மறைந்து கிடந்த ரகஸியமும் வெளியாகிவிட்டது. எல்லாம் நன்றாகவே முடிந்தது. இந்த வழக்கு விஷயத்தை நீங்கள் யாரும் வெளியிடவேண்டாம். அப்பாவே அதற்குத் தகுந்த சமயம் பார்த்து வெளியிடுவார்கள். உங்களுக்கு இந்தசந்தோஷம் தெரிந்தால் நலமாயிற்றே என்று சொன்னேன்.

என்று சகல விஷயங்களையும் சொல்லி ஒருவாறு முடித்தாள். இதைக்கேட்ட கமலவேணியம்மாளுக்கு உண்டாகிய பெருமிதமான ஆநந்தத்தில் அப்படியே அம்புஜத்தைத் தூக்கிக்கொண்டு குதிக்கும்படி எங்கிருந்தோ பத்துயானை பலம் வந்துவிட்டது. என் கண்மணியின் மீது படவிருந்த அழுக்கைத் துடைத்து சத்தியத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டி அவனை வாழவைத்த செல்வீ! என்வயிற்றில் பாலை வார்த்த கற்பகமே! "கடவுள் ஒருவன் இருப்பது உண்மையாயின் அவனை நம்பிய பக்தர்களை அவன் ரக்ஷிக்கக் கடமைப்பட்டிருக்கிறுன் என்பதை அவன் உலகறியச்செய்ய வேண்டாமா? நான் நிரபராதி என்பதை அவனே காட்டட்டும், நீங்கள் எத்தகைய ப்ரயத்தனமும் செய்ய வேண்டாம்..." என்று தத்வோபதேசம் செய்துவிட்டு என் செல்வன் சென்றபோது என் வயிற்றில் எத்தகைய சங்கடம் செய்தது தெரியுமா? நல்ல ப்ராணனாக இருந்தால் அப்படியே போயிருக்கவேண்டும். அனுப

விக்கவே பிறந்த கட்டையாகையால் போகவில்லையென்று கூட நான் வெறுத்தேன். இப்போது இந்த நிமிஷம் என்னுடைய அதே உள்ளம் என்ன நினைக்கிறது தெரியுமா'...தன் செல்வ மகன் கொலைகாரன் என்கிறபடாப் பழியைக் கேட்ட உடனே அந்தக் கலக்கக் கரையுடன் சாவது மகத்தான பாபமாகும்; அவன் நிரபராதியென்று கேட்டு பேரானந்தமடைந்த பிறகு சாவதுதான் பாக்யமாகும். நீ சரியான புண்யவதி என்றுஇப்போதுதான் வெளியாகிறது என்று பறைசாற்றுகிறது. இதற்குக் காரணம் நீங்களும் உங்கள் பிதாவுமல்லவா? இப்போது என் மனக்களிப்பின் வேகத்தில் நான் எப்படித் தான் உங்களைக்கொண்டாடிப்பேசுவது என்றேதெரியவில்லை. எங்கள் குலவிளக்கு மங்கி அணைந்துபோகும் தருவாயிலிருந்ததைச் சுடர்விட்டெரியும்படி ஏற்றி வைத்து மாசுமருக்களைக் களைந்தெறிந்த புண்யாத்மாக்கள் நீங்கள் என்றால் மிகையாகாது. என்ன பரோபகாரம், என்ன த்யாக உழைப்பு! இந்த வழக்கிற்காக நீங்கள் ஒருகேவலமான கபடவேஷதாரியிடம் இத்தனை நாட்கள் வேலைக்காரியாயிருந்த ஒரு செய்கையை எண்ணஎண்ண எங்களுக்கு மயிர்க்கூச்செறிகிறது......

என்று கட்டுமீறிய களிப்புடன் சொல்வதைக் கேட்ட சுந்தராம்பாவின் உள்ளம் ஆநந்தத்தினால் புலகிதமுற்றது. 'அம்மணீ! எப்படியும் எங்கள் குடும்பத்துடன் நீங்களும் கலந்துவிட்டீர்கள். ஆகையால் உங்கள் சகோதரியைப்போல உஷாவை எண்ணிக் கொண்டு அவள் வாழ்நாள் வீணாகாதபடி அவளையும் உங்கள் தொழிலில்பழக்கிபொது ஸேவைசெய்யும்படிக் குச் செய்யவேண்டும்' என்று கேட்டுக்கொண்டாள்.

இதற்குள் அம்புஜம் வந்தவர்களுக்கெல்லாம் டிப்பன் காப்பி முதலியன கொடுத்து, 'சந்தோஷமாக

சாப்பிடுங்கள். கூடிய சீக்கிறத்தில் உங்கள் குமாரருடன் கூடவே சாப்பிடலாம்; அடுத்தது அவருடைய விவாகத்தின் விருந்தும் நடக்கலாம். என்று சொல்லும்போது, நாயுடுகாரு வெகு குஷியுடன் உள்ளே வந்தார். பேஷ்! எல்லோரும் இங்கேயே இருக்கிறார்களா, பலே! அம்புஜம் நீ சொல்லிய விஷயங்களுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் இன்னொரு சந்தோஷ விஷயத்தை நான் சொல்லப்போகிறேன் தெரியுமா...

என்று முடிப்பதற்குள் அம்புஜம் சிறுகுழந்தையைப்போல் குதித்துக்கொண்டு, 'விடுதலையாகிவிட்டாராப்பா! கடிதத்தை தாக்கல் செய்து விட்டீர்களா!' என்று கேட்டாள்.

நாயுடு:—உம்! இதென்னம்மா ப்ரமாதம்; இது தன்னைப் போலாகும் காரியமல்லவா! நானும் இப்போது பல இடங்களில் சுற்றி, பல உண்மைகளைக் கண்டு பிடித்துவிட்டு ஸ்ரீதரனிருக்கும் சிறைக்கு ஒரு காரியமாய்ப் போயிருந்தேன். நானே கனவிலும் கருதாத விதமாய் ஒரு விஷயம் தானாக வலுவில் கிடைத்தது. அதாவது ஸ்ரீதரன் இருக்கும் ஜெயிலரை சில காரணங்களுக்காகப் பார்க்கப்போனேன்; அவர் ஜெயிலில் இல்லை. வீட்டிலிருப்பதாகச் சொன்னார்கள்.

உடனே வீட்டிற்குப் போனேன். அங்கு நான் கண்ட காட்சியை வர்ணித்தே கூறமுடியாது; அத்தனை வியப்பும் திகைப்புமாகிவிட்டது. அதாவது ஸ்ரீதரனின் பிதாவே அங்கு கைதியாக இருக்கிறாராம்; அவருக்கு ஸ்ரீதரனே வைத்யம்செய்தாராம். அப்போது அவர் பிதா தனது சரிதையைப் பூராவும் சொல்லித்

தான் ஒரு சிறுவனின் பொருட்டு த்யாகம்செய்து கொலை வழக்கில் மாட்டிக்கொண்டதாகவும் தனது பாலிய லீலைகளின் பரிபவத்தை உணர்ந்து தான் உலகத்தில் யார் கண்ணிலும் படாது சிறையிலிருப்பதோ! தூக்கு மரம் ஏறுவதோ ஒன்றை வலுவில் வரவழைத்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்ததாயும் அப்படியே செய்ததாகவும் டாக்டரிடம் சொல்லக் கேட்டதும் ஜெயிலரின் இதயம் வெடித்து விடும் போலாகிவிட்டதாம்; அவருக்கு ஆகாயமும் பூமியும் ஒன்ருகச் சுற்றியதால் உடனே ஸ்ரீதரனை அனுப்பி விட்டுத் தான் வீட்டிற்கு ஓடிவந்து படுத்தாராம்.

அப்போதுதான் நானும் போய்ச்சேர்ந்தேன். அந்தக் கைதி எந்த ஒரு சிறுவனுக்காக த்யாகம் செய்தானே அந்தச் சிறுவன்தான் இன்று நன்ருகப் படித்து வ்ருத்தியாகி ஜெயிலர் உத்யோகத்திற்கு வந்து பல ஊர் ஜெயில்களில் இருந்ததாயும் தனது சிறுபிராயத்து சம்பவத்தை அறவே மறந்திருந்தாராம் என்ருலும், எந்த உத்தமனே ஒருவனல் தானே நாம் இந்த நிலைமைக்குவந்தோம். அவன் யாரோ எங்கிருக்கிருனே; அந்த இருட்டில் ஆளைக் கூட பார்க்கவோ தெரிந்துகொள்ளவோ முடியாது போய்விட்டது. பாவம் அவன் என்னவானுனே என்று எப்போதாவது எண்ணி வருந்துவாராம்.

இத்தனை வருஷகாலமாய் இதே சிறையில் இதே மனிதனைப் பார்த்துப் பழகி பலதரம் கண்டித்து தண்டனையும் கொடுத்துப் பின்னும் பாவியாகிவிட்டோமே—இவன்தான் அன்று என் தாயாரின் உயிரைக் காத்து என் வாழ்வை உயர்த்திய உத்தமன் என்று தெரிந்ததும் எனக்கு இதயமே நின்றுவிடும்

போலிருக்கிறதே கொலையாளியும் குற்றவாளியும் நானாக இருக்க நான் இராஜபோகத்தை அனுபவிக்கவும் எனக்காக அந்த மனிதன் இப்படித் திண்டாடுவதும் எத்தனை பாவம்! இவனுடைய மகன்தான் ஸ்ரீதரன் என்கிற ரகஸியமும் தெரிந்துவிட்டது. என்ன செய்வது?—என்றுதனது குற்றத்தைத் தானே என்னிடம் கூறி கண்ணீர்விட்டுக் கதறினார். தானே பழைய குற்றவாளி என்று சர்க்காரிடம் வெளியிட்டு விடட்டுமா! என்றும் கத்தினார். நான் அவரைச் சமாதானப்படுத்தி "ஸார்! ஸ்ரீதரன் நிரபராதி என்பது சரியான காரணங்களுடன் ருஜுவாகிவிட்டது; ஆகையால் அவரை சீக்கிரமே விடுதலைசெய்துவிடுவார்கள். அதைப்பற்றி உம்மிடம் பேசவே வந்தேன். நடந்தது என்னவோ நடந்துவிட்டது. இனி நீர் குற்றவாளி என்று காட்டினாலும் அதனால் உமக்கு அந்த பாதகம் விட்டுப்போகப் போவதில்லை. நீர் எப்படியாவது சர்க்காரிடம் ப்ரயத்தனப்பட்டு அந்த மனிதன் மிகவும் நல்லவனாகித் திருந்திவிட்டான். இனி அவனை புது வருஷ நன்னாளில் விடுதலைசெய்துவிடலாம் என்று சிபார்சு செய்து விடுதலைசெய்து மகனிடமே அனுப்பிவிடும். அதுவே போதும். ஸ்ரீதரனை நான் பார்த்துப் பேசவேணும், அதற்கு சற்று அனுமதித்தால் எனக்கு நல்லதாகும்" என்று கேட்டேன்.

உடனே அந்த மனிதன் என்னை ஸ்ரீதரனிடம் அழைத்துச் சென்று நான் தாராளமாகப் பேச விட்டார். கொலை நடந்த அன்றைய சம்பவத்தைப் பற்றிக்கேட்கவேண்டியதைக் கேட்டுத்தெரிந்துகொண்டேன். ஜெயிலரின் உதவியினால் ஸ்ரீதரனின் பிதாவையும் தனிமையில் பார்த்தேன். இதே மனிதரை ஆதியில் அவர் படாடோபமான உத்யோகத்தில் இருக்

கையில் பார்த்திருக்கிறேன். அவரிடம் நான் தனிமையில் பேசுகையில் ஸ்ரீதரன், ஜெயிலர் இருவரும் இருந்தார்கள்.

ஜெயிலரின் சோகம் கட்டுமீறி விட்டது. அவர் துக்கத்தைத் தாளமாட்டாது கைதியின் கைகளைப் பிடித்துக்கொண்டு கதறியவாறு, 'ஐயா எந்த ஒரு சிறுவனுக்காக நீங்கள் த்யாகம் செய்தீர்களோ அந்தப் பாவி நான்தான்' என்று சகல வரலாற்றையும் சொல்லி மன்னிப்பும் கோரியதுடன், இதோ இவர் யாருமில்லை துப்பறியும் நிபுணர் ராஜாராம்நாயுடுகாருதான்! இவர் ...இதோ இருக்கிறாரே டாக்டர், இவர் யார் தெரியுமா சாக்ஷாத் உங்கள் மகன் டாக்டர் ஸ்ரீதரன் இவர்தான் என்று சொல்லி வாய் மூடுமுன் அந்த மனிதனின் ஆனந்த உணர்ச்சி இருந்த நிலைமையை வர்ணிக்கவே முடியவில்லை' அப்படியே...ஹா...என்கண்மணிஸ்ரீதரா ...என்னருமை செல்வன் ஸ்ரீதரா...என்றுகட்டித் தழுவினார். அடுத்த நிமிஷமே, ஜெயிலரைநோக்கி, அப்பனே உன்தாயார் சவுக்யமாய்ப் பிழைத்தாளா? ஒன்றுக்கும் உதவாக்கரைக் கட்டையாகிய நான் எப்படியானால் என்ன? அந்த சமயம் கடவுள் உன்னைக் காப்பாற்றி இத்தனை உயர்ந்த பதவியில் இருக்கும் படிக்குச் செய்தாரே! நான் ஆதியில் செய்துள்ள மகத்தான பாவத்திற்கு இந்த ஒரு சிறிய உதவியாவது என்னால் செய்ய முடிந்ததே என்று நான் பூரிக்கின்றேன். என் மகனைச் சந்தித்த சந்தோஷத்தைவிட உன்னைக் கண்ட சந்தோஷமே எனக்குப் பொங்கித் ததும்புகிறது. போனது போகட்டும்; இனிமேல் இந்தப் பாவியின் ஆதிகுப்பையைக் கிளறாதே! நீ எந்த ரகஸியத்தையும் வெளியிட்டு எதுவும் செய்யவேண்டாம். என்று நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். என் செல்வனை

இங்கு கண்ணாரப் பார்த்ததே என் மனது நிம்மதியான சாந்தியின் சிகரத்தில் அமர்ந்துவிட்டது. என்று கூறிவிட்டு ஸ்ரீதரனை நோக்கி, என் கண்ணே! கமல வேணி? சவுக்யமா இந்திரா, சந்திரா, தாமு எல்லோரும் சவுக்யமா என்று கேட்டு அவனை மீண்டும் தழுவிக் கொண்டார்.

அம்பு! அந்தக் காட்சி என்னால் மறக்கவே முடியாது. அத்தனை உருக்கமாயிருந்தது. மூவரும் எதேதோ பேசிப் பின் கடைசியில் ஜெயிலர் இவரை எப்படியாவது விடுதலைசெய்து அனுப்பிவிடுவதாயும் அவர் மறுக்காமல் வெளியேவந்துவிடுவதாயும் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீதரன் ஒரே ப்ரமிப்புடன் அப்படியே பதுமைபோலாகிவிட்டார். வெகு சீக்கிறத்தில் விடுதலையாகிவிடும். என்று நான் சொல்லிவிட்டு இந்த ரகஸியம் நம் மூவரைத் தவிற வேறு யாருக்குமே தெரியவேண்டாம். என்று சொல்லிவிட்டு நான்நேரே போலீஸ் கமிஷனரிடம் பேசிவிட்டு சர்க்காரிடம்எல்லாவற்றையும் தாக்கல் செய்துவிட்டு ஓடோடி வந்தேன். எப்படி இருக்கிறது கதை பார்த்தீர்களா! அனேகமாய் இன்னும் வெகு சீக்கிறத்திலேயே ஸ்ரீதரன் வந்துவிடுவார். அடுத்தமாதம் புது வருஷமல்லவா? அதை முன்னிட்டு அவரும் வந்துவிடலாம் என்றார்.

இந்த அதி அத்புதமான விஷயத்தைக் கேட்டதும் எல்லோரும் அப்படியே ஆனந்தமயமாய்க் கூத்தாடினார்கள். பின்னும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு எல்லோரும் விடைபெற்றுச் சென்றனர். எல்லோருடைய இதயமும் நாயுடுவையும் அம்புஜத்தையுமே வாழ்த்தியது.

இதென்ன இது, மேரியை இன்னும் காணவில்லையே அவள் எங்கு சென்றிருப்பாள். இத்தனை நாட்களாக என்னைவிட்டுப் பிரியாமல் நம்பிக்கையாயிருந்ததனுல் தானே நேற்றிரவு அவளைக் கூடவும் அழைத்துச் சென்றுவிட்டேன். எங்கு போயிருக்கக்கூடும். என்று எண்ணியபடியே அந்த வெள்ளைமாது உள்ளுக்குள்ளேயே தவிக்கிறுள். பட்ளரை விசாரிக்கலாமென்று கூப்பிட்டாள். அம்புஜத்தின் கணவனுகிய பட்ளர் தனக்கு ஒன்றுமே தெரியாது. அவள் யாரோ என்னவோ என்று திட்டமாகக் கூறிவிட்டான். வெள்ளை மாது மிக்க பயத்துடன் மேரியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் அன்று இரவு மேரி மிகுந்த பயத்துடன் நடுநடுங்கியவாறு வேர்க்க விருவிருக்க கைகால்கள் உதற முகம் வெளிர்தட்டி விகாரமடைய அலங்கோலமான நிலைமையில் வந்து சேர்ந்தாள்.

இவளைக் கண்ட வெள்ளை மாது மிகுந்த கோபத்துடன், இதென்ன செய்கை? ஒருநாள் பூராவும் என்னை விட்டுவிட்டு நீ சொல்லாமல் கொள்ளாமல் எங்கு போனுய்? நேற்றுதான் நம்பிக்கையா யிருப்பதாய் ப்ரமாணம்செய்துகொடுத்த நீ இன்றே என்னை ஏமாற்றப் பார்க்கிறுயா? எங்கு சென்றுவிட்டாய்? ஏன் என்னிடம் சொல்லவில்லை? சொல்லாமல் சென்றதுமன்னிமில் பயப்படுவதுபோல் நடிக்கிறுயே, நடிப்பு! என்று அதட்டினுள.

• உடனே மேரி வெள்ளைமாதின் கைகளைப் பிடித்துக்கொண்டு "தாயே! மன்னிக்கவேண்டும். நான் உங்களுக்கு நம்பிக்கை த்ரோகம் செய்யவில்லை. என்

உடைகள் எல்லாம் அழுக்காகிவிட்டதால் லாண்டரிக்குச் சென்று உடைகளை வாங்கிவரச் சென்றேன். நீங்கள் தேள் கொட்டிய அதிர்ச்சியால் அயர்ந்து தூங்கிவிட்டீர்கள். சீக்கிறம் வந்துவிடலாம் என்று போனேன். தாயே! சொல்லக்கூட பயமாயிருக்கிறது. நானே இந்த ஊருக்கே புதியவள். மனம் உடைந்துபோன வேகத்தில் எப்படியோ பிழைக்கலாம் என்று வந்த இடத்தில் உங்களுடைய போாதரவு கிடைத்ததே என்று பூரித்தேன். அதை பகவான் உடனே சிதற வடித்துவிட்டார். நான் இனி இங்கு வரவேமாட்டேன். உங்களிடம் நேற்று நம்பிக்கையாய் சொல்லியதற்காக ஒரு பரம ரகஸியத்தை உங்களிடம் சொல்லி உங்களையும் எச்சரிக்கவே வந்தேன்...

இதைக்கேட்டதும் வெள்ளைமாதின் இதயம் நூறு மைல் வேகத்தில் அடிக்கத் தொடங்கியது. "என்னை எச்சரிப்பதற்காக வந்தாயா? பரமரகஸியமா? சொல்லு மேரி, சீக்கிறம் சொல்லு" என்று பதறினாள். மேரி தன்னை சமாளித்துக்கொள்வதுபோல்நடித்து "தாயே இந்த ஊரில் யாரோ துரைக்கண்ணன் என்ற ஒருப்ரபு இருந்தாராம். அவர் பெண் சீமையில் படித்தாளாம். எந்த வெள்ளையனையோ மணந்தாளாம்... இங்கு வந்தாளாம்... ஏதேதோ கொலைநடந்ததாம்... விவரம் எனக்கு ஒன்றுமே தெரியாது தாயே! அந்தக் கொலை வழக்கில் நீங்களும் சம்மந்தப்பட்டிருப்பதாயும் போலீஸார் இது பற்றி சகலவிவரங்களும் விசாரித்துவிட்டதாயும் உடனே உங்களைக் கைது செய்யப்போவதாயும் நானும் கூட இருந்தால் என்னையும் கைது செய்து விடுவார்கள் என்றும், 'இனி நீ அங்குபோகவே கூடாது. உன்னை நான் காப்பாற்றுகிறேன், நீ இங்கேயே இருந்துவிடு' என்று ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னிடம் ரக

வியமாகக் கூறி என்னை எச்சரித்தார். இது சுத்தப் பொய்யாக இருக்கும் என்று நான் நம்பவில்லை... இருந்தாலும் அப்படி உண்மையாயிருக்குமானால் இது விஷயத்தை உங்களிடமே கூறி உங்களை உடனே இங்கிருந்து வெளி ஏற்றிக் காப்பாற்றிவிடலாம்என்பதற்காக ஓடி வந்தேன். தாயே! ஏதாவது உண்மை இருக்குமானால் உடனே ஓடிவிடுங்கள். இல்லையேல் தாராளமாக வந்து வாதாடுங்கள்! பயப்படவே வேண்டாம். நான் போய்விடுகிறேன்...

என்று மேரி சொல்லும் போதே வெள்ளைமாதிற்கு உயிரேபோய் விடும்போலாகிவிட்டது. ஹா......இது உண்மையா மேரி? நிஜமாகவா என்னைக் கைதுசெய்யப் போகிறார்கள்...ஐயயோ...என்று தவித்த க்ஷணமே "நிஜமாகவே கைது செய்ய சகல ஏற்பாடுகளுடன் இதோ சர்க்கார் வாரண்டுடன் வந்திருக்கிறோம்" என்று கூறியவாறு அதே சமயம் போலீஸ்காரர்கள் அரெஸ்டு வாரண்டுடன் வந்து கைதியாக்கினார்கள்.

வெள்ளை மாதின் இதயத்துடிப்பு பின்னும் அதிகரித்து ஹா...என்று கூச்சலிட்டாள். இன்ஸ்பெக்டர் சாவதானமான த்வனியில், அம்மா கப்பலேறிவந்து கைவிலங்கு மாட்டிக்கொண்ட பெருமையுடன் தப்ப வேண்டுமானால் கொலை நடந்த விஷயமான சகல உண்மைகளையும் சொல்லிவிட்டால் உனக்குத் தூக்குதண்டனை வராது. சாதாரண தண்டனையிலும் சற்று குறையும். நீ இனிமேல் எதையும் மறைக்கவோ! தப்பவோமுடியாது; சட்டைப்பைக்குள் பதுக்கியுள்ள விஷமருந்தை...கடிதங்களை எடுத்து வெளியே வை...உம்... அவைகளை மரியாதையாய் நீங்களேஎடுத்துவையுங்கள் என்றார்.

வெள்ளை மாதின் நிலைமையை விவரிக்கவாவேண்டும்! சந்தடி செய்யாமல் எடுத்துக்கொடுத்தாள். போலீஸாருடன் இன்னும் பலஅதிகாரிகள் வந்திருந்தார்கள். நாயுடுகாருதான் ப்ரதானம் வகிக்கிறார். கடிதங்கள் கிடைத்ததால், இவர்கள்வெரும் சோதாக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்; துரைக்கண்ணனின் மகளை ஏமாற்றி அவளுடைய சொத்தை அடைவதற்காகவே அவள் தாய்நாடு திரும்புவதற்கு சில தினங்களுக்கு முன்பு தான் அவளை மணந்ததாக நாடகம் நடத்தினார்கள்—என்பது போன்ற உண்மைகள் வெளியாகிவிட்டது. வெள்ளை மாதின் இதயம் ஏற்கெனவே பலவீனப்பட்டுப் படுக்கையுடன் இருந்ததாலும் திடீரென்று இந்த அதிர்ச்சி உண்டாகிவிட்டதால் இதயம் நின்றுவிடும் போன்ற நிலைமை உண்டாகிவிட்டது. இதையறிந்த நாயுடுகாரு... அம்மணி! நீங்கள் கடைசீ மூச்சுபோகும் வரையில் செய்த பாபம் போதும்; இப்போதாவது கொலை நடந்தது எப்படி என்கிற உண்மையைச் சொன்னால் உங்கள் மதப்படிக்கு கர்த்தன் உங்களை மன்னிப்பார்! பாதகத்தை மறைத்தால் பயங்கா நரகந் தான் என்பதை மறக்கவேண்டாம்... என்றார்.

வெள்ளைமாதின் மூச்சுதிக்குமுக்காடத் தொடங்கியது... அந்த நிலைமையில் ஆவேசம் வந்தவளைப்போல் துள்ளி குதித்தவாறு... நான் பாவி... படுபாவி. நான் கேவலம் வேசிகள் இனத்தைச் சேர்ந்தவள். என்னோடு வந்த இருவரும் கேவலமான சோதாக்கள். இந்தியா முழுதும் சுற்றிப்பார்க்கவும் துரைக்கண்ணனின் செல்வத்தை விழுங்கவுமே நாங்கள் அவர் மகளைக் குல்லாய் போட்டு மணந்ததாக ஒரு நாடகமாடி கப்பலேறி வந்தோம். எந்த சமயம் என்ன விபத்து நேருமோ அப்போது இதைக் குடித்து விடவே விஷத்தையும் கையு

டன் கொண்டுவந்தோம். துரைக்கண்ணன் மன மூடைந்து அவர் மகளை அவரேதான் அடித்துத்தள்ளி ஞர். அந்த வேகத்தில் அவள் இறந்தாள். மகளின் பரி பவத்தினுல் தவிக்கும் சமயம் மருமகனுய் வந்த படு பாவிதான் அவரை அடித்துக் கொன்ருன். வில்லை என் னிடம் மறைக்கும்படிக்குக் கொடுத்தான். அச்சமயம் அங்கு ஏகப்பட்ட ஆட்கள் வந்துவிட்டதால் ஒரு சாக் கடையில் புதைத்தேன்; எந்த சாக்கடை என்கிறஇடம் குறிதெரியாது தேடித்தேடி அலைந்து ஏமார்ந்தேன். துரைக்கண்ணனைக் கொன்றவன் என் அண்ணுகை வேடமணிந்தவன்தான். டாக்டர் நிரபராதி என்பதை நான் சத்யமாய்ச் சொல்கிறேன். வில்லு கிடைத்தால் அதை தாக்கல்செய்து டாக்டரை மீட்டுவிட்டுநான் சாகவே எண்ணினேன்: என்விதி வேறு மாதிரியாகி விட்டது. என்னை கர்த்தன் மன்னிப்பாருக......என்று ஆவேசம் வந்தவளைப்போல் கூறினுள். சகலமும் அதி காரபூர்வமாகப் பதிவுசெய்யப்பட்டது. மேரி...உன் னையும் நான் ஏமாற்றி...என்பதற்குள் நாயுடுகாரு, அம்மா! மேரியை உன்னுல் ஏமாற்ற முடியாது. அவள் வெரும் மேரியல்ல, துப்பறியும் ராஜாராம்நாயுடுவின் அருமைமகள் அம்புஜந்தான் தெரிந்ததா. உன்னிடம் துப்பறிவதற்காகவே வேலைக்காரியாயிருந்து சகல உள வையும் அவளே கண்டு பிடித்தாள்—என்று நாயுடு சொல்வதைக்கேட்ட வெள்ளைமாதும் கூட இருந்த அதி காரிகளும்வியப்புற்ருர்கள். அடுத்தக்ஷணமே மேரி அம் புஜமாய்க் காட்சியளித்ததைக்கண்டு பூரித்தார்கள்.

வெள்ளைமாது மறுபடியும் வியப்புடன் அம்புஜத் தைநோக்கி, தாயே! புனிதவதி! இத்தகைய பரோப காரமார்க்கத்தில் என் காலத்தைக் கடத்தியிருந்தால் எத்தனை பயனடைந்திருப்பேன். துப்பறியும் கதை

களைப் பலபுத்தகங்கள் படித்திருக்கிறேன். நேரில் என் வாழ்க்கையிலேயே பார்த்துவிட்டேன்......என்றுகூறி முடிப்பதற்குள் கீழே விழுந்துவிட்டாள்.

ஏற்கெனவே துரைக்கண்ணன் எழுதிய வில்லை தாக்கல் செய்திருப்பதால் சகல விஷயமும் விளங்கி விட்டது.இனிமேல் விவரிக்கவேண்டுமோ! சர்க்காரின் சட்டப்படிக்குச் சகலகாரியங்களும் விமரிசையாக நடந்து தக்கருஜுவுடன் நிறைவேறியது. இந்த வழக்கின் அபரிமிதமான ஜெயத்தைக் கண்டு அந்த ஊரே ஆநந்தக்கூத்தாடியது என்றால் மிகையாகாது.

---

## 30

எங்குபார்த்தாலும்சிலுசிலுப்பானகாற்றுவீசுகிறது இரவு பூராவும் பெய்த மழையினால் தண்ணீர் தேக்க மும் குளிரானவாடையும் கலந்து வீசுகிறது.பறவைகள் ஒன்றிரண்டு கூண்டிலிருந்து தண்ணீர் உதிற சிறகடித் துக்கொண்டு பறந்துசெல்கிறது. காலையில் சிறைக் கதவுகளைத் திறந்துவிடும் வார்டர் ஸ்ரீதரனின் தனிக் கம்பிக்கதவைத்திறந்து...என்னப்பா! ஜபம் பண்றாயா? என்று ஏளனமாய்க்கேட்டான்...அதே சமயம் ஜெயி லர் மிகமிக சந்தோஷத்துடன் புன்முறுவல் பூத்தவத னத்துடன் ஸ்ரீதரனின் முன்பு தோன்றி ஒரு கடிதத் தைத்தானே நீட்டினார்.

எப்போதும் ஜெயிலர் ஆபீஸில் இருந்தபடியே ஆட்கள் மூலம் கைதிகளை வரவழைத்து விஷயத்தைச் சொல்வாரேயன்றி தானாகவந்து அழைப்பது என் பது ஸாதாரண கைதிகளுக்குக் கிடையாது. தேசியத் தலைவர்களில் சிலருக்கு அந்த மரியாதைஉண்டு.இவ்விஷ யத்தில் உள்ளுக்குள் இருக்கும் ரகஸியம் பிறர் அறியா

ததால் ஜெயிலரே வந்ததைப்பார்த்து வார்டர்கள் வியந்தார்கள். ஸ்ரீதரன் அந்தக்கடிதத்தைப் பார்த்தான். தான் நிரபராதி என்பது ருஜுவாகிவிட்டதால் விடுதலை செய்துவிடும்படி ஆர்டர் வந்திருப்பதைப் படித்து முதலில் பகவானை திக்கு நோக்கிக் கைகுவித்தான். சிறையிலுள்ளவர்களுக்கு சில புத்திமதிகள் கூறிப்பின் ஜெயிலருடன் நடந்தான்.

கண்ணீர்மட்டும்ஆறாய்ப்பெருகுகிறது. ஆபீஸை யடைந்ததும் ஜெயில்உடையைமாற்றித் தனதுசொந்த உடையை அணிந்த ஸ்ரீதரனை ஜெயிலர் அப்படியேசேர்த்துக்கட்டிக் கொண்டார். டாக்டர்! நான் ஒரு நிரந்தரமான கைதி, ஆனால் மனிதர்களின் கண்ணுக்குபெரிய மனிதனாய் விளங்குகிறேன், குற்றமற்ற குணக்குன்றாயும் காண்கிறேன்! ஆனால் என்னிதயத்தில் கரையானரிப்பதுபோன்ற ஒரு ஆறாத புண்ணின் பாதை என்னை வதைக்கிற ரகஸியத்தை ஆண்டவன் தானறிவான். அந்த பாதகத்தை எத்தனை ஜென்மங்களில்தான் கழிப்பேனோ தெரியாது. டாக்டர்! நான் தங்கள் பிதாவின் விஷயமாக மிகவும் அழுத்தமாய் எழுதிவிட்டேன். அவருடைய ரகஸியம் தெரியாததால் ஏகப்பட்டக் கரும்புள்ளிகள் முன்பெல்லாம் விழுந்துவிட்டது. அதை இனி மறைக்கமுடியாததால் இப்போது எப்படி எழுதியிருக்கிறேன் என்றால், அவருடைய உடல் நிலை மோசமாகிவிட்டதால் உயிருக்கே ஹானிநேரக் கூடும் என்று தோன்றுகிறது; காலில் ரணம் ஆறாததால் காலையே எடுக்கும்படியாகிவிடுமோ என்றும் டாக்டர்கள் கூறுவதாலும், இப்போதெல்லாம் மிகவும் யோக்யமாய்த்திருந்தி விட்டதாலும் புதுவருஷத்தின் ஞாபகார்த்தமாக விடுதலை செய்யலாம் என்று எழுதியிருக்கிறேன். சர்க்கார் என்னிடமுள்ள மதிப்பினால்

விடுதலை செய்து விடுவார்கள். அப்போது உமக்கு எழுதுகிறேன்; நீர்வந்து அழைத்துச் செல்லலாம். இந்தப்பாவியை மறக்காமல் என்றும் மன்னித்து அன்புடனிருக்க ப்ரார்த்திக்கின்றேன். இத்தகைய ஒரு பந்தம் நமக்குள் இருப்பதனால்தான் நீர் இந்த இடத்திற்கு மாற்றப்பட்டு வந்தநாள்முதல் உம்மிடம் என்னையறியாத ஒரு அலாதி ப்ரீதியும் மதிப்பும் நம்பிக்கையும் இருந்ததுபோலும். டாக்டர்! உங்கள் பிதாவை ஒரு முறைபார்த்து விட்டுப் போங்கள்! என்று அன்பு ததும்பக்கூறி அவனை தனி விடுதிக்கு அழைத்துச் சென்று ஏற்கெனவே அங்கு தயாராகவந்துள்ள ஸ்ரீதரனின் பிதாவைச் சந்திக்க வைத்தார்! எங்குமில்லாத ஆநந்தம், என்றுமில்லாத ஆவேசம்பொங்கி வந்ததால் ஸ்ரீதரன் தன் ஜென்மத்திலேயே கண்டிராத ஒரு புத்துணர்ச்சியுடன் 'அப்பா!' என்று அழைத்து மார்புற அப்படியே தழுவிக் கொண்டு ஆநந்தக் கண்ணீரைச் சொரிந்தான்.

பிதாவும் தனது உணர்ச்சி வேகம் தணியும் வரையில் மெய்மறந்த நிலைமையில் மூழ்கி இருந்து பின்பு... கண்மணி! க்ஷேமமாகப்போய்வா! இந்தக் கொலை வழக்கில் நீ வந்திருந்ததானது நம்குடும்பத்திற்கேஒரு க்ஷேமத்தையும்சாந்தியையும்கொடுப்பதற்காகத்தான்! மேலும் நாம் எல்லாம் நல்லதற்கே என்றே எண்ண வேணும்! நீ இங்கு வராவிட்டால் இந்தப் பாவிக்கு இப்போது கிடைத்த ஆநந்தம் கிடைக்குமா! ஒரு நன்மையைக்காட்ட ஒரு தீமை உண்டாவது உலகவியல்பு தானே? பாத்திரம் நெருப்பில் பொசுங்கினால்தானே நாம் அதனுள் வேகிய பண்டத்தைப்புசிக்கமுடிகிறது... கண்மணி......உண்மை...உமை...பக்தி...பத்தி...இந்த மந்திர உபதேசத்தை நான் உன்னிடம் பெறமுடியுமா!


என்னுள்ளம் பூரிக்கிறது. குழந்தாய் என்னுடைய வேண்டுகோள் இரண்டே இரண்டுதான் இருக்கிறது: அவைகளை நீ பூர்த்தி செய்து கொடுக்கவேணும். அப்படியே செய்வதாக வாக்குக் கொடுக்கிருயா? என்று குரல் தழதழக்கக் கேட்டார்.

டாக்:—அப்பா ! இதென்ன கேள்வி, எந்த ஒரு கட்டளையை நீங்கள் இட்டுச் செய்யும்படிச் சொன்னுலும் காத்திருக்கிறேன்; ஆனுல் ஒன்று... என் கல்யாண விஷயம் தவிற வேறு எதுவாயினும் சரி. என்னுயிரைக் கொடுத்தாவது நிறைவேற்றுவேன்; இது சத்யம்...சொல்லுங்களப்பா.

பிதா:—செல்வா! ஒன்று நான் இனி மானமிழந்து சீர்குலைந்து ஊரார் காறிதுப்ப, கண்டார் நகையாடும் படியாய் உற்ருர் உறவினர் சிநேகிதர்கள், முன்பு நான் வாழச்சற்றும் ப்ரியப்படவில்லை; என் காலம் பூராவும் இங்கேயே துலைத்துத் தலைமுழுகிவிட எண்ணினேன்; விதிவேருக அமைத்து என்னைவெளியுலகிற்கு தானே தள்ளி இழுத்துச்செல்கிறது. இதை நான் தடுக்கவிரும்பி நேற்றிரவு பூராவும் ஜெயிலர் என்னிடம் தனிமையில் பேசுகையில்போராடிகெஞ்சினேன். இதற்குநான் இசையவில்லை என்ருல் அவர் பழைய குப்பைகளைக் கிளறித் தாமே அகப்பட்டுக்கொண்டு சட்ட பூர்வமாய்த்தான் இந்த ஸ்தானத்தை ஏற்று என்னை ராஜபாட்டையில் வெளி ஏற்றிவிடத் துணிந்துவிட்டதாயும் இனி இதை மாற்றமுடியாதென்றும் சத்தியமும் குலதெய்வத்தின் மீது ஆணையும்வைத்துக் கூறிவிட்டதால் நான் அவருடைய க்ஷேமத்தைக்கோரி ஆதியில் இந்த இடத்திற்கு வந்ததுபோல் இன்றும் அவருடைய நன்மையைக்கோரி நான் வெளியேசெல்ல ஒப்புக்கொண்டேன்.



பக்கம் 242



பக்கம் 261

கண்மணீ! இந்தக் கட்டையை இதோடு நீ மறந்து விடு. நான் எங்காவது கண்காணுத இடம்சென்று சரியானபடி ஸ்வாமிகளை—ஆசாரியனை—அடைந்து அவருடன் இருந்து பேறுபெற்றுப்போகிறேன். இதை நீ வெளியிடாமல் இதற்கு உத்திரவு கொடுக்கவேண்டும்.

என்று முடிப்பதற்குள் ஸ்ரீதரன் அவரைத் தடவிக்கொண்டு, அப்பா! உங்கள் வயிற்றில் பிறந்ததன் மகிமையாலும் மகா உத்தமியான என் தாயாரின் ரத்தத்தில் ஊறியதாலும் நானும் சிறிது மூளையுடன்தான் வேலைசெய்கிறேன். உங்களுக்கு முன்பு நான் என்ன தீர்மானம் செய்திருக்கிறேன் தெரியுமாப்பா! உங்களுக்கு இனிமேல் உலகத்தில் நன்மதிப்பும் பெருங்கீர்த்தியும் உண்டாகும்படியான புதிய உலகத்தை ச்ருஷ்டித்து அதில் உங்களை அமர்த்தி உங்கள் இதயத்தில் சாந்தி நிலவி நாளாவட்டத்தில் சாந்தியின் சிகரத்தில் நீங்களே அமர்ந்து பூரித்து அந்த பூரிப்பின் பலனுல் பல ஜனங்கள் பயனடைந்து வாழ்ந்து போகும்படியான ஒரு நூதன திட்டத்தை நான் உங்களைப்பார்த்த அன்றே போட்டுவிட்டேன் தெரியுமா! நமது ரகஸியம் இங்கு சம்மந்தப்பட்ட ஒரு சிலரைத் தவிர இந்திரா, சந்திராவுக்குக்கூட தெரியக்கூடாது என்றல்லவா நான் தீர்மானித்திருக்கிறேன். நீங்கள் வெளியே வந்ததும் எனக்கு ஒரு பரமாசாரிய குரு ஒருவரிருக்கிருர்: அவரிடம் உங்களை ரகஸியமாகவே கொண்டுவிட்டு உங்களுடைய வாழ்க்கையைப் புனிதமாக்கவும் சாந்தியின் சிகரம் என்ற பெயருடன் ஒரு மடமே ஸ்தாபித்து அதில் சதா பகவன்னும பஜனையும் சத்காலக்ஷேபமும், தர்ம வைத்யசாலையும் நிறுவி அதன் மூலம் நாம் எல்லோரும் புனிதமடைய ஏற்பாடு

சா—21

செய்துவிட்டேனப்பா! எப்போது துரைக்கண்ணன் வழக்கு நமக்கு அனுகூலமாகிவிட்டதோ! இனி அவ ருடைய சொத்துக்களும் பங்களாவும் தோட்டமும் தர்மத்திற்கு அவர் எழுதியுள்ள வில்லின்படி சொந்த மாகிவிட்டதல்லவா! அதைக்கொண்டே சரீர நோயிக் கும், ஆத்ம நோயிக்கும் நிரந்தரமான ஆரோக்யமும் சாந்தியும் இடைக்கும்படிச் செய்துவிடுகிறேன். இது சரிதானேப்பா! நீங்கள் வெளியேவரும் நாளை இவர் எனக்குத் தெரிவிப்பார்; நான் அதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்துவைத்து உங்களைச் சாமியாரா கவே செய்துவிடுகிறேன். இது த்ருப்திதானேப்பா!

என்ற வார்த்தைகளைக்கேட்டதும் பிதாவின் உள் ளம் காட்டாற்று வெள்ளம்போல் பூரித்து வியப்புக்கட லாடியது. மகனை மீண்டும் தழுவிக்கொண்டார். கண் ணீர் ஆறாய்ப் பெருகியது. ஜெயிலருக்கும் கண்ணீர் வெள்ளமிட்டது என்றால் மிகையாகாது. 'அப்பா! ஒருவரன் முடிந்தது. அடுத்தது என்னப்பா!' என்று ஸ்ரீதரனே கேட்டான்.

குழந்தாய்! நமக்கு இத்தனை சந்தோஷத்தையும் கொடுத்து நன்மைகளைச் செய்த இந்த ஜெயிலரின் இத யத்தில் ஆறாத ஒரு புண்ணிருக்கிறது. நீ டாக்டரா கையால் அதைக்கிள்ளிக்களைந்தெறிந்து அவருக்கு சாந் தியைக் கொடுக்கவேண்டும்; அதைச் செய்வதாய் சத்தி யம் செய்துகொடு...என்றார். ஸ்ரீதரனின் அப்போ திருந்த உணர்ச்சிப் பெருக்கின் வேகத்தில் அப்படியே செய்கிறேன். இது சத்யம்....என்று கூறிவிட்டான். மகனை மார்புறத்தழுவிக்கொண்ட பிதா... கண்மணீ, எமனிடம் ஸாவித்ரி வரம்வாங்கியதுபோல் உன்னிடம் நான் வாங்கிவிட்டேன். இனி மாறக்கூடாது, இந்த

உத்தமருக்கு என்னகுறை தெரியுமா! இவருக்கு ஐந்தாறு குழந்தைகள் இருக்கிறார்கள். அதில் ஒரு பெண்ணுக்கு காலவிதியின் கோலத்தினால் பிரம்பு வேலை செய்யும்போது எக்கச்சக்கமாய்க் கண்ணில்பட்டு ஒரு கண் போய்விட்டதாம் ஒரு கண் தான் நன்றாகத் தெரிகிறதாம். அந்த ஊனத்தினால் அவளை யாரும் மணக்க மறுத்துவிட்டார்களாம். வயதாகிக்கொண்டு வருகிறதாம்; அது தான் பாவம் கவலை, சதா வேதனைப் படுகிறார். நீயோ லக்ஷயவாதி, அவருடைய மகளை நீ மணந்து அவருக்கு சாந்தியைக் கொடுக்கவேண்டும். என்று சொல்லும்போது ஸ்ரீதரனைத் தூக்கிவாரிப் போட்டது.

ஜெயிலருக்கும் மனது குழம்பி விசனம் மேலிட்டு வருந்தியதால் தவித்தார். இம்மாதிரி இந்த மனிதன் கேட்பார் என்றே அவர் நினைக்காததால் திடுக்கிட்டுப் போய்...ஸார்! இந்த தண்டனைக்கு நான் ஒப்பவே மாட்டேன். நேற்றிரவு இவரிடம் அதிகநேரம் பேசிக் கொண்டிருக்கையில் என் குடும்ப வாலாற்றையும் சொல்லும்படியாகிவிட்டது. நான் செய்த துர்ப்பாக்ய வசத்தில் என் விதியிப்படியானால் அதைக்கொண்டு உம்மை பாதிக்கவைக்க நான் தயாராக இல்லை. இதற்கு நான் ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன். நான் ஏற்கெனவே செய்துள்ள பாதகம்போதும். இனியும் பாதகத்தைச்செய்ய நான் சம்மதிக்கமாட்டேன். இந்த விஷயத்தை நீங்கள் வாபஸ் வாங்கத்தான்வேணும். என்று ஜெயிலர் ஸ்ரீதரனின் பிதாவைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்!

இதன் பிறகே ஸ்ரீதரனுக்கு சற்று சரியாக மூச்சு வந்தது. அப்பா! கல்யாண விஷயத்தில் லவலேசமும்

ஆசையே இல்லாத என்னை இந்த ப்ராமணமென்கிற பிணைப்பில்மாட்டிக்கொண்டு தவிக்கவைத்துக்கடவுள் வேடிக்கைப்பார்க்காமல் காப்பாற்றினரே, அதுவே போதும், ஸார்! நான் இன்னொரு ப்ரமாணம் உங்களுக்குச் செய்கிறேன்: தற்கால வைத்தியமுறையில் பல பல புதிய அம்சங்கள் கையாளப்படுகின்றன. அம்முறையில் உங்கள் மகளுடைய கண்ணுக்கும் என்னால் கூடியவரையில் வைத்யம்செய்து கண்ணைக் குணப் படுத்தப்பார்க்கிறேன். கண் குணமாகிவிட்டால் நல்ல வரனாக நானேதேடி கல்யாணத்தையும் செய்துவைக்கிறேன். அப்படி இல்லை என்றால் நானே மணந்து கொண்டு அவளைக் காப்பாற்றுகிறேன்: சரிதானா... என்று கூறும்போது அவன் முகத்தில் ஒரு புதிய சக்தியின் சோபையும் கண்களில் ஒரு தனித்த ப்ரகாசமும் உண்டாகி ஜ்வலித்தது.

அதற்குமேல் வார்த்தைகள் அதிகம் நடக்கவில்லை; நேரமும் ஆகிவிட்டதால் ஜெயிலர் தன்மீது பிறருக்குச் சந்தேகம் இல்லாமலிருப்பதற்காக கிளம்ப யத்தனித்தார். அந்த ஜாடையைத் தெரிந்துகொண்டு ஸ்ரீதரனும் கிளம்பினன். இத்தனை நாளாக வரண்டகட்டை போலிருந்த இதயத்தில் இன்றுதான் புத்திர வாத்ஸல்யத்தின் அலைகள் ப்ரமாதமாய் எழுந்து கொந்தளித்ததை டாக்டரின் பிதா உணர்ந்து உள்ளூரக் குமுறிப் போய்க் கண்கலங்கிவிட்டார்.

டாக்டர்! உங்களை வரவேற்கும் வைபவத்திற்காக நேற்றிரவு முதல் சிறைவாசலில் நூற்றுக்கணக்கான மக்கள் காத்திருக்கிறார்கள்...அவர்கள் கையிலுள்ள புஷ்பமாலைகள் உமது கழுத்தை யலங்கரிக்க ஆவலுடன் துடிதுடிக்கின்றன. உமது தாயார் உம்மை

உச்சி முகர்ந்து ஆசீர்வதிக்கப் பதைபதைக்கிறார்கள். உமது சகோதரன் பரதன் தவித்ததுபோல் அண்ணா வின் வரவுக்காகத் தவிக்கிறார். இனி தாமதம் செய்வது தகாது. நீங்கள் சிரஞ்சீவியாய் லக்ஷியபுருஷராய் வாழ பகவான் அருள்புரிவானாக, என்று வாழ்த்திப் பின் பெரியகதவும்தாண்டி ஸ்ரீதரன் செல்லும்வரையில் வழியனுப்பினார்.

அடாடா! என்ன ஆனந்தக்காட்சி. நாலு! நீ! என்றுபோட்டியிட்டவண்ணம்ஒவ்வொருவரும்ஓடோடி வந்து மாலைகளைச்சூட்டி டாக்டரை வணங்கியும் தழு வியும் அவரவர்களின் அன்பைக்கொட்டி யளந்து வரவேற்ற காட்சியை வர்ணிக்கமுடியவே முடியாது. ஜெயிலர் தம்மையே மறந்து ஆனந்தக்கண்ணீர் பெருகச் சிலைபோல் நின்றுவிட்டார்......அம்மா. தம்பீ!...அருமைத்தங்கச்சி! ஆத்ம நேயர்களே... அன்று நான் முதல்முதல் கைதியாகி போலீஸாருடன் செல்லும் சமயம் என்ன சொன்னேன், அது நினைவிருக் கிறதா! அதை மறுபடியும் நினைத்துப்பாருங்கள். ஆண்டவனே சத்யம்! சத்யமே ஆண்டவன், அப்படிப் பட்டவன் தன்னுடைய சத்யமும் தானும் உண்மையா யிருந்தால் அதை அவனே நிலைநாட்டி நான் நிரபராதி என்பதை நிரூபிக்கட்டும்; இல்லையேல் நான் என் விதி என்று எண்ணி அனுபவிக்கிறேன்-என்று உறுதியுடன் நம்பிக்கையுடன் கூறினேன். இப்போது அந்த பரந் தாமன் அதை நிரூபித்துக்காட்டிவிட்டான் பார்த்தீர் களா! அந்த மாதிரியாய் ஆழமான நம்பிக்கையும் பக்தியும் என்றென்றும் எல்லோருக்கும் இருந்து விட் டால் அவன் தனது கண்ணின் மணிபோல் காத்து ரக்ஷிப்பான்! என்று கூறியபடியே முதலில் தன் தாயா ரின் காலில்விழுந்து கால்களில் முகத்தைப் பதித்துக்

கொண்டான். இந்த உருக்கமான காட்சி எல்லோருடைய மனதையும் உருக்கி அடிபாதாளம்வரையில் ஊடுருவிப்பாய்ந்து உணர்ச்சிவயமாக்கியது.

---

# 31

என்ன ஆச்சரியமப்பா! சென்றவருஷம் வெறும் துரைக்கண்ணனின் பங்களாவாக இருந்த இடம் இன்று எத்தகைய அத்புததேஜஸுடன்விளங்குகிறது. ''சாந்தியின் சிகராலயம்'' என்கிற பெயரைத்தாங்கி கம்பீரமாய்க் காட்சியளிக்கும் பலகையைப் பார்க்கும் போதே மனத்தில் ஓர் பேரானந்தமல்லவா உண்டாகிறது! என்ன அன்புப்பணி. எத்தனை ஆர்வம். அந்த இடத்தில்போய்ப் பார்த்தாலல்லவா தெரியும்? நம் பாரதநாட்டின் பண்டைப்பெருமைகள் எல்லாம் செத்து மறைந்துவிட்டது, நாசமாகிவிட்டது, நாஸ்திகம் தலை எடுத்துத்தாண்டவம் செய்கிறது, நாகரீகம் நிர்த்தனம் செய்கிறது, தெய்வமில்லை, தேவாதி இல்லை—என்றெல்லாம் மனம்குமுறி இரைச்சலிடும் பக்தர்களும், ஆஸ்திகத்தைக் கேலிசெய்து நக்கு காட்டும் தற்கால விசித்ரமக்களும் அங்குபோய்ப்பார்த்தால் என்ன நிலைமையை அடைவார்கள் தெரியுமா!

அடாடாடா!...ஒரு புறம் பகவன்னும பஜனை! ஒருபுறம் சத்காலக்ஷேபம்.ஒருபுறம் விஞ்ஞான வகுப்பு, ஒருபுறம் சித்திரக்கலை, சிற்பக்கலை, சங்கீதக்கலை, கைத்தொழில் வகுப்பு,இதுபோல்எத்தனையோ வகுப்புகளும் உபதேசங்களும் நடக்கின்ற அழகைப்பார்த்தால் நான் இந்தப்பாழும் உத்யோகத்தை விட்டுவிட்டு அங்கேயே சதா இருந்துவிடலாமா என்று தான் தோன்றுகிறது.அங்குள்ள ஸ்வாமிகளின் தேஜஸ்ஸும்

முகத்தில் பொங்கிவழியும் சாந்தியும் பார்க்கப்பார்க்க நாஸ்திகன்கூட உடனே ஆஸ்திகனுய் மாறிவிடுவான். இத்தனையும் செய்துவைத்திருக்கும் பெருமை டாக்டர் ஸ்ரீதரன் ஒருவனுக்கே உரிமை என்ருல் மிகையாகாது. பாவம்! அத்தகைய சுத்தாத்மாவையும் ஏழரைநாட்டுச்சனியன் ஆட்டியே விட்டதே! ஸார்! நீங்கள் போய்ப்பார்த்தீர்களா! என்று ஒரு உத்யோகஸ்தர் மற்ெருரு வயதானவரைக் கேட்டார்.

அவரும் வியப்புடன், இப்போது என்னிலைமை வேடிக்கையாகிவிட்டது. நான்தான் முதலில் பார்த்த தாகப்பெருமையடைந்து உம்மை அங்கு அழைத்துச் செல்வதற்கல்லவா வந்தேன். என்னைவிட நீர் முந்திக் கொண்டுவிட்டீரே! என்று இப்போது பொருமையா யிருக்கிறது. நான் ஏற்கெனவே ஸ்ரீதரனின் பேஷண்டு. என் முட்டாள்தனத்தினுல் நான் நான்காம்தாரம் மணந்து நாசமாய்ப்போன அவமானத்தைப் பிறகே உணர்ந்தேன். என்னுடைய உத்தம மனைவி...இளம் நங்கை—அவள்மனம் சாந்தியடையும்பொருட்டு அந்த ஆச்ரமத்தில் சேர்ப்பதற்கு ஏற்பாடுசெய்துவிட்டேன். ஸார். இந்த சாந்தியின் சிகராலயத்தைப்பார்த்து நம் பாரத நாடே பூரிக்கின்றது.....

ஆமாம்! அந்த அஸகாய சூரனுன டாக்டர் ஸ்ரீதரன், தான் இருந்த ஜெயிலின் அதிகாரியின் மகளுக்குஆச்சரியமாய்ஒருசிகிச்சை செய்திருக்கிருராமே: ஒரு கண்ணில்லாது அப்பெண் தவித்தாளாம் அவளுடைய வயது, அவளுடய பலம் முதலிய சகல விஷயத்திலும் ஒத்திருக்கும் மற்ெருரு பெண் நோய்வாய்ப்பட்டு உயிர் நீத்துவிட்டாளாம். உடனே அவளுடைய ஒரு கண்ணை எடுத்து இந்தப் பெண்

ணுக்குவைத்து வெகுவெகு திறமையுடன் சிகிச்சை செய்ததில் இந்தப் பெண்ணுக்குக் கண்ணுமிகவும் நன்றாகத்தெரிகிறதாமே! இந்த ஆச்சரியத்தை ஊரே கொண்டாடி ஸ்ரீதரனைக் கடவுளென்றே எண்ணி பூஜிக்கின்றது ஸார்! என்ன மேதாவி! என்ன நிபுணன் ஸார். அந்தப் பெண்ணைத் தனது தம்பிக்கு விவாகம்கூட செய்துவிட்டாராமே. இப்படிப்பட்ட பரோபகாரியைக் கண்டதுண்டா ஸார்.

அடேடே! நானும் கேள்விப்பட்டேன். யாரோ ஒரு பெண்ணுக்குப் புதுமாதிரி வைத்யம் செய்து கண்ணைக் கொடுத்தாராம் என்று. தன்னை அடக்கி ஆண்டு ஜெயிலில் வைத்திருந்த ஜெயிலர் பெண்ணுக்கா இத்தகைய உபகாரம் செய்திருக்கிறார்! கேட்கக் கேட்க அதி ஆச்சரியமாயிருக்கிறதே! கூடிய சீக்கிரத்தில் ஸ்ரீதரனை வெளிநாடுகளுக்கு மறுபடியும் அழைத்துப்போவார்களென்று ஒரு வதந்தி உலாவுகிறது அதற்கவர் இசையமாட்டார். கூடிய சீக்கிறத்தில் அவரே ஒரு காஷாயம் தரித்த லக்ஷ்ய புருஷனாய் விடுவார் என்று ஒரு வதந்தி வருகிறது. எப்படி நடக்குமோ தெரியாது. ஸரி இன்று ஸ்ரீக்ருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு ஏதோ பெரிய உத்ஸவம் அங்கு நடக்கிறதாம். நான் இன்று பூராவும் அங்குதான் இருக்கப்போகிறேன். நீங்களும் வாருங்கள். என்று இருவரும் பேசிக்கொண்டு சாந்தியின் சிகாலயத்திற்குச் சென்றார்கள்.

டாக்டரின் கிரபாதித்தன்மையை மட்டும் கொண்டாடி வியப்புற்ற உலகம் இன்று அவரால் நிர்மாணிக்கப்பட்ட சாந்தியின் சிகாலயத்தையும் அவர் நூதன முறையில் கண்வைத்தியம் செய்ததையும்பற்றி அபாரமாகக் கொண்டாடத் துடங்கி விட்டது. என்றாலும்

கமலவேணியம்மாளின் உள்ளத்தில் மட்டும் ஒரு சிறு குறைமாறவே இல்லை. அதுதான் ஸ்ரீதரன் கல்யாண விஷயத்தில் பிடிவாதமான உறுதியாகும். கல்யாணம் செய்துத் தன் கண் குளிரக்காண வேணும் என்று எத்தனையோ மன்றாடினாள். அதுமட்டும் நடக்கவேஇல்லை.

உலகத்தவர்களுக்கு மட்டும் ராஜரத்தினம் ஒருசாமியாராகக் காக்ஷியளிக்கவில்லை; உண்மைத்துறவியாகவே ஆகிவிட்டார். அவருடைய பழுத்த ஞான வைராக்யம் சுடர்விட்டு ப்ரகாசிக்கின்ற அழகைப் பார்த்துப் பூரித்தது அவருடைய குடும்பம். உலகத்திலேயே ஒப்புயர்வற்ற பேரானந்த வெள்ளத்தையனுபவிக்கும் நிர்மலமான இதயமும் த்ருப்தியும் டாக்டரின் உள்ளத்தில் தேங்கி விட்டது. ஏற்கெனவே இருந்த மகத்தான கண்ணியமும் புகழும் இப்போது பதினாயிரமடங்காகப் பெருகிப்பெரும் சிகரத்தில்சிறகடித்துப் பறக்கத் தலைப் பட்டது.

எனினும் தன்னைப் பெற்ற தாயாரின் மனத்தை சோகவைப்பதற்கொப்ப கல்யாண விஷயத்தில் பிடிவாதம் செய்வதைக் கண்டு தனக்குத்தானே சிலசமயம் வருந்தாமலும் இல்லை .... கண்மணீ ஸ்ரீதர்! உன்னை தம்பதிகளாகக் கண்டு களித்தால் என் மனக் குறை தீரும். இத்தனை ஸாதித்த நீ அந்த ஒரு ஆசையைப் பூர்த்திசெய்யக் கூடாதா! என்று கமலவேணி மீண்டும் கெஞ்சலானாள்.

ஸ்ரீதர்.—அம்மா! உங்களுக்கு ஆயிரங்கோடி நமஸ்காரம் செய்துவேண்டுகிறேன்! "ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்கிற வள்ளுவரின் தெய்வீகவாக்கின்படி நீஇப்

போது அடையும் பேரானந்தத்தையும் இதைவிட பெரியதோர் சந்தோஷம் உண்டாகிவிடப் போகிற தென்பதையும் நீயே சற்று யோசித்துப் பாரு. உன் வயிறுசெய்த பாக்கியமும் நீ செய்த புண்ணியமும் இன்று உன் மகனை லட்சிய புருஷன் என்றும் கலியுக தன்வந்திரி என்றும் கைராசிக்காரன் என்றும் இன்னும் ஏதேதோ சொல்லி மகிழ்கிறார்களே அதற்கு அடியோடு ஹானி வந்துவிடும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். என் அந்தராத்மா சொல்லுகிறது. எனக்கு இப்போதுள்ள சகலமான புகழும் மண்டிப் போய் நான் வெறும் சக்கையாக மதிக்கப்பட்டால் அதைக்கண்டு உன் மனந்தானேம்மா துடிதுடித்து வருந்திக் கண்ணீர் சொரியச் செய்யும். அதைச் சற்று யோசித்துப்பாரேன்.

கமல:—நீ சொல்வது எனக்குப் புரியவே இல்லையேப்பா! உலகம் பூராவும் கடவுள் உள்பட மண வாழ்க்கையின் மூலம் பலவித இன்பத்துடனிருக்கையில் உனக்குமட்டுமா அவ்வாழ்க்கை கசந்து விட்டது. அதனால் துன்பங்களும், அபகீர்த்தியும் வரும்...

ஸ்ரீதர்:—அம்மா! உலகவிவகாரமறியாதவர்களைப் போல் கேட்கிறாயேம்மா! நான் இன்னும் விவரித்தா சொல்லவேண்டும்? மணவாழ்க்கை என்கிற தடாகத்தில் காலை வைத்துவிட்டால் முதலில் ஆசை, சுயநலம் என்கிற முதலைகள் இரண்டு காலையும் பிடித்து இழுத்து என்னுடைய சகலமான பலத்தையும் தான் உறிஞ்சிக் கொண்டு என்னைக் கையாலாகாதக் கட்டையைப் போலாக்கி எந்தக் காரியத்திலும் திடசித்தமில்லாத ஒரு பலவீனத்தைக் கொடுத்துவிடும். அதன் பலனாக

இத்தனைப் புகழும் அழிந்துபோய் என் மனைவி, என் மக்கள்: அவர்களுக்கே சொத்து சேர்க்கவேண்டும். அவர்களுக்கே உழைக்கவேண்டும். என்கிற போக்கில் என் புத்தி மாறிவிடும்! இத்தனை அனுதைகளின் கதி என்னவாகும். இந்த ப்ரம்மச்சரிய அனுஷ்டானத்தின் மூலந்தான் உலகமே இன்று கொண்டாடி மகிழ்ந்துபோற்றும் விவேகாநந்தர், ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், மகாத்மா காந்தியடிகள்......இன்னும் எத்தனையோ சிறந்த மேதைகளாக விளங்குகிருர்கள்; அவர்களில் மகாத்மாவும் ராமக்ருஷ்ணரும் மணவாழ்க்கையை மேற்கொண்டும் உண்மைத்துறவிகளாய், த்யாகிகளாய் வாழ்ந்தார்கள். அம்மா திரி நானும் ஒரு பெண்ணை மேலுக்காக மணந்துகொண்டு அவளையும் வருத்தி அவள் கவலையைக் கண்டு நானும் கலங்கி இரண்டாங்கெட்டான் வாழ்க்கை வாழவேண்டுமென்கிருயா? அம்மா! மணவாழ்க்கையினுல் என் பிதாவின் கதி, அடுத்த வீதியிலிருக்கும் அம்பலவாணனின் கதி, டாக்டர் தணிகாசலத்தின் கதி இப்படியே சொல்லிக்கொண்டுபோனுல் வருஷக்கணக்கில் சொல்லலாம். நம் ஸந்ததி விளங்குவதற்குத் தம்பி இருக்கிருன். இதோடு என்னை விட்டுவிடம்மா! என்னுடைய சக்தியும் என்னுடைய கீர்த்தியும் தினே தினே புதுமெருகிட்டு மணக்கவேண்டுமாயின் இந்த அல்பத் திருமண ஆசையை விட்டுவிடு. அம்மா! ஏனம்மா இப்படிப் புலம்புகிருய்! ஐயோ, என்னுடைய லக்ஷ்யத்திற்கு வெற்றியைக் கொடுக்க நீ ஸம்மதிக்கமாட்டாயா?

கமல:—செல்வா! உன் புகழ் உச்சஸ்தாயியில் ஆனந்தமாய்ப்பாடிஆடுகிறது என்பது நானறிவேன். உலகத்தில் தம்பதிகளாய் வாழ்ந்து புகழ்பெறுவது தான் உயர்வே அன்றி ஒண்டிக்கட்டை வாழ்வு

உயர்வாகாது. ஏற்கெனவே ஊர் ஜனங்கள் உன்னை எத்தனை தான் கொண்டாடிய போதிலும் ப்ரம்மச்சாரிகட்டை வேஷதாரி தன்னுடன் கூடவிருக்கும் துளஸிபாயை, ராதாவை......சேச்சே... .. என் வாயால் சொல்லவும் பிடிக்கவில்லை: அப்படி அவதூறு கச் சொல்கிருர்கள். அதற்கெல்லாம் இடங்கொடுக்காமல் நீயும் உலகத்தவர்களைப்போல் மணந்துகொண்டு உன்னுறுதியுடன் தளராது உழைக்கவே நான் ஆசைப்படுகிறேன். இதோ பாரு, ஸ்ரீதர்! எனக்கோர் யோசனை தோன்றுகிறது. அதாவது திருவுள்ளச் சீட்டுப்போட்டு பார்க்கலாம், அதில் எப்படி வருகிறதோ அதேபோல் நான் விட்டுவிடுகிறேன். என்ன சொல்கிருய் என்று கெஞ்சினுள்.

பாக்குவெட்டியில் அகப்பட்டதுபோல் டாக்டர் மனது குழம்பித்தவிக்கிறது. தனது உறுதியான லக்ஷயத்தைக்கைவிடுவதா அல்லது பெற்ற தாயாரின்மனோரதத்தைப் பூர்த்திசெய்யாது புறக்கணித்துவாடவைப்பதா! எதுவும் எனக்கு மிகுந்த பாதகமாகவன்றோ இருக்கிறது...அம்மா சொல்படி திருவுள்ளச் சீட்டுப் போட்டு விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்று வந்து விட்டால் என்ன செய்வது...ஹா......இதுதான் சரியான சோதனை, என் வாழ்நாளில் இதுபோல் கலங்கியதில்லை....மகா ஞானியாயும், முற்றுந்துறந்தமுனிவராயும் இருந்த பட்டிணத்தடிகள்கூட பெற்றதாயின் பாசத்தைப்புறக்கணிக்கவில்லை : நான் அந்த அபக்யாதிக்கு ஆளாகவேண்டுமா! பகவானே! எனக்கித்தகைய மன உறுதியைக் கொடுத்தவனும் நீயே; அதை சோதிக்க முன்வந்திருப்பனும் நீயே; எப்படியாவது என் தாயாரின் மனது சாந்தியடைந்தால் போதும்... எனக்கும் அனுகூலமானபதிலாகவும் என் தாயாருக்கும்

சாந்தியை யளிக்கக்கூடியதாயும் நீ திருவுள்ளம்பற்றி அருள்பாலிக்கவேண்டும்! என்று தனக்குள் எண்ணிய படியே, அம்மா! சரி! உன் இஷ்டப்படியே போடு! அதில் எந்த சீட்டு வந்தாலும் பகவானின் கட்டளை என்று நான் தேருகிறேன். நீயும் அப்படியே சந்தோஷப்படவேண்டும் என்றான்.

கமலவேணி அதற்கு இசைந்து தாமோதரனையே அழைத்துச் சீட்டுக்களை எழுதச் செய்து அதைத் தானே வாங்கி கடவுள் ஸன்னிதானத்தில் குலுக்கிப் போட்டுபாரபக்ஷமற்றத்யாகியான உஷாவைக்கொண்டு சீட்டை வெகு ஆவலாக எடுக்கச் செய்தாள். கமலவேணியே சீட்டை வாங்கிப் பார்த்தாள். "ப்ரம்மசரியமே சாந்தியின் சிகரம்" என்றிருந்ததைப் பார்த்ததும், செல்வா! நீயே லக்ஷயவீரன் .நீயே கர்மயோகி! நீயே வெற்றிபெற்றாய்! புகழ் என்கிற மாதை மணந்து இன்பவாழ்க்கையுடன் சாந்தியின்சிகரத்தில் தன்னரசு புரிந்து மகிழ்ச்சியடைவாய். இனி நான் உன்னிடம் இது விஷயமாகப் பேசுகிறதில்லை...என்றுகூறி மகனைக் கட்டியணைத்துத் தடவிக்கொடுத்தாள். தாமோதரனின் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகியது...

தன் தாயாரை ஸ்ரீதரன் அப்படியே தூக்கிக் கொண்டு குதித்தான்.என் முன்னறிதெய்வமாகிய உன் மனம் பூரித்துவிட்டால்போதும். இனிஇதைவிடநித்ய கல்யாணமங்கள வைபவ சுகம் நமக்கென்ன வேண்டும்? அம்மா! சாந்தீ! சாந்தி — எங்கும் சாந்தி! என்று கோஷித்தான். அதைக் கண்ட கமலவேணியின் உள்ளம் பூரித்தது. உடனே டாக்டர் சாந்தியின் சிகராலயத்திற்கு ஓடிச்சென்று ஸ்வாமிகளை தரிசித்து விஷயங்களைச் சொல்லி மிகவும் குதூகலத்துடன் கும்மாளமிட்

டான். நேரே அனாதை நிலயத்திற்குச்சென்று அங்குள்ள அனாதைக் குழந்தைகளுடன் குதித்துக் கூத்தாடி களிவெறி கொண்டு பொங்கிப் பூரித்தான். இதைவிட நித்யகல்யாண சுகம் அந்தக் குழந்தைகளுக்கு வேறென்ன இருக்கிறது. இந்த சந்தோஷத்தைக் கண்டு தானும் பகிர்ந்துகொண்டு சந்தோஷிப்பது போல் தோட்டத்திலுள்ள புஷ்பங்களின் பரிமளம் மெல்லியகாற்றில் மிதந்துவந்து எல்லோருடைய உள்ளங்களையும் களிக்கச் செய்தது. அனாதைக் குழந்தைகளுடன் பூஜாமண்டபத்திற்குச் சென்று ஆனந்தமாய் ப்ரார்த்தனை செய்து பஜனைபண்ணவாரம்பித்தான். அந்த பஜனாம்ருத இசையின் நாதம் ரீங்காரத்துடன் ஓங்காரத்தை எழுப்பி அந்த கட்டிடம் பூராவும் எதிரொலித்துப் பூரிக்கச்செய்தது. அங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பகவானின் முகத்தில் திவ்யதேஜஸுடனும் ஆனந்தத்துடனும் புன்முறுவல் தவழ்ந்து அந்த மின்ஸாரசக்தி ஸ்ரீதரனின் இதயத்தில் அம்ருதம்போல் பாய்ந்து ஆனந்த சாகரத்திலாழ்த்தி சாந்தியின் சிகரத்தில் அமரச் செய்தது என்றால் அது மிகையாகாது. இதைவிட பேரின்ப சுகம் வேறென்ன இருக்கின்றது!

மங்களம்.

சுபம். சுபம். சுபம்.

ஜகன்மோகினி ப்ரஸ்
திருவல்லிக்கேணி

## வ. மு. கோதைநாயகி அம்மா...
## ...எழுதிய 104 நாவல்கள்

| | | |
|---|---|---|
| வைதே... | ராஜமோஹன் | ப்ரதிபலன் |
| பத்மசு... | அனாதைப்பெண் | பவித்திரப்பதுமை |
| சண்பகவ... | ப்ரேமப்ரபா | பெண் தர்மம் |
| ராதாமணி | அன்பின் சிகரம் | உண்மைச்சித்திரம் |
| கௌரீமுகுந்த... | சாந்தகுமாரி | தெய்வீக ஒளி |
| நவநீதகிருஷ்ண... | மாயப்ரபஞ்சம் | சிலாசாஸனம் |
| கோபாலரத்னம் | சந்திரமண்டலம் | புதுமைக்கோயில் |
| மாதவமணி | வானக்குயில் | மனத்தாமரை |
| சாருலோசன | உளுத்த இதயம் | தபால் விநோதம் |
| சுகந்த புஷ்பம் | மகிழ்ச்சி உதயம் | ஓவியப்பரிசு |
| வீரவஸந்தா | ஜீவியச் சுழல் | இனியமுரசு |
| சாமளநாதன் | மாலதி | ஆண்டவனின் அருள் |
| ருக்மிணிகாந்தன் | வத்ஸகுமார் | |
| ஸாரமதி | கஸ்தூரீதிலகம் | இசைப்புயல் |
| நளினசேகரன் | கானல் நீர் | அமரத்யாகி |
| பரிமளகேசவன் | படகோட்டி | காலக்கண்ணாடி |
| மூன்று வைரங்கள் | ஆத்மசக்தி | ஜெயபேரிகை |
| உத்தமசீலன் | உணர்ச்சி வெள்ளம் | ஜீவநாடி |
| * கதம்பமாலை | சந்தோஷ மலர் | வீராங்கனை |
| * ஸரஸராஜன் | கருணாலயம் | கானகலா |
| காதலின் கனி | புகழ்மாலை | தூயஉள்ளம் |
| சோதனையின் கொடுமை | தயாநிதி | ஸௌபாக்யவதி |
| | சுடர் விளக்கு | ப்ரேமாச்ரமம் |
| படாடோபத்தின் பரிபவம் | கலாநிலயம் | நியாயமழை |
| | ஞானதீபம் | அருணோதயம் |
| தியாகக்கொடி | வாத்ஸல்யம் | மனச்சாட்சி |
| ஜெயஸஞ்சீவி | க்ருபாமந்திர் | ப்ரபஞ்சலீலை |
| பக்ஷமாலிகா | மதுரகீதம் | வெற்றிப் பரிசு |
| புத்தியே புதையல் | பிரார்த்தனை | ரோஜா மலர் |
| மங்கள பாரதி | இதய ஒலி | இந்திரமோஹனா |
| பட்டமோ பட்டம் | மலர்ந்த இதழ் | பாதாஞ்ஜலி |
| சுகுணபூஷணம் | அமுதமொழி | அமைதியின் அஸ்திவாரம் |
| பிச்சைக்காரக் குடும்பம் | பிரதிக்ஞை | |
| | ஆசைப்ரவாகம் | நம்பிக்கை பாலம் |
| ஆனந்தஸா..ர் | வாழ்க்கைத்தோட்டம் | சாந்தியின்சிகரம் |
| அம்ருததாரா | அபராதி | கடமையின் எல்லை |
| இன்பஜோதி | வெளுத்தவானம் | |

ஷை 104 நாவல்களில் ...ரும்பாலும் தற்போது கைவச மில்லா... தேவையான புத்தகங்கள் கிடைக்குமா என் றும், ...யையும்பற்றி எழுதித் தெரிந்துகொண்டு